# அமுதம்

ஆனி 2024 18

# கல்வெட்டுக் கவிராயர்கள்

ஏடு இடோர் இயல்

# கல்வெட்டுக் கவிராயர்கள்

தமிழ் இலக்கிய உலகம் அயோக்கியர்களால் நிறைந்திருப்பது ஆச்சரியமோ, அதிர்ச்சியோ எனக்கு ஏற்படுத்தியதில்லை. தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியாக இல்லாமல், வீக்கமாகவே இருக்கும் ஒன்று, தான் தோன்றி வளர்ந்த சமூகத்தின் இயல்புகளைத் தானே கொண்டிருக்க முடியும்.

ஒரு காலத்தில் இலக்கிய உலகின் பிதாமகர்கள் குறித்து அவர்களின் பிரமாண்டங்கள் பற்றிய பிரமிப்பு எனக்கும் இருந்தது தான்.

தொலைவில் இருந்து பார்ப்பதற்கு நட்சத்திரங்கள் அழகாகத் தான் இருக்கும். அப்போலோ விண்கலம் சந்திரனில் இறங்கிய படங்களை வர்ணிக்கப்பட்ட பெண் கண்டிருந்தால், ‘முகமது சந்திர பிம்பமோ’ என்று எழுதிய கவிஞனுக்கு, எடுத்த தடி, கொப்பளிக்க இட்ட அடி நொந்திருக்கும்.

இந்த இலக்கியப் பிதாமகர்கள் பற்றி நாங்கள் கொண்டிருந்தவையும் இப்படி வெறும் கற்பனையாகவே இருந்திருந்தால் எல்லாமே இனிதாகத் தான் இருந்திருக்கும்.

இலக்கியப் பிரம்மாக்கள் பற்றிய பிரமிப்புகள் எல்லாம் அவர்கள் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட பிம்பங்களே. பல தடவைகளில் எழுதியவர்களின் முகங்கள் கூட எங்களுக்குத் தெரிந்திருந்ததில்லை. வணிக வார இதழ்கள் புண்ணியத்துக்கு இரங்கினால் தான் உண்டு. சிற்றிதழ்களில் படம் போட்டிருந்தாலும் அடையாளமே தெரியாதபடிக்குத் தான் ஈய வார்ப்பு அச்சுத் தொழில்நுட்பம் அன்றைக்கு இருந்தது.

அவர்களின் தனிப்பட்ட வாழ்வுகள் பற்றிக் கூட பெரிதாக நாங்கள் அறிந்திருந்தில்லை. அவர்களின் கற்பனை எழுத்துக்களுக்கும் அப்பால், அவர்களின் கருத்துக்கள் சிந்தனைகள் பற்றிக் கூட எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

நேர்காணல்கள், மனம் திறப்புகள் எல்லாம் எங்களுக்குப் புதினமாகவும் புதிராகவுமே இருந்தன.

இப்படி இலக்கியம் படைத்தல் எல்லாம் தனி இருட்டறையில் மெழுகுதிரி வெளிச்சத்தில் நடத்தப்படும் பெரும் யாகங்களாகவும், இந்த முகமதுக்கள் எல்லாம் இருளில் ஒளிரும் மதிமுகங்களாகவும் தான் எங்கள் மனங்களில் சிருஷ்டிக்கப்பபட்டிருந்தன. அந்தப் பிம்பங்கள் எல்லாம் கிட்டத்தட்ட வணிக வார இதழ்கள் தெரிவும், தணிக்கையும், தவிர்ப்பும் செய்து வடி கட்டி தந்தததை வைத்து உருவாக்கப்பட்டது தான். சினிமா நட்சத்திரங்களின் உளறல்களை எல்லாம் ‘இலக்கிய நேர்காணல், மனம் திறப்புகள், ஒப்பன் டாக் மாதிரி நடத்திய பில்டப்புகளை இப்போது பார்க்கும்போது, இந்த இலக்கியப் பிரம்மாக்கள் பற்றியும் எப்படி எல்லாம் எங்களுக்குக் காதுகளில் பூச்சூடி இருப்பார்கள் என்பதை இப்போது நினைக்கும்போது, அதையெல்லாம் நம்பியிருந்தோமே

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

**இலக்கியப் பிரம்மாக்கள் பற்றிய பிரமிப்புகள் எல்லாம் அவர்கள் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட பிம்பங்களே.**

**பல தடவைகளில் எழுதியவர்களின் முகங்கள் கூட எங்களுக்குத் தெரிந்திருந்ததில்லை. வணிக வார இதழ்கள் புண்ணியத்துக்கு இரங்கினால் தான் உண்டு. சிற்றிதழ்களில் படம் போட்டிருந்தாலும் அடையாளமே தெரியாதபடிக்குத் தான் ஈய வார்ப்பு அச்சுத் தொழில்நுட்பம் அன்றைக்கு இருந்தது.**

**அவர்களின் தனிப்பட்ட வாழ்வுகள் பற்றிக் கூட பெரிதாக நாங்கள் அறிந்திருந்தில்லை. அவர்களின் கற்பனை எழுத்துக்களுக்கும் அப்பால், அவர்களின் கருத்துக்கள் சிந்தனைகள் பற்றிக் கூட எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.**



**facebook: George RC**

என்று வெட்கமாகக் கூட இருக்கிறது.

அந்தப் பிம்ப உருவாக்கங்கள் எங்களுக்குச் சௌகரியமாகவும் இருந்தன. எந்த விதமான சார்புநிலைகளும் இன்றி (bias), படைப்பைப் படைப்பாக அணுகக் கூடியதாக இருந்தது. ஒருவருடைய எழுத்துத் திறன் எங்களைக் கவர்கிறதா என்பதை மட்டும் வைத்தே, அவரின் பரம விசிறியாவதும் பரம விரோதியாவதும் முடிவு செய்யப்பட்டது.

அவர்கள் இல்லத் துணைகளுக்கும் அப்பால், தலையணைகளுக்கு நடுவில் இலக்கியம் பேசுவதற்கு 'ஆன்ம துணை'யைத் (Soulmates) தேடியிருந்தால் கூட அது எங்களுக்குச் சம்பந்தம் இல்லாத அனாவசியமானதாகத் தான் இருந்திருக்கும். அவர்களின் கவிதையில் மயங்கி, இடுப்பில் தாலிக் கயிற்றோடு யாராவது துரத்திச் சென்றிருந்தாலும், அந்தக் க'வீ'தையை எல்லாம் எங்களுக்கு யார் சொல்லியிருப்பார்கள்?

எங்கள் சாத்தர்களும் சீமோன் து போவார்களும் தங்களுக்கு இடையிலான காமம் கலந்ததோ, கடந்ததோவான உறவுகளை எல்லாம் எங்களுக்குச் சொல்லிக் கொண்டாடியிருப்பார்களா? சினிமாக் குணசித்திர நடிகர்களின் கிசுகிசுக்களுக்கு இருந்த பெறுமதி கூட அவற்றுக்கு இருந்திருக்காது.

இலக்கியங்கள் கூட, கற்பனைகளுக்குள் தான் குண்டுச்சட்டிக் குதிரையோட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்தன. அவை வாழ்வுக்கு அப்பாற்பட்டவையாகவும், சமூக நீதிக்குச் சம்பந்தமில்லாத வையாகவும் இருந்தன. 'இலக்கியம் இலக்கியத்திற்காகவே' என்ற கமுக்கமான கோஷத்தோடு, அரசியல் நீக்கம் செய்யப்பட்ட எழுத்துக்கள் தான் இலக்கியமாகவும் இருந்தது. அவற்றில் பல அகராதிகளில் கூட கண்டுபிடிக்க முடியாத அக்ரகாரத் தமிழோடு எங்களைக் குழப்பிக் கொண்டும் இருந்தன.

திராவிடக் கொள்கை சமூகத்தில் ஏற்படுத்திய புரட்சி அதன் பெயரில் ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில் கூட, சமூக மாற்றம் பற்றி இலக்கியம் வாய் திறக்கவில்லை. அறைக்குள் இருக்கும் யானை தரும் அசௌகரியம் பற்றி அலட்டிக் கொள்ளாமலேயே உரையாடல் நிகழ்த்தக் கூடிய வித்தகர்கள் நிறைந்த தமிழ்ச் சமூகத்தின் நீட்சி தானே இந்த இலக்கிய உலகம்!?

தற்போது புதிதாக எழுந்திருக்கும், பார்ப்பனியத்தின் பிடிக்குள் இருந்த சிறுசஞ்சிகை இலக்கியம் பற்றிய குற்றச்சாட்டும் ஒரு வகையில் நியாயமானதாகத் தான் இருக்கும்.

பார்ப்பனியத்தின் ஆதிக் கத்தை மட்டுமன்றி, அதன் இருப்பையே புரட்டிப் போட்ட பெரியாரின் பகுத்தறிவு வாதம் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றி வாயே திறக்காமல், தமிழ்ச் சமூகத்திற்கு அன்னியமான வெளிநாட்டு இலக்கிய இயக்கங்கள் பற்றிய அக்கறையையும், அவற்றை அப்பட்டமாக பிரதி செய்ய முயன்ற முயற்சிகளையும் எந்த வகைக்குள் சேர்த்துக் கொள்ள முடியும்?

'சதிக் கோட்பாடுகள்' மாதிரி, இருண்ட அறைக்குள் கூடியிருந்து மந்திராலோசனை செய்த திட்டமிடல் மாதிரி இல்லாமல், தங்களுக்குள் இழையோடுகின்ற, தங்கள் 'சமூக' நலனுக்காக ஒரே நேர்கோட்டில் இயங்கிக் கொண்டிருந்த உதிரிக் குழுக்களாகவும் அவர்கள் இருந்திருக்கலாம்.

எனவே, இவர்கள் இலக்கியங்கள் பற்றி உதிர்த்த திருவாய் மொழிகள் தவிர்த்து சமூகம் பற்றிய இவர்களின் கருத்துக்கள் எதுவும் எங்களுக்குத் தெரியாது.

அவர்கள் சொன்னதுமில்லை. நாங்கள் கேட்டதுமில்லை.

சிறு சஞ்சிகைகள் போலத் தானே வணிக வார இதழ்களும் பார்ப்பனியக் கட்டுப்பாட்டில் இருந்தன. இரண்டிலும் நாங்கள் இலக்கியம் என்று நினைத்த வெவ்வேறு வடிவங்கள், பொதுநுகர்வுக்கானவையும் (mass consumption), இலக்கிய connoisseur களுக்குமானதாக, இலக்கியம் என்பது சமூகத்திற்கு ஆனதாக இல்லாமல், அதற்குச் சம்பந்தமில்லாத வெளியேயான, அந்நியமான ஒன்றாகத் தான் இருந்திருக்கிறது.

விமர்சன இலக்கியம் என்று தமிழ்ச் சமூகத்திற்கு அப்பாலான இலக்கியங்களை அறிமுகம் செய்தவர்களின் கருத்துக்கள் கூட பொதுவெளிக்கு அந்நியமானதாக, ஏதாவது special interest group க்கு உரியதாக தேடிப் பி(ப)டிக்க வேண்டியதாக இருந்ததே அன்றி, பொதுச்சூழலில் உரையாடப்பட்டதாக இல்லை.

தமிழ்ச் சூழலில் இன்றைக்கு நாங்கள் விதந்தோதுகிற பல்வேறு இலக்கிய ஜாம்பவான்களின் முகங்கள் கூட எங்களுக்குத் தெரியாது என்ற நிலையில், அவர்களின் கருத்துக்கள் பற்றி எவர் தான் அலட்டிக் கொள்வார்?

எல்லாமே நன்னாத் தான் போய்க்கிட்டிருந்தது, ஜெயகாந்தனும், சுந்தர ராமசாமியும் வரும் வரைக்கும்.

அளவுகோல்களையும் வரையறைகளையும் அறிமுகப்படுத்த முயன்ற சுந்தர ராமசாமியும், வரையறைகளுக்குள் அடங்க மறுத்த ஜெயகாந்தனும் என வந்த பின்னால் தான் இலக்கிய ஆளுமைகள் என்பவர்களின் முகங்கள் அவர்களின் படைப்புகளோடு ஒட்டிக் கொண்டன என்று நினைக்கிறேன்.

அவர்களின் கருத்துக் கள் பொதுவெளியில் அக்கறையோடு கேட்கப்படுகிறவையாகவும், அவை குறித்து உரையாடப்படுகிறவையாகவும் வரும் நிலை

பொதுவெளியில் கலகக்குரலாக தன்னைக் காட்டிக் கொண்ட ஜெயகாந்தனுக்கு இருந்த இடதுசாரியப் பின்னணிக்கு எதிரானதாகத் தான் சுந்தர ராமசாமியின் மார்க்ஸிய எதிர்ப்பு இழையோடிய பார்ப்பனியப் பின்னணி தழுவிய உலக இலக்கியப் பார்வை இருந்தது. சுந்தர ராமசாமி முகாமில் தங்களை இணைத்துக் கொண்டவர்களுக்குள் பழமைவாதச் சிந்தனை கொண்ட, இடதுசாரிய எதிர்ப்புணர்வு கொண்டவர்கள் தான் இன்றைக்கும் அதிகமாக வெளித் தெரிகிறார்கள்.
ஆசான் தொடங்கி அ.முத்துலிங்கம் வரைக்கும்!

அப்போது தான் வருகிறது. அந்தக் கருத்துக்கள் பொதுவெளியில் பரவலாக அடிபடும்போது தான் கருத்துக்களோடு முகங்களை ஒட்டிக் கொள்ள வேண்டிய தேவை வந்திருக்க வேண்டும்.

அதுநாள் வரைக்கும் எழுத்தாளர்கள் பற்றிய படங்கள் என்றால், ஆண்களாயின் வாத்தியாரர்களாக இருந்த எங்கள் அப்பாமார் தோற்றத்திலும், பெண் எழுத்தாளர்களாயின் கமெராவைப் பார்க்காமல் ஒரு பக்கமாகப் பார்த்தபடி, திருமணப் பேச்சுக்குக் கொடுத்தனுப்பிய படத்தில் உள்ள மல்லிகைப்பூக் கூந்தல் சிரிப்பழகிகளுமாகத் தான் எங்கள் மனங்களில் படிந்திருந்தன.

முகமதுக்கள் எல்லாம் மாசுமறுவற்ற மதிமுக சந்திர பிம்பங்களாகத் தான் இருந்தன.

பொதுவெளியில் கலகக்குரலாக தன்னைக் காட்டிக் கொண்ட ஜெயகாந்தனுக்கு இருந்த இடதுசாரியப் பின்னணிக்கு எதிரானதாகத் தான் சுந்தர ராமசாமியின் மார்க்ஸிய எதிர்ப்பு இழையோடிய பார்ப்பனியப் பின்னணி தழுவிய உலக இலக்கியப் பார்வை இருந்தது. சுந்தர ராமசாமி முகாமில் தங்களை இணைத்துக் கொண்டவர்களுக்குள் பழமைவாதச் சிந்தனை கொண்ட, இடதுசாரிய எதிர்ப்புணர்வு கொண்டவர்கள் தான் இன்றைக்கும் அதிகமாக வெளித் தெரிகிறார்கள்.

ஆசான் தொடங்கி அ.முத்துலிங்கம் வரைக்கும்!

இலக்கியம் என்பது படைப்புச் சார்ந்த நிலையில் இருந்து கருத்துச் சார்ந்த நிலைக்கு மேலெழுந்ததாக இந்த மாற்றத்தைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

சிறு சஞ்சிகைகளுக்குள், புரட்சிகர இடதுசாரிகள் சமூகம் சார்ந்த அதிதீவிர நிலைப்பாடுகளுடன், தாடி, ஜோல்னாப் பைகள் சகிதம், ஆபீஸ் சுவரில் மார்க்ஸும் மாவோவும் மேலே இருந்து அருள்பாலிக்க வெளியிட்டவை பேசிய அரசியலும் சமூக நீதி பற்றியதும் பற்றி, அதிகமான எதிர்பார்ப்புகள் இருந்திருக்க முடியாது. சமூகத்தில் களமிறங்கி சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தாமல், 'புரட்சி வெடிக்கும், விடியல் மலரும்' என்று தங்களுடைய 'பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு' ஏற்படுத்தப் போகும் சமூக மாற்றத்திற்கான குறுக்குவழிக் கனவுகளிலேயே அவை அக்கறை கொண்டிருந்திருக்கக் கூடும். அதன் எச்சங்கள் இன்றைக்கும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

அவை சிறுசஞ்சிகைகள் தான், in every sense.

இதை விட, இடதுசாரிய, திராவிடச் சிந்தனைகள் சார்ந்த, அவைகளை விட தனியான, அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சிற்றிலக்கிய இதழ் முயற்சிகளும் மேற்குலகில் அவ்வப்போது தோன்றிய இலக்கிய இயக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இலக்கிய உரையாடல்களை நிகழ்த்தினாலும், இவை fringe elements என்ற அளவில், அந்த இலக்கியக் கலகக்காரர்கள் எல்லாம் தங்கள் good old times பற்றி இன்றைக்குப் பெருமிதம் கொள்ளும் அளவுக்கு, தொடர்ச்சியானதாக இல்லாமல், அவ்வப்போது தோன்றி மறைந்து

கொண்டிருந்தன.

அவர்களில் பலரின் முகங்கள் எங்களுக்கு இன்னமும் தெரியாது.

முகமில்லாத கருத்துக்கள் அவை.

ஜெயகாந்தன் தனிமனித rabble-rouser என்ற அளவில் தான் கருதப்பட முடியுமே தவிர, அவரது சிந்தனையை இயக்கமாகக் கூடக் கருத முடியாது. இயக்கமாகுவது கூட அவரது சிந்தனைக்கு முரணாகத் தான் இருந்தது.

ரஜனி அரசியலுக்கு வந்த கதை மாதிரி, 'என் வழி தனிவழி!'. அவ்வளவு தான்.

ஆனால், ரஜனி மாதிரி பாவ்லா காட்டிக் கொண்டிருக்காமல், அந்த வழியில் நடந்தார். ஆனால், மற்றவர்கள் எவரும் அவரைத் தொடர்ந்ததில்லை. ஓரமாக நின்று தான் இன்றைக்கும் கை தட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் கிறுக்குத்தனமான திமிரோடு யாரைத் தான் நீங்கள் இப்போது அடையாளம் காட்டுவீர்கள்? ஆங்காங்கே ஏகலைவன்கள் இருக்கவும் கூடும். (அவர் கடைசியில் சங்கமமான இடங்கள் எல்லாம் சங்கடங்களான தனிக்கதைகள்.)

ஆனால் சுந்தர ராமசாமிக்கு அவரது தொடர்ச்சியை உறுதி செய்ய என சீடகோடிகளும், பெரும் கட்டமைப்பும் உண்டு.

யூடியூப்பில் ஒரே தமிழ்ப்பாட்டுக்களையே, 'முற்கால இடைக்கால்', 'இரவின் மடியில்', 'காலத்தால் அழியாத்', 'நெஞ்சை விட்டு நீங்காத்', 'எண்பதுகளில் சிலிர்க்க வைத்த்' என்றெல்லாம் தொகுத்து வழங்குவது போல, அவரது படைப்புகளை வெவ்வேறு விதமாக repackaging செய்து recycle பண்ணுவதற்கான கட்டமைப்பு இருக்கிறது. ஆனந்தவிகடன் காந்தி விகடன் மாதிரி, காலச்சுவட்டிலும் அவர் masthead இலோ, ஆபீஸ் பின் சுவரில் மேலே இருந்தோ பார்த்துக் கொண்டிருக்கக் கூடும்.

அவரது சிந்தனைப் பள்ளியின் தொடர்ச்சியாக, அவரோடு தங்களை அடையாளம் காட்டுவதற்கான

> ஜெயகாந்தனின் உத்தி சாமானியனை நீ முட்டாள் என்பதாக உரத்துச் சொல்லும் என்று கருதினால், சுந்தர ராமசாமியின் உத்தி நான் மேலானவன் என்பதை அழுத்திச் சொல்வதில் இருந்திருக்கும்.
> உன்னத இலக்கியம் சாதாரண வாசகர்களுக்குப் புரியாது என்பதன் அடிப்படையிலான மகாமகோபாத்தியாயர் சுந்தர ராமசாமியின் school of thoughts இன் மாணாக்கர்கள் தான் இன்றைக்கு சாமான்யர்கள், காமன்மேன், சராசரிகள், அற்பர்கள் என்றெல்லாம் பீலா விட்டுக் கொண்டிருக்கிறவர்கள்.

தேவை, பல இலக்கிய elite wannabe களுக்கு அவர்களின் இருப்புக்கு அவசியமானதாகக் கூட இருக்கிறது.

எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் இன்றைக்கும் அ.தி.மு.கவிற்கு அவசியமாக இருப்பது போல.

ஜெயகாந்தன் ஒரு வகையில் இலக்கியம் குறித்த சிந்தனைகளை பொதுவெளிக்குக் கொண்டு வந்தார் என்று சொல்லலாம். அதற்கு வணிகப் பத்திரிகைகளில் அவர் எழுதியதும், அவரது எழுத்துக்களுக்குப் பொதுவெளியில் இருந்த வரவேற்பும், அவரது கருத்துக்கள் அதே வணிக வெளியீடுகள் மூலமாக பொதுவெளிக்குக் கொண்டு செல்லப்பட்டதும் காரணமாக இருக்கும். அவ்வாறான நிலை இல்லாமல், முன்னுரைகளை மட்டுமே தொகுத்து தனிப்புத்தகமாக வெளியிடுவது சாத்தியமாகியிருக்காது.

சுந்தர ராமசாமியின் school of thoughts வேறு. அது இலக்கியம் சாமானியர்களுக்கு ஆனதல்ல என்ற elite பாசாங்கு நிறைந்தது. அதன் அடிப்படையே தன்னை பொதுவெளியில் மேலானவராகக் காட்டுவதற்கான உத்தி தான்.

ஜெயகாந்தனின் உத்தி சாமானியனை நீ முட்டாள் என்பதாக உரத்துச் சொல்லும் என்று கருதினால், சுந்தர ராமசாமியின் உத்தி நான் மேலானவன் என்பதை அழுத்திச் சொல்வதில் இருந்திருக்கும்.

உன்னத இலக்கியம் சாதாரண வாசகர்களுக்குப் புரியாது என்பதன் அடிப்படையிலான மகாமகோபாத்தியாயர் சுந்தர ராமசாமியின் school of thoughts இன் மாணாக்கர்கள் தான் இன்றைக்கு சாமான்யர்கள், காமன்மேன், சராசரிகள், அற்பர்கள் என்றெல்லாம் பீலா விட்டுக் கொண்டிருக்கிறவர்கள்.

இப்படி இலக்கியம் படைத்தலுக்கும் அப்பால், மாவோ, லெனின் ரேஞ்சில் தொகுக்கக் கூடிய அளவில், கருத்துக்களும் சிந்தனைகளும் இவர்கள் இருவராலும் விட்டுச் செல்லப்பட்டிருக்கின்றன.

இந்தக் கருத்துக்களோடு, அவர்களின் திருமுக தரிசனங்களும் தவிர்க்க முடியாதபடிக்குப் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

இதெல்லாம் அச்சு வடிவம் தான் இலக்கியத்திற்கான ஊடகமாக இருந்த காலம். இணையத்திற்கு முன்பாக, உலகத்தை வரவேற்பறைக்குள் கொண்டு வந்த தொலைக்காட்சி காலத்திற்குக் கூட முந்திய காலம்.

இன்றைக்கு இணையத்தின் உபயத்தில் இலக்கியம் வீட்டுக்குள்ளே என்ன, உள்ளங் கைக்குள்ளேயே வந்து விட்டது.

இலக்கியம் தொலைக் காட்சியை தொட்டுக் கூடப் பார்க்காமல், துள்ளிப் பாய்ந்து கடந்து, இணையத்தில் விளையாடி, இப்போது வலைத்தளங்களில் தலை சீவிக் கொண்டிருக்கிறது.

அந்த உள்ளங்கைக்குள் இலக்கியவாதிகளும் அவர்களின் கருத்துக்களும் மட்டுமன்றி, முகப்புத்தகத்தில் நீக்கமற நிறைந்தபடி அவர்களின் மதிமுகங்களும் வந்து சேர்ந்திருக்கின்றன.

அன்றைக்குத் தொலைவில் இருந்து எங்களைப் பிரமிக்க வைத்த நட்சத்திரங்கள் எல்லாம் இன்றைக்கு எங்கள் முன்னால் இரத்தமும் சதையும் உள்ள சாதாரண மனிதர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். இலக்கியமும் இலக்கியர்களும் ஏதோ வேற்றுலக விடயங்கள் என்பதாக இல்லாமல், இலக்கியம் சமூகம் பற்றி சொல்கிறதோ இல்லையோ, இலக்கியர்கள் சமூகத்திற்கு கைக்கு எட்டிய தூரத்திற்குள் நிற்கிறார்கள்.

மதிமுக முகமதுக்களின் மூஞ்சிகளும் முகரக்கட்டைகளும் முத்தமிடுவதற்கும் மூஞ்சியில் குத்துவதற்கும் இலகுவாக!

இன்றைக்கு நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ அல்லக்கைகளின் பகிர்வுகளும் அல்கோரிதங்களும் இலக்கியத்தின் பீலாமகர்களை தப்ப முடியாதபடிக்கு எங்கள் முகத்தின் முன்னால் திணித்துக் கொண்டிருக்கின்றன.

அவர்களின் சிந்தனைகளும், கருத்துக்களும் மாவோ, லெனின் ரேஞ்சில் எங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

அச்சு இலக்கிய காலத்தில், வாசகர்கள் தங்களுக்கு இடையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான வெளி இருந்ததில்லை. ஆங்காங்கே நடந்த கூட்டம் நடத்துவதற்கான quorum தொகை மட்டுமே கொண்ட சந்திப்புகள் தவிர்ந்து, வாசகர் வட்டங்கள் பெரிதாக இருந்ததில்லை.

இன்றைக்கு இந்தக் கருத்துக்களை வைத்துக் கொண்டே கோஷ்டி மோதல் என்ன, குருஷேத்திர யுத்தம் கூடச் செய்யக் கூடிய அளவில் வலைத்தள நிலைமை இருக்கிறது.

முன்பு இலக்கியவாதிகள் பற்றிய பிம்பங்கள் எங்கள் மனதில் உருவாக்கப்படுவதற்கு, அவர்களின் முகாம் அரசியலும் ஒரு காரணமாக இருந்தது. தங்களுக்கு வேண்டியவர்களை அங்கீகரித்தும், வேண்டாதவர்களை நிராகரித்தும் இருட்டடிப்பும் செய்த அந்த நிலைமை மாறி, சாதாரண

அன்றைக்குத் தொலைவில் இருந்து எங்களைப் பிரமிக்க வைத்த நட்சத்திரங்கள் எல்லாம் இன்றைக்கு எங்கள் முன்னால் இரத்தமும் சதையும் உள்ள சாதாரண மனிதர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். இலக்கியமும் இலக்கியர்களும் ஏதோ வேற்றுலக விடயங்கள் என்பதாக இல்லாமல், இலக்கியம் சமூகம் பற்றி சொல்கிறதோ இல்லையோ, இலக்கியர்கள் சமூகத்திற்கு கைக்கு எட்டிய தூரத்திற்குள் நிற்கிறார்கள்.
மதிமுக முகமதுக்களின் மூஞ்சிகளும் முகரக்கட்டைகளும் முத்தமிடுவதற்கும் மூஞ்சியில் குத்துவதற்கும் இலகுவாக!
இன்றைக்கு நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ அல்லக்கைகளின் பகிர்வுகளும் அல்கோரிதங்களும் இலக்கியத்தின் பீலாமகர்களை தப்ப முடியாதபடிக்கு எங்கள் முகத்தின் முன்னால் திணித்துக் கொண்டிருக்கின்றன.

மனிதர்களே இலக்கியவாதிகள் பற்றி தங்கள் அபிப்பிராயங்களை தாங்களே உருவாக்கக் கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது. அந்த அபிப்பிராயங்களும் பெரும்பாலும் படைப்புகளால் இல்லாமல், படைப்பாளிகள் பற்றிய பொதுவெளிக் கருத்துக்களால் ஆனாவை என்பது தான் இன்றைய நிலைமை.

அதேநேரம், நிராகரிக்கப் பட்டவர்களும் இருட்டடிப்புச் செய்யப்பட்டவர்களும், இந்தப் பேட்டை ரௌடிகளின் பகீரதப் பிரயத்தனங்களையும் கடந்து, பொதுவெளியில் வாசகர்களை நேரடியாகவே சென்றடைவதற்கும் இந்த வலைத்தள யுகம் வசதி செய்திருக்கிறது.

இலக்கியவாதிகள் தங்கள் சிந்தனைகளையும் கருத்துக்களையும் சிதற விடுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. பாலசிங்கம் எழுதிக் கொடுத்ததை வாசித்த பிரபாகரனின் பொன்மொழிகளை இத்தனை வருடங்களாகச் சகித்துக் கொண்டு தானே இருக்கிறோம்? அவரது 'அடிச்சுப் பறிக்கிற' பொன்மொழிகளின் புண்ணியத்தில் பிழைப்பு நடத்தும் 'ஈழத் தமிழ்த் தேசிய' இலக்கியவாதிகள் கூட தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்டபடி தானே இருக்கிறார்கள்?

கருத்துக்குள் என்று வந்தால், எனக்கு 'ஆயிரம் பூக்கள் மலரட்டுமே!?' தான். அதனால் தான் பல்வேறு இலக்கியப் பிரகிருதிகளுக்கு தொடராளராக இருக்கிறேன். (நட்பு வட்டத்திற்குள் அவர்கள் சேர்த்துக் கொள்ளாத outcast நான்!)

இன்றைக்கு எங்கள் இலக்கியவாதிகள் எனப்படுவோர் எல்லாம் தங்கள் படைப்புகளுக்காக அன்றி, தங்கள் கருத்துக்களுக்காகவும், நடத்தைகளுக்குமாகவே அறியப் படுகிறார்கள்.

இளையராஜா, வைரமுத்து மாதிரி!

இவர்களின் பெயரைக் குறிப்பிட்டவுடனேயே எங்கள் மனதில் உடனே எழுவது இவர்களின் மொக்கைக் கருத்துக்களும், மொக்கு வேலைகளுமே!, இவர்களின் படைப்புகள் இல்லை என்னும் அளவில் தான் இன்றைய நிலைமை இருக்கிறது.

ஒரு 'பிரதியை அணுகுவது' என்பது படைப்பாளியின் படைத்தலுக்கு வெளியேயான அவரது கருத்துகளும் நடத்தைகளும் பற்றிய வாசகனின் அபிப்பிராயங்களின் அடிப்படையிலான சார்பு நிலையோடு சேர்ந்ததாகத் தான் இருக்கிறது.

ஒரு படைப்பை இன்றைக்கு அதன் திறன்களை (merits) மட்டுமே அடிப்படையாக வைத்து மதிப்பிட முடிவதில்லை. இன்றைக்கு வலைத்தளங்களில் இலக்கிய உரையாடல்களும், வாதப் பிரதிவாதங்களும் படைப்பு பற்றியதாக இல்லாமல், படைப்பாளி பற்றியதாகத்தான் இருக்கும் அவல நிலைக்குள் நாங்கள் இருக்கிறோம்.

யாழ்ப்பாணிகள் எப்படி

புலிவாலைக் கொண்டே எல்லாவற்றையும் அளவிட்டு, தியாகி, துரோகி பட்டங்களோடு கறுப்பு வெள்ளையாக எல்லாவற்றையும் அணுகுவது போல, இலக்கியமும் அதன் ஏற்றுக் கொள்ளலும் நிராகரிப்பும் படைப்புக்கு அப்பாற்பட்ட மொக்கையான காரணிகளால் தான் தீர்மானிக்கப்படுகின்றன.

படைப்புகளை விட, படைப்பாளிகளால் உருவாக்கப் பட்ட cult கலாசாரம், படைப்பாளிகளை 'படைப்பானந்தா' ரேஞ்சில் நிறுத்தி விட்டிருக்கிறது. அது தியாகி, துரோகி மாதிரி ஒற்றைத் தன்மையிலேயே இலக்கியத்தையும் அணுக வைக்கிறது.

இதனால் தான் படைப்பாளிகளின் மொக்கைப் பிரதிகள் கொண்டாடப்படுவதும், 'மகத்தானவை(?)' நிராகரிக்கப் படுவதுமாக இருக்கிறது.

மறுபுறத்தில், படைப்பாளிகளும் தாங்கள் எழுத வேண்டும் என்பதை விட, தங்களைப் பற்றி எழுதப்பட வேண்டும் என்பதில் தான் மிகுந்த அக்கறையாக இருக்கிறார்கள்.

தாங்கள் தூற்றுகின்ற வணிக இதழ்களில் தங்கள் 'மனம் திறக்கிறார் ஒப்பன் டாக்' நேர்காணல் வெளிவர வேண்டும், தாங்கள் உதிர்க்கின்ற பொன்மொழிகள் வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டும் என்று உள்ளூர guilty pleasure இல்லாத படைப்பாளிகள் இல்லை என்றே சொல்லலாம்.

தங்களைப் புத்திஜீவிகளாகக் காட்ட ஒலக எலக்கிய மேற்கோள்கள் முதல் 'நாந்தான் நம்பர் வண்' self proclamation வரைக்கும், ஊரான ஊரில் இவங்க தொல்லை தாங்க முடியாதபடிக்கு...

ஊருக்கு நாலு நம்பர் வண்கள் இருக்கும் புண்ணிய பூமி இது!

வெற்றுப் புகழ்ச்சிகளில் புல்லரித்துப் போகிறார்கள்.

தர்க்க ரீதியான விமர்சனங்களை அவதூறு என்றபடி கடந்து போகும்

தாங்கள் தூற்றுகின்ற வணிக இதழ்களில் தங்கள் 'மனம் திறக்கிறார் ஒப்பன் டாக்' நேர்காணல் வெளிவர வேண்டும், தாங்கள் உதிர்க்கின்ற பொன்மொழிகள் வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டும் என்று உள்ளூர guilty pleasure இல்லாத படைப்பாளிகள் இல்லை என்றே சொல்லலாம்.

தங்களைப் புத்திஜீவிகளாகக் காட்ட ஒலக எலக்கிய மேற்கோள்கள் முதல் 'நாந்தான் நம்பர் வண்' self proclamation வரைக்கும், ஊரான ஊரில் இவங்க தொல்லை தாங்க முடியாதபடிக்கு...

ஊருக்கு நாலு நம்பர் வண்கள் இருக்கும் புண்ணிய பூமி இது!

இவர்களால், அல்லக்கைகளாலும், அனாமதேயங்களாலும் எழுதப்படும் புகழுரைகளை பேஸ்புக்கில் பகிர்ந்து கொள்வதில் இருக்கும் புல்லரிப்பு இருக்கிறதே...

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்ற மாதிரி!

இன்றைக்கு அங்கீகாரம் பற்றிய புலம்பல்களை விட இந்த self promotion களில் தான் இவர்களின் முழுக்கவனமும் இருக்கிறது.

இன்றைக்கு இவர்கள் படைப்பதற்கும், கருத்துச் சொல்வதற்குமான விகிதாசாரத்தைப் பார்த்தால், கருத்துச் சொல்லல் என்பது தான் அதிகளவைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கருத்துச் சொல்லலை மட்டுமே அளவீடாகக் கொண்டால், சாதாரண பேஸ்புக் கருத்துக் கந்தசாமிகள் பலரின் அபிப்பிராயங்கள் மட்டுமே இந்த நம்பர் வண்கள் எழுதித் தீர்த்த மொத்தத்தையும் விட மிகவும் அதிகம்.

காரணம் என்னவாக இருக்கலாம்?

எளிமையான விளக்கம். கையிருப்பு விற்றுத் தீர்ந்திருக்கக் கூடும்.

அல்லது வரலாற்றின் பொன்னேடுகளில் தங்களின் சாதனைகளை தாங்களே பதிய வைத்து, தங்கள் legacy யைத் தொடரச் செய்வது.

அதற்குச் செலவிடும் நேரத்தை படைத்தலுக்குச் செலவிடுவதாகத் தெரியவில்லை.

பலருக்கு தங்களின் படைப்புகள் தங்களுக்குப் பின்னாலும் தங்களைப் பற்றிப் பேச வைக்கும் என்ற தன்னம்பிக்கை இல்லை. தாங்கள் உயிரோடு இருக்கும்போதே, தங்களைச் சூரிய தேவன் என்று யாராவது புகழ்ந்து விட வேண்டும் என்ற அக்கறை அதிகமாக இருக்கும் போல. வாழும்போதே தாங்கள் கௌரவிக்கப்படுவதைப் பார்த்து விட வேண்டும் என்பதற்காக, விருது என்ன, பொன்னாடை போர்த்தினால் கூட போய் பல்லிளித்த பெருமையோடு வாங்குவதும், பட்டியல்களில் இடம் பெறும்போது புல்லரித்துப் போவதுமான இயல்பு இன்றைக்குப் பொதுவானது.

தங்களை நம்பர் வண் என்பதில் பெருமை கொள்கிற சிந்தனை எல்லாம் இவ்வாறான எண்ணங்களின் அடிப்படையில் தான். வரலாற்றில் தாங்கள் மறக்கக்கட்டு விடாமல், தங்களுக்கும் 'நெஞ்சை விட்டு நீங்காத' repackaging, recycling செய்யக் கூடிய சீடகோடிகளையும் கட்டமைப்புகளையும் உருவாக்கும் நப்பாசைகள் கூட இங்கே உண்டு.

இந்த எண்ணம் எங்கேயிருந்து வருகிறது?

தாங்கள் மேடையில் உட்கார்ந்திருக்கும் போது தங்களைப் பற்றிச் சொல்லப்படும் புகழுரைகள் எல்லாம் மனம் அறிந்து சொல்லப்படும் பொய்கள் என்பது இவர்களுக்குத் தெரிந்தபடியால் தானே இந்தச் சந்தேகம் எல்லாம் வருகிறது? இவர்களும் மேடையில் நிற்கும்போதும் அதே பொய்யைத் தானே மற்றவர்கள் பற்றிச் சொல்கிறார்கள்?

உயிரோடு இருக்கும்போதே

சொல்லப்படுகிறவை போலிப் புகழுரைகளாக இருக்கும்போது, போய்ச் சேர்ந்து விட்டால் உண்மையையா சொல்லப் போகிறார்கள் என்ற பயம்.

ஒரு காலத்தில், பொதுவெளியில் ஒரு படைப்பாளி பற்றி எந்த வகையான பிம்பத்தை உருவாக்குவது என்பது படைப்பாளிகள், சக படைப்பாளிகள், விமர்சகர்கள், பத்திரிகைகள் என்பவற்றால் கவனமாகக் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. (control)

முன்பு ஒரு காலத்தில், ஒரு இலக்கியவாதியின் legacy யும், obituary யும் அவர் சார்ந்தவர்களால் வடிகட்டப்பட்டு, உப்பு, புளி சேர்க்கப்பட்டுத் தான் பொதுவெளி நுகர்வுக்கு சந்தைப்படுத்தப்பட்டன. அப்படித் தான் பல காலம் சென்ற படைப்பாளிகள் பற்றிய பொது அபிப்பிராயங்கள் கட்டமைக்கப்பட்டு எங்கள் மனதில் பதியப்பட்டிருக்கின்றன. எதிர்முகாம்களின் விமர்சனங்கள் முதல் ஒட்டுமொத்தமான நிராகரிப்புகள் வரை எதிர்மறையாகப் பல விடயங்கள் இருந்தன என்பதும் உண்மை. ஆனால் அவை பொதுவெளிக்குள் பரவலாகப் பேசப்படவில்லை. அவர்களைத் தனிப்பட்ட ரீதியில் குறைத்து மதிப்பீடு செய்யும் அளவிலும் இருக்கவில்லை. அச்சிலேயே அவற்றின் ஆவணப்படுத்தல்களும் இருந்ததால், வரலாற்றில் அந்தச் சுவடிகள் புதைபொருள்களாகப் புதைந்தும் போய் விட்டிருக்கவும் கூடும். ஒரு இலக்கியவாதி பற்றிய வரலாற்றில் எது பதிவு செய்யப்பட வேண்டும் என்பது ஒரு காலத்தில் இப்படி குறித்த ஒரு கூட்டத்தினரால் தான் முடிவு செய்யப்பட்டது.

இன்றைய நிலைமை முற்றிலும் அந்த balance of power ஐ மாற்றி விட்டது. இன்றைக்கு அந்த விளையாட்டுத் தளம் எல்லாரும் விளையாடக்கூடிய அளவுக்கு சமப்படுத்தப்பட்டு விட்டது. (level playing field).

யாழ்ப்பாண அரசியலில் சம்பந்தப்பட்ட எவரையும், எந்த ஒரு அனாமதேயம் கூட துரோகி ஆக்கலாம் என்பது போல, எந்த ஒரு இலக்கியவாதி குறித்தும் எவரும் அவர் பற்றிய அபிப்பிராயங்களை பொதுவெளியில் விதைத்து விடலாம். அவற்றுக்கு உண்மை அடிப்படையாகக் கூட இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எங்கோ எவராலோ எப்போ எழுதப்பட்டதைக் கூட, தேடும்போது கேளாமலேயே முன்னால் கொண்டு வந்து கொட்டிச் செல்லும் தேடுபொறிகள் உள்ளன.

இருக்கும்போது, நான் அற்பர்களின் வசைகளுக்கும் விமர்சனங்களுக்கும் பதில் அளிப்பதில்லை என்று மேற்தட்டு மனோபாவத்துடன் மிதப்போடு கூறி விட்டுப் போய் விடலாம். மண்டையைப் போட்ட பின்னால், வரலாற்றில் எது நிலைத்து நிற்கும் என்பது எவருக்கும் தெரியாது. 'அற்பர்களின்' விமர்சனங்களும், அப்பட்டமான பொய்களும் கூட பொதுவெளியில் உண்மையாகவும் வரலாறாகவும் நிலைத்து விடக் கூடிய ஆபத்து இலக்கியவாதிகளுக்கு உண்டு.

இன்றைக்கு ஒரு படைப்பாளி பற்றிய பொது அபிப்பிராயம் அவரது படைப்புகள், கருத்துக்களால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. அத்தோடு இலவச இணைப்பாக வரும் விமர்சனங்கள், தனிமனிதச் செயற்பாடுகள், பொய்கள் எல்லாவற்றாலும் தான் உருவாக்கப்படுகின்றன. ஒருவரின் மேதைமை மறக்கப்பட்டு, அவரின் மொக்கைத்தனமே பொதுவெளியில் பிம்பமாக மிஞ்சிப் போகும் நிலைமை கூட வரலாம்.

இன்றைய இளையராஜாவும் பயில்வானும் படும், படுத்தும் பாடுகளே இதற்கான வாழும் சாட்சிகள்.

தங்கள் இமேஜைக் கட்டியமைப்பதில் பெரும் அக்கறை கொண்டிருக்கும் இலக்கியவாதிகள் பல்வேறு மூலோபாய, தந்திரோபாய யுக்திகளில் ஈடுபட்டாலும், final product அவர்களின் கையில் இல்லை.

ஆசான் தமிழ் விக்கி மூலம் தன்னுடைய அபிப்பிராயங்களை வரலாறாக்க முயன்றாலும், வரலாறு கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட நிரந்தரத்தன்மை கொண்டதாக இல்லாமல், இன்றைக்கு dynamic and fluid நிலையில் இருக்கிறது. இங்கே பல வரலாற்று நாயகர்கள் அடிமைகளை வைத்திருந்தார்கள், பாலியல் குற்றங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற காரணங்களுக்காக வரலாற்றுநீக்கம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

ஒரு படைப்பாளி தன் படைப்புகள், கருத்துக்கள் பற்றி என்ன தான் உலக மகா காவிய ரேஞ்ச் நெனைப்பில் இருந்தாலும், அவர்கள் மறக்க விரும்புகிற, பெருமைப்பட விரும்பாத அவர்களின் மொக்கைக் கருத்துக்களும் செய்கைகளும், உளறல்களும், பிதற்றல்களும், சறுக்கல்களும், பல்டிகளும், அவை குறித்த விமர்சனங்களும், வசைகளும், அவதூறுகளும், அப்பட்டமான பொய்களும் எந்தத் தணிக்கையும் இன்றி, அவற்றின் முதுகில் வரலாறு பூராவும் சவாரி செய்யத் தான் போகின்றன. அவையும் உள்ளங்கைகளிலேயே விரல் நுனியால் தேடும்போது, கிடைக்கத் தான் போகின்றன.

புதுமைப்பித்தனுக்கும் ஜானகிராமனுக்கும் கிடைத்த வரம் இவர்களுக்கு சாபமாகத் தான் இருக்கிறது.

இதனால், தங்களின் legacy, obituary எல்லாவற்றையும் தாங்களே எழுதி அதை வரலாறு ஆக்குவதற்கு எங்கள் இலக்கியவாதிகள் தலையால் மண் கிண்டிக் கொண்டிக்கிறார்கள். தங்களுக்குப் பின்னால், வரலாறாக விட்டுச் செல்ல, தங்கள் கல்வெட்டுகளை தங்களுக்கு விரும்பிய விதத்தில் எழுதிக் கொள்ள விரும்புகிறார்கள்.

விருது முதல் விக்கி வரைக்கும், உங்கள் வரலாற்றை நீங்கள் எழுத எவ்வளவு தான் முக்கினாலும், வரலாறு எவருக்கும் கருணை காட்டப் போவதில்லை.

அபத்தம்

ஆனி 2024




நீங்கள் உங்களைப்பற்றி எழுதுகிறவை எல்லாம் கல்வெட்டுக்களில் பொறிக்கப்படுவது போல நிரந்தரத் தன்மையோடு, எந்தக் கேள்விகளும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை.

இந்த நட்சத்திரங்கள் எல்லாம் நெருக்கமாக வரும்போது இவர்கள் எல்லாம் தனிப்பட்ட ரீதியில் எவ்வாறான அயோக்கியர்கள் என்பது அப்பட்டமாக எங்களுக்குத் தெரிகிறது. நீங்கள் நினைப்பது போல நீங்கள் பெரிய ஒளிவட்டக் கொம்பர்கள் இல்லை, நீங்களும் அயோக்கியர்களே என்பதை இந்தப் பெரிய நினைப்புப் பேராண்டிகள் வாழும்போதே சொல்லி, 'கௌரவித்து விட' வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். வாழும்போது சொன்னால்தான் அவர்கள் அதற்கான பதிலைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததாக இருக்கும். அவதூறு, வசை என்றபடி 'இதற்கெல்லாம் பதில் சொல்லி இவனைப் பெரிய ஆளாக்கக் கூடாது' என்ற நல்லெண்ணத்தோடு அவர்கள் இதையெல்லாம் கடந்து போவதிலோ, அல்லக்கைகளின் வெறும் புகழ்ச்சிகளில் மதிமயங்கிப் போவதோ, எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. அது அவர்களின் பிரச்சனை.

ஆனால், அவர்களால் அவதூறுகள், வசைகள் என்று புறம் தள்ளப்படுகின்றவையயும், குஸ்தி பயில்வான்களின் click bait பொய்களும் ஆவணப்படுத்தப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. அவை இவர்களுக்கு உவப்பதானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலச் சந்ததிகள் இவர்கள் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதில் அவையும் பங்காற்றத் தான் போகின்றன.

இவர்கள் எல்லாம் தங்கள் படைப்புகளுக்காக அன்றி, தங்கள் கருத்துக்களுக்கும் நடத்தைகளுக்குமாகவே நினைவு கூரப்படப் போகிறார்கள். உன்னதமான படைப்புகளைத் தரவேண்டும் என்ற எந்த உழைப்பும் இன்றி, கல்வெட்டுகளில் தங்களை வரலாற்று நாயகர்களாகப் பொறித்துக் கொள்வதிலேயே இந்தக் கல்வெட்டுக் கவிராயர்கள் குறியாக இருக்கிறார்கள்.

இந்த வசைகள், அவதூறுகளை விட, இவர்களின் உளறல்கள், பிதற்றல்களையும் விட, உண்மையான உன்னதமான படைப்புகள் உயிர் வாழத் தான் செய்யும். ஆனால், அவற்றைப் படைப்பதற்கான அக்கறையை விட, தங்கள் legacy யின் தொடர்ச்சியில் தான் இவர்களின் இன்றைய கவனம் இருக்கிறது.

தன்னை வரலாற்று நாயகனாக என்ன, சூரியதேவனாகவே நினைத்த பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்பதை கண் முன்னால் கண்டபின்பும், வரலாறு தங்களையும் சூரிய தேவர்கள் ஆக்கும் என்ற கனவுகளில் மிதப்போரைப் பார்த்து அனுதாபமும் பரிதாபமுமே படமுடியும். அ

அபத்தம் வெளியிடுவதற்கான உழைப்பின் நேரத்தையும் அதன் பெறுமதியையும் உணர்ந்து கொண்ட நண்பர்கள் சில பலர், அதற்கு தங்களால் முடிந்த நிதியுதவி செய்ய வேண்டும் என்று தாங்களாகவே நினைத்து அதை மாதாந்தமோ, ஒரு தடவையாகவோ செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றிகள் எப்போதும் இருக்கும்.

இனியும் யாராவது அதைச் செய்ய விரும்பினால், அபத்ததத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு paypal மூலமாகவோ, வேறுவழியிலோ அனுப்பலாம். இது தாங்களாகவே விரும்பிச் செய்யும் செயற்பாடு. அதற்கான நிர்ணயிக்கப்பட்ட தொகையோ, நிர்ப்பந்தமோ எதுவும் இல்லை. விரும்பியவர்களும் முடிந்தவர்களும் தங்களால் இயன்றதைச் செய்யலாம். மற்றவர்கள் தொடர்ந்தும் அபத்தத்தை வாசித்து தங்கள் நண்பர்களுக்கும் அது குறித்துத் தெரியப்படுத்தியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தும் தொடர்ந்தும் இதை வெளியிடுவதற்கான உற்சாகத்தைத் தரலாம்.

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam.com/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev



# அன்றைய போர்த்துகேயப் பேரரசின் இன்றைய காலம் 1




## பூங்கோதை

நாம் போர்த்துக்கல்லின் ஃபாரோ விமான நிலையத்தில் (Faro Airport) வந்திறங்கிய மாலைப் பொழுது இலங்கை, இந்தியா போன்ற வெப்ப வலய நாடுகளை நினைவூட்டிக் கொண்டிருந்தது. விமான நிலையத்துக்கு வெளியே வந்து, வாகனம் ஒன்றிற்காகக் காத்திருந்த போது அந்தியில் நிறைந்த சூரிய ஒளியோடு, என் கண்களுக்குத் தென்பட்ட மரங்கள் (Palm Trees) எமக்குப் பிடித்த பனை வடலிகளைப் போலிருந்தன. எனக்கு வடலிகளும் வாழைகளும் ஏனோ பிடித்துப் போகிறது என்பதை நினைத்துக் கொண்டே வாகனத்தில் ஏறி நாம் போக வேண்டிய அல்பியூபெரா (Albufeira) முகவரி நோக்கிப் பயணம் செய்தோம்.

இலண்டனில் இருந்து மூன்று மணித்தியாலங்களில் பயணம் செய்யக் கூடிய ஒரு நாடாக போர்த்துக்கல் இருப்பினும் கூட, அங்கு போக வேண்டும் என்று அடிக்கடி நினைத்திருந்த கனவு இந்த ஆண்டில் தான் கைகூடியது. இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற இன்னும் பல நாடுகளைப் போர்த்துக்கேயர் கட்டி ஆண்டதை நினைவு கூர்ந்த போது, அதை நினைவூட்டும் படியாக இன்றும் அங்கிருக்கின்ற பல அரசியல், பொருளாதார, குடியியல் சார்ந்த பல பண்பாடு, கலாச்சார பழக்க வழக்கங்களைப் பார்வையிடவும் உணரவும் கூடியதாய் இருந்தது.

போர்த்துக்கல் ஒரு அபிவிருத்தியடைந்த நாடாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்தவராகவும் இருந்தாலும் கூட, அபிவிருத்தியடைந்த ஏனைய நாடுகளோடு ஒப்பிடும் போது இது ஒரு வறிய நாடாகவே கணிப்பிடப்படுகிறது. இருப்பினும், கோவிட்-19 தொற்றுநோயின் எதிர்மறையான தாக்கம் இருந்தபோதிலும், போர்த்துகீசியப் பொருளாதாரம் சமீபத்திய ஆண்டுகளில் வளர்ச்சி அடைந்து வருகிறது. சுற்றுலாத் துறையே போர்த்துகீசியப் பொருளாதாரத்தின் மிகப்பெரிய வருமானத்தை ஈட்டித் தரும் துறையாகவும் இருக்கிறது.

சிங்கையிலிருந்து வந்து, இலண்டனில் என்னோடு இணைந்து கொண்ட என்னுடைய ஒன்று விட்ட சகோதரி பத்மினியுடன் எமது பயணத்தை ஒழுங்கு செய்து கொண்டோம்.

மேலே குறிப்பிட்டபடி, இலண்டனிலிருந்து ஃபாரோ (Faro Airport) இல் கால் பதித்த பின்னர், அல்பியூஃபேரா (Albufeira) என்கின்ற ஒரு கடோலோரக் கிராமத்தில் தங்கியிருந்து கடற்காற்றைச் சுவாசித்தபடியே, அல்கார்வ் (Algarve) என்கின்ற பெருநகரத்தைச் சுற்றிப் பார்ப்பதாக தீர்மானித்துக் கொண்டோம் (இவ்விடங்களை இங்கு தரப்பட்டுள்ள வரைபடத்தில் பார்த்துக் கொள்ளலாம்).

மிகத் தோழமையுடன் பழகும் மக்களில் பெரும்பான்மையினர் அங்கு ஆங்கிலம் பேசுகிறார்கள். அதற்கு, நாம் தங்கியிருந்த அநேகமான இடங்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை ஈர்க்கும் இடமாக இருந்தது பிரதானமான காரணம் எனலாம். எமது விடுதியின் அருகே சிறியதாய் ஒரு கொட்டகை போட்டு, உடைகள், பயணப் பைகள், கைப்பைகள், முத்துக்களாலும் சிப்பிகளாலும் கோர்க்கப்பட்ட மாலைகள், பாதசாரங்களை விற்றுக் கொண்டிருக்கும் இளம் தாய் மார்தா எமக்குப் பரிச்சயமானார். அவர் தந்த தகவல்கள் மூலமாக நாம் பல இடங்களுக்குத் தனியே போய் வரக் கூடியதாய் இருந்தது.



கோவிட் தாக்குதலோடு பொருளாதாரச் சிக்கல்களில் மாட்டிக் கொண்டவர்களில் மார்த்தாவின் குடும்பமும் ஒன்று. இருந்தாலும் தொடர்ந்து வந்த காலத்தில், சளைக்காமல் தன் குழந்தைகளைத் தன் தாயாரின் ஆதரவில் விட்டபின், தனியே இவ்வாறு உடைகள், முத்துக்கள், சிப்பிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், அணிகலன்களோடு, பெண்களுக்கான கைப்பைகள் போன்றவற்றையும் ஸ்பெய்ன், இந்தியா, இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து சிறிய வர்த்தகப் பரிமாற்றங்களினூடாக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் இறக்குமதி செய்து சந்தைப்படுத்த முடிவதாகத் தெரிவித்தார்.



பிரித்தானியா, ஸ்பெய்ன் போன்ற நாடுகளிலிருந்து கோடை காலங்களில் படை எடுத்து வரும் சுற்றுலாப் பயணிகள் மூலமாகவே தன்னைப் போன்ற சிறுகைத்தொழில், வர்த்தகம் புரிபவர்களுக்கு பெருமளவு வருமானம் கிடைப்பதாக மார்தா கூறினார். அல்கார்வ் நகரில் ஒரு வருடத்தில் ஏறத்தாழ 300 நாட்களுக்கு மேலாக கோடை காலம் இருப்பது அந்நகரின் பாக்கியம் என்றே கூற வேண்டும்.

அவரைப் பார்த்த போது ஒரு ஆசிய நாட்டுப் பெண்ணைப் பார்த்தது போன்ற உணர்வே எமக்குத் தோன்றியது. தமது மூதாதையர்கள் இலங்கை, இந்தியா, மலேசியா உட்பட இன்னும் பல நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்ட வரலாறு தெரியுமென சிறிது சோகம் படரக் கூறியவர், அவர்கள் செய்தது தவறு என தற்போதைய போர்த்துகேயத் தலைமுறை உணர்வதாகக் கூறினார்.

மார்தாவின் அனுமதியோடு அவரைப் படம் எடுத்துக் கொண்டோம்.

லாகோஸ் (Lagos) எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிறு நகரம் போர்த்துக்கல்லின் தென்மேற்கு பகுதியில் அமைந்த கடலோரப் பிரதேசமாகும். எமது பொன் போன்ற சுற்றுலாப்பயணத்தில், முழுதாக ஒரு நாளை லாகோஸில் செலவிடுவதென முடிவு செய்தோம். இதன் கடற்பரப்பு வெண்மணலுக்கும், பளிங்கு போன்ற நீல நிற கடல் நீருக்கும் பெயர் பெற்றது. 1755ம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தில் பெரும்பான்மையான நகர் அழியுண்டு போனது. அதன் பின்னர் வந்த காலப்பகுதியில் கடல் அன்னை மெதுவாக இந்நகரைத் தாலாட்டிப் பாராட்டி மெதுவாக வெளிக்கொணர்ந்ததை வரலாறு கூறுகிறது.




அந்த எழிலை நாமும் பார்த்து இரசிக்கக் கூடியதாக இருந்தது. கடற்பகுதி மட்டுமல்லாது, இங்குள்ள கட்டடங்கள் போர்துக்கேயக் கட்டடக் கலை மரபின் சாட்சியாகவும், பழையதும் புதியதுமான நகரங்கள் (Old and New Towns) அடிமைகளை விற்கும் சந்தை இருந்ததையும், மீன்பிடி வளங்கள் நிறைந்து இருந்ததையும் பறை சாற்றி நிற்கின்றன.

நாம் தங்கியிருந்த (Albuefeira) இடத்திலிருந்து லாகோஸ் (Lagos) வரை வரும் பாதையெங்கும் தோடம்பழ இனத்தின் பண்ணைகள் வர்த்தக ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் (Citrus Farm) நடாத்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. வீதியின் இருமருங்கும் செழிப்போடு காய்த்திருந்த தோடம்பழ வகைகள் செம்மஞ்சள் சேலையில் பச்சை இலைகளினூடு மறைந்திருக்கும் இரம்மியமான பெண்களைப் போலக் காட்சியளித்தன. தமக்கு வருமானம் ஈட்டித்தரும் பழவகைகளில் பிரதானமானவை இப்படியான, தோடம்பழ, எலுமிச்சை வகைகள்



தாம் என எம்மை ஒரு நாள் சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்ற வாகனச் சாரதி கூறினார்.

அத்தோடு, அரசாங்கம் இப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான கோல்ஃப் (golf) பந்து விளையாடல், மலை ஏறுதல் போன்ற சுறுப்பான உடற்பயிற்சி சார்ந்த சுற்றுலாக்களை (Active Tourism) அதிகமாக ஊக்கப்படுத்துகின்றது.

அவரது ஆங்கிலத்தை உள்வாங்கி, எம்மோடு பயணித்த ஏனைய சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களுக்கேற்றாற் போல் விளக்கம் கொடுத்ததோடு, 'நீ தான் என்னுடைய சகவிமானி' (Co-Pilot) எனக் குதூகலமாகக் கூறியபடியே என்னைத் தன் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்வதற்கு இடம் கொடுத்தார். எனக்குமோ யாருடைய வாகனத்திலாவது பின் ஆசனத்தில் அமர்ந்தால், வாந்தி வரும் அபாயம் இருந்ததில், முன்னுக்கு இருப்பது, அதுவும் வலது பக்கத்தில் இருப்பது, அங்கு ஏனைய ஐரோப்பிய நகரங்கள் போலவே இடப்பக்க இயக்காழி ( Left handside stering wheel) இருந்ததில் நான் என்னுடைய வாகனத்தை ஓட்டுவது போன்றே தோன்றியது.

லாகோஸில் பார்ப்பதற்கும், இரசிப்பதற்கும் என போர்த்துக்கேயப் பாரம்பரியம் கொண்ட உணவு விடுதிகளும், பழைய கிராமங்களும், கப்பற்றுறை முகமும், பழைய இராசதானிகளின் எச்சங்களும் என ஏராளமான விடயங்கள் இருந்ததில் ஒரு நாள் முழுவதும் முடிந்தவரை சுற்றி விட்டு இரவு விடுதி வந்து சேர்ந்தோம்.

உணவுக் கலாச்சாரம் இங்கு ஆரோக்கியமானதாகவே காணப் படுகிறது. மாமிச வகைகள் இருந்தாலும், பிரதானமாக வாட்டிய (Grilled) கடல் உணவுகளும், அவற்றோடு சேர்ந்து அவித்த பச்சைக் காய்கறிகளும் மிகச் சுவையானவை. மதிய உணவோடு சிவப்பு வைன், முக்கியமாக போர்ட் வைன் இங்கே விசேடமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அவற்றோடு மிக முக்கியமான ஒரு



சுவையான இனிப்பு வகை உணவின் பின் அருந்துவதற்கானது (Pastel de Nata)/ இதை எங்கு போனாலும் வாங்கி அருந்த முடியும். இதைப் பல நூற்றாண்டுகளிற்கு முன்னர் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் தயாரிக்க ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. எனினும் அது இங்கிலாந்தில் வாங்கக் கூடிய ஒருவகை கஸ்டர்ட் டார்ட் (Custard Tart) போலவே இருந்தாலும் போர்த்துக்கலில் அது வெதுப்பப்படுகிறது.

மறுநாள் நாம் கிராமத்துப் புகையிரத நிலையத்துக்குப் போனதில் எனக்கேனோ அது எமது முப்பது வருடங்களுக்கு முந்தைய கொடிகாமம் புகையிரத நிலையத்தை நினைவூட்டியது. அங்கு ஒரேயொரு புகையிரத நிலைய அதிபர் பயணிகள் யாருமற்ற நிலையில் ஒரு நூலை வாசித்துக் கொண்டிருந்தார். இங்கு புகையிரதம் வருமா என்ற சந்தேகத்தைப் புரிந்தவர் போல மிக மெல்லிய புன்னகை ஒன்றை அவசர அவசரமாக முகத்தில் ஒட்டிக்







‘நேரே அங்கு போகும் புகையிரதமா வருகிறது?’ மெதுவாகக் கேட்டு வைத்தேன். கேட்டது நல்லதாய்ப் போயிற்று.

‘சிலவேளை இடையில் மாற வேண்டி வரும். அதை புகையிரதத்தில் பணியில் இருக்கும் அதிகாரி ஒருவர் அறிவிப்பார் .’ மிகச் சாதாரணமாகக் கூறிவிட்டுத் தன் நூலை வாசிக்க ஆரம்பித்தார்.

ஊர் பேர் தெரியாத இடத்திற்குப் போகும் எமக்கு அதை முதலிலேயே சொன்னால் என்ன குறைந்து போய் விடும் எனக் கேட்கத் தோன்றியது. ஆனால் எம் மீதும் எமது பயணங்களின் மீதும் அவருக்கு ஏதோ பெரும் நம்பிக்கை இருந்திருக்கிறது போல் இருந்ததில் அதைக் காப்பாற்றிக் கொண்டோம்.

இங்குள்ள புகையிரதங்கள் வசதியாக இருந்தாலும், அவற்றில் எந்தவிதமான தொழில் நுட்ப வசதிகளோடு இயங்கும் அறிவிப்புகள் எதுவும் கிடையாது. நாமே ஒவ்வொரு புகையிரத நிலையத்தையும் எட்டிப் பார்த்து எது வரை வந்திருக்கிறோம் என அறிந்து கொள்ள வேண்டியது தான்.



இருந்தாலும் நாம் செயின்ட் அன்டோனியோ என்கின்ற பழமை வாய்ந்த, மீன் பிடிக் கிராமத்தை அடைந்த போது அங்கே நிர்ச்சலனமாக இருந்த கோடியனா ஆற்றின் (Gudiana River) கரையிலிருந்து ஸ்பெய்ன் நகரின் ஒரு கரையைப் பார்க்க முடிந்தது. அங்கு கப்பல்கள் பயணிகளை ஸ்பெய்ன் நாட்டிற்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்தன. அரை மணி நேரத்தில் அந்த ஆற்றைக் கடந்து விட முடியும் என்பதும், அங்கு போர்த்துக்கல்லை விட ஒரு மணி நேரம் அதிகம் என்பதும் அதிசயமான ஒரு உண்மை தான். இந்த எழில் மிகுந்த கிராமம் அமைதி காத்தபடி சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொண்டிருந்தது. இங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல விடயங்களை நாம் அறியக்கூடியதாய் இருந்தது.

ஊர் பேர் தெரியாத இடத்திற்குப் போகும் எமக்கு அதை முதலிலேயே சொன்னால் என்ன குறைந்து போய் விடும் எனக் கேட்கத் தோன்றியது. ஆனால் எம் மீதும் எமது பயணங்களின் மீதும் அவருக்கு ஏதோ பெரும் நம்பிக்கை இருந்திருக்கிறது போல் இருந்ததில் அதைக் காப்பாற்றிக் கொண்டோம்.

விலா ரியல் டி சாண்டோ அன்டோனியோ (Vila real de Santo Antonio) 1774ஆம் ஆண்டில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட மீனவர்களை அவிரோவிலிருந்து (Aveiro) மீள்குடியேற்றவும், ஸ்பெயினில் இருந்து கிழக்கு அல்கார்விற்கு மீன்பிடித் தண்ணீரைக் கோரவும் என மீளமைப்புச் செய்யப்பட்டது. இக்கிராமத்தை இரண்டே வருடங்களில், போர்த்துக்கல்லின் தலை நகரமான லிஸ்பனை மாபெரும் நில நடுக்கத்தில் இருந்து (1755இல் ) மீட்டெடுத்தது போன்ற அதே கட்டடக் கலையைப் பாவித்து கட்டி எழுப்பியதாக வரலாறு கூறுகிறது.

லாகோஸ் போலவே சான்டோ அன்டோனியோவும் எமக்குப் பல புதிய விடயங்களை அறியத் தந்தது. அடுத்ததாக நாம் போர்த்துக்கல்லின் தலைநகரை நோக்கி அதே புகையிரத நிலையத்திலிருந்து மறு நாள் புறப்படுவதற்குத் தயாரானோம்.





# இருட்டு இரகசியம்

உன்னாணை எனக்கிப்ப சில விசயங்களைப் பார்க்கேலாமலும் இருக்குது. பறையேலாமலும் கிடக்குது. அந்தளவுக்கு வன்னிப்போரின்ர முடிவானது, சனங்களை பாதை தவறிப்போகவும் வைச்சிருக்கு. பகடைகளாகவும் பயன்படுத்தவும் முனைப்பு நடந்துகொண்டிருக்கு.

நாட்டில அதுவும் வடக்குப்பக்கம் வன்னிப்பக்கங்களில நடக்கிற கூத்துகளைப் பார்க்கேக்கை இனிவாற காலத்தில எங்கட பொடி பொட்டையள் உருப்படியாத் தலைநிமிர்த்தி வாழுமோ? இல்லாட்டித் 'தலைவன்'... எண்ட பேரைச் சொல்லிக் கொண்டு, தலைகீழாகப் போய்விடுமோ எண்டது தெரியாமல் கிடக்குது.

இப்ப நான் இதில என்ன சொல்ல வாறன் எண்டால், எங்கட தமிழ்த்தேசிய சூனியங்கள் சில, புதிசா ஒரு கூத்துக் காட்ட வெளிக்கிட்டிருக்குதுகள். அதுதான் உந்த முள்ளிவாய்க்கால் சிரட்டைக்கஞ்சி நிகழ்வு. உந்தச் சிரட்டைக்கஞ்சி நிகழ்வெண்டது, வன்னிப் போர்க்களத்துக்குள்ள சாப்பாட்டுக்கு வழியில்லாமல் நிண்ட, ஏழை எளியதுகளுக்கு புலியளின்ர தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒருநேரச் சாப்பாடாக் காச்சிக் குடுத்தது. இண்டைக்குக் கஞ்சி கிடைக்குமெண்ட நம்பிக்கையில அந்த அமளிதுமளியான ஷெல்லடியளுக்கு நடுவிலையும், காலுகள் உளையக் கனநேரமாக வரிசையில நிண்டு வாங்கிக் கொண்டுபோய் குடிச்சதுகள்.

ஆனா, இப்ப என்னடாவெண்டால், உந்தத் தேசியங்கள் அந்தக் கஞ்சி குடிச்ச நிகழ்வை தமக்கு அரசியலாக்கி, அந்த அரசியலூடாக சனங்களின்ர வாக்குகளைத் தேடுறதுக்குக் வெளிக்கிட்டிருக்குதுகள். இப்படி வெளிக்கிட்ட ஆக்களைப்பார்த்து, 'நீங்கள்தான் சண்டை நடக்கேக்கை இஞ்சை வன்னியில சனங்களோடை இல்லையே. பிறகென்ன பூழலுக்கு முள்ளிவாய்க்காலுக்கு கஞ்சி குடிக்க ஓடி வாறியள்...?' எண்டு ஒருசில சனங்கள் கேட்டதுக்கு, அதுக்கு

அவையள், 'தமிழ்மக்களுக்கான விடுதலையை... அவர்களுக்கான சுதந்திரத்தை... அவர்களுக்கான அதிகாரப்பகிர்வை... பெறுகிறதுக்கு இப்படியான நிகழ்வுகளில் பங்குபற்றுவதன் மூலமாகத்தான், நாங்கள் வென்றெடுக்க முடியும்...' எண்டு வியாக்கியானம் விட்டிருக்கினம்.

மெய்யே! தெரியாமல்தான் கேட்கிறேன். தமிழரசுக் கட்சி செல்வநாயகத்தாலை.. தமிழர் விடுதலைக் கூட்டணி அமிர்தலிங்கத்தாலை... பெறமுடியாத அதிகாரப்பகிர்வை, அதுக்குப்பிறகு தமிழீழ விடுதலைப்புலிகள் பிரபாகரனாலை பெறமுடியாத சுதந்திர சோஷலிச தமிழீழத்தை 2008 இற்குப் பிறகு வந்த உந்தக் கத்துக்குட்டியளே வாங்கித் தரப்போகினம்?.

முள்ளிவாய்க்கால் சிரட்டைக்கஞ்சி நிகழ்வெண்டது, சண்டைக்குள்ள சாப்பாட்டுக்கு வழியில்லாமல் நிண்ட சனத்துக்கானதேயொழிய, போட்டோக்காரனுக்கு முன்னால நிண்டுகொண்டு, கையில சிரட்டைக் கஞ்சியோடை பல்லைக்காட்டிப் படம் எடுக்குறதுக்கானதல்ல.

அந்தநேரம், மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலையன் மடம், முள்ளிவாய்க்கால் கடற்கரையில அத்தனை சனங்களும் மல வெக்கைக்குள்ள இருந்து கொண்டு, 'ஐயோ... எங்களைக் காப்பாத்துங்கோ... நாங்கள் செத்துக் கொண்டிருக்கிறம்...' எண்டு எத்தனை தரம் கத்திக் குளறி அழுதிருக்குங்கள். அந்தக் குளறல் இண்டைக்கு முள்ளிவாய்க்காலுக்கு ஓடிவந்து கஞ்சி குடிக்கிற ஆக்களுக்கு ஏன் கேட்காமல் போனது?

சனமெல்லாம் சரிக்குச் சரி செத்தழிஞ்சு, மிஞ்சினதுகள் தப்பிப் பிழைச்சு, இனியாவது ஊருக்குள்ள வந்து நிம்மதியா வாழுவம் எண்டு வெளிக்கிட்டால், உந்தப் பழாப்போன 'பரையலங்கள்' சனங்களை நிம்மதியா வாழ விடமாட்டுதுகள்போல கிடக்குது.

உந்தச் சிரட்டைக் கஞ்சி நிகழ்வை சிறப்பா நடத்த வேணுமெண்டு நினைக்கிற ஆக்களுக்கு, நல்லாத் தெரியும். அது என்னெண்டால் பாருங்கோ... செல்வநாயகம், அமிர்தலிங்கத்தின்ர காலத்தில இருந்த இளந்தாரிப் பொடியளுக்கு உடம்பில உசுப்பேறுகிற மாதிரி மேடையில பேசிப்போட்டு, கதிரையைப் புடிச்சது போல, இப்பவும் பிடிக்கலாமெண்டு நினைக்கினம். ஆனா, சண்டைக்குள்ள அம்பிட்ட பெரும்பாலான சனங்கள் எல்லாம், இப்ப ஓரளவுக்குச் சிந்திக்கத் தொடங்கியிட்டுதுகள்... எண்டுதான் சொல்ல வேணும்.

இதுக்கு உதாரணமா அண்டைக்கு கஞ்சி காச்சுற நிகழ்வண்டு, ஊர்ச்சந்தியில ஒருபகுதி கஞ்சி காச்சிப்போட்டு, றோட்டால போறவாற சனங்களை மறிச்சுக் கஞ்சி குடுக்க வெளிக்கிட்டவை. சில சனங்கள் வேண்டாம் எண்டு தலையை ஆட்டிப் போட்டுப் போயிட்டுதுகள். என்னையும் மறிச்சவை. நான் நிக்கேல்லை. மறிச்சவனை முறைச்சுப் பார்த்தன். அவனுக்கு அது விளங்கியிருக்க வேணும். உடன அவன் தன்ர முகத்தை மற்றப் பக்கம் திருப்பியிட்டான்.

அதோட பாருங்கோ! எனக்கு முன்னால போன ஒராள், 'அவையளும் அவையளின்ர கண்டறியாத சீலம்பாய்க் கஞ்சியும்...' எண்டு, கொஞ்சம் 'சவுண்டு' விட்டுப் பேசிக்கொண்டு போச்சுது.

இதில இருந்து என்ன விளங்குதெண்டால், உந்த முள்ளிவாய்க்கால் சிரட்டைக்கஞ்சி நிகழ்விற்கு, சண்டைக்குள்ள பசிபட்டினியோடை சம்பந்தப்படாத ஆக்கள் அங்கை போய் பிரசன்னமாகி, உசுப்பல் கதை கதைக்கிறதைப் பாதிக்கப்பட்ட சனங்கள் இப்ப விரும்புதுகளில்லை. ஆனா, இதை ஒண்டாச் சேர்ந்து உரத்துச் சொல்ல வைக்கிறதுக்கு ஆனமான தலைவன் எண்டு சொல்லுறதுக்கு இப்ப ஒருத்தரும் தமிழ்ச்சனத்துக்கு இல்லை.

நான் ஏன் இப்ப இதைச் சொல்ல வாறன் எண்டால், உங்காலை கிழக்குப் பக்கம் கஞ்சி குடுத்த சனங்களில ரண்டொருவரைப் பொலிசு பிடிச்சுப் போட்டுது. அப்படிப் பிடிச்ச சனங்களைப் பிணையில எடுக்குறதுக்கு ஒரு தரப்பினரின்ர செயலுக்கு, இன்னொரு தரப்பு உரிமை கோரி வீடியோக்கள் வெளியிட்டதெண்டு, உங்கினைக்கை பேப்பருகளில செய்தியள் வந்திருக்கெண்டு சனங்கள் பறைஞ்சு கொண்டு திரிஞ்சதுகள்.

முள்ளிவாய்க்காலில கஞ்சி குடிச்சுப் பாதிக்கப்பட்ட சனங்கள் ஆரோ! இப்ப அதை வைச்சு அரசியல் பண்ணுறது ஆரோ!

இப்ப விளங்குதே ஏன் எங்களுக்கு தமிழ் ஈழம் கிடைக்கேல்லையெண்டதை...

**உங்கட குஞ்சியப்பு**



# சிராம்பு




**கற்சுறா**

51வது இலக்கியச் சந்திப்பு குறித்தும் அங்கே வெளியிடப்பட்ட இமிழ் என்ற சிறுகதைத் தொகுப்புக் குறித்தும் மேலும் இருவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இருவரும் பலரும் அறிந்து கொண்ட இருவர்களே! ஒருவர் நோர்வேயில் வாழும் என்.சரவணன். மற்றயவர் தமிழ்நாட்டில் வாழும் பேராசிரியர். அ.ராமசாமி.

சரவணனுடைய 'புகலிட இலக்கிய சந்திப்பு - இருப்பின் இரகசியம்' என்ற கட்டுரை 'நமது மலையகம்' என்ற அவரது இணையத்தளத்திலும் அ.ராமசாமி அவர்களது 'இமிழ் சிறுகதைகள் உலக இலக்கியத்திற்குள் நுழையும் முயற்சிகள்' என்ற கட்டுரை தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'நீலம்' என்கிற கலை இலக்கிய அரசியல் இணையத் தளத்திலும் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் அங்கே சென்று முழுமையான கட்டுரையைக் கவனியுங்கள்.

51வது இலக்கியச் சந்திப்பு நிகழ்வு குறித்தும் அங்கே வெளியிடப்பட்ட இமிழ் தொகுப்புக் குறித்து எழுப்பப்பட்ட பல்வேறு விமர்சனங்கள் எதையுமே கவனியாதது போல் எழுதப் பட்டதோடு மட்டுமல்லாது அந்தத் தொகுப்புக் கொண்டு வரப்பட்ட விதம் பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு உருவாக்கிய நெருக்கடியை மெல்லக் கழுவி விடும்படியாகவும் எழுதப்பட்டிருக்கின்றன இந்தக்



கட்டுரைகள் என்பதனை இலகுவில் யாரும் அடையாளம் காணமுடியும்.

சரவணன் அவர்கள் இந்தக் கட்டுரையை எதற்காக எழுதினார்? இலக்கியச் சந்திப்பு எங்கெல்லாம் நடைபெற்றது என்ற விளக்கத்துடன், தான் முதலில் கலந்து கொண்ட ஸ்ருட்காட் இலக்கியச் சந்திப்பு என்பதை எழுதி அடையாளம் காட்டியதுடன் இலக்கியச் சந்திப்பபுச் செயற்பாடு எவ்வாறானது என்றவாறாகச் சொல்லிச் செல்லும் போது 'இம்முறை பாரிசில் நிகழ்ந்த இலக்கிய சந்திப்பில் குழப்புவதற்காகவே சிலர் கலந்து கொண்டிருந்தனர். இல்லாத சாதியப் பிரச்சினையை ஊதிப்பெருப்பிக்கிறார்கள் என்பதே அவர்களின் சாரம்சம். ஒருவர் கருத்து கூறி, அடுத்தடுத்து கருத்து கூறுபவர்களுக்கு வழிவிட்டு தமது அடுத்த கருத்தை வரிசையில் தெரிவிப்பதற்குப் பதிலாக் கூட்ட ஒழுங்கை மீறி அவர்கள் தொடர்ச்சியாக குறுக்கிட்டுக் கொண்டிருந்ததை கட்டுப்படுத்த இயலாமல் போனதைத் தொடர்ந்து அங்கே சர்ச்சை எழுந்தது. அங்கே கூடியிருந்தவர்களில் பெரும்பாலானோர் பரஸ்பரம் உடன்படாத கருத்தாக இருந்த போதும் அவர்களுக்கு அங்கே கருத்தைக் கூறும் உரிமையை இலக்கிய சந்திப்பு மறுக்காது. ஆனால் அவர்கள் அந்த உரிமை துஷ்பிரயோகம் செய்வதற்காகவே வந்திருந்தார்கள். அவர்கள் ஒரு ஜனநாயக ஒழுங்குக்கு கட்டுப்பட முடியாத, அராஜக பாணியிலான அணுகு முறையாளர்களாக அங்கே இருந்தார்கள். எனவே கலந்துனர்கள் அவர்களின் கருத்து சுதந்திரத்தை அல்ல அவர்களின் அற மீறலை எதிர்த்து கூட்டத்தை கட்டுப்படுத்தி வழிநடத்த வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளானார்கள். ஆனால் இலக்கிய சந்திப்பின் முடிவில் இந்த சம்பவம் இலக்கிய சந்திப்பின் அராஜகமாக வெளியில் பிரச்சாரம் செய்யப்பட்டது.' என்கிறார்.

இதுதான் அவருடைய கட்டுரையின் மையப் புள்ளி. மற்றும்படியான தகவல்கள் எல்லாமே

**இன்று சாதியப் பிரச்சனையே இல்லையென்று சொல்பவர்கள் சமூகத்தில் ஏராளம் பேர் இருக்கிறார்கள். அதனையும் விட சாதி என்பது பிரச்சனையேயில்லை. அது சமூகத்திற்குத் தேவையான ஒன்று. காட்டாயம் சாதி தேவை என்று சொல்பவர்களும் சமூகத்தில் ஏராளம் பேர் இருக்கிறார்கள். இன்னொரு புறம் சாதியில்லை. சாதியில்லை என்று சொல்லிக் கொண்டு தன்னுடைய இலக்கியத்திலும் அரசியலிலும் மூச்சுக்கு முன்நூறு தடவை பேசிவரும் நமது சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது சாதிப் புத்தியைக் காட்டிவிட்டான் என்று சாதி பேசிவரும் நிலையும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இலக்கியத்திலும் எழுத்திலும் சாதி அடையாளத்தை மிகக் கவனமாகக் கையாளும் சாதிமான்களையும் கொண்டுதான் இந்த சமூகம் இருக்கிறது.**

அவ்வப்போதைய காலங்களில் இலக்கியச்சந்திப்புக் குறித்து பலரும் சொல்லி வந்த விடயங்கள்தான். அதன் செயற்பாட்டுவிதம் - ஒரு சந்திப்பிலிருந்து இன்னொரு சந்திப்புக் கைமாறும் விதம்- அங்கே இதுவரை பேசப்பட்ட விடயங்கள்- அது கைக்கொண்டு நகரும் ஜனநாயகத் தன்மை என்று பலர் அடையாளம் காட்டிய விடயங்களைத்தான் சொல்லியிருக்கிறார். ஆனால் அத்தனை விடயங்களையும் அவ்வப்போதான காலங்களில் சிலர் தமது தற்குறித்தனத்திற்குள் இழுத்துச் சிதைத்துக் கொண்டதில் பலர் அவற்றிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்கள். சிலர் ஒதுக்கப்பட்டார்கள் என்ற கதையை ஒரு விபரிப்பாகத் தன்னும் சொல்லிவிட அவரால் முடியவில்லை.

இன்று சாதியில்லை என்று சொல்லி இலக்கியச் சந்திப்பிற்குள் வந்தவர்களைப் போல் யுத்தகாலத்தில் புலிகள் செய்வதெல்லாம் சமூகத்திற்குத் தீங்கானதேயில்லை என்றுதான் சொல்லி வந்தார்கள். அதற்கெதிராகப் பல இலக்கியச் சந்திப்புக்கள் தர்க்கரீதியில் செயற்பட்டு அவர்களை எதிர் கொண்டிருந்தது. நான் ஏற்கனவே பல இடத்தில் சொல்லி அடையாளம் காட்டிய 1992ம் ஆண்டின் பாரீஸ் இலக்கியச் சந்திப்பு அந்த வகைமாதிரிகளில் ஒன்று.

ஆக இன்று சாதியப் பிரச்சனையே இல்லையென்று சொல்பவர்கள் சமூகத்தில் ஏராளம் பேர் இருக்கிறார்கள். அதனையும் விட சாதி என்பது பிரச்சனையேயில்லை. அது சமூகத்திற்குத் தேவையான ஒன்று. காட்டாயம் சாதி தேவை என்று சொல்பவர்களும் சமூகத்தில் ஏராளம் பேர் இருக்கிறார்கள். இன்னொரு புறம் சாதியில்லை. சாதியில்லை என்று சொல்லிக் கொண்டு தன்னுடைய இலக்கியத்திலும் அரசியலிலும் மூச்சுக்கு முன்நூறு தடவை பேசிவரும் நமது சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது சாதிப் புத்தியைக் காட்டிவிட்டான் என்று சாதி பேசிவரும் நிலையும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இலக்கியத்திலும் எழுத்திலும் சாதி அடையாளத்தை மிகக் கவனமாகக் கையாளும் சாதிமான்களையும் கொண்டுதான் இந்த சமூகம் இருக்கிறது.

குழப்பவாதிகள் என்பவர்கள் எப்பொழுதும் எல்லா வடிவிலும் நுழைவார்கள். அது தனியே 51வது இலக்கியச் சந்திப்பில் மட்டும் நிகழ்ந்ததல்ல. நானறிய 1992இலேயே நடந்தது. ஆனால் 51வது இலக்கியச் சந்திப்பின் செயற்பாடு அந்தக் குழப்பவாதிகளால் மட்டும் நாசமாகவில்லை. அதன் செயற்பாட்டாளர்களாலேயே முதலில் நாசமாகியது. அது 50வது இலக்கியச் சந்திப்பின் நடைமுறை குறித்த அவர்களது மவுனத்தினோடே தொடங்கியது. இதுகுறித்தெல்லாம் என்.சரவணன் மவுனம் காப்பதும் கதை மாற்றுவதும் நல்லதொரு செயற்பாடல்ல.

இதைவிட இன்னும் ஒரு தடைதாண்டி அவர் எழுதுகிறார்,

‘சகல விதமான பன்முகப்பட்ட மாற்றுக் கருத்துக்களுக்குமான ஜனநாயகக் களமாகவும் பேணப்படும் இலக்கிய சந்திப்பின் மீது கடும் விமர்சனங்களை வைப்பவர்கள் அதை ஒட்டு மொத்த இலக்கிய சந்திப்பின் மீதும் வைக்கும் போது அவ்வாறு வைப்பதே ஒரு சுத்த அபத்தம் என்பதை சுட்டிக் காட்ட வேண்டி இருக்கிறது. இவ்வாறு விமர்சிப்பவர்களில் சிலர் ஏற்கெனவே இலக்கிய சந்திப்புடன் தொடர்பில் இருந்தவர்கள் என்பதும் இலக்கிய சந்திப்பின் மரபையும், இயல்பையும் அறிந்தவர்கள் என்பது தான் வேடிக்கை. எவரெவரெல்லாம் இலக்கிய சந்திப்புடன் தொடர்பறுந்து போனார்களோ அவர்கள் வசதியாக இத்தகைய விமர்சனங்களை வைப்பதன் உள்நோக்கத்தை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. தனி நபர்கள் மீது வைக்க வேண்டிய கருத்துக்களையும் விமர்சனங்களையும் இல்லாத ‘அமைப்பின்’ மீது வைப்பது பகுத்தறிவற்ற அபத்தமே.

ஒரு முன்மாதிரியான சுதந்திர கருத்துக் களமாக தனது இருப்பை தக்கவைத்துக் கொண்டிருக்கும் இலக்கிய சந்திப்பை பாதுகாப்பதும், பேணுவதும் தமிழ் சமுதாயத்தின் கடமையாகும்.‘ என்கிறார்.

50வதும் 51வதும் இலக்கியச் சந்திப்பின் செயற்பாட்டு நடைமுறை குறித்து விமர்சனங்களை முன்வைப்பது எப்படி ஒட்டுமொத்த இலக்கியச் சந்திப்பின் மீதான விமர்சனமாகும்? ஏற்கனவே இலக்கியச்சந்திப்புடன் தொடர்பிலிருந்தவர்கள் இலக்கியச் சந்திப்பின் இயல்பை அறிந்தவர்கள் 50 மற்றும் 51வது இலக்கியச் சந்திப்பின் தற்குறித்தனத்தை அடையாளம் காட்டி நின்றால் அது எப்படி வேடிக்கையாகிறது இவருக்கு? இலக்கியச் சந்திப்புடன் தொடர்பறுந்து போனவர்கள் வசதியாக விமர்சனம் வைக்கிறார்கள் என்று விசனம் கொள்ளும் என். சரவணன் யாருக்கு ஏன் தொடர்பறுந்தது என்றாவது சொல்ல வேண்டாமா? அவ்வாறு முன்வைக்கப்படும் விமர்சனங்கள் பகுத்தறிவற்ற அபத்தம் என்று சொல்லும் அவர் அது எங்கே முன்வைக்கப்பட்டது என்ற பதிவை இடுவதுடன், எப்படி அது பகுத்தறிவான அபத்தமாக இருக்கிறது என்றாவது சொல்ல வேண்டாமா? என்.சரவணனின் உளறலுக்கும் ஒரு அளவிருக்க வேண்டாமா?


இலக்கியச்சந்திப்பின் மீது யார் என்ன விமர்சனம் வைத்திருக்கிறார்கள் என்று கோடு காட்டி அதற்கான எதிர்வினையை ஆற்றுவதுதானே சரியானது. நீங்கள் சொல்வது போல் இலக்கியச் சந்திப்பினைப் பாதுகாக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். நீங்கள் சொல்லுகின்ற பகுத்தறிவற்ற அபத்தமுடையோரும் அப்படித்தான் சொல்கிறார்கள்.

நோர்வேயில் நடத்தமுடியாது என்று சொன்னதுடன் அதுகுறித்த எந்தவொரு உரையாடலையும் செய்ய மறுத்து தனியாக அனைலைதீவில் 50 இலக்கியச் சந்திப்பினை நடத்திய தமயந்தியும் அப்படித்தான் சொல்கிறார். பொது அடையாளத்துடன் கூட்டு உழைப்பாக இருக்க வேண்டிய இலக்கியச் சந்திப்பு மலரைத் தன்னுடைய தனித்த முடிவோடும் தன்னுடைய தடித்தனத்தோடும் கொண்டுவந்து காட்டி நின்ற சோபாசக்தியும் இலக்கியச் சந்திப்பினைப் பாதுகாக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறார்.

ஆக, இலக்கியச் சந்திப்பின் இன்றை நிலைதான் என்ன?

இன்று இருக்கும் இலக்கியச் சந்திப்பின் நிலை குறித்துத் தேவையான ஒரு தீரமான உரையாடலைத் தவிர்த்து - மடை மாற்றிக் கதை சொல்ல வந்த தேவை குறித்து அச்சம் கொள்ளாமல் இருக்க முடியாது. சரவணனின் இந்தக் கட்டுரை ஒன்றும் ஆபத்தானதில்லை என்று நினைத்துக் கடந்து போக முடியாதுள்ளது.

கையில் சிராம்பு ஒன்றுதானே ஏறியது. அது ஒன்றும் செய்யது என்று கவலையீனமாகக் கடந்து போகக் கூடாது என்றே நினைக்கிறேன். சிராம்பு ஒரு சிறிய வலியை மட்டும் தருவதில்லை.



அடுத்தது, தமிழநாட்டிலிருந்து பேராசிரியர் அ. ராமசாமி அவர்கள் நீலம் இதழில் எழுதுகிறார்.

புலம்பெயர் இலக்கியம் என்பதைப் புலம்பெயர்ந்தோரின் இலக்கியம் எனக் குறுக்கிப் பார்க்கும் நிலை இருக்கிறது. அதன் தொடர்ச்சியில் புலம் பெயர்வினால் ஏற்பட்டுள்ள பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களையும், அடையாளம் இழப்பையும் பேசுமளவிற்கு விவாதங்கள் சென்றுள்ளன. அதற்குப் பதிலாகப் புலம்பெயர்வதற்கான காரணம் என்ற மூலத்திலிருந்து தொடங்கினால், ஒட்டுமொத்தப் போராட்ட வரலாற்றையும் பேச வேண்டிய தேவை அதில் உள்ளது என்பது புரியவரும். அவ்வாறு பேசவில்லையென்றால் சொந்த ஊரையும் நாட்டையு நினைத்து ஏங்கும் இழப்பின் துயரப் பதிவுகளாக *(Nostalgia)* மட்டும் புலம்பெயர் இலக்கியம் நின்றுபோகும் வாய்ப்புண்டு.

என்கிறார்.

நம் மத்தியில் உருப்பெற்ற புகலிட இலக்கியம் - புலம்பெயர்ந்த இலக்கியம் என்ற வகைமாதிரிகளுக்கு இடையிலான வேறுபாட்டு உரையாடல்கள் அவருக்குக் கிடைக்கவில்லை. அவரால் அதனையும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இரண்டினதும் அடையளம் காட்டலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. புலம்பெயர்ந்த இலக்கியம் என்பதனை புலம் பெயர்ந்தோரின் எனக் குறுக்கிப் பார்க்கும் நிலை இருக்கிறது. என்கிறார்.

இதில் என்ன குறுகிப் பார்க்கும் நிலை? என்ன குழப்பம் இவருக்கு? புலம்பெயர்ந்தவர்களது



இலக்கியந்தானே புலம்பெயர் இலக்கியம். இங்கே புகலிட இலக்கியம் என ஒரு வகை மாதிரியை அடையாளம் காட்டப்பட்டது. அவை இரண்டும் வேறு வேறு என்று சொல்லப்பட்டது. அது ஒரு பெரு உரையாடல். அந்த உரையாடலின் பெறுமதியைப் பேராசிரியரால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. கட்டுரையின் தொடக்கமே அவருக்குச் சறுக்கிவிட்டது.

இத்தொகைநூலில் இடம்பெற்றுள்ள கதாசிரியர்களிடம் குறிப்பிட்ட நோக்கம் எதையும் விவரித்து அல்லது விளக்கிக் கதைகள் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. 'கண்ணாடி விரிசல் கதைகள்' என்ற குறிப்புரையில் தகவல் எதுவுமில்லை. மாறாக, "இன்றைய ஈழ – புலம்பெயர் இலக்கியத்தில் பன்முகத்தன்மையோடு வெளிப்படும் நிலமும் பண்பாடும் பழங்குடித் தொன்மங்களும் வேறானவை. அதுவே ஈழ – புலம்பெயர் இலக்கியம் சமகாலத்தில் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கியிருக்கும் தனித்துவமான பங்களிப்பு. இதன் குறுக்குவெட்டு முகம் இத்தொகுப்பு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை உள்வாங்கிக்கொண்டு இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளின் பன்முகத்தன்மையையும், புனைவு வெளிசார்ந்த நிலத்தையும் பண்பாட்டையும், பழங்குடித் தொன்மங்களின் இயல்பையும் அறிமுகம் செய்யலாம். அத்தோடு அதன் குறுக்குவெட்டு முகத்தில் ஈழத்துப் போர்க்கால நினைவுகளும் புலம்பெயர் அலைவுகளும் எவ்வாறு பதிவாகியிருக்கின்றன என்பதையும் விவாதிக்கலாம்.

பேராசிரியரின் இந்த வகைக் கூற்றுக்களுக்கு முக்கிய காரணமாக இருப்பது இமிழ் என்ற சிறுகதைத் தொகுப்பின் வெளியிடுதலுக்கான எதிர்க் கருத்துக்களே. ஆனாலும் பேராசிரியர் அதற்கான விளக்கங்களை எந்த இடத்திலும் சொல்லாது, இமிழ் சிறுகதைகள் உலக இலக்கியத்திற்குள் நுழையும் முயற்சிகள் என்கிறார்.

ஆனால் அது எப்படி என்று எந்த ஒரு இடத்திலும் அவர் சொல்லவேயில்லை. கிட்டத்தட்ட ஈழத்திலிருந்து கருணாகரன் அவர்கள் எழுதும் ஒரு எழுத்தைப் போன்றே பேராசிரியரும் எழுதிவிட முனைந்துள்ளார். தமிழ்நாட்டில் கருணாகரன் இல்லாத இடத்தை ஏன் பேராசிரியர் அ. ராமசாமி அவர்கள் நிரப்ப வேண்டும்? அதற்கு வேறு ஆட்கள் இல்லையா?

நவீனத்துவ இலக்கியத்திற்குள் உரிப்பொருட்களாக – விவாதப்பொருட்களாக இருக்கும் இவற்றை உள்வாங்கிக் கொண்டு 'இமிழ்' தொகுப்பின் 25 கதைகளையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும்போது இக்கதைகளைக் கூடுதலாக விளங்கிக்கொள்ளவும் விவாதிக்கவும் முடிகிறது. அந்த விவாதங்கள் இக்கதைகள் எப்படி நவீனத்துவக் கதைகளாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, உலக இலக்கியப் பரப்பிற்குரியதாக மாறுகிறது என்பதையும் சொல்ல முடியும். 'இமிழ்' தொகுப்பை அறிமுகம் செய்யும் இக்கட்டுரையில் அதனைச் செய்யவில்லை. அதே நேரம் இத்தொகை நூலில் உள்ள இரண்டு தனித்த கூறுகளை மட்டும் சுட்டிக்காட்டி அறிமுகத்தை முடிக்கலாம் என நினைக்கிறேன்.

என்கிறார். இறுதிவரை எப்படி உலக இலக்கியத்திற்குள் நுழைகிறது எனச் சொல்லவேயில்லை. இப்படியொரு சிராம்பை ஈழத் தமிழிலக்கியத்திற்குள் செருகிவிட பேராசிரியர் அ. ராமசாமி அவர்கள் முயன்றிருக்கவே கூடாது. இந்தமாதிரியான எழுத்துக்களுக்குப் பின்னால் வெளிப்படையாக எதுவும் இருந்துவிடாது என்றுதான் நம்பிக் கொண்டிருப்பார்கள் பலர். ஆனால் உள்ளே சிராம்பேறி சிதள் கட்டி ஏர்ப்பாக்கும் எழுத்துக்கள் இவை. மன்னிக்க வேண்டும் எங்களுக்கு ஒரு கருணாகரன் போதும் பேராசிரியரே!

இலங்கைத் தமிழர்களின் கால்நூற்றாண்டுக் (1983 – 2009) காலப் போராட்டத்தை, வரலாற்றின் பக்கங்களில் எவ்வாறு எழுதுவீர்கள் என ஒரு வரலாற்றாசிரியரிடம் இப்போது கேட்டால், 'அது தோல்வியின் வரலாறு' எனச் சொல்லக்கூடும். ஆனால், மே 18, 2009க்கு முன்பு கேட்டிருந்தால் உடனடியாக எந்தப் பதிலையும் அவர் சொல்லியிருக்க மாட்டார். காரணம் ஈழத்தமிழர்களின் கனவான ஈழத் தனிநாடு கிடைக்குமா, கிடைக்காதா என்ற முடிவு தெரியாமல் வரலாற்றை எப்படி எழுதுவது என்ற குழப்பத்தில் அவரிடமிருந்து பதில் எதுவும் கிடைத்திருக்காது. எந்த ஒரு நிகழ்வையும் வெற்றி, தோல்வியைக் கொண்டே முடிவு செய்யும் அடிப்படைப் பார்வை கொண்டது வரலாறு. அதனால் அது நிகழ் காலத்தைப் பற்றிய கருத்துரைப்பை எப்போதும் தள்ளிப் போடவே செய்யும். ஆனால், இந்தக் கேள்விக்கு இலக்கிய ஆசிரியர் கூடத் தேவை இல்லை. இலக்கிய மாணவரே உடனடியாகப் பதில் சொல்லத் தொடங்கிவிடுவார். ஏனென்றால் இலக்கியம் முடிவுகளுக்காகக் காத்திருப்பதில்லை. எல்லா நிகழ்வுகளையும் நடந்துகொண்டிருக்கும்போதே பதிவுசெய்வதும், கருத்துரைப்பதும், விமரிசிப்பதும் தன்னுடைய வேலை என்று கருதுகிறது இலக்கியம்.

கல்விப்புல வாசிப்பு என்ற அடையாளப்படுத்தலுக்கூடாகவே எப்பொழுதும் தான் அனைத்தையும் பார்ப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அ.ராமசாமி அவர்கள், எப்பொழுதும் ஒரு அடிப்படையான கருத்துரைப்பை மேற்கொண்டு அதனை ஒரு அடையாளமாகக் காட்ட முனைகிறார். தமிழ்நாட்டில் தொகுக்கப்பட்ட தொகை நூல்களில் எவ்வித மரபும் பின்பற்றப்படாமல் தொகுப்பு ஆசிரியர்களின் மனச் சாயலோடு மட்டும் தொகுக்கப் பட்டிருக்கின்றன. அதேபோன்றது தான் இமிழும் என்கிறார். தமிழ்நாட்டிலிருந்து ஈழப் படைப்புக்களைத் தொகுக்கிறோம் என்ற பெயரில் ப.திருநாவுக்கரசு அவர்கள் தொகுத்த புலம்பெயர் கவிதைகள் என்ற தொகுப்புக் குறித்தும் அ.மங்கை அவர்கள் தொகுத்த பெண்கள் கவிதைகளான 'பெயல்மணக்கும் பொழுது' என்பது குறித்தும் பல தடவைகள் எழுதியாகிவிட்டது. இரண்டுமே எவ்வித பொறுப்புணர்வும் இல்லாது கவிதையின் தேவை குறித்தோ அல்லது அந்தக் காலத்தின் அரசியல் குறித்தோ வெளிப்படையாகப் பேசாத தன்முனைப்புச் சார்ந்த தொகுப்புக்கள் அவை.

அங்கே ப.திருநாவுக்கரசு அவர்களும் அ.மங்கை அவர்களுக்கும் இருந்த மட்டமான அறிவும் தேடலுமே அவற்றை வெளிப்படுத்தி நின்றன. இங்கே இமிழும் அப்படியானதொன்றாகத் தான் அடையாளம் கொள்கிறது. இது தனியே சோபாசக்தியினதும் அவர் வளர்க்கும் செம்மறிகளதும் செயற்பாட்டுக்கு உட்பட்ட அறிவுடன் மட்டும் வெளிவந்ததே..

ஆனால் உலக இலக்கியத்திற்குள் நுழைய முனையும் கதைகள் என்று அ. ராமசாமி அவர்களைக் கொண்டு சொல்ல வைக்கப்பட்டிருக்கிறது. இதனை இன்றைய ஈழ-புலம்பெயர் சிறுகதைகள் என அடையாளம் காட்டுவது பற்றித்தான் பல இடங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். கருப்புப்பிரதிகள் என்ற பதிப்பகம் பேசும் அரசியலுக்கு ஒப்ப சோபாசக்தி தமிழ்நாட்டு வாசகர்களுக்கு அடையாளம் காட்டத் தொகுக்கப்பட்ட தொகுப்பு மட்டுமே இது. இதற்கு அப்பால் பேச வேறு எதுவுமில்லை. தமிழ்நாட்டில் எம்.கண்ணனது இமிழ் குறித்த உரைக்குள் விழுந்த இடிக்கு மஞ்சள் எண்ணை தடவ அ.ராமசாமி அவர்களைப் பரியாரியாக்கி இருக்கிறார்கள்.

அதனைவிட இந்தக் கட்டுரையில் வேறெதுவுமில்லை. அ

தமிழ்நாட்டில் தொகுக்கப்பட்ட தொகை நூல்களில் எவ்வித மரபும் பின்பற்றப்படாமல் தொகுப்பு ஆசிரியர்களின் மனச் சாயலோடு மட்டும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்றது தான் இமிழும் என்கிறார். தமிழ்நாட்டிலிருந்து ஈழப் படைப்புக்களைத் தொகுக்கிறோம் என்ற பெயரில் ப.திருநாவுக்கரசு அவர்கள் தொகுத்த புலம்பெயர் கவிதைகள் என்ற தொகுப்புக் குறித்தும் அ.மங்கை அவர்கள் தொகுத்த பெண்கள் கவிதைகளான 'பெயல்மணக்கும் பொழுது' என்பது குறித்தும் பல தடவைகள் எழுதியாகிவிட்டது. இரண்டுமே எவ்வித பொறுப்புணர்வும் இல்லாது கவிதையின் தேவை குறித்தோ அல்லது அந்தக் காலத்தின் அரசியல் குறித்தோ வெளிப்படையாகப் பேசாத தன்முனைப்புச் சார்ந்த தொகுப்புக்கள் அவை.



# அரசியல் கவிதையும் கவிதை அரசியலும்

## பாரதிதாசனை முன்வைத்து

வே.மு.பொதியவெற்பன்

சிந்தனைப்பள்ளிகள் மட்டுமா வெவ்வேறு?, கவிதைப்பள்ளிகள் கூடத்தானே வெவ்வேறாகும்.

பெருங்கதையாடல்களின் தகர்வை முன்னிறுத்தும் பின்னைநவீனத்துவ ஊழியில் அழகியல் மட்டும் எப்படி அனைவர்க்கும் ஒரே படித்தானதாக இருக்கமுடியும்?

ஒரு வகைமைப்பாட்டு வசதிக்காக இங்குநாம் கவிதைமரபை வரலாற்று வரன்முறையாகக் கொண்டால் காலகதியில் வாய்மொழிமரபு, சங்கமரபு, பக்திப்பனுவல் மரபு, எழுத்து மரபு, வானம்பாடிமரபு இவற்றூடே கிளைக்கும் குறும்பா மரபு (குறள், ஐங்குறுநூறு, ஆத்திசூடி, தமிழ் ஹைக்கூ) பாடல் மரபு, செய்யுள் மரபு மரபுக்கவிதை, வசன கவிதை, நவீனகவிதை, எதிர்க்கவிதை ,நுண்கவிதை எனவாங்கவை காணக்கிடக்கும்.

'தமிழின் தொன்மைச்சிறப்பே அதன் தொடர்ச்சியில் தான் உள்ளது. அந்தத் தொடர்ச்சிதான் இன்றைய தமிழர்களை அழிந்து போகாதவர்களாகக் காப்பாற்றுகிறது' கா.சிவத்தம்பி (இளவரசியம்-இளவரசு மணிவிழா மலர்)

மிகப் புதியதில் மிகப் பழையதின் சாயல் இருக்கும்' - நகுலன் (நினைவுப் பாதை)

'பழைய ஆட்களுக்கு நாம் கடன் பட்டிருக்கிறோம். அண்மையில் இருக்கிற யாருக்கும் கடன்படவில்லை. ஆனால் தொன்மையில் இருக்கிறவர்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம்' - சி.மணி (உயிர் எழுத்து)

நேசனுடன் ஓர் உரையாடல்

நகுலன் மீது அதீத பிரேமை இருந்ததா? பிரமிள் மீதான ஈர்ப்பை எப்படிச் சொல்வீர்கள்?' - பாலை நிலவன்

நகுலனின் சன்னமான உலகம் எனக்கு இணக்கமானது எனில் பிரமிளின் துடிப்பேற்றக் கூடிய உணர்ச்சித்தீவிரம் தேவையான ஒன்று. எவ்வளவு மௌனவாசிப்புக்கு உரியதோ அதனளவுக்கு வாய்விட்டும் வாசிக்கலாம்.

அவரது கட்டுக்கடங்காத படிமத்தன்மை மிக்க மொழிப்பெருக்கு அர்த்தங்களை மீறிய அர்த்தங்களை வழங்குபவை. பிரமிள் கவிதைகளில் புறஉலகச் சமூகச் சிந்தனைகளும் உண்டென்பதால் கூடுதல் அரசியல் முக்கியத்துவம் பெறுபவை.தம் கவிதைகளில் சமூக உணர்வையும், கூறுவதில் உணர்ச்சித் தீவிரத்தையும் விரும்பும் புதிய கவிஞன் கட்டாயம் பிரமிளைப் பயிலவேண்டிய தேவை அதிகம். பாரதிதாசனில் கவிதை இல்லை என விலகியிருந்த நான் அவரது முக்கியத்துவத்தை ஆத்மாநாம் மற்றும் பிரமிள் கவிதைகளின் வழியாகவே மீளவும் உணர்ந்தேன் எனில் நீங்கள் ஆச்சர்யப்பட மாட்டீர்கள்.என்னால் எழுதப்படப் போகும் எதிர்காலக் கவிதைகள் இத்திசையைத் தேர்ந்துகொள்ள வேண்டும் என ஆர்வம்கொள்கிறேன்.' நேசன் ('தனிமை•வெளி- காலாண்டிதழ்-2022)

**பாரதியை சுப்பிரமணிய பாடகர் என்பதும் பாரதிதாசன் பாடல்கள் கவிதைகளல்ல என்பதனால் அவர்க்கு என்ன இழுக்கு? என்பதும் : முறையே சாலய் இளந்திரய்யன், எம்டிஎம் இருவரின் தெக்கத்தி வக்கணை ஊமைக் குசும்பே. தேவதச்சன், அழகியசிங்கர் இருவர் தரப்பும் திராவிட இயக்க ஒவ்வாமைத் தரப்புகளே.**



தமிழ்க்கவிதைகளைப் பொறுத்த மட்டிலும் அவர்கள் எழுதுவது கவிதைகளே இல்லை என மறுதலிக்கப் பட்டவர்கள் இருவர் பாரதிதாசனும், நகுலனும்.

பாரதிதாசனை கவிஞராக ஏற்காத மூவர் அழகிய சிங்கர்,எம்.டி. முத்துக்குமாரசாமி, தேவதச்சன்.

பாரதியை சுப்பிரமணிய பாடகர் என்பதும் பாரதிதாசன் பாடல்கள் கவிதைகளல்ல என்பதனால் அவர்க்கு என்ன இழுக்கு? என்பதும் -முறையே சாலய் இளந்திரய்யன், எம்டிஎம் இருவரின் தெக்கத்தி வக்கணை ஊமைக் குசும்பே. தேவதச்சன், அழகியசிங்கர் இருவர் தரப்பும் திராவிட இயக்க ஒவ்வாமைத் தரப்புகளே.

அரசியல் கவிதைக்கு ஆத்மாநாமை எடுத்துக்காட்டாக்கி இன்குலாப்பை இருட்டடிப்போரின் கவிதை அரசியலும் இத்துடன் ஒருசேர நோக்கத்தக்கது. நகுலனைக் கவிஞராக ஏற்காதவர் ஆதவன் தீட்சண்யா, றியாஸ் குரானா இருவரும். பெண்ணிலைவாதம், தலித்தியம் சார் கவிதை மரபை ஏற்காதோர் விக்கிரமாதித்தியன், ராணிதிலக் யவனிகாவின் அரசியல் கவிதைகளைத் தலித்திய நோக்கில் ஏற்காதவர் ம.மதிவண்ணன். இன்குலாப்பிற்குப் பின்னர் யவனிகாவை மட்டும் அரசியல் கவிதையாளராகச் சுட்டுபவர் அ. மார்க்ஸ்.

ராஜ மார்த்தாண்டன், தமிழினி வசந்தகுமார் ஆகியோர் கவிதைத் தொகுப்பின் இருட்டடிக்கும் சௌந்தர்ய உபாசனை வெங்கட்சாமிநாதன், ஞானக்கூத்தன், மனுஷ்யபுத்திரன், ஆகியோரின் சந்தர்ப்பவாதக் கவிதை அரசியல் பெருந்தேவி, ரிஷி ஆகியோர் மீதான குட்டிரேவதியின் மதிப்பீடு ஆகிய இவற்றை எல்லாம் தொடர்ந்து விரிவாகக் காண்போம்.

நேசன் தாம் எதனால் பாரதிதாசனில் கவிதை இல்லை என விலகி நின்றார் எனவும் எவ்வாறவர் அத்தகைய தம் நிலைப்பாட்டிலிருந்தும் விடுபட்டே பாரதிதாசனின் முகாமையை ஆத்மாநாம், பிரமிள் கவிதைகளுக்கூடாக உணர்ந்திடலானார் என்றெழுத வேண்டும். அதன் வாயிலாக. அத்தகைய விலகல் மனப்பாங்கினர்க்கும் வெளிச்சம் பிறக்கக் கூடும். பாரதிதாச விலகல் மனப்பாங்கினர் தரப்பைப் பின்னர் முறையே அவரவர் தரப்புப் பரபக்கங்களை முன்வைத்தே, எதிர்கொண்டு என் மதிப்பீட்டை முன்னெடுப்பேன்.

**நேசன் தாம் எதனால் பாரதிதாசனில் கவிதை இல்லை என விலகி நின்றார் எனவும் எவ்வாறவர் அத்தகைய தம் நிலைப்பாட்டிலிருந்தும் விடுபட்டே பாரதிதாசனின் முகாமையை ஆத்மாநாம், பிரமிள் கவிதைகளுக்கூடாக உணர்ந்திடலானார் என்றெ முத வேண்டும். அதன் வாயிலாக. அத்தகைய விலகல் மனப்பாங்கினர்க்கும் வெளிச்சம் பிறக்கக் கூடும். பாரதிதாச விலகல் மனப்பாங்கினர் தரப்பைப் பின்னர் முறையே அவரவர் தரப்புப் பரபக்கங்களை முன்வைத்தே, எதிர்கொண்டு என் மதிப்பீட்டை முன்னெடுப்பேன்.**

'பொதுவாக கடந்த. 50 ஆண்டுக் காலமாகவே திராவிட இயக்க இலக்கியவாதிகளின் படைப்புகள் தமிழ் ஆய்வுலகத்தில் 'கண்டு கொள்ளப்படாமல்'- ஆனால் தன்னுணர்ச்சியோடு விலக்கப்பட்டன. பாவேந்தரும் இந்த விதிக்கு உட்படுத்தப்பட்டவரே. கடந்த 10 ஆண்டுகளாகத்தான் இந்த நிலைமை மாறி வருகிறது'

தொ.பரமசிவன் (2001- ('தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி')

'பாரதிதாசன் கவிதை கூறல் முழுக்க முழுக்க மரபின் பாற்பட்டதே தவிர புதிதானதில்லை. மிகுந்த பெயரும் புகழும் பெற்ற அவருடைய கொடை என்ற ஒன்று வெறுமனே யோசித்தால் வெறுமனேதான் இருக்க வேண்டி வரும். புதுக்கவிதை என்பதே பார்ப்பனர்களின் கொடைதான்'- அழகியசிங்கர் ('நவீன விருட்சம்'84 ஏப்.- யூன் - 2009)

'பாரதிதாசனை இருட்டடிப்புச் செய்வது என்பது - தமிழ், தமிழன், தமிழ் நாடென்னும் அடையாளைங்களைத் துடைத் தெறியும் மகிழ்ச்சியின் தொடக்கம் என நாம் உணர வேண்டும்' - ஈரோடு தமிழன்பன் (தமிழன்பன் கவிதைகளில் சமூகம்')

தேவதச்சனோடு - லக்ஷ்மி மணிவண்ணன், ரோஸ் ஆன்றோ செவ்வி நேர்வு

இலக்கிய அறிமுகம் எப்படி ஏற்படுகிறது?'

'இந்த வயதில்தான் பாரதியாரைக் கடக்கிறேன். சத்ரபதி சிவாஜிக்கு எழுதியதுன்னு எழுதியிருப்பார். 'பாரத நாடு பழம் பெரும் நாடு, நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்' இந்த கவிதைகளையெல்லாம் கத்திக் கத்திப் படிக்கலாம்.திரும்பத் திரும்ப பாரதியாரைப் படிக்க எனக்குள்ளிருந்த குடும்பப் பையன் உதிர்ந்து தேசிய மனம் உருவாகிறது. குடும்ப மனம் விடுதலை அடைகிறது.

பாரதி,பாரதிதாசனில் உங்களுடைய பயணம் என்னவாக இருந்தது?

பாரதிதாசன் எனக்குப் போதவில்லை.அவரது திராவிட இயக்கக் கருத்துக்கள் எனக்குள் பதியவே இல்லை.

ஆக இதுதான் இவங்க சிக்கல் அழகிய சிங்கர் நோய் சிற்றிதழ் பார்ப்பனிய நவீனத்துவம். தேவதச்சனுக்கோ பெருந்தேசியம் குதூகலம். இருவர்க்குமே சிற்றிதழ் மேட்டிமை திராவிட இயக்க ஒவ்வாமை

இங்கே உருவாகி இருக்கும் சமூக உள்ளடக்கத்திற்கு வெளியே நீங்கள் நகர்ந்து விடுகிறீர்கள் போல் தோன்றுகிறது?'

பலர் இங்கே சமூக உள்ளடக்கத்திற்குப் பொறுப்பு எடுத்துக் கொள்கிறார்கள் .அதில் பிரச்சினை இல்லை.கவிதைக்குள்

கருப்பொருளைத் திறக்க வேண்டும். அதுதான் பிரச்சினை.அதை நீங்கள் செய்கிறீர்களா?இல்லையா? கருப்பொருளைத் திறக்காமல் சமூக உள்ளடக்கத்திற்கு மட்டும் பொறுப்பேற்று கவிதையில் ஒன்றும் செய்வதற்கில்லை .கவிதையில் கருப்பொருளாய் இருக்கும் கனவும் திறக்கணும்.

கவிதைக்கு பலவிதமான மதிப்பும் வேலையும் இருக்கு. மெய்மையைத் தேடுதல்உட்பட கவிதைக்கு ஏழெட்டு வேலைகள் இருக்கிறது.குறிப்பிட்ட கவிதை எந்த வேலையையெல்லாம் சேர்த்துக் கூட்டி செய்கிறது என்கிற முகாந்திரங்களை முன்வைத்துத் தான் கவிதையை மதிப்பிட முடியும். ஒரு ஜென் கவிதையில் அதன் சமூகவியல் கருத்துகள் என்ன என்பதை நம்மால் எதிர்பார்க்கவே முடியாது .அது போல பாரதிதாசன் கவிதையில் ஒரு ஜென் கவிதையின் மதிப்பை எதிர்பார்க்க முடியாது.‘ - தேவதச்சன் (தமிழ் இந்து)

ஜென் கவிதையில் அதன் சமூகவியல் கருத்துகளை எதிர் பார்க்க முடியாது என்பது ஒரு பகுதி உண்மையே. ஜென்னில் பிறக்கும் ஹைக்குவின் அங்கத வடிவமான சென்ரியூவில் சமூகக்கருத்துக்கள் இடம் பெறும். அது அங்கே சாதாரணர்களின் ஹைக்கூ வடிவமே. கராய் சென்ரியூ (Karai Senryu 1718 - 1790). சமகாலச் சாதாரணர் தம்கால நிகழ்ச்சி குறித்து எழுதிய ஹைகூகளைத் திரட்டிப் பதிப்பித்தார். ‘ஹைபூ யானாகிடாரு‘ எனும் அத்தொகுதி சிறந்த சென்ரியூக்கு உதாரணம். ‘ - தமிழ்நாடன் (ஜப்பானியக் கவிதை)

அது அவர் பிறந்த நகரின் பெயரில் ஈடோ ஹைகூ எனவும், அவர் பெயராலேயே சென்ரியூ எனவும் வழங்கப்படலாயிற்று.

தமிழில் ஏப்.2001 -இல் தமிழன்பனின் ‘ஒரு வண்டிச் சென்ரியூ‘ மருதா வெளியீடாக வெளிவந்தது. ஆனால் அதற்கு முன்பே அதனை நான் ‘பூவில் தீ. போன்சாய் ஆல் . கலக ஹைக்கூ‘ என அறிமுகப்படுத்தினேன். அது நண்பர்களால் செல்லமாக ‘பொதிக்கூ‘ என வழங்கப்படலாயிற்று.

**‘பாரதிதாசன் கவிதைகளில் ஒன்றுகூட எக்காரணம் கொண்டும் தேறாது. ஞானி முழுவதுமாக, பாரதிதாசனை நிராகரிக்காதது ஆச்சர்யந்தான்‘ : எம்.டி.முத்துக்குமாரசாமி (அஸ்வ மேதா) இத்தகைய அதிர்ச்சி மதிப்புத் தீர்ப்பைத் தீர்த்துக் கட்டி வழங்கிப் பேனா முறித்தார் எம்டிஎம்.**

ஹைக்கூவின் பிறப்பிடம் மடாலயம், சென்ரியூ பிறப்பிடம் தேநீரகம் என்பார்கள். பொதிக்கூவின் பிறப்பிடமோ பிள்ளையார் அரசியலுக்கு எதிரான இயக்கக் கூட்டணித் துண்டறிக்கையின் பின்புறந்தான்.(குடந்தையில் பகுத்தறிவாளர் கழகம், மகஇக, பாமக இன்னும் பல்வேறு மதச்சார்பிலி அமைப்புகளின் சார்பில் 1993 செப். 18 , 19 தேதி).

ஓம்! உ! மதக்கலவரம்

அன்று அணிலுக்கு . இன்று பாபர் மசூதிக்கு . ராமநாமம்

மதயானை. வீதியுலா. பறையறைய நீயுமா?

சைவனுக்குக் காய்கனி. சிவனுக்கு சிசுக்கறி.

பிள்ளையார்க்கோ ‘இஸ்லாம்‘

‘கொலை வாளினை எடடா - என்ற கவிதையும் ‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே இல்லாமல் வேறு ஒன்றறியேன் பராபரமே‘ என்ற கவிதையும், கவிதையம்சத்தைப் பொறுத்த வரையில் ஒன்றுதான் -

பொருள் இரண்டிலும் வேறுபட்டி ருந்தாலும் கூட‘ - மா. அரங்கநாதன் (பொருளின் பொருள் கவிதை)

‘பாரதிதாசன் கவிதைகளில் ஒன்றுகூட எக்காரணம் கொண்டும் தேறாது. ஞானி முழுவதுமாக, பாரதிதாசனை நிராகரிக்காதது ஆச்சர்யந்தான்‘ - எம்.டி. முத்துக்குமாரசாமி (அஸ்வ மேதா)

இத்தகைய அதிர்ச்சி மதிப்புத் தீர்ப்பைத் தீர்த்துக் கட்டி வழங்கிப் பேனா முறித்தார் எம்டிஎம்.

தாம் அப்போது ஊரூரூராகவும் அயலக நாடுகளிலும் பயணிக்க நேர்ந்ததால் கோவை ஞானி உடனான தம் பாரதிதாசன் குறித்த விவாதத் தரப்புகள் குறித்த அந்த சூழமைவு மறந்து போயிற்றென்றார் அதுவரை ஏற்புடையதே. ஆனால் அவர் தம் மீது ஏதோ நான் முத்திரை குத்தி விளக்கம் செய்யவைக்கும் பாலிமிக்ஸ் தாக்குதல் மேற்கொண்டதாக இதனை எதிர்கொண்டார்.

பாலிமிக்ஸ் என் இயல்புதான். அது என் ஆசான்களான கார்ல் மார்க்ஸ் , பெரியார்,அம்பேத்கர் வழியில் நான் முன்னெடுக்கக் கூடியதே.

ஆனால் முத்திரை குத்தி என்பது அவர் தூற்றும் அவதூறே.

அழகியசிங்கருக்கான என் எதிர்வினையை அவர் தமக்கு எதிரதாகப் பிறழ்திரிபாக பிழைத்துணர்ந்த பிசகதுவே. அவர் பாரதிதாசன் மீதான தம் மதிப்பீட்டை ஆதாரமற்றுப் போகிற போக்கில் அதிச்சி மதிப்புத் தீர்ப்புதிர்த்ததால் அவர் விதைத்ததன் விளைச்சலை அவரே அனுபவித்தார்.

அதற்கெதற்கு என்மீது பழிசுமத்தல்? விமர்சனத்திற்கு அப்பாற்பட்டில்லை பாரதிதாசனோ, திராவிட இயக்கமோ - மாறாக விமர்சனாபூர்வமாக. அல்லாமல் எம்டிஎம் முன்வைத்த முறையின் தொனிதான் இங்கானசிக்கலே.

தம்முடைய வாசிப்பில் பாரதிதாசன் உடைய பாடல்கள், கவிதைகளல்ல ‘அவர் இயற்கை வர்ணனைகளை இனிமையாக எழுதிய திரிகூடராசப்பக் கவிராயரின் மரபுத்தொடர்ச்சியே என்னும் எம்டிஎம் பாரதிதாசனைப் போற்றற்குரிய பாடல்களை எழுதியவர் என்பதால் அவருடைய அந்தஸ்துக்கு எந்த வகையிலது

குந்தகமாகிப் போகும் என பேசுபொருளின் வாதகதியையே மடைமாற்றி வக்கணையாகக் குறுக்குச்சால் ஓட்டித் திசைதிரும்புகின்றார்.

பாரதி,நாமக்கல்லார், பாரதிதாசன், தமிழ்ஒளி, பெருஞ்சித்திரன், ம. லெ.தங்கப்பா, இன்குலாப் முதலான என்னையும் உள்ளிட்டோர் கவிதைகளையும் பாடல்களையும் ஒருசேர முன்வைத்தோரே.

திரிகூடராசப்பக் கவிராயர் குறவஞ்சி பாடியவர் அவர் கவிதை எழுதவில்லை. பாடலில் கவித்துவம் இருக்கலாம் தான் அது வேறு.

‘பாடலில் கவிதைக்குரிய இயல்புகளில் சில குறைந்து வரும். பாடலில் உருவக் கட்டுக்கோப்பும் உருவஅழகும் உண்டு. இவற்றுடன் உள்ளடக்க இயல்புகளில் ஒன்றோ இரண்டோ ஆங்காங்கே தென்படும். எனவே சற்று வளமான உள்ளடக்கமும் கட்டுக்குலையாத உருவமும் கொண்டது பாடல் என்று சொல்லலாம்‘ - சி.மணி

(யாப்பியல்)

பாவகை மூன்றனுள் கவிதையே தலை சிறந்ததெனவும் கவிதைக்கு முதலிடம், பாடலுக்கு இரண்டாமிடம், செய்யுளுக்கு மூன்றாமிடம் என வரிசைப்படுத்துவார்.

மாறாக எம்டிஎம் பாரதிதாசன் பாவகை யாவற்றையுமே பாடல்கள்தாம் என்பது வம்படி வழக்கே.

பாரதிதாசனைக் கவிஞராக ஒப்புக்கொண்டால் தம் கவிஞர் அந்தஸ்துக்குக் குந்தகம் வந்துறுமோ என்றஞ்சி எம்டிஎம் அவரைக் கவிராயர் மரபில் வந்த பாடலாசிரியராக இறக்கம் செய்துவிட்டு அதிலென்ன இழுக்கென விதண்டாவாதம் புரிகின்றார். எனிலவர் தாமே அவர் எழுத்தெலாம் கவிராயர் பரம்பரைப் பாடல்கள் மட்டுமே என மூதலித்தாகவேண்டும். அவை குறியீட்டுத்தளத்தினை எட்டுவதல்ல என்பதால் கவிதைகளல்ல என்கின்றார்.

குறியீடு என்பது தொடர்ந்து கவிதையில் பயின்று வருவதென்றாலும் அதனைத்தவிர்த்த கவிதைமரபும் உண்டுதானே?

**பாரதிதாசனைக் கவிஞராக ஒப்புக்கொண்டால் தம் கவிஞர் அந்தஸ்துக்குக் குந்தகம் வந்துறுமோ என்றஞ்சி எம்டிஎம் அவரைக் கவிராயர் மரபில் வந்த பாடலாசிரியராக இறக்கம் செய்துவிட்டு அதிலென்ன இழுக்கென விதண்டாவாதம் புரிகின்றார். எனிலவர் தாமே அவர் எழுத்தெலாம் கவிராயர் பரம்பரைப் பாடல்கள் மட்டுமே என மூதலித்தாகவேண்டும். அவை குறியீட்டுத்தளத்தினை எட்டுவதல்ல என்பதால் கவிதைகளல்ல என்கின்றார். குறியீடு என்பது தொடர்ந்து கவிதையில் பயின்று வருவதென்றாலும் அதனைத்தவிர்த்த கவிதைமரபும் உண்டுதானே?**

‘இன்றைய தமிழ் நவீன கவிதையில் படிமமும் குறியீடும் காலாவதியாகிவிட்டது. அது வானம்பாடிகளினுடனே இறந்து விட்டது. உத்திகளும் பெரிதும் சலிப்பன ஆகிவிட்டன. தன் அனுபவத்தை,மிக எளிய வடிவில், எளிய மொழியில், மிகை உணர்ச்சியும் இல்லாமல், திறந்த நிலையில் சொல்வதுதான், இன்றைக்கான சவால்‘ - ராணிதிலக் (சப்தரேகை).

இத்தொடர்பில் என்னைப் பொறுத்தவரை எம்டிஎம்மின் குறியீட்டுத் தளத்தை எட்டமாட்டாதது கவிதையே ஆகாது எனுமாப் போல மட்டையடியாக மறுதலிக்கவும் இயலாது ராணிதிலக்கைப் போல் ஏதோ குறியீடென்பதே வானம்பாடிகளுக்கு அப்பால் காணவே கிடையாதென மிகை எளிமைப்படுத்திப் புறங்கையால் தள்ளிப் புறக்கணிக்கவும் முடியாது.

‘கடக்க வேண்டியிருக்கும். படிமங்கள். உருவகங்கள். மனசுள் உறுத்த்' ‘படிம. உருவக. குறீயீட்டு இடையீடில்லாத. நிர்வாணக் கவித்துவம் வேண்டி. நீ எப்போது.தியானிக்கப் போகிறாய்' என்னும் கலாப்ரியா கவிதைவரிகளும் ‘இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிர் எனலாம்' எனும் பாரதியின் வெள்ளைக்கலையும், கலாப்ரியாவின் திகம்பரக் கவித்துவமும் ப்ரக்ட்டின் மொழிச்சலவையும் இங்கே மனங்கொளத்தக்கன.

பாரதிதாசன் கவிதைகளைப் பாடல்களே என்னும் இத்தொடர்பில் எம்டிஎம்மின் இத்தகு தரப்பிற்கு ஏலவே இன்னுமொரு முன்னோடி குறித்தும் காண்போம்◦

கி.ராஜநாராயணன் அகராதியில் மூலப்படிம உணர்விற்குப் பெயர் மொழிவெறி, கவிதை என்பது உரைநடை மீதான ஆதிக்கம் செலுத்தும் சண்டாளத்தனம்.

உரைநடைக்கு மட்டும் மக்கள்தமிழ். இசைக்கென்றால் கர்நாடக சங்கீதம் காஞ்சிப்பட்டு, நாட்டார் இசையோ சுங்கடிப்புடவை.

‘மொழி மேல் உள்ளவை பற்று, மோகம், காமம், வெறி எனப்பல பரிமாணங்கள். ஒன்றுமேபேசமுடியாது'

‘தாய் தடுத்தாலும் விடமாட்டேன் என்று ஒருவன் கறுவுகிறான். உன் மொழியைப் பழித்தால் அவனை விடாதே கொன்றுவிடு என்று

சொல்கிறான்' (தளம்) -‘இந்த கிரா எதிர்வினையை வாசித்த அக்கணமே என்னில் மின்னல்வெட்டியது

‘எனக்கும் தமிழ்தான் மூச்சு ஆனாலதைப் பிறர்மேல் விடமாட்டேன்' என்னும் ஞானக்கூத்த ‘வக்ரோக்தி'யே! ஏனெனில் இவ்விருவர் எதிர்வினைகளுமே பாரதிதாசனுக்கு ஆனவைதாம்.

எது பாரதிதாசனுக்கு உயிர்மூச்சோ, அதுவே கூத்தனார்க்குப் பெருமூச்சாம். ஆனால் கிராவுக்கேன் பாரதிதாசன்மீது இத்துணை வன்மம்? பாரதிதாசன் கவிதை எதற்கான எதிர்வினையோ அதைப்பற்றியே பேசாமல் உரிய பனுவற் சூழமைவு புலப்படாமல் இப்படி இடையில் உருவி எடுத்தாள்வது எத்தகைய அறம்?

மாறாக மொழி குறித்த பாரதிதாசன் பார்வை எத்தகையது? எவ்வாறது மொழி குறித்த மானுடவியலார், வரலாற்றாளர் பார்வைகளுடன் சங்கமிக்கலாகின்றது? அவர்கள் பார்வை எத்தகையது?

'வெறும் தமிழ்வெறி என்று இந்த மூலப்படிம உணர்வை (Pre - mordial sentiment) கொச்சைப்படுத்துபவர்கள் மூடர்கள் என்பதுதான் என் கருத்து. இந்த மூலப்படிம உணர்வை நடுநிலையான எல்லா மானுடவியலாளர்களும் வரலாற்றாளர்களும் அங்கீகரித் துள்ளனர். யூஜின் இர்ஜிக், கிளிபோட் நீட்ஸ், பெர்டன்ஸ்டைன் போன்றோர் இவர்களில் முக்கியமானவர்கள்.' - தமிழவன்

('தமிழுணர்வின் வரைபடம்')

'மொழி வெறுமனே ஒரு கருவியல்ல.கத்தியும் கவசமும் அல்ல கழற்றியெறிய, அது ஒரு சட்டையுமல்ல. அது மனித இருப்பின் ஓர் இலச்சினை, பண்பாட்டின் முத்திரை, தனி மனிதனை சமூகப்படுத்தும் ஒரு மாயப்பின்னல், தந்தை தாயாய், பாட்டன் பாட்டியாய், முப்பாட்டன் முப்பாட்டியாய் முன்னொரு காலத்திலிருந்து, பின்வரும் காலவெளிகளில் உயிரோடுஉணர்வு சுமந்துவரும் ஒரு வரலாற்றுச் செய்கை.' - தி.சு. நடராசன் ('தமிழின் அடையாளம்)

மானுடவியலாளர், வரலாற்றாளர்தம் மொழி குறித்த நோக்குநிலையும், பாரதிதாசனின் பார்வைகளும் சங்கமிக்கும் சங்குமுகம் இதுதான்◦

'இனத்தைச் செய்தது மொழிதான் இனத்தின். மனத்தைச்செய்தது மொழிதான் மனத்தை.

மொழிப்பற்றினின்று. பிரிப்பது முயற்கொம்பு.' - பாரதிதாசன்

எம்டிஎம்மின் பாரதிதாசன் கவிதை குறித்த பார்வைக்கு கரிசக்காட்டு நாய்னாவே முன்னோடி போலும்?

மொழி குறித்து மட்டுந்தான் என்றில்லை பாரதி, பாரதிதாசன் கவிதைகள் யாவற்றையுமே கிரா புறக்கணிக்கின்றாரே?

'எனக்கு இங்கொரு கோபம், மகாகோபம் உண்டு. எதை எல்லாம் நீங்கள் உச்சிமீது வைத்துக் கொண்டாடுகிறீர்களோ அவை காதுக்கு இனிமையான, ராகதாள அமைப்புடைய அந்த அளவில் ரசிக்கத்தக்க வெறும் பாடல்கள் மட்டுமே. அவை இன்னொரு விபரீதத்தை மொழிக்குச் செய்துவிடுகின்றன.' எனத் தொடர்வாரவரே!

பாரதி,பாரதிதாசன் கவிதைகளில் எல்லாமே அப்படிப்பட்ட பாடல்களா என்ன? நாய்னா கோளாறுகளுக்கு நதிமூல ரிஷிமூலங்கள் ரசிகமணியிடம் காணக்கிடப்பனவே. இவர்கள் அனைவர்க்கூடாகவும் வெளிப்படும் நிராகரிப்பரசியலின் வன்மம் கண்டிக்கத்தக்கதே.

இவ்வாறே பாரதியைப் படிக்கப் படிக்கத் தமக்குத் தேசியமனம் உருவாகின்றதென்னும் தேவ தச்சனுக்குப் பாரதிதாசன் போதவில்லையாம், திராவிட இயக்கக் கருத்துக்கள் பதியவே இல்லையாமாம்? தேவதச்சப் பெருந்தேசிய மனத்தின் வரலாற்று உள்வாங்கல் லட்சணம் இத்தகையதே. தேவதச்சன் மூலப்படிம உணர்வை அறியமாட்டாதவரா என்ன?

'கண்ணகி சிலையை

அகற்றுகிறார்கள்

தேர்ந்த பொறியாளர்கள்

உயர்நுட்ப யந்திரங்கள்

அவசரமான அரசாணை

அரவமில்லாமால்

நடக்கவேண்டும்

சிலையை ஏந்தி

வேலை முடிந்தது

ஓசையின்றி வண்டி

நகர்ந்தது

கேட்கத் தொடங்கியது

சிலம்பின் சத்தம்' -

தேவதச்சன்

('கல்குதிரை'-2002)

இப்படி அபூர்வமாக மூலப்படிவத் தொன்மத்தை மீட்டவல்ல கவிஞர் தாமே அவர்?

'தேவதச்சன் கூட அரசியல் கவிதை எழுதியிருக்கிறார். ஆனாலது மிக சன்னமாக ஒலிக்கும்◦

'அது என்னவாகவும் இருக்கட்டும்

அனைத்திற்கும் டிமிக்கிக் கொடுத்துவிட்டு

எத்தனை எத்தனையோ மனிதர்களிடமிருந்து

பிரிப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை

எனது பூணூல்' -பாலா கருப்பசாமி

'தற்கால விரிவைப் பழம் காலத்தின் விதையில் கொண்டு போய் இணைப்பதில்தான் மூலப்படிமத்தைக் காணும் செயல் அடங்கியுள்ளது' என்னும் தமிழவன் ஆலின் பழத்தொரு குறுவித்தாகப் பாரதிதாசன் கவிதைகளில் கிளைக்கும் அண்ணாவின் அடையாள அரசியல் வெகு விரைவில் தமிழர்களைத் தொத்திப் பரவியதை விரிவாக முன்வைத்துள்ளார். (தமிழுணர்வின் வரைபடம்). எப்படி பாரதியைப் படிக்கப் படிக்க தேவதச்சனுக்கு உள்ளிருந்த குடும்பச்சிறுவன் உதிர்ந்துதிர்ந்தே அவருள் தேசியமனம் திரண்டெழுந்ததோ அப்படித்தானே பாரதிதாசனைப் படிக்கப் படிக்க அவரது தமிழெனும் மூலப்படிமம் நம்மில் எரிகொளுவிப் பராவுகின்றது. ஆனால் தேவதச்சனுக்கும் எம்டிஎம்முக்கும் மட்டும் அவ்வாறாகவில்லை எனில் அதற்கான கோளாறுதான் யாதெனத் தமக்குள் அகழாய்வு நிகழ்த்திக் கண்டடைய வேண்டியது அவர்கள் பாடே.

'பாரதிக்குப் பிறகு ஆற்றல் மிக்க கவிஞராகவும் தனி மனித இயக்கமாகவும் உருப்பெற்ற ஆளுமை என்றால் அது பாரதிதாசன்தான். பாரதி முதல் புதுமைப்பித்தன் வரை பல முன்னோடிகளின் அபிமானத்தைப் பெற்றவர்.'

'தமிழ் என்பதையே ஒரு தொல்படிமமாக (றாசஉாநவலிந) ஓர் உயர் விழுமியமாக நோக்கும் போக்கு ஒன்று பழங்காலம் முதலே நமக்குண்டு. பாரதிதாசன் அதன் நவீன காலத் தொடர்ச்சி. நிலத்தை வணங்கும் பண்பாடுகளுக்கிடையே மொழியை வணங்கும் பண்பாடு இது. நிலத்துக்கு இணையாக மொழியையும் போற்றி அதனையும் ஒரு தூலப் பொருளாய் கருதும் சிந்தனைப் போக்குக்கு சமகால முகம் கொடுத்தவர் என்பதுவே பாரதிதாசனின் முதன்மையான பங்களிப்பு. அந்தவகையில் தமிழ் அடையாளம் என்ற கருத்தியல் இருக்கும் வரை பாரதிதாசன் பெயர் நிலைத்திருக்கும் '- என இவ்வாறு 'பாரதிதாசம் தமிழ் வரைவியலின் நவீனமுகம்' எனவாங்கே இனங்காணவல்ல இளங்கோ கிருஷ்ணன் இத்தொடர்பில் மற்றொரு தரப்பை முன்னிறுத்தி, தாமே அதனை எதிர்கொள்கின்றார்◦

'கிட்டத்தட்ட உலகம் முழுதுமே புதுக்கவிதைக்குள் நுழைந்துவிட்ட பின்னும் மரபில் கவிதை எழுதிக் கொண்டிருந்தவர் பாரதிதாசன். டி.எஸ்.எலியட், எஸ்ரா பவுண்ட், நிகோனர் பர்ரா, பெர்டோல்ட் ப்ரெக்ட், நெரூதா, ஆக்டோவியா பாஸ், ஆலன் கின்ஸ்பெர்க் போன்ற மேதைகள் கோலோச்சிய நாட்களில் இங்கு தமிழ்ச்சிலம்பம் சுழற்றிக் கொண்டிருந்தவர் என்ற விமர்சனம் ஒன்று அவர் மீது உண்டு. நம் மண்ணின் இரண்டாயிர வருட மரபு கொடுத்த அழுத்தம் அது. நெரூதாவுக்கும் எலியட்டுக்கும் இல்லாத ஒரு கவிதையியல் தொடர்ச்சி நமக்கு இருக்கிறது. அதிலிருந்து பட்டென்று வெளியேறுதல் சுலபம் அல்ல. பிறகு மரபின் அத்தனை வளங்களையும் கற்ற ஒருவன் அதிலிருந்து வெளியே வருவது சாத்தியமே இல்லாத விஷயம்.' - இளங்கோ கிருஷ்ணன். இதில் நெருதாவுக்கும் எலியட்டுக்கும் இல்லாத கவிதையியல் தொடர்ச்சி என்பது பிழையான புரிதலேனும் இத்தொடர்பில் இதற்குமேற் பேச இங்கே இடமில்லை.

மாற்றுத்தரப்புகளையும் காண்போம்◦

'வசன கவிதைச் சாத்தியத்தை முன்வைத்தவர்கள் மரபுக்கவிதை இனித் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். இவர்கள் செய்யுள்மரபை மட்டுமல்ல தமிழ் மரபையே மறுக்கும் அளவுக்கு மரபறியாதவராயும் தம்மைத் தனித்த மரபுள்ளவர்களாகவும் கருதும் போக்கினால் கவிதையைப் பற்றிய விவாதங்கள் வேறு தளங்களிலும் தொடரவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே பாரதிதாசனைப் போன்றோர் இப்புதிய முயற்சிகளைப் புறக்கணித்தனர்.' - சு. அரங்கராசு (கனல் மைந்தன்)

(தமிழ்ப்புதுக்கவிதை ஒரு திறனாய்வு)

வசனகவிதை, புதுக்கவிதை முயற்சிகளைப் பொறுத்தவரை புதுமைப்பித்தன், தொ.மு.சி. ரகுநாதன் போன்றோரும் அவற்றை ஏற்க மறுத்தார் தாமே?

இருந்த போதிலும் கூட, 'பாரதிதாஸனை விடவும் பன்மடங்கு ஆழ்ந்த நவீனத்தன்மை வாந்த செழுமையான கவித்துவம் புதுமைப்பித்தன் உடையது' என்பார் பிரமிள்

(வெயிலும் நிழலும்)

'தமிழ்நாடு முன் போலில்லை் தமிழர்கள் தமிழ்க்கவிதைகள் கேட்கிறார்கள். வேறு கடமை ஏற்றுள்ள நான் பாட்டு எழுத ஆசைப்பட்டதற்குக் காரணம் இதுதான்'

(எதிர் பாராத முத்தம் -1941) அந்த வேறு கடமை என்னவென்றால் இயக்கத் தேவையான பரப்புகைக்குப் பாட்டெழுதத் தம்மைத் தானே ஆட்படுத்திக் கொண்டதுதான். இத்தகு இக்கட்டில் மாட்டிக்கொண்டோர் சூரியதீபனும், இராசேந்திர சோழனும் கூடத்தாம்.

இந்த வேறுகடமையான பாரதிதாசனுக்குப் பரப்புகைப் பாட்டெழுதலும், எளிய நிலை இயக்கத் தோழர்களை எட்டும்படி எழுதியாகவேண்டும் எனும் நெருக்கடியும் வெவ்வேறு வகையில் மூவரையுமே நீர்த்துப் போக வைத்தன. மாறாக இயக்கத்தோரே எனினும் தொ.மு. சி.ரகுநாதனோ, இன்குலாப்போ, எம்மனோரோ இத்தொடர்பில் கலை ஞாயங்களையோ, கவித்துவத்தையோ பேணுவதில் கறாராகவே நின்றோம்.

பாரதிஊழியும் பெரியாரூழியும் சங்கமிக்கும் ஒரு மாபெரும் ஊழிப்பொழிமுகமே (யுகசந்தி) பாரதிதாசன் என்னும் பன்முக ஆளுமை. பெருந்தேசியம், திராவிட தேசியம், தமிழ்த்தேசியம், சர்வதேசியம் எனவாங்கு அரசியல் முறையிலும் ஆத்திகர், நாத்திகர், அய்யவாதி எனத் தத்துவ வகைமையிலும் யாப்பு யாவையும் உயிர்ப்பாகக் கையாள வல்ல கைவந்த கவிஞனாகவும் சொன்மை, பொருண்மை இரண்டினும் துறைபோன உரையாசிரியன் ஆகவும் அண்ணா, தமிழ்க்குடிமகன், பெருஞ்சித்திரன் எனத் தொடரும் அடையாள அரசியல் இயக்கங்களுக்கு ஆதர்சமான மூலப்படிமப் பாலமிட்ட நவீன தொன்ம வித்தூ ன்றியவராகவும் திகழக் கூடியவரே பாரதிதாசன்.

'பாரதிதாசன் மரபைப் போற்றியவர். மரபுக்கு ஓர் அழகையும் நெகிழ்ச்சியையும் இனிய இசையையும் அந்த மரபுக்கு தந்துவிட்டுப் போனார். அவர் யாப்புக்களை ஒரு தளையாக - வெறும் வாய்பாடாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனை உயிர்ப்புடையதாக, ஆக்கமும் உடையதாக மொத்தத்தில் கவிதையாக ஆக்கிக்கொண்டார். யாப்பையும் மரபையும் ஒரு கவிஞன் எப்படி வெற்றி கொள்ள முடியும் என்பதற்குப் பாரதிதாசன் சான்று.' - தி.சு.நடராசன் ('தமிழின் அடையாளம்)'

'தமிழ்த் தொகையறிவு என்பதும் தமிழ்த் தொல்மனம் என்பதும் சேகரமானது. அது ஒன்று கிடையாது. பன்மையால் ஆனது.'

'தமிழ் மனம் என்பதும் தமிழ் அறிவு என்பதும் எல்லா ஊடாட்டங்களின் ஊடாகவும்,கட்டமைக்கபட்ட ஒரு பன்மையான அறிவ் பல திசையான அறிவ் ஒரு கலப்பறிவு.இந்தக் கலப்பறிவு கலப்பான அறிவால்

உருவான தொல்மனம் சங்க இலக்கியத்திலிருந்து திருக்குறள் வழியாகப் பலமுனைகளிலிருந்தும் ஒன்றிணைந்து பாரதிதாசனின் திராவிட மரபாகக். பரிணமித்துள்ளது.' - ரமேஷ் பிரேதன் ('நவீன இலக்கியங்களில் செவ்விலக்கியங்களின் தாக்கம்)

'பாரதிதாசனின் மொழிக்குள் தமிழின் முழுமை இருக்கிறது. விமர்சகர்கள் கூட இன்னும் அதை அறியவில்லை' 'அவரை அனைத்துலகமரபில் வைத்து முழுமையாகப் பரிசீலிக்கும் நூல்கள் இல்லை'

'பாரதிதாசன் தான் முதன்முதல் பகுத்தறிவையும் சங்க இலக்கியத்தையும் இணைத்தார். அடுத்து நவீன கவிஞர் சி.மணி செய்தார். பாரதிதாசன் கவித்துவம் சங்கத்தின் நீட்சி.'- தமிழவன் (தீராநதி - யூன் 2017)

பாரதிதாசனை உலகக் கவிஞர் பலரோடு ஒப்பிட்டுப் பாராட்டும் போக்கினை 1940 களிலிருந்தே அறிய முடிகிறது என்னும் இரா.இளவரசு பாரதிதாசனுக்கு நிதியளிப்பு விழாமலர் ( 28.07.1946) அத்தகு பல மதிப்பீடுகளைத் தாங்கியுள்ளது எனத் தொடர்கின்றார். அத்தகைய ஒப்பீடுகள் சிலவற்றை முன்வைத்து அத்தொடர்பிலான நூல்கள் குறித்தும் எடுத்துரைக்கின்றார். (பாவேந்தரின் உலக நோக்கு)

'கொத்தமங்கலம் சுப்புவின் நாட்டுப்பாடல்களும், சுப்ரமணிய பாரதியின் பக்திப்பாடல்களும், கிவாஜ போன்றோரின் செய்யுள்களும் பவனிவந்த ஒரு காலக்கட்டத்தில் சி.சுப்ரமணிய பாரதியின் கவித்துவ வீர்யம் தொடர்ந்து தெறிக்கக் கவிதைகளை எழுதிவந்தவர் பாரதிதாஸன். இவரை மேலுள்ள எழுத்தாளர்களிடமிருந்து தனிமைப்படுத்தி, இவர் எழுதியவைதாம் கவிதைகள் எனஇனம் காட்டினார்.' - பிரமிள்

'பொதுவாக, புரட்சிக்கவிஞரின் கவிதைகளை நவீன இலக்கியவாதிகள் ஏற்றுக் கொள்வதிலை. ஆனால், நவீன இலக்கியவாதிகள் கொண்டாடும் புதுமைப்பித்தனும்,

**பாரதியைப் பாரதிதாசன் ஏன், எவ்வாறெலாம் போற்றினார் என்பதை உணரொணாமல் அவர் வகிபாகத்தையே மறுதலிப்பர் ஒரு சாரார். போலவே பாரதிதாசனைப் புதுமைப்பித்தன் ஏன் எவ்வாறெலாம் புதுமைப்பித்தனும், மணிக்கொடியாளரும் போற்றினர் என உணரொணாமலே அவர் வகிபாகத்தை மறுதலிப்பர் மற்றொரு சாரார். இதில் முரண்நகை யாதெனில் இத்தகு நவீனகவிதையாளர் எனப்படுவோர் தம் முன்னோடியர் எழுத்துக்களையுங்கூட முறையாக வாசித்திரார் என்பதே.**

குபராவும்,ஜெயகாந்தனும் புரட்சிக் கவஞரைக் கொண்டாடுகிறார்கள்' - என்னும் வஉசி நூலகத்தார் தம் பாரதிதாசன் கவிதைத் தொகுதிக்குப் பதிப்புரையாகவும் ,முன்னுரையாகவும் முறையே குபரா, புதுமைப்பித்தன் கட்டுரைகளை அமைத்தே வெளியிட்டுள்ளார்கள்.

'புதுமைப்பித்தனும், பாரதிதாசனைக் கவிதா ரீதியிலும், கருத்து ரீதியிலும் பாரதியார்க்குப் பின்வந்த கவிஞர்களில் தலைசிறந்தவராகக் கருதினார். ஏனெனில், சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பாரதியின் உயிர்நாடியான கொள்கைக்குத் தமது வாழ்நாள் முழுவதும் பாரதிதாசன் விஸ்வாசமாய் இருந்தார் என்பதைப் புதுமைப்பித்தன் நன்கு உணர்ந்திருந்தார்.

பாரதிதாசனை ஒரு புதுமைக்கவி என்றும், ஒரு புரட்சிக்கவி என்றும், புதுமைப்பித்தன் கருதினார்.'

'அரசியல் கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டுத் தமிழ் வளர்ச்சிக்குப் பாரதிக்குப் பின்னால் மிகச்சிறந்த பங்காற்றிய கவிஞர் பாரதிதாசன் என்பதே புதுமைப்பித்தன் உள்ளக் கிடக்கையாகும். எனவேதான் பாரதிதாசன் மீது மிக உயர்ந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்" - தி.க.சிவசங்கரன் ('கதைசொல்லி' - பிப்.ஏப். 2007)

'தமிழ் நவீனத்துவத்தின் அடையாளமாகக் கருதப்படும் 'மணிக்கொடி'க்கும் திராவிட இயக்கக் கவிஞராகக் கொண்டாடப்படும் பாரதி தாசனுக்குமான உறவை ஆராயும் நூல் இது. பாரதிதாசனையும் அவருடைய கவிதைகளையும் மணிக்கொடி மரபினரான புதுமைப்பித்தன், குபரா, ந.பிச்சமூர்த்தி, கநாசு, சி.சு.செல்லப்பா முதலானோர் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பதை விளக்குகிறார் மணிகண்டன் கெட்டி தட்டிப்போன மனப் பதிவுகளையும் முன் னெண்ணங்களையும் ஏராளமான புதிய செய்திகளோடு தகர்க்கும் சுவையான ஆராய்ச்சி நூல் இது." றா.ச. ஏநமேயவயஉாயடயியவால . ('மணிக்கொடிமரபும் பாரதிதாசனும்' - பின்னட்டை 'பிளர்ப்'பில்)

பாரதியைப் பாரதிதாசன் ஏன், எவ்வாறெலாம் போற்றினார் என்பதை உணரொணாமல் அவர் வகிபாகத்தையே மறுதலிப்பர் ஒரு சாரார். போலவே பாரதிதாசனைப் புதுமைப்பித்தன் ஏன் எவ்வாறெலாம் புதுமைப்பித்தனும், மணிக்கொடியாளரும் போற்றினர் என உணரொணாமலே அவர் வகிபாகத்தை மறுதலிப்பர் மற்றொரு சாரார். இவற்றை எதிர்கொள்ளும் தரப்புகள் மேற்கண்ட எம்மிருவர் நூல்களிலும் விரிவாகக் காணக்கிடக்கின்றன.

இதில் முரண்நகை யாதெனில் இத்தகு நவீனகவிதையாளர் எனப்படுவோர் தம் முன்னோடியர் எழுத்துக்களையுங்கூட முறையாக வாசித்திரார் என்பதே.

மணிக்கொடியாளர் தம் பாரதிதாசன் குறித்த வாசிப்பில் அரசியல் முறையாக முரண்பட்ட போதிலும் பாரதிதாசன் கவிதைக் கொடையை அவரவர் அளவில் உணர்ந்தே போற்றினர் என்பதும் அவர்கள் மாறுபட்ட தரப்புகளையும் தக்க விடையிறுக்குமாறே எதிர் கொண்டிருக்க இத்தகையோரே அவர் கவிதைப்பங்களிப்பையே மடிதற்று மறுதலிக்க முந்துறுவதே எனலாம்.

# அடிமைச் சமூகத்தின் இன்றைய தேவை சவுக்கோடு ஒரு தலைவன்!

## வழி தெரியாது அலையும் தோற்றுப் போன சமூகத்திற்கான ஒரே தீர்வு

அராஜக நிலைக்கான அடிப்படைக் காரணமாக இருப்பது சுயநலம். குறைந்த பட்ச பொது நலன்களுக்காகவாவது சமூகமாகச் சிந்திக்காமல், முற்றுமுழுதாக தனது சுயநலத்தில் மட்டுமே கருத்தாக இருக்கும்போது, சமூகம் என்ற அமைப்பு மட்டும் அன்றி, குடும்பம் என்ற அலகு கூட இயங்க முடியாது. 'எனக்கேன் தேவையில்லாத வேலை? நமக்கு நம்ம பாடு தான் முக்கியம். ஊரோடு ஒத்தோடுவோம்' என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்தால், அது அராஜகத்தில் தான் வந்து முடியும்.

**ஜோர்ஜ் இ.**

எந்த ஒரு நாகரீகம் அடைந்த சமூகமும் தனது இருப்புக்கும் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் தனக்கானதொரு அறநெறியைக் (Code of conduct) கொண்டிருக்க வேண்டும்.

அறநெறி ஒன்றின் மீது கட்டி எழுப்பப்பட்ட சமூகம் தான் ஒரு சமூகமாக இருக்க முடியும். (Exist). இயங்க முடியும். (Function)

அந்த அறநெறி எல்லாச் சமூகங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை. அறம் என்பதுகூட காலாகாலமாக மாற்றங்களைக் கண்டு தான் வந்திருக்க முடியும்.

கூட்டாக வாழ்ந்த வேட்டைச் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறநெறி, இன்றைய ஜனநாயக அரசியல் நிலையில் சாத்தியமில்லாததும் ஒவ்வாததும் ஆனதாகவும் இருக்கும். ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறநெறிகள் இன்றைக்கு தண்டனைக்குரிய குற்றங்களாகக் கூட இருக்கின்றன.

இன்றைய காலத்திலும் அறநெறி என்பது உலகெங்கும் பொதுவானதில்லை. (Not universal). அது நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதுமில்லை. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று தலை வெட்டுகின்ற மத அடிப்படைவாத நாடுகளுக்கு அறமாக இருக்கின்றது என்பதற்காக, ஜனநாயக நாடுகளில் அந்த அறம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

இராணுவ அடக்குமுறையில் கண்களைக் கட்டிச் சுவரோடு நிற்க வைத்துச் சுட்டுக் கொல்வதோ, புலி காலத்தில் மின் கம்பங்களில் கட்டி மண்டையில் போடுவதோ நீதியின் பாற்பட்டதோ, அறநெறி சார்ந்ததோ ஆக இல்லாவிட்டாலும், அவ்வாறான அடக்குமுறையின் கீழ் உள்ள சமூகங்கள் சமூக நிர்வாக அமைப்போடு இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றன. இன்றைய ஆப்கானிஸ்தான் கண் முன்னால் உள்ள உதாரணம்.

தலைமைகள் எதுவும் இல்லாத அராஜகநிலையில் (Anarchy) சமூகங்கள் இயங்க முடிவதில்லை. வேட்டைச் சமூகத்திலும் மட்டுமன்றி, காட்டு விலங்கு இனங்கள் பலவற்றுக்குக் கூட ஏதோ வகைத் தலைமைகள் அவற்றின் இருப்புக்கும் தொடர்ச்சிக்கும் தேவையாக இன்றைக்கும் இருக்கின்றன.

அராஜக நிலைக்கான அடிப்படைக் காரணமாக இருப்பது சுயநலம். குறைந்த பட்ச பொது நலன்களுக்காகவாவது சமூகமாகச் சிந்திக்காமல், முற்றுமுழுதாக தனது சுயநலத்தில் மட்டுமே கருத்தாக இருக்கும்போது, சமூகம் என்ற அமைப்பு மட்டும் அன்றி, குடும்பம் என்ற அலகு கூட இயங்க முடியாது. 'எனக்கேன் தேவையில்லாத வேலை? நமக்கு நம்ம பாடு தான் முக்கியம். ஊரோடு ஒத்தோடுவோம்' என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்தால், அது அராஜகத்தில் தான் வந்து முடியும்.

மற்றவர்கள் பற்றி எந்தக் கவலையும் கொள்ளாது, சுயநலத்திற்குப் பெயர் போன (Individualistic) சோமாலியர்கள் சாதிக்குழுக்களாக (Tribes) பிரிந்து இப்படித் தான் அரச இயந்திரம் இல்லாமல் நீண்ட காலம் இருந் தார்கள்.

இவ்வாறாக, சுயநலம் காரணமாக சிதைந்து போன ஒரு சமூகத்தில் அராஜகம் தலைதூக்கி, தடியெடுத்த தண்டல்காரர்கள் சாமான்யர்களை அடக்கி ஒடுக்குவதை தடுத்து, ஒரு

சமூகமாக இயங்க அதற்கு ஒரு தலைமை வேண்டும்.

சமூகத்திற்கான தலைமை என்பது அந்தச் சமூகத்தின் பெரும்பான்மையால் தெரிவு செய்யப்பட்டதாக மட்டும் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. (ஒரே இனத்துக்குள் உள்ளான பெரும்பான்மை)

அது அரசியல் தலைமைகளுக்குச் சரியானதாக இருக்கலாம். அவ்வாறான ஒரு தலைமை இல்லாத பட்சத்தில், அந்தச் சமூகத்தில் உள்ள சிந்திக்கத் தெரிந்த சிறுபான்மையாகக் கூட இருக்கலாம். அந்தச் சிறுபான்மை என்பது சமூக உணர்வுள்ளவர்களாகவும் பொதுவெளியில் பலராலும் மதிக்கப்படுகிறவர்களாகவும் உள்ளவர்கள் முதல் அந்தச் சமூகத்தின் கருத்துருவாக்கிகளான ஊடகங்கள் வரைக்கும் கொண்டதாக இருக்கலாம்.

அந்தத் தலைமை தான் அந்தச் சமூகத்தை வழிநடத்தும். அதன் வழியைத் தீர்மானிக்கும். உலகில் நீண்ட காலங்களாக அராஜகம் நிலவிய இடங்களிலும், சர்வாதிகாரிகள் விரட்டப்பட்ட நாடுகளிலும் இப்படித் தான் தலைமைகள் உருவாகி அந்தச் சமூகங்களை இன்றைக்கு வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு ஆட்சியை நிர்மாணிக்கும் தலைமைகள் தான்தோன்றித் தனமாக நடந்த கொள்ளாமல், அந்தச் சமூகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருக்கும்போது தான் அந்தச் சமூகம் முன்னேற முடியும்.

அவ்வாறான ஒரு தலைமையும், அதைக் கேள்வி கேட்கக் கூடிய ஒரு சமூகமும் இல்லாமல் போனால் ஏற்படும் அராஜகம் காட்டுத் தர்பார் என்ற, law of the jungle நிலைமையில், பலம் வாய்ந்தவர்கள் அதிகாரத்தை தங்கள் கைகளுக்குள் கொண்டு வந்து ஆட்டிப் படைக்கும் நிலை வரும். சட்டிக்குள் இருந்து தப்பி நெருப்புக்குள் விழுந்த கதையாக இன்னொரு சர்வாதிகாரத் தலைமைக்குள் உழல நேரிடும்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்பு எப்போதுமே தன் நலன்களைக் காக்க பேயோடு கூட கூட்டு வைக்கத் தயாரான ஒன்றாகத் தான் இன்று வரைக்கும் இருக்கிறது.

தனது போராட்டத்தைச் சதி செய்து அழித்ததாகச் சொல்கிற அதே சர்வதேச சமூகத்தை, தீர்வு வாங்கித் தர வேண்டும் என்று அடம் பிடிப்பதை நீங்கள் எந்த தர்க்க நியாயத்தைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியும்?

13ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முயன்ற இந்தியாவுடன், அந்த முயற்சி தங்களுக்கான தேவையை இந்தச் சமூகத்தில் இல்லாமல் ஆக்கி விடும் என்று போர் தொடுத்து, இன்றைக்கு அதே தீர்வையாவது வாங்கித் தரும்படி கெஞ்சுவதற்கும் மானம், ரோஷம் தேவைப்படாத ஒரு தில் வேண்டும் தான்.

சர்வாதிகாரி முகமட் சியாட் பாரின் மரணத்தின் பின்னான சோமாலியாவும், தொண்ணூறுகள் வரையிலான லெபனானும், சோவியத் வெளியேற்றத்தின் பின்னான ஆப்கானிஸ்தானும் அவ்வாறான Warlord களின் கைகளில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருந்து இன்றைக்கு ஓரளவு மீண்டு விட்டன.

இன்றைய ஹாயிதி அந்த நிலைக்குள் சிக்கிப் போயிருக்கிறது. ஹாயிதியில் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கம் கொண்ட Warlord கள் மாதிரி இல்லாமல், வெறும் குற்றக் குழுக்கள் (Criminal gangs) நாட்டின் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கின்றன.

இயற்கை வெற்றிடங்களை வெறுமையாக விட்டு விடுவதில்லை என்பார்கள். அதிகாரத்திற்கான வெற்றிடங்கள் ஏற்படும்போது, அதை யாரோ கையேற்று, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டாது விட்டால் நிலைமை இவ்வாறாகத் தான் முடியும்.

எங்களுக்குப் புலிகள் காலத்தில் கிடைத்தது தலைமை என்ற எந்த வரைவிலக்கணங்களுக்கும் அப்பாற்பட்டது. விடுதலைப் போராட்டம் என்ற வெறும் வெளியே காட்டப்பட்ட சீன் தவிர்ந்து, அது முழுக்க முழுக்க ஒரு தனிமனிதனின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப, நாயின் வாலில் கட்டிய தகரப்பேணி போல போல, இழுபட்ட நிலைமை மட்டுமே.
அதில் எங்களின் அபிலாஷைகள், கருத்துக்கள் எதற்கும் இடம் இருக்கவில்லை.

அது பேய்க்கு வாழ்க்கைப்பட்டுப் புளிய மரத்தில் ஏறிய நிலை மட்டுமே. வாயைத் திறந்தால் வாய்க்குள் வைக்கப்படும் என்ற நிலையில், கொட்டாவி விடுவது கூட இயக்கம் மீதான விமர்சனமாக, பச்சை மட்டை அடித் தண்டனைக்குரிய தேசத்துரோகக் குற்றமாக கருதப்படக் கூடிய நிலைமை தான் இருந்தது.

அகழ் மின்னிதழ் பேட்டியில் நான் சொன்னது போல பிரபாகரன் ஒரு வெறும் warlord மட்டுமே. அவருக்கு இந்தச் சமூகத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தேவை எதுவும் இருக்கவில்லை. வாயைத் திறந்தால் வெடி என்ற நிலைமையில், ‘காதைக் கிழிக்கும்’ மௌனத்தின் ஊடாகக் கூட இந்தச் சமூகம் தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் இயல்பு எப்போதுமே தன் நலன்களைக் காக்க பேயோடு கூட கூட்டு வைக்கத் தயாரான ஒன்றாகத் தான் இன்று வரைக்கும் இருக்கிறது.

தனது போராட்டத்தைச் சதி செய்து அழித்ததாகச் சொல்கிற அதே சர்வதேச சமூகத்தை, தீர்வு வாங்கித் தர வேண்டும் என்று அடம் பிடிப்பதை நீங்கள் எந்த தர்க்க நியாயத்தைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியும்?

13ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முயன்ற

இந்தியாவுடன், அந்த முயற்சி தங்களுக்கான தேவையை இந்தச் சமூகத்தில் இல்லாமல் ஆக்கி விடும் என்று போர் தொடுத்து, இன்றைக்கு அதே தீர்வையாவது வாங்கித் தரும்படி கெஞ்சுவதற்கும் மானம், ரோஷம் தேவைப்படாத ஒரு தில் வேண்டும் தான்.

புலிகளின் அழிவின் பின்னான யாழ்ப்பாணமும் கிட்டத்தட்ட இன்றைக்கு எந்தத் தலைமையும் இல்லாத அராஜக நிலையில் தான் வந்து முடிந்திருக்கிறது.

யுத்தப் பிரபுக்களின் கைகளில் சிக்கிய பேட்டைகளிலிருந்து பரஸ்பர றொக்கட் தாக்குதல்களும் அழிவும் இல்லை என்ற மன ஆறுதல் தவிர்த்து, யாழ்ப்பாணத்தின் இன்றைய அரசியல் நிலை அன்றைய சோமாலியா தான்.

இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாடும் இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டால், யாழ்ப்பாணம் வாள் வெட்டுக் குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்கவும் கூடும்.

யாருக்குத் தெரியும்? அதற்குள்ளாலும் எங்களுக்கு ஒரு தேசியத் தலைவர் உருவாகியிருக்கக் கூடும். யாழ்ப்பாணிகளின் டிசைன் அப்படி. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு அரோகரா போட்டு அணி திரள்கிறவர்கள் அவர்கள். மண்டையில் போட்ட துப்பாக்கிதாரிகளே தேசியத் தலைவர்கள் ஆன பூமி இது. 'தற்போதைய வாய்வீரர்களை விட வாள்வீரர்கள் எவ்வளவோ மேல்' என்று ஊரைச் சுத்த, ஊருக்குள் அரசியல் ஆய்வாளர்களுக்கு என்ன குறைச்சலா இருந்திருக்கும்?

ஊரோடு ஒத்தோடுதலையே அறமாகவும், 'நாங்கள் எங்கட ஒற்றுமையைக் காட்ட வேணும்' என்பதைத் தாரக மந்திரமாகவும், அதற்கு முரண்படுவோரைத் துரோகிகளாக்கிக் கொல்ல வேண்டும் என்று தீர்ப்பளித்து கொலைவெறியோடு அலையும் யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு இன்றைக்கு எந்த ஒரு உறுதியான அரசியல் தலைமையும் இல்லை.

> புலிகளின் அழிவின் பின்னான யாழ்ப்பாணமும் கிட்டத்தட்ட இன்றைக்கு எந்தத் தலைமையும் இல்லாத அராஜக நிலையில் தான் வந்து முடிந்திருக்கிறது.
> யுத்தப் பிரபுக்களின் கைகளில் சிக்கிய பேட்டைகளிலிருந்து பரஸ்பர றொக்கட் தாக்குதல்களும் அழிவும் இல்லை என்ற மன ஆறுதல் தவிர்த்து, யாழ்ப்பாணத்தின் இன்றைய அரசியல் நிலை அன்றைய சோமாலியா தான்.
> இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாடும் இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டால், யாழ்ப்பாணம் வாள் வெட்டுக் குழுக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்கவும் கூடும்.
> யாருக்குத் தெரியும்? அதற்குள்ளாலும் எங்களுக்கு ஒரு தேசியத் தலைவர் உருவாகியிருக்கக் கூடும். யாழ்ப்பாணிகளின் டிசைன் அப்படி.

ஏகபிரதிநிதிகள் என்று புலிவால் பிடித்தவர்களுக்கு இன்றைக்கு ஏகப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

அது யாழ்ப்பாணத்தில் மட்டும் அன்றி, லண்டன், ரொறன்ரோ, அவுஸ்திரேலியா என்றெல்லாம் நீண்டிருக்கிறது என்பதுதான் பெரும் நகைச்சுவை.

யாழ்ப்பாணிகளின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் வலிமை தங்களுக்கு உண்டு என்று தங்களைத் தமிழ் இனத்தின் விடிவெள்ளிகளாக நம்புவது யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல்வாதிகள் மட்டுமில்லை, புலன் பெயர் லெட்டர்ஹெட் அமைப்புகளும், தேசத்தின் புதல்வியின் சந்தைப்படுத்தல்காரார்களும் (Promoters), ஒலிவாங்கி ஊடகவியலாளர்கள் = அரசியல் ஆய்வாளர்களும், வெளிநாடுகளில் பெரும்பாலும் மோசடிகள் மூலமாகத் திடீர்ப் பணக்காரார்கள் ஆனவர்களும், மாறுவேடம் போட்ட எம்.ஜி.ஆர் மாதிரி தமிழர் பேரவை, மக்கள் அமைப்பு, சிவில் சமூகம் என்று வெவ்வேறு பெயர்களில் காலத்திற்குக் காலம் அரிப்பு எடுக்கும்போது களம் இறங்குகிற 'பொங்குதமிழ் யாழ்ப்பாணி நலன்புரிச் சங்க' உறுப்பினர் பிரமுகர்களும் என யாழ்ப்பாணிகளுக்கு இன்றைக்கு முப்பத்து முக்கோடித் தலைவர்கள் உள்ளனர்.

என்னவோ நல்ல காலம், யாழ்ப்பாண யூடியூபர்களுக்கு அந்தத் தேசிக்காய் தலையர் கனவு இன்னமும் தோன்றவில்லை. இந்த முப்பத்து முக்கோடி தலைவர்களை வைத்து அதிரடி வீடியோ போட்டு உழைக்க முடிவதால், அதற்கான தேவை அவர்களுக்கு இல்லை... இப்போதைக்கு!

தமிழ்நாட்டு சினிமா நடிகர்களுக்கு தோன்றும் முதல்வராகும் எண்ணம் மாதிரி, இந்த யூடியூப் ஸ்டார்களுக்கும் தேசியத் தலைவராகும் எண்ணம் வரக் கூடிய அளவுக்கு இந்த யாழ்ப்பாண மண் செழிப்புள்ள வளமான மண்.

'எட்டாம் வகுப்புப் படிச்சவரே தேசியத் தலைவர் எண்டா, எனக்கென்ன குறைச்சல்?' தான்!

யாழ்ப்பாணிகளைத் தலைமை தாங்குவதற்கான தகுதிக்கான bar was already lowered to such a level.

அதுவும் துப்பாக்கி, வாள் போன்ற எதனதும் தேவை இல்லாமல்!

இந்தச் சமூகம் அறநெறி இல்லாத சமூகம் என்று ஏற்னவே அபத்தத்தில் எழுதியிருக்கிறேன். அகழ் மின்னிதழுக்கு அளித்த பேட்டியில் யாழ்ப்பாணம் போன்ற சமூகத்தில் தான் பிரபாகரன் போன்ற தலைவர்கள் தோன்ற முடியும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

இன்றைக்கு இதே சமூகத்தில் இலங்கைப் பாராளுமன்றம் முதல் ஜெனிவா வரைக்கும் ஈழமும் தீர்வும் வாங்கித் தருவதாகச்

சொல்லும் யாழ்ப்பாணி அரசியல்வாதிகளும், மகிந்தவை இனஅழிப்புக் குற்றச்சாட்டில் கழுவேற்றுவோம் என்று கர்ஜிக்கும் கனடியத் 'தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்களும்', தமிழ்நாட்டில் இருந்தே ஈழம் பிடிக்க களம் இறங்க இருக்கும் சீமானும் திருமுருகன் காந்தியும், தேசத்தின் புதல்வியைக் கொண்டு ஜனநாயக ரீதியில் 'அடிச்சுப் பறிக்க' முயலும் புலிவால் கூட்டமும் எந்தத் தயக்கமும் இன்றி கடை விரித்து அரசியல் செய்ய முடிகிறது.

யாரும் எதுவும் கேட்கப் போவதில்லை.

துப்பாக்கியோடு ஒருவர் கிளம்பி நான் தான் தேசியத் தலைவர் என்ற மாதிரி, இப்போது ஒரு கூட்டம் நாங்கள் தான் ஏக பிரதிநிதிகள் என்று கிளம்பியிருக்கிறது.

வேறு எந்தச் சமூகத்திலாவது இவ்வாறான கேலிக்கூத்துக்கள் இடம் பெற்றிருந்தால், அதைக் கேள்வி கேட்க ஒரு சமூகத் தலைமை, நான் சொன்ன சமூக உணர்வுள்ள, பொதுவெளியில் மதிக்கப்படுவோர் முதல் ஊடகங்கள் வரைக்கும், இருந்திருக்கும்.

ஆனால், இந்த யாழ்ப்பாணிச் சமூகத்தில் மட்டும் நான் மேற் சொன்ன அத்தனை பிரிவினருக்கும், பொதுவெளியில் மதிக்கப்படுவோர் என்போர் முதல் ஊடகங்கள் வரைக்கும், முட்டுக் கொடுக்க ஒரு கூட்டம் இருக்கிறது.

இந்தத் தேர்தலை சர்வதேசம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது, தீபாவளிக்குத் தீர்வு, இன அழிப்பு, யுத்தக் குற்றவிசாரணை, 'என் கையில் இந்த நாடு சிக்கிச்சுது', 'அண்ணை உயிரோடு இருக்கிறார்' என்று யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்களின் பின்னும் எந்தக் கேள்வியும் இல்லாமல் இந்தச் சமூகத்தில் முன்பின் தெரியாத ஒருவர் வந்து சொல்லமுடியும். தன்னை ஒரு மக்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக படம் காட்ட முடியும். உண்டியலோடு கிளம்ப முடியும்.

யுத்தங்களின் அழிவின் பின்னால் மீண்டெழுந்து வளர்ந்த எல்லாச் சமூகங்களும் போல, ஏன் யாழ்ப்பாணிச் சமூகத்தினால் தான் தேர்ந்தெடுத்து தோற்றுப் போன பாதையைக் கேள்விக்குள்ளாக்கி புதிய பாதையைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை?

ஏனென்றால், இந்தச் சமூகத்தின் அறநெறி வெறும் பொய்களின் மேல் கட்டப்பட்ட ஒன்று. தானே சொன்ன பொய்யை தானே நம்பி, அதை நம்பாதவர்களைத் துரோகி என்று சொல்கிற சமூகத்திடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இத்தனை வருடங்களின் பின்னாலும், தாங்கள் ஒன்று திரண்டு ஆதரித்த யுத்தம் ஏன் தோற்றுப் போனது என்ற கேள்வியை இந்தச் சமூகம் இன்று வரைக்கும் கேட்டதில்லை.

கேட்டால் அதற்கு விடை என்னவாக இருக்கும் என்பது இந்தச் சமூகத்திற்குத் தெரியும்.

'வான்படை, ஈரூடகப் படை எல்லாம் வைச்சிருந்து, கடைசியில் வெள்ளைக் கொடியோட போன அண்ணை திரும்பி வந்து அப்படி என்னதான் புடுங்குவார்?' என்று இந்தச் சமூகம் இன்றைக்கும் உரத்துக் கேட்டதில்லை. 'சமாந்தர அரசு நடத்தின அவராலேயே புடுங்கி அடுக்க முடியாத எந்தச் சிகையையடா நீங்கள் புடுங்கப் போகிறீர்கள்?' என்று யார் தான் கேட்கப் போகிறார்கள் என்ற நம்பிக்கை மட்டும் தானே இதற்கெல்லாம் மூலதனம்?

யுத்தங்களின் அழிவின் பின்னால் மீண்டெழுந்து வளர்ந்த எல்லாச் சமூகங்களும் போல, ஏன் யாழ்ப்பாணிச் சமூகத்தினால் தான் தேர்ந்தெடுத்து தோற்றுப் போன பாதையைக் கேள்விக்குள்ளாக்கி புதிய பாதையைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை?

ஏனென்றால், இந்தச் சமூகத்தின் அறநெறி வெறும் பொய்களின் மேல் கட்டப்பட்ட ஒன்று. தானே சொன்ன பொய்யை தானே நம்பி, அதை நம்பாதவர்களைத் துரோகி என்று சொல்கிற சமூகத்திடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இத்தனை வருடங்களின் பின்னாலும், தாங்கள் ஒன்று திரண்டு ஆதரித்த யுத்தம் ஏன் தோற்றுப் போனது என்ற கேள்வியை இந்தச் சமூகம் இன்று வரைக்கும் கேட்டதில்லை.

கேட்டால் அதற்கு விடை என்னவாக இருக்கும் என்பது இந்தச் சமூகத்திற்குத் தெரியும். 'எல்லா முட்டைகளையும் ஒரே கூடைக்குள் வைத்து', புலிவாலில் தொங்கிய தங்களின் முட்டாள்தனம் பற்றிய உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டி வரும் என்பதால், துரோகிகள் முதல் சர்வதேசம் வரை சதி செய்ததால் தான் போராட்டம் தோற்றது என்று இன்றைக்கும் கதை சொல்லிக் கொண்டிருக்க வேண்டி இருக்கிறது.

இப்போதும் தாங்கள் சொல்கிற அதே பொய்யை நம்ப வேண்டியிருக்கிறது.

யுத்தம் ஏன் தோற்றது என்ற உண்மை எல்லோருக்கும், யாழ்ப்பாணி அரசியல்வாதிகள் முதல் ஊடகவியலாளர்கள், மற்றும் பிறவி அரசியல் ஆய்வாளர்களான முழுச் சமூகம் வரைக்கும் தெரியும்.

அதைப் பகிரங்கமாகச் சொல்லாமல் பாசாங்கு செய்ய வேண்டியிருக்கிறது. வேறு யார் மீதோ பழி போட வேண்டிக் கிடக்கிறது.

ஒரு சமூகத்திற்கான அறநெறி என்பது சமூகநீதிக்கானதாக இருக்க வேண்டும். அதன் தலைமைக்கு தன் கீழான மக்களின் நலன் பற்றிய பொறுப்பு மட்டுமன்றி, தன் செயற்பாடுகளுக்கான பொறுப்புக் கூறலும் இருக்க வேண்டும்.

சமூக நீதி இல்லாமல், 'மதம், தத்துவங்கள் போன்றவற்றுக்கானவர்களே மக்கள்' என்ற சமூக அறம் ஆப்கானிஸ்தான், ஈரான் போன்று மதத் தலைவர்களையும், சவுதி அரேபியா போன்று அரச குடும்பங்களையும்,

சர்வாதிகார ஆட்சிகள் போன்று அதிகார வர்க்கத்தினரையும் அதிகாரத்தையும் வளங்களையும் ஏகபோகமாக அனுபவிக்கும் நிலைக்கே கொண்டு செல்லும். அது சமூகத்திற்கான முழுமையான பயன்பாட்டைத் தருவதில்லை.

சமூகங்களின் வளர்ச்சியும் தொடர்ச்சியும் உரையாடல்களாலும் விவாதங்களாலும் பன்முகத்தன்மைகளை ஏற்றுக் கொள்வதாலுமே முன்நோக்கி நகர முடியும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் மந்தைக் கூட்டம் போல காலத்திற்குக் காலம் ஒவ்வொரு தலைமைக்குப் பின்னால் அணி திரள்வதைத் தவிர்ந்து, சமூக நீதி, சமூக நலன் பற்றி மனம் திறந்த உரையாடல்ளும் விவாதங்களும் எங்காவது நிகழ்ந்திருக்கிறதா? தியாகி, துரோகி என்ற கறுப்பு வெள்ளை டிஜிட்டல் நிலைக்கு அப்பால் இந்தச் சமூகத்தில் சிந்தனை வளர்ச்சி என்று எதைச் சொல்ல முடியும்? புலிகள் கொன்றொழித்த மாற்றுக் கட்சித் தலைவர்கள், போராளிகள் மட்டுமன்றி, துரோகிகள் பட்டத்திற்கு தமிழ்த்தேசியக்கட்சிகள், புலிகளின் ஆதரவாளர்கள், வால்பிடிகள் கூட விதிவிலக்காக இல்லை.

இன்றைய அரசியல் பொதுவெளியில், யாழ்ப்பாணி எவராலோ துரோகியாக்கப்படாத எந்த ஒரு யாழ்ப்பாணியும் இல்லை. 'வா, தலைவா, வா, வந்து தலைமை தாங்கு' என்று வருந்தியழைத்த தமிழ்த்தேசியத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களே ஆளையாள் துரோகியாக்கி, கடைசியில் இந்தச் சமூகமே அவர்கள் எல்லாரையும் மறந்தும் விட்டது.

தனக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிற பெருமையை வைத்துக் கொண்டு, அதற்கு அப்பால் வளர்ச்சிக்கு இடமோ, தேவையோ வரும் அளவுக்கு, 'எனக்கு என்ன குறைச்சல்?' என்ற பொதுச்சிந்தனை தானே இந்தச் சமூகத்தை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது?

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்த குரங்கு நாங்களே என்று, கூர்ப்பின் உச்சத்தில் இருப்பதாக நினைக்கும் சமூகத்திற்கு வளர்ச்சி என்பதற்கு அப்படி என்ன தேவை இருக்கிறது?

இந்தச் சிந்தனை கொண்ட சமூகத்தினால் ஒரு தலைமையை எப்படித் தேர்ந்தெடுக்க முடியும்?

எல்லோரும் இந்நாட்டின் தேசிக்காய்த் தலையர்களே!

இன்றைக்கு இந்தச் சமூகத்திற்கு தனக்கான ஒரு தலைமையை தெரிவு செய்ய முடியவில்லை. இந்தச் சமூகத்தால் அப்படி ஒரு தலைவரைத் தெரிவு செய்யவும் முடியாது.

அந்த வகையில், நாங்கள் ஒரு சமூகமாகத் தோற்று விட்டோம்.

We failed as a society.

ஒரு சமூகம் தான் தேர்ந்தெடுக்கும் வழியில் தெளிவாக இருக்க வேண்டும். அது சுயநலம் சார்ந்ததாக இல்லாமல், முழுச் சமூகத்தின் நலன் கருதியதாக இருக்க வேண்டும்.

எங்களுக்கு எந்தக் காலத்திலும் அந்த உணர்வு இருந்ததில்லை.

உணர்வு உசுப்பேத்தல்கள் தொடங்கிய அரசியல் காலத்திலிருந்தே எங்கள் அரசியல் ஒரு கோமாளிக் கூத்தாகத் தான் இருந்து வந்திருக்கிறது.

யதார்த்த நிலைமைகள், சாத்தியக் கூறுகள் பற்றி எந்தத் தெளிவும் இல்லாமல், தங்களை மட்டும் புத்திசாலிகளாகவும் உலகில் உள்ள மற்ற எல்லாரையும் முட்டாள்களாகவும், (சிங்களவர்களை மோடையர்களாகவும்) நினைக்கின்ற சிந்தனையும், வேலிச் சண்டைக்கு ஊர்ச்சண்டியனை வாடகைக்கு அமர்த்தும் மனநிலையும் தான் எங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது.

'காசைக் குடுத்தால் சரி, அண்ணை, கனடாவில கொண்டு போய் விடுவார்' என்று ஏஜன்சிக்காரனில் வைத்திருக்கிற அதே நம்பிக்கை தான், 'காசைக் குடுத்தாச் சரி, ஈழம் எடுத்துத் தருவார்' என்று அரசியல்வாதிகள் மீதும் இருக்கிறது. மூன்று மாதத்தில் ஈழம் என்று ஒற்றுமையைக் காட்ட வோட்டுப் போட்டு, முப்பது வருசம் 'அடிச்சுப் பறிப்பார்' என்று அள்ளிக் கொடுத்து, கண்ணைத் திறந்தபடி கௌபீனத்தோடு கிடந்தது தான் எங்கள் அறுவடை.

நாங்கள் அடிச்சு விடுகிற வாய்ப்பேச்சிற்கும், எங்கள் யதார்த்த அரசியல் நிலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

மண்ணில் வாழுகின்றவர்கள் கனடாக் கனவில் இருக்கிறார்கள். மண்ணுக்குத் திரும்பிப் போய் வாழும் நினைப்பே இல்லாத கனடாவாசிகள் மண் மீட்புக் கதையிலும் இன அழிப்புக் கழுவேற்றலிலும் திளைத்துப் போயிருக்கிறார்கள். அவ்வாறான பகல் கனவுகளை வைத்துக் கொண்டே தங்களைத் தமிழ்த்தேசிய உணர்வாளர்களாக நினைத்துக் கொண்டு மற்ற எல்லாரையும் துரோகிகள் ஆக்கலாம்.

தங்களைப் புத்திசாலிகளாகவும் மற்றவர்களை முட்டாள்களாகவும் நினைக்கும் பாரம்பரியப்படிதான் நாடு கடந்த அரசாங்கத்திற்கான தேர்தலை இந்த யாழ்ப்பாணிகள் நடத்தினார்கள். போட்டதே முழுவதும் கள்ள வோட்டு, அது கூடப் பிடிபட்டு விடக் கூடாது என்ற 'யாழ்ப்பாணி மணி மூளையில் உதித்த தந்திரோபாயத்தில்' நூறு வீதம் போடாமல், 99.9 வீத வாக்குகளால் 'ஈழம் தான் முடிஞ்ச முடிவு' என்று சர்வதேசத்திற்குக் காட்டி முடிந்தது. இன்றைக்கு நாடு கடந்த அரசாங்கம் தனது பாராளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கே குடுமிப்பிடிச் சண்டை நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்த இலட்சணத்தில், 'எங்கட ஒற்றுமையைக் காட்ட வேணும்' என்று 'ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர்' முயற்சியில் கிளம்பியிருக்கிறார்கள். ஏற்கனவே குமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் எல்லாம் ஏறி

முடிந்து, உயர்தரப் பரீட்சைக்கு குதிரை ஓடிய கணக்கில் ஆள் மாறாட்டம் செய்தாவது சர்வதேசத்தை கிடுக்கிப் பிடி போட்டு, 'மவனே, இந்த முறை நீ தப்ப முடியாது' என்று இழுத்து வந்து ஈழத்தைப் பெறும் முயற்சி தொடங்கியிருக்கிறது.

பிரபாகரனை நம்பி முடிந்து, கூட்டமைப்பை நம்ப முடியாது என்று அனந்தி, கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் என்று எல்லாம் ஊதிப் பெருப்பித்து, 'எங்கட ஒற்றுமையைக் காட்ட வேணும்' என்று வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பி இந்தச் சமூகம் முக்கித் தானே பார்த்தது?

மகிந்தவிடம் பணத்தை வாங்கி, யதார்த்தவாதி என்று புகழ்மாலை சூடி தேர்தலைப் பகிஷ்கரித்து ரணிலைத் தோற்கடித்து என்ன நடந்தது என்ற வரலாறு கூட இந்தச் சமூகத்திற்கு வழிகாட்டவில்லை. அதே மாதிரி, வாக்கைப் பிரித்து சிங்கள இனவாதிகளை அரசுக் கட்டிலேற்றும் அதே வரலாற்றை மீளச் சுழற்றுவதைத் தவிர இந்த முட்டாள்தனத்திற்கு வேறு என்ன நோக்கம் இருக்கும்?

ஊடகங்கள், அரசியல் ஆய்வாளர்கள் என்ற spin doctors ஓமந்தை முதல் பருத்தித்துறை வரைக்கும் உள்ள யாழ்ப்பாணிகளை மட்டுமல்லாமல் அவுஸ்திரேலியா முதல் கனடா வரைக்கும் உள்ள புலன் பெயர்ந்த கூட்டத்தையும் சுத்தத் தொடங்குவார்கள்.

'எங்கட ஒற்றுமையைச் சர்வதேசத்திற்குக் காட்ட வேணும்.'

சுப்பர் சிங்கர் மாதிரி, 'நான் பதினைஞ்சு வோட் போட்டனான்' என்று கனடிய ரேடியோவில் பகிரங்கமாகவே பெருமிதம் கொள்ளலாம்.

'உங்களைப் புத்திசாலிகள் என்று நினைப்பதில் தப்பில்லை, மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைப்பது தான் தவறு' என்று எப்போதோ இந்தச் சமூகம் பற்றி எழுதியிருக்கிறேன். எத்தனையோ தடவை அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லியும் இருக்கிறேன்.

தமிழர்களுக்கு கூட்டணியும் அதன் பின்னால் பிரபாகரனும் வந்து வாய்ச்ச மாதிரி, எல்லா யாழ்ப்பாணிகளையும் ஒரே கொடியினதும் குடையினதும் கீழ் ஒன்றிணைக்க இன்னொரு தலைவர் வர முடியாது. இன்றைய நிலைமை அப்படி. எவரைத் தலைவராக்கினாலும், தமது பிழைப்புக்கு ஆபத்து என்று அவரைத் துரோகியாக்க பல குறுங்குழுக்கள் இன்றைக்கு இருக்கின்றன. இவற்றை எல்லாம் மீறி, எல்லாரையும் ஒன்றிணைக்க ஒரு தலைமையை உருவாக்கவே முடியாது.

அவ்வாறு ஒருவரைத் தெரிந்தெடுத்தாலும் கூட, அவரைத் துரோகியாக்க ஒரு பேஸ்புக் ஃபேக் ஐடியே போதும்.

ஒரு சமூகமாக இந்த யாழ்ப்பாணிச் சமூகம் தோற்றுப் போய் விட்டது. அது எந்த வகையிலும் இதில் இருந்து மீள் எழும் என்ற எந்த நம்பிக்கையும் எனக்கு இல்லை. அகழ் மின்னிதழுக்கான பேட்டியிலும், மற்ற எழுத்துக்களிலும், 'தமிழ் மக்கள் நலன் சார்ந்து இவர்களால் ஒரு மயிரைக் கூடப் பிடுங்க முடியாது' என்று இன்றைக்கு தமிழ்ச் சமூகத்தில் தலைவர்களாக அறியப்பட்டவர்கள் பற்றிச் சொல்லியிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த யாழ்ப்பாணிச் சமூகம் ஒரு சமூகம் என்ற நிலையில் இருந்து சிதைந்து போய் விட்டது. இன்றைய தமிழ்ச் சமூகம் என்று நாங்கள் எதைக் குறிப்பிட முடியும்?

யாழ்ப்பாணத்திலேயே தமிழ்த்தேசியத்தைத் தூக்கிப் பிடிக்கும் கட்சிகள் பலவாகப் பிரிந்து ஆளுக்காள் துரோகி என்பதுமாக ஒரு பக்கம். ஏற்கனவே கையிருப்பில் உள்ள துரோகிகளின் கட்சிகள் தனிக் கணக்கு. இதை விட, சகல சிங்களக் கட்சிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் கிளைகளும் அமைப்பாளர்களும் உண்டு. எண்பதுகளில் இவர்கள் எல்லாம் கொல்லப்பட்டுத் தான் தமிழ்த் தேசியம் வளர்ந்தது என்பது பெரும் முரண் நகை. இடையில் ஆளும் கட்சிக்கு அமைப்பாளராகவும் தமிழ்த் தேசியத்துக்கு உணர்வாளர்களாகவும் இருந்த அர்த்தநாரீஸ்வரர்கள் மண்ணெண்ணெய் மகேஸ்வரனில் தொடங்கி விஜயகலா மகேஸ்வரன் வரை இருந்தார்கள். இப்போது அந்தச் சிரமங்கள் இல்லாதபடிக்கு யாழ்ப்பாணத்தில் சிங்களக் கட்சிகள் மாநாடுகள் நடத்தும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

இதற்குள் யாழ்ப்பாணியின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை ஏதாவது தேர்தலில் தான் கண்டு கொள்ள முடியும் என்றளவில், நேர்மையாகக் கருத்துக் கணிப்புக் கணிப்புகள் எடுக்க ஊடகங்களோ, பல்கலைக்கழகங்களோ இல்லை.

இது யாழ்ப்பாணத்து நிலை.

இதற்குள் புலன் பெயர்ந்தவர்களில் மாவீரர் தினத்தை வைத்து உண்டியல் குலுக்குவோர், இன அழிப்பை வைத்து வாக்குப் பிச்சை கேட்போர் என இன்னொரு கூட்டம். வீதியை மறித்துக் கொடி பிடித்து, முள்ளிவாய்க்கால் கஞ்சி குடித்து, காட்டிய இடத்தில் குத்தி, மாவீரர் தினத்தில் விளக்குக் கொளுத்தி கொத்துரொட்டி சாப்பிட்டு தேசியக் கடமையை முடிக்கும் புலன் பெயர்ந்த கூட்டம்.

இதற்குள் 'எங்கட ஒற்றுமையைக் காட்ட வேணும்' என்று இப்படி தேர்தலில் நின்று மூக்குடைபட்டு, சர்வதேசத்தின் முன்னால் மட்டுமலல, 'மோட்டுச் சிங்களவன்' என்று பெருமையோடும் இழிவோடும் சொல்கிற சிங்கள சமூகத்தின் முன்னால் மொக்கயீனப்பட்டு நிற்கப் போகிறது இந்தச் சமூகம்.

தன்னைப் 'படிச்ச யாழ்ப்பாணம்' என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்த முழுச் சமூகமும் முட்டாள்களாக இருப்பது பிரச்சனை இல்லை. சர்வதேசமே பார்த்துச் சிரிக்கும் அளவுக்கு இப்படிக் கேலிக்கூத்துக்கள் செய்யும் கோமாளிகளாகவா இருக்க

வேண்டும்?

இந்த யாழ்ப்பாணச் சமூகம் இதை விட வேறென்ன கேவலத்தைக் காண வேண்டியிருக்கிறது?

இன்றைக்கு இந்தச் சமூகமும் அதன் தலைமைகளும் இவ்வாறான வங்குரோத்து நிலையில் தான் இருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் பிழைப்பு நடத்தும் அயோக்கியர்களுக்கு என்றைக்குமே கொண்டாட்டம்.

நான் அடிக்கடி சொல்வது போல, முட்டாள்களுக்கு அயோக்கியர்களே தலைவர்கள்.

வைரவருக்கு வந்து வாய்ச்ச நாய் மாதிரி!

தமிழர்களுக்கு கூட்டணியும் அதன் பின்னால் பிரபாகரனும் வந்து வாய்ச்ச மாதிரி, எல்லா யாழ்ப்பாணிகளையும் ஒரே கொடியினதும் குடையினதும் கீழ் ஒன்றிணைக்க இன்னொரு தலைவர் வர முடியாது. இன்றைய நிலைமை அப்படி. எவரைத் தலைவராக்கினாலும், தமது பிழைப்புக்கு ஆபத்து என்று அவரைத் துரோகியாக்க பல குறுங்குழுக்கள் இன்றைக்கு இருக்கின்றன. இவற்றை எல்லாம் மீறி, எல்லாரையும் ஒன்றிணைக்க ஒரு தலைமையை உருவாக்கவே முடியாது.

அவ்வாறு ஒருவரைத் தெரிந்தெடுத்தாலும் கூட, அவரைத் துரோகியாக்க ஒரு பேஸ்புக் ஃபேக் ஐடியே போதும், மீதி மந்தைக் கூட்டமும் கோரஸ் பாடும். ஒரு சமூகமாக தான் தோற்றுப் போய் விட்டேன் என்பது கூட இந்தச் சமூகத்திற்குப் புரியவில்லை. முழு உலகின் கண் முன்னால் அவலமாய் அழிந்த, இத்தனைஅழிவின் பின்னாலும், இந்தச் சமூகம் ஒரு தோற்றுப் போன தலைவனைக் கொண்டாடிக் கொண்டு, தோற்றுப் போன தத்துவத்தை இன்றைக்கும் கொண்டோடிக் கொண்டிருக்கும் காரணம் என்ன?

தான் சமூகமாகத் தோற்றுப் போய் விட்டேன் என்ற அப்பட்டமான உண்மையை ஏற்றுக் கொள்ள மறுப்பது தான். அவ்வாறு ஏற்றுக் கொண்டால், அந்தத் தோல்விக்கான காரணம், தான் மட்டும் தான், வேறு யாரும் இல்லை என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டி வரும்.

அதை இந்தச் சமூகம் செய்யப் போவதில்லை. கடைசி வரைக்கும், தன் மீது எந்தக் குற்றமும் இல்லை, இதற்கு மற்றவர்களே காரணம் என்ற பொய்யைச் சொல்லி, அதையே நம்பிக் கொண்டிருக்கப் போகிறது.

இந்தச் சமூகம் பற்றி எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. சில நேரங்களில் யுத்தத்திற்குள் இருந்தவர்களும், யுத்தத்தைக் காரணம் காட்டி புலன் பெயர்ந்தவர்களும் உள்ள தலைமுறை அழிந்த பின்னால், புதிய தலைமுறைக்கு தேவைகளும் தெரிவுகளும் வேறானவையாக இருக்கும். சில நேரம் அந்தத் தலைமுறை ஏதோ வகையில் சிந்தனை வளர்ச்சியடைந்து தனது பாதையைத் தெரிந்து கொள்ளக் கூடும். அது கூட இந்தத் தலைமுறை ஊட்டி வளர்க்கும் நஞ்சினால் விமோசனம் பெறுவதற்கான சாத்தியங்கள் குறைவு என்றே தெரிகிறது.

இந்தச் சமூகம் ஈடேற வேண்டும் என்றால், தான் தோற்றுப் போய் விட்டேன் என்ற உண்மையை உணர்ந்து, அதற்கான காரணங்களைத் தேடத் தொடங்க வேண்டும்.

தன் சமூகத்தை சமூக நீதியுடன் கூடிய அறத்தின் மேல் கட்டியெழுப்ப வேண்டும். பன்முகத்தன்மையை ஏற்றுக் கொண்ட உரையாடல்கள், விவாதங்கள் மூலமாகத் தான் தனது பாதையைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

அப்போது தான் அதன் வளர்ச்சியும் தொடர்ச்சியும் உறுதி செய்யப்படும்.

இந்தச் சமூகம் அன்றைய உணர்ச்சி உசுப்பேத்தல் அரசியலையும், வெற்றுக் கோஷங்களையும் இன்றைய பொங்குதமிழாகத் தொடருமாயின் சமூகமாக அதன் இருப்பு (existence) என்பதே முழுமையாக இல்லாமல் போய் விடும்.

இந்தச் சமூகம் வளர்ச்சியும் தொடர்ச்சியும் அடைவது ஒருபுறம் கிடைக்கட்டும். இந்தச் சமூகத்தின் இருப்பே இன்றைக்குக் கேள்விக்குறியாகியிருக்கிறது.

இந்தச் சமூகம் யுத்தத்தின் பின்னாலும், இத்தனை தலையாரிகள் இருந்தும், இவ்வளவு கேவலமான நிலைக்கு வந்திருப்பதற்குக் காரணம், இந்தச் சமூகத்தை வாயைத் திறக்க விட்டது தான்.

இந்தச் சமூகத்தின் இன்றைய தேவை, வாயைத் திறந்தால் வாய்க்குள் வைப்பதற்கு ஒரு தேசியத் தலைவர்.

அடிப்படை மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கும் தகுதி உள்ள சமூகமாக இல்லாமல், ஒரு துப்பாக்கிதாரியின் முன்னால், கொட்டாவியும், புளிச்சல் ஏவறையும் விடக் கூட வாயைத் திறக்க முடியாமல், வாயைப் பொத்திக் கொண்டிருக்கத் தான் இந்தச் சமூகம் லாயக்கு.

இந்தச் சமூகம் ஒரு சமூகமாக தனது இருப்பை உறுதி செய்து கொள்ள அவ்வாறான ஒரு தலைமை தான் இன்றைக்கு அவசியமும் அவசரமும்.

எனவே, பிரபாகரன் எங்கிருந்தாலும், உடனடியாக மேடைக்கு வரவும்.

(ஆனால், வந்தால் பிண அரசியலைப் பிழைப்பாகக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டமே தனது பிழைப்பில் மண்ணைப் போட வந்த கோபத்தில், பிரபாகரனை மண்டையில் போடாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் வழங்கமுடியாது.

யாரோ எவரோ எங்கோ விளக்குக் கொளுத்தியதால் ஆன்மா சாந்தியடைந்திருந்தால், வராமல் இருப்பதே அவருக்கு நலமாக இருக்கும். இரண்டாவது முறையும் தன்னுடையவர்களாலேயே மண்டை பிளக்கப்படுவது எங்களுக்கே பார்க்க நன்றாக இருக்காது.) அ


Life doesn't always give a
#SecondChance.
Insure yourself. Secure your family.
647-868-6475
RAVI
PONNUDURAI
Life Insurance
is your family's umbrella
to life's unexpected showers
647-868-6475

அதிகாரம் 10



# 'ஒரு ஏதோ..!'

## அங்கும் இங்கும், எங்கும் ஒரு Novel

அங்கு

குட்டி ஓலாவின் ஊரிலான 'போராட்டம்' கிட்ட மட்ட அந்த 'தொங்கா தக்கடை அல்லது தங்கா தற்கொடை' கதை மாதிரிப் போயிற்று. மேற்படி தலைப்பில் முன்னொருகால் எழுதப்பட்டிருந்த சுக்குட்டிக்கதை மாதிரிப் போயிற்று. தக்கடை என்கிற அளவு கோலில் இருபுறமும் தட்டுக்கள் கொண்ட தராசு மாதிரி கு. ஓலாவின் போராட்டம் சமனப்படுத்தப் பட்டதாக இருந்திருக்கவில்லை. ஏற்ற இறக்கங்கள் அமந்தறையாக ஏறி இறங்கின. ஏறி இறங்காத உலகு இல்லை.

சும்மா பேருக்கு ஊரெல்லாம் நீதி தேவதை என்று கிரேக்க நீதியின் இறைவி, Themis இன் சிலைகளை எழுப்பினாலும் நீதிமன்றுகளில் உருபுகளை தொங்க விட்டாலும் அது நீதி தராது. கண்ணைக்கட்டி கையில் நீள் வாளும் தக்கடையும் வைத்திருக்கும் பெண் கடவுளின் அம்மாக்காரி, Gaea இப்பூமிக்குப் பொறுப்பான கடவுளி என்பது இன்னும் முரண் (அ) நீதி. தேமிஸின் கையில் இருக்கும் தராசு பல இடத்து சிற்பங்களில் ஏறி இறங்கியே இருக்கும். அதுவும் உலகநீதி எல்லோர்க்கும் சமானமல்லதென்று சொல்லுமாக்கும். தவிரவும், கோதாரி, தேவதைக்கடவுள் 'மனுஷி' பற்பல இடங்களில் வாளையும் தராசையும் வலது இடது கைகளில் மாறி மாறி வைத்திருப்பதும் உண்டு;!!!

இந்த சில்லெடுப்புகளால் தானாக்கும், லோகத்தின் எந்தப் போராட்டங்களிலும் நீதியின் ஏற்ற-இறக்க-வலது-இடது கோதாரி உண்டு.

குட்டி ஓலாவின் ஊர்ப்போராட்டமும் இப்படித்தான். உடைந்த தக்கடையாக இருந்தது.

ஓலாவின் கதையும் அந்த ஏலவே சொல்லப்பட்ட சுக்குட்டிக்கதையும் சில பல வித்தியாசங்களும் மாற்றங்களும் இருப்பினும் ஒன்றுதான்.

**சிறினோ சிறி சிறிசு**

அந்த ‘தொங்கா தக்கடை அல்லது தங்கா தற்கொடை‘ சுக்குட்டிக்கதையின் சுருக்கம் (சிலவேளைகளில் உள்ளபடியேயும் விரித்தும்) கீழ்க்கண்டவாறு

ஆமைக்கறி தேத்தலைவருக்கு மிகவும் இஸ்டமென்பதால், அதுதான் அவனது தே.த. உடனான கடைசிச்சாப்பாட்டின் பிரதானமான பாகமாக இருந்தது. ஆவெண்ணரங்கால் கேணல் சூக்கான் சண்டையில் புலி மாதிரி சமையலிலும் புலி. அவனே கடைசிச்சாப்பாட்டின் சமையலாளி. தேத்தலைவரும் ருஸியாக சமைப்பதிலும் சுவைத்து சாப்பிடுவதிலும் கில்லாடி என்பது யாபேரும் அறிந்த பேருண்மையாம். அவனுக்கு ஆமைக்கறி எப்பனும் பிடிக்காது. ஆமையுடன் கறி வரும் சொல்லே பிடிக்காது. ஆனால், ஆமையை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

ஓடு கீழாய் வயிறு மேலாய் புரட்டிப் போட்டு துடிக்கத் துடிக்க ஓட்டு விளிம்பில் கோரமாய் கூர்க்கத்தியைப் பாய்ச்சி, இறைச்சி வறுகுவதை நினைத்தாலே அவனுக்கு அழுகையும் வாந்தியும் சேர்ந்து வரும். உலகிலேயே அதிக காலம் வாழும் பிராணியை கொடுமையாய் கொன்று தின்பதையோ, அந்த கறியையோ அவனால் ஜீரணிக்க முடியாது.

முயல் இறைச்சி, உடுப்புக்கறி, என்று கேணல் ஆகிய கொலொனெல்லோ தீப்பான் சொன்ன விவகாரங்களையும் அவன் விரும்பவில்லை. ஒட்டு மொத்தமாக இறுதிச்சாப்பாட்டுக்கு இறைச்சியே வேண்டாம், ‘மீன், றால், கணவாய், நண்டு விளையாட்டைக் காட்டு,‘ என்றார் தேத்தலைவர் ஈற்றில்.

மக்களுக்கு துரோகம் செய்யும் ‘ஒட்டுண்ணிக்‘ குழுத்தலைவர் என்று அவர்கள் சொன்ன ஆளைக் கொல்வதற்காக பொருத்தப்பட்ட தற்கொலை அங்கியின் உதிரிப்பாகங்கள் சில வடகொறியாவில் செய்யப்பட்டவை.

அவனே குண்டங்கியை உடலில் பொருத்தி, போய் வெடித்துக் கொல்ல பொருத்தமானவன், என்பதை முடிவு செய்தவர் போட்டாமான். போட்டாமான் உத்தரவு போட்டால் போட்டதுதான். அப்பீல் இல்லை. முகாம் தாக்குதலுக்கு போனபோது, சுட்டு எதிரியின் மண்டையைப் பிளவெடா, என்றால் பாதத்தில் ஜேசு கணியத்துக்கு ஆணியடித்து விட்டது மாதிரி வந்த அலுவலை மறந்து போய் குத்தி மரமாய் நிற்கிறான். (ஜேசுவிற்கு மரச்சிலுவையில் பாதங்களைச் சேர்த்து ஆணி அறைந்தது. அவனுக்கு குத்தி மரத்தை நிலத்தில் போட்டு அறைந்தது மாதிரி.) அலுவலானது கொல்லுவதான அலுவல். கொல்லலுவல் அவனுக்கு சரியான வராது என்றபடியால் வெடித்து, கொன்று, சா, என போ.ஆமான் சாபமும் சா பரமும் அளித்தார். ஆனால், அவனுக்கு சாக விருப்பமில்லை. அதுவும் வெடித்துச் சிதறிச் சாவதென்றால்??!! வாஸ்தவத்தில், அவன் அவர்களது அமைப்பில் இணையாமல் ஒளித்தோடியே திரிந்தான்.

பொருத்துவதை லெபனானில் பழகிய பொருத்துக்கார போராளியும் முன்னொரு முறை பொருத்தும்போது போய் விட்டானாகிலும் இப்போ பொருத்துவதற்கு பலர் இருந்தனர். இந்த.லெபனான் பயிற்சிக் கியாதி ஒரு பெரீய்ய்ய புஸ்வாணம். நியாயமோ அல்லவோ சன விடுதலைக்கு போராடுகிறோம் என்கிற எல்லா அழிவுக்குழுக்களுமே பிற இடங்களிலான இவ்வாறான கத்துக்குட்டி குழுக்களை இழுப்பது சரிதம். இழுபட்ட பலர் இழுத்தவர்களின் சண்டையில் செத்ததும் உண்டு. இழுப்பவர்களின் நோக்கங்களில் முக்கியமானது இதுவும். இழுப்பவர்கள், இழுபடும் தம் பிரச்சினைகளில் உலகளாவிய போராளிக்குழுக்கள் தம்முடன் இணைந்திருக்கிறார்கள், என்று புளுகுவதை பிரதான இலக்காகக் கொள்வதும் சகஜம். இழுபட்டவர்கள், ஏதோ பெரு சாதனை செய்ததாக போலித்து பிறகு வந்த அடிபாடுகளில் செத்ததுங்கூட சகஜம். இந்த இழுபாடுகள், ஏதோ ப்ரம்ம்ம்மாண்டமான வரலாற்றுச் சாதனைகளாக சனம் கொண்டாடுவது அபத்திலும் படபத்தம். இந்தப் பயிற்சிகள் அழிவுக்கும் புளுகலுக்குமே அமந்தறையாய் உதவின.

அவனே குண்டங்கியை உடலில் பொருத்தி, போய் வெடித்துக் கொல்ல பொருத்தமானவன், என்பதை முடிவு செய்தவர் போட்டாமான். போட்டாமான் உத்தரவு போட்டால் போட்டதுதான். அப்பீல் இல்லை. முகாம் தாக்குதலுக்கு போனபோது, சுட்டு எதிரியின் மண்டையைப் பிளவெடா, என்றால் பாதத்தில் ஜேசு கணியத்துக்கு ஆணியடித்து விட்டது மாதிரி வந்த அலுவலை மறந்து போய் குத்தி மரமாய் நிற்கிறான். (ஜேசுவிற்கு மரச்சிலுவையில் பாதங்களைச் சேர்த்து ஆணி அறைந்தது. அவனுக்கு குத்தி மரத்தை நிலத்தில் போட்டு அறைந்தது மாதிரி.) அலுவலானது கொல்லுவதான அலுவல். கொல்லலுவல் அவனுக்கு சரியான வராது என்றபடியால் வெடித்து, கொன்று, சா, என போ.ஆமான் சாபமும் சா பரமும் அளித்தார். ஆனால், அவனுக்கு சாக விருப்பமில்லை. அதுவும் வெடித்துச் சிதறிச் சாவதென்றால்?! வாஸ்தவத்தில், அவன் அவர்களது அமைப்பில் இணையாமல் ஒளித்தோடியே திரிந்தான்.

பிடிபட்டதிலிருந்து எல்லாமே துவக்கு முனையில் நடந்த சங்கதிகள். சின்னப்பையனான அவனை குளறக் குளறத்தான் இழுத்து வந்திருந்தார்கள். இரண்டு பேர், ஒன்று ஒளித்த, மற்றது ஒளியாத துவக்குகளுடன் வந்து, தேத்தலைவரின் மாவீர மாபெரிய கொள்கைப் பிரகடனமான ‘குடும்பத்துக்கொரு போராளி‘

என்பதை பிரகடனித்து வலுக்கட்டாயமாக வாவென்று வெருட்டிய சாவிருத்தத்தில் வெருண்டு, தலை மறைத்துத் திரிந்து, இறுதியில் மரவள்ளிக் கூடலுக்குள் ஒளிகையில் மாட்டுப்பட்டு, ஒன்பது வருஷங்களாகிறது.

துவக்குதாரிகள், கழுத்தாங் குத்தியில் கை வைத்து இறுக்கி இழுத்தபோது, 'ஐயோ, என்ரை பிள்ளை பாலகன் மாதிரியெடா, அவனை விடுங்கோடா பாதகர்களே;!!' என்று அவனது தாயார் கதறுவது மாதிரி அவன் செவியுள் கரும்பேய்த் தீக்கொழுந்துகள் ஜுவாலித்தன. அந்த ஜுவாலைகள் எப்போதுமே எரிந்தபடியே இருந்தன. அவை வெளியில் மூசி காதுச்சோணைகளில் நாட்டுவதும் உண்டு.

போட்டாமானின் ஆட்கள் தான் கட்டாய ஆட்சேர்க்கையின் முன்கள வீரவான்கள். 'சண்டைக்கு சனம் காணாது. சும்மா கேட்டால் வராது. பிடித்து கடத்து,' என்ற இராணுவத் தத்துவம் போட்டாமானின் மூளையில் உதித்ததாகவே தளபதிகள் பேசிக்கொள்வார்கள். அவனை சில முன்னணி சண்டைக் களங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். தளபதி சூரணம் தலைமையில் நடந்த பல தாக்குதல்களில் பங்கு பற்றி இரு தடவை பலமாய் காயப்பட்டுமிருக்கிறான். கொல்ல, மண்டை சிதறடிக்கவென்று சண்டைக்கனுப்பினால், நிலத்தில் பாட்டறியப் போடப்பட்ட மரக்குத்தியில் பாதம் ஆணியறையப்பட்ட விருத்தத்தில் மருண்டு கொண்டு சிலையாக நின்றால் காயம் வராதென்ன செய்யும்..?!

பானை இறக்கு தாக்குதலில் முட்டாள்தனமாக முன்னேறிய அவனுக்கு அருகில் விழுந்து வெடித்த குண்டொன்றின் அதிர்வால் தூக்கி வீசப்பட்டபோது, தான் செத்து விடுவேனென்றுதான் நினைத்தான். மூன்று மாதம் ஓய்வெடுத்து காயங்கள் விழுப்புண்களென்று, கண்ட நின்ற இடங்களிளெல்லாம் விதந்து, வியந்து புளுகப்படுகிற விருத்தத்துக்கு வடுக்களான பின் கோணலாற்றுச் சண்டைக்கு அனுப்பினார்கள். அங்கும் அரும்பொட்டில் தான் தப்பினான். இப்போ, தற்கொலை அங்கி பொருத்தி உடல் வெடித்து கொலை செய்து, சாக அனுப்புகிறார்கள். அவனுக்கு சாக விருப்பமில்லை.

குண்டு கட்டிச்சாகத்தான் வேண்டுமென்றால் அதற்கு முன் ஒரு தடவையாவது சாராயம் குடித்து விட்டு, பிறகு சாகலாம் என்று நினைத்தான். உஞ்சர் கடை விநாசியர் சாராயமும் பிளேன் சோடாவும் கலந்த போத்தலை ரகசியமாக தருவதாக சொல்லிருந்தார். அதற்கு முன், 'நீ இயக்கமெல்லே எடாம்பி..?' என்று கேட்டார். 'ஓமண்ணை,' 'இயக்கம் குடிக்கிறேல்லையெல்லோ..!!' 'ஆர் சொன்னது..??' வினாசியர் வேறேதும் வினவவில்லை.

ஒரு முறையாவது தண்ணி அடிக்க வேண்டும், என்ற விருப்பம் இருந்தது அவனுக்கு. நீண்ட நாள் ஆசை.

குண்டு கட்டிச்சாகத்தான் வேண்டுமென்றால் அதற்கு முன் ஒரு தடவையாவது சாராயம் குடித்து விட்டு, பிறகு சாகலாம் என்று நினைத்தான். உஞ்சர் கடை விநாசியர் சாராயமும் பிளேன் சோடாவும் கலந்த போத்தலை ரகசியமாக தருவதாக சொல்லிருந்தார். அதற்கு முன், 'நீ இயக்கமெல்லே எடாம்பி..?' என்று கேட்டார். 'ஓமண்ணை,' 'இயக்கம் குடிக்கிறேல்லையெல்லோ..!!' 'ஆர் சொன்னது..??' வினாசியர் வேறேதும் வினவவில்லை.

ஆவெண்ணரங்கால் கேணல் சூக்கானின் சமையல் சுப்பராயிருந்ததாக தேத்தலைவர் சுவைத்துச் சாப்பிட்டார். அவனுக்கு இறங்குவதாக இல்லை. சாராயம் அடிக்க வேண்டும் என்பதும் நாளைக்கு சாகவேண்டும் என்பதுமே மண்டை முனையில் ஏறியிருந்தது. எப்படியான வகையில் செயற்பட்டு எப்படிச்சாக வேண்டும் என்பது பற்றியெல்லாம் போட்டாமான் ஏற்கனவே துல்லியமாக பலமுறை விளக்கியிருந்தார். ஆனால், அவனோ எப்படியும் சாவதில்லை என்று முடிவெடுத்தான். சாப்பிட்டபின் தேத்தலைவருடன் படம் எடுத்தார்கள். பிறகு, முகாமிக்குப்போய் தங்கியபின் நாளை சாகலாம், என்று அனுப்பி வைத்தார்கள். அப்போது போட்டாமானும் அங்கிருந்தார். சொன்னபடி, உஞ்சர் கடை வினாசியர் சாராயப்போத்தலை ரகஸ்யமாகக் கொடுத்தார்.

அவன் பைசிக்கிளை எடுத்துக்கொண்டு முகாமிலிருந்து வெளியேறி தூரவாக இருந்த பெரியத்தையின் ஊருக்குப் போனான். ஊர்க்கோடி புதரடி ஆலமர இருளில் பாறாங்கல் ஒன்றில் குந்தியிருந்து அரைப்போத்தல் சாராயக் கலவையை முழுதாகக் குடித்து, வாந்தி எடுத்து, மண்டைக்குள் உலகம் செத்து, விழுந்து கிடந்து, காலை பெரியத்தை வீட்டு சாமியறையில் விழித்தான். பிறகு, எல்லாமே வேகமாய் நடந்தேறின. மாறுவேஷம் போட்டு, போட்டாமானின் முன்னணி வேவு வீரர்களுக்கு தண்ணி காட்டி, தலைப்பட்டினம் வந்து, வெளிநாடும் வந்தாயிற்று.

அவன் குட்டி ஒலா. இந்தக் கதையை இவனுக்கு அவன் சொன்னான். இவன்,- இவண்.

இங்கு (அ)

அரக்கப்பரக்க ஓடி வந்தார்கள், குட்டி விலாவும் ஒலாவும். முதலில், கோதாரி, அழைப்பு மணியை அழுத்தி வெளுவெளென்று வெளுத்திருக்கிறார்கள். கேட்க வில்லை. அதற்கும் முந்தைய தொலை, செல்பேசி கூப்பிடுகை வெளுவையில் வரவேற்பறை தளத்தை துப்புரவு தூசுறிஞ்சியான vacuum cleaner

ஆல் செதுக்கியபோது பேசிகளின் ஒலி தின்னப்பட்டிருக்கலாம். இரண்டாவதாக, கணக்காக, குசினியில் இரவு மீளவும் வரவிருக்கும் உஸோமியை இன்னொரு முறை பிரமிப்பில் ஆழ்த்த,- பொரித்தாச்சி சிறு பொரிப்புக்காக நான்கு beef filet mignon மெது குற்றி துண்டங்களை புறம்பாக எடுத்து வைத்தபின், மீதியை துண்டக கீலங்களாக வெட்டி, அதனுடன், மிக அரிதான சிறு குறு அளவில் எழுந்து குறுணிக் கும்பல் பற்றையாக படரும் இள மஞ்சல் நிற, honey mushroom குறு குடை காளான்களையும் மூன்று நிறங்களில் விழி குத்தும் மணி வடிவ பெரு மிளகாய் ஜூலியன் கீறுகளையும் சேர்த்து sauté செய்தபோது, இயக்கிய hood exhaust இன் மெல்லுறுமலில் கேட்காது விட்டிருக்கலாம். எடுப்பெடுக்கவென்று, சமையலில் கிலாரடிக்கும் புதுமைகளையும் உலக மூலைகளின் புதின சமைப்பு சமாச்சார விவகாரங்களையும் உச்சமான கவிதைக்கற்பனை ஆழ் நுண்ணுணர்வுடன் யாக்கப்படும் படைப்பின் நடு நேர்த்தி கொண்ட ஆற்றலுடன் நளபாகிக்கும் திறமை உண்டு.

மென்மையான குறு குத்தி மாட்டிறைச்சி துண்டுகளை கொஞ்சமானபடுசூட்டு எண்ணெயில் சடுக்கென்று எரி-பொரி செய்து, சும்மா வெறுமையாய் கட்டிப்பால் கட்டியாக பரிமாறுகையின் போது உண்டால், வெறுமையான வியர்த்த பாத வெடுக்கடிக்கும் gorgonzola cheese ஐ உருக்கி apple brandy. Calvados பாய்ச்சி தீச்சுவாலை கிளப்பினால் தூக்கி எறிந்து உஸோமியை நாப்பரப்பு பரபரப்பில் எறிந்து தூக்கும். இதற்கு முன், ஆரம்பிக்கையாக கடலுணவு, உருளைக்கிழங்குப்பசை சூழ்ந்த பிறெஞ்ச் யம்மியம்மி, conquilles St-Jacque தயாரித்திருந்தான். இத்துடன் இறுதி இனிப்பு பண்டத்துக்கு மூன்றடுக்கு strawberry cheese cake வாங்கி வைத்திருந்தான். ஸ்றோபெர்றியும் ஷம்பெயினும் எதிர்ப்பால் காதல், காம உறவின் உச்சவுயர் படாடோப கிலாரடிப்பின் குறியீடுகளாக பார்க்கப்படும். கேக் செய்து போறணையில் சூழ்வேகிப்பது நேரம் பிடிக்கும் அலுவல்.

இதென்ன கோதாரியென்று விரைந்து நடந்து திறக்க, மூஞ்சியில் மணிகளாய் வியர்த்தபடி விலா: ஓலாக்கள் பதற்றப் பிரசன்னமாகினர். இவணது முகத்திலும் வியர்வை வரிகள். அது உஸோமியை பிரமிக்க வைக்க முக்கிய சமையல் சூட்டால் வந்தது.
'அம்பிகை அக்கா உங்களிட்டை வர எண்டு, சூட்கேஸுடன் வந்திருக்கிறா. இப்ப எங்கடை வீட்டிலை விட்டிட்டு வந்திருக்கிறம். உடனே வாங்கோ'.

இவற்றோடு, அவளுக்கு வெள்ளை வைனும் இவணுக்கு சிவப்பும். இது இன்னும் பபரபரப்பை பரபாரமாய் தூக்கும். எகிறி எம்பும் துதிக்கை பாரமாயும் பாரமில்லாதது மாதிரியும் எம்மி எகிறி, பிளிறி, பீறிடும் மதன அலுவலுக்குங்கூட படுந்துதலாக சூடெறியும். மதன தாப உந்திக்கு,- காண்டாமிருக கொம்பு, புலிப்பால். பல், மலைப்பாம்பு மூத்திரம், திமிங்கல தோல் பட்டை, pangolin செதில், நீல நிறக் குளிகை போன்றன தான் வாகடப்படியும் விஞ்ஞானத்துக்கு வாகான படிப்பு படியும் வாகானவையாக இருக்க வேண்டுமென்று கிடையாது. உள் உறுத்திக் கிளப்பும் உள்ளுடன்களைக் கொண்ட நல் நளபாகமும் கிலாரடித்து கிளரச் செய்யும்.

இந்த குஸாலான தீவிர திட்டங்களை நிறைவேற்றவென்று அமளியாக முக்கியபோதுதான் விலாவும் ஓலாவும் பதைத்தபடி ஓடி வந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் முகப்பு மணியை அடித்தும் பதிலில்லாததால் தொம்மு தொப்பென்று வாசல் கதவில் குத்தியபோது மட்டுந்தான் இவனுக்கு கேட்டிருந்தது. இதென்ன கோதாரியென்று விரைந்து நடந்து திறக்க, மூஞ்சியில் மணிகளாய் வியர்த்தபடி விலா-ஓலாக்கள் பதற்றப் பிரசன்னமாகினர். இவணது முகத்திலும் வியர்வை வரிகள். அது உஸோமியை பிரமிக்க வைக்க முக்கிய சமையல் சூட்டால் வந்தது.

'அம்பிகை அக்கா உங்களிட்டை வர எண்டு, சூட்கேஸுடன் வந்திருக்கிறா. இப்ப எங்கடை வீட்டிலை விட்டிட்டு வந்திருக்கிறம். உடனே வாங்கோ'.

இங்கு (ஆ) தொடர்

இவணுக்கு தெரியாமல் நிறைய்ய்ய சமாச்சாரங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். இடையில்! கையில் கொழுக்கி இல்லாத போது, துளை போடும் கருவியோ, துளையோ கூட இல்லாதபோது, துளைக்குள் கொழுவி கொழுவுப்படும் மாதிரியோ அல்லது சந்தர்ப்ப பொருந்துகை கருதி நாயும் வர உறியும் அறுந்து விழுந்தாற்போலோ விவகாரங்கள் நடந்தேறியிருக்க வேண்டும். உலகம் மாமூல் படி சுழன்று நாளாந்த நாட்கள் வழமைபோல இருபத்து நான்கு மணிகள் கடந்து, கடக்கிற போது இடை விஷயங்கள் பல எண்ணப்படாமலேயே கடந்து விடும். நினையாப் பிரகாரமாய் எண்ணாதது தெரிய வருகிறபோது ஆச்சர்யங்கள் படுவாய் பிளந்து கொட்டும். மன சுய விரக்தியும் விரவும்.

பல்வேறுபட்ட காரணங்கள் கருதி, பெயர், இலக்கம் தெரியாத தொலைபேசி அழைப்புகளை இவண் போன சில நாட்களாக புறக்கணித்த போதுதான் 'அம்பிகை அக்கா' தவறியிருக்க வேண்டும். அ. அக்காவின் அழைப்பு தவறுண்டிருக்க வேண்டும். எவ்வளவு பாரிய விஷயமது..?!

இந்த பல்வேறுபட்ட காரணிகளில் அதி முதன்மையானது, இந்த இள எடுப்பு வனப்பு கிளப்பல் ஸ்திரீ Chloé பற்றியது. குளோ (Chloe) என்கிற குளோஏ (Chloé) உஸோமியின் அதியிலும் அதிக நெருக்கத்திலும் நெருக்கமான நண்பிப்பெட்டை.

என்ன கோதாரியோ, என்ன விருத்தத்தில் இப்போது அவள்-இவளுக்கிடையான உறவு கிடக்கிறதோ, இவள் என்ன

நினைத்துக் கொண்டிருக்கிறாளோ, இவளுக்கு என்ன வேண்டுமோ, என்ன பிசகோ, பிசக்கோ,- இந்த இவள்-குளோஏ,- நளிசலாக, நசுவலாகவெல்லாம், நள் நளினமான விருத்தத்துக்கு தொடர்ந்து இவனை தொலைபேசியில் கசக்கு பிசக்கென்று, கசக்குப்பிசக்காக நோண்டத் துவங்கியிருந்தாள். அது புதிது. என்ன கோதாரியோ அல்லது ஏதாவது வகை விரசமோவென்று புரியாத புதிது. பெண்டுக்கதைகளில் குதிரை, நாய், மாடு, பன்றி, கொறில்லா, யானை யாவும் வருவன தான். யானை வந்திருக்கலாம். என்ன மாதிரியான யானையென்று தெரியவே தெரியாது. என்ன மாதிரியான யானையாய் இருந்தாலென்ன..?! பிளிற எந்த குறியுமில்லை. ஏதேதோ காரணுங்களுக்காக என்றாலும், எக்காரணமாக இருந்தாலும் அக்காரணம் சீர் கெடுக்கும் கோட்டை மீறும் நட்புக் கோட்டையை உடைக்கும் காரணந்தான்.

'இதென்ன கழைக்கூத்து உள்ள, சூழ்ந்த தாறுமாறான சில்லெடுப்புக்கே கயிற்றில் சமனப்படுத்தி நடக்கவே அக்கப்போர்,' இதற்கிடையில், இது என்ன கோதாரி? உஸோமிக்காரி, அம்பிகைக்காரி சுசிவேணிக் காரிக்கிடையில் நாலாவதாய் முளைத்துள்ள தேவையற்ற 'காரி'', என்று படுவாய் குழம்பினான் இவண்.

அம்பிகை பெட்டி படுக்கையுடன் தான் புறப்பட்டிருக்க வேண்டும். இன்னொரு பெரீய்ய்ய குழப்பம் இவனது மண்டைக் கபாலத்துள் சுழன்றிறுகியது.

அம்பிகை ஏன் நேரடியாக தன்னிடம் வரவில்லை, என்று. ஒருவேளை உஸோமி விவகாரம் அவளுக்கு தெரிந்திருக்குமோ என்றும் தெரிந்தால், ஏன் வருகிறாள்? என்றும் மேலும் குழம்பினான் இவண். தெரிந்த பின்னர் கிளப்பிக்கொண்டு பங்குக்காக வரும் ஆள் இல்லை அம்பிகை. அந்த பாங்கு அவளிடம் இல்லை. தவிரவும், அவள் கூறு கேட்பதற்கான பங்கேதுமில்லையே.

'தட்டு மாத்த நாளைக்கு வருகினம். வீடெல்லாம் கூட்டி, கழுவி வை. சாமான் சக்கட்டு வாங்க நான் அண்டைத்தரிப்பு சந்தைக்குப் போட்டு வாறன். பலகாரங்கள் சுட்டு வை. முக்கியமாய் சாமானறைக் கதவைத் திறக்காதை. அவள் நாளைக்கு தாம்பூலத்தட்டு மாத்தி சம்பந்தம் பொருத்திற மட்டும் அதுக்குள்ளைதான் இருக்க வேணும். அவள் காட்டிற வாய்க்கு இந்தக் கலியாணம் வேண்டாமெண்டு வெளிக்கிட்டு ஓடினாலும் ஓடிடுவாள். பிறகு கொலைதான் விழும். கவனம்.!!'

வேறேதும் வழியே இல்லைப்போலும், அக்ஷபாவிப் பெண்ணுக்கு. அப்பாவிப் பெண்ணுக்கு. அப்பாவி பாவிப்பெண் அம்பிகைக்கு.

அங்கு

'தட்டு மாத்த நாளைக்கு வருகினம். வீடெல்லாம் கூட்டி, கழுவி வை. சாமான் சக்கட்டு வாங்க நான் அண்டைத்தரிப்பு சந்தைக்குப் போட்டு வாறன். பலகாரங்கள் சுட்டு வை. முக்கியமாய் சாமானறைக் கதவைத் திறக்காதை. அவள் நாளைக்கு தாம்பூலத்தட்டு மாத்தி சம்பந்தம் பொருத்திற மட்டும் அதுக்குள்ளைதான் இருக்க வேணும். அவள் காட்டிற வாய்க்கு இந்தக் கலியாணம் வேண்டாமெண்டு வெளிக்கிட்டு ஓடினாலும் ஓடிடுவாள். பிறகு கொலைதான் விழும். கவனம்!

'சாமானறையுக்கை பூட்டி வைச்சு விருப்பமில்லாத ஆளுக்கு அடாத்தாய் கலியாணம் செய்து வைக்கிறது என்ன நியாயம்? காலம் பூரா வாழப்போறவள் அவள்தானே. ஊரெல்லாம் திட்டும்,'

'டியேய்; யேய்; டியேய்; யேய்! நீ அடி வாங்கி முறியப்போறாய். ரண்டு பேரும் சேர்ந்து திருவிளையாட்டு காட்டாதேங்கோ. உங்கடை ஆட்டத்துக்கு விட்டால் ஒண்டும் நடக்காது. ஊர் இஞ்சாலை செய்தால் அங்காலை திட்டும். அங்காலை செய்தால் இஞ்சாலை திட்டும். எல்லாத்துக்கும் திட்டும். மயிரூர். ஊருலகமெண்டு பார்த்தால் ஒரு மயிரும் செய்யேலாது. இஞ்சை நான் வைச்சதுதான் சட்டம். நீ போய் பார்க்க வேண்டிய அலுவலுகளைப்பார்.' கள்ளையனார் என்கிற கள்ளையன் சாமான் சக்கட்டு வாங்கவென்று அண்டைத்தரிப்பு சந்தைக்கு புறப்பட்ட பின், சசிவாணி, மகள் சுசிவேணியை நீள இரும்பு திறப்பு கொழுவி சாமானறையிலிருந்து திறந்து விட்டாள். சுசிவேணி வீட்டை விட்டு ஓடினாள்.

இங்கு (இ)

குட்டி விலா, குட்டி ஓலாவுடன் விலாவின் வீடு நோக்கி விரைந்தான் இவண். அமைதியான வாகன ஓட்டுநனான இவண், வேகமாக ஓட்டு, என்று குட்டி ஓலாவுக்கு கட்டளை பிறப்பித்ததானது வியப்பிலும் ஆச்சர்யம். விலாவின் ஏழிருக்கை வாகனம் முன்னோக்கி முன்னே பாய, ஆச்சர்யத்திலும் வியப்பாக, கட்டடங்கள், மரங்கள், தெருவாக நடைபாதசாரிகள் இன்னும் முன்னோக்கி முன்னே தான் வேகமாக போவதாக உணர்ந்தான். அதற்கு யதார்த்த விளக்கம் இல்லை. முன்னே போகையில், நிலையாக நிற்பவை பின்னே போக வேண்டும். அவை இன்னும் முன்னே போவது பௌதீக விதிக்கு முரணாயினும் கலங்கிய மன உணர்வுக்கு சாட்சியாகலாமாக்கும். என்ன வியாகூலத்தில் அம்பிகை தன்னிடம் வந்திருப்பாளோ, என்கிற பதகளிப்பு நினைவில் இவனுக்கு கபாலத்திலிருந்து பாதம் வரை எரியிரும்புத் துளியாய் உருகி, பிரபஞ்சப் பெருவெளியில் அத்துணிக்கை காணாமல் போனதானதொரு அபூர்வ வினோத உணர்வு ஏற்பட்டது. வாகனம் விலா, ஓலாக்களின் வீட்டின் முன்னால் தரித்து நிற்க, வாசலில் உஸோமி நின்றாள்.

இன்னும் வரும்.

# ‘சிதைப்பு’

## அல்லது ‘சரித்திரத்தின் சறுக்கல் ஒரு கூடா(த)ரக்கதை’

அ

என்னை விரிவிக்க உன்னை வெட்டுவேன்,
என்பதில்தான் மனுஸ சரிதம் துவங்கிற்று.

நீயா நானா போட்டியில்.போரில் சரமாரியாக வெட்டுகள் விழுந்ததால்
இரத்தம் சகஜமான ஒரு திரவமாய் போயிற்று.

பலமும் தருணமும் கொண்டவர் படை எடுத்தனர்.
தூர... தூர... போய்... போய்..!

பலவார் பலமானதும் பலஹீனர் அடிமையானதும் நிஜமல்ல
பலசாலி நொய்ந்தவனை பல்லக்கில் சுமந்தான், என்பதுதான்
மெய்யென்பதுº பொய்.

புறத்தியார் எம்மை அடிமை கொண்டால் அநீதி
பிறர் மேல் எம் வெற்றி பராக்கிரமத்தின் பெருமை,
எனப் புளுகுவது பேரநீதி.

எம்மிலும் பலவார் எம்மை வென்ற, தோல்வியை பிசக்கி, இன்னும்
புரட்டுவதால் பயனில்லை.

புரட்டுவதால் சரிதம் புரளாது.

ஏனெனில், அது ஒன்றே;!!!!

ஆ

‘இது மாதிரி’ உம்மை விரிவிக்கவே நீர் வெளிக்கிட்டீர்.

அடிமை கொள்ளவே நீர் கிளம்பினீர்.

அமைதியாய் அமைந்த சனத்தை அடிக்க,
நீர் ஆயுதத்துடன் கடல் கடந்தீர்.

போன முதலிடத்தில் அடிவாங்கியோடி, இந்த மூலையில் ஒதுங்கினீர்.

கொஞ்சங்கொஞ்சமாய் நிலத்தின் பூர்வீகரில் புகுந்து மனைந்தீர்.

அவர்களை அகற்ற, அடுத்தவர் வந்தபோது
உமக்கு சுலபமாய்ப் போயிற்று.

பூர்வீகர் நிலம் உமது பூர்வீகம், என பறையத் தொடங்கினீர்.
பிசக்கத் தொடங்கினீர்.

உமது கையேட்டின், காலேட்டின் வரிகள் வளையத் தொடங்கின.

சரிதத்தை சரிக்க, சறுக்கிக்க சித்தமானீர்.

ஒட்டகத்தால் கூடாரத்தை விட்டு விரட்டப்பட்ட அரேபியன் கதைக்கு
எதிர்மறையாக, விரட்டப்பட்டவர்களின் கூடு ஆரத்துள் நுழைந்து
‘அவர்களுடன்‘ கலந்தீர்.

நீர் எவ்வளவு பொய் ‘புடுக்கினும்‘ உமக்கு தனிமம் கிடையாது.

நீர் கலந்து கரைந்து போனவொரு கலப்பு-கரைப்பு இனம்.

பூர்வீகர்களது கூடாரத்தின் இந்தப்பக்க ஆணியடிப்பிலிருந்து அந்தப்பக்க
ஆணி வேர் வரை கைப்பற்றுவோம், எனக் கத்தும்º என்றும்....!!!!!

கூடாரத்துள் நீர் புக முடியாதுº

என்றும்;.!!!!!

சரிதம் ஒன்றே.

அதிகாரம் 12

# Chapter: 12

## “RUIN”

### [or Slip of the History: A (bad) Story of a tent]

A]

● The history of the mankind initiated on
“I shall kill you to expand myself”.

The blood became a normal liquid since rain of slashes occurred in the competition/war of “You or Me”.

Whoever had strength and opportunity invaded.
Went…..and went…..Far and far away.

It's a lie to say that the “The Strong became Strong-er, the Feeble became slaves, the strong man carried the weak man on the palanquin, is true”.

Boasting ‘If outsiders enslave us it’s injustice, but our conquering is the victory of strength,’ is grand injustice.

There is no gain in turning out and exploiting the defeat given to us by the victors of Strength.

History wouldn’t turn by turning out.

Because, it is ONE.

B]

● Such as this, you started to expand yourself.
You parted to enslave.

You crossed the sea with arms to beat the peace-dwelled folks.

You sheltered in this corner after beaten in the first place.

You gradually entered the land of the ancestors and homed.

It was easy for you when others came to remove 'them’.

You started to declare that the natives’ land was yours.
You blundered.

The lines of your hand book and leg book started to bend.

You wished to tilt and make to slide.

Contrary to the Arabian who was pushed away from the tent by the camel, you entered the nest-circle of the thrown out (folks).
And, mixed with the -others’ others.

You have no originality; however you screams.


You are a mixed-melted race of mixing and melting.

Scream: “We’ll capture the natives’ tent from this side nail-pole to that side tap root.”
Always.

You CAN’T enter the tent…!
Always.

எக்ஸில்

# புகலிட இலக்கியச் சூழலில் மறந்து போகமுடியாத சில பக்கங்கள் 3




எமது முதலாவது இதழிற்கான ஆக்கங்களை மிகவும் பொறுப்புணர்வுடன் சேகரிக்கத் தொடங்கினோம். ஆனால் அது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. பலரும் எழுதப் பயந்த காலம் அது. அதிலும் சொந்தப் பெயரில் கருத்துச் சொல்லப் பயம் கொண்ட காலங்கள் அவை. தாயகம் மற்றும் தேடகம் என்று மும்மரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த கனடா போன்றதல்ல பாரீஸ் தமிழ்ச் சூழல். அது வேறு ஒரு வகையான பாசிச வடிவம் கொண்டிருந்தது. இலங்கையின் தமிழ்ச் சூழலில் புலிகள் என்ன வடிவில் இயங்கிக் கொண்டிருந்தார்களோ அதற்கு எந்தவிதக் குறைவும் அற்று பாரீஸ் புலிகள் பரீசை ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். இலங்கைப் புலிகளை விடவும் இன்னொரு தளத்தில் தங்களது புலனாய்வு வேலைகளை பாரீஸ் புலிகள் பாரீசில் செயற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அப்படியான சூழலில் மிகவும் திறந்த உரையாடலை நோக்கிய ஒரு சஞ்சிகையை வெளிக் கொண்டு வருவதென்பதும் அதில் பலரை எழுத வைக்கலாம் என எண்ணியதும் இலகுவான காரியமாக இருக்கவில்லை.

மிகவும் திறந்த உரையாடல் களமாக எக்ஸில் இதழைக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு அதன் முதலாவது ஆசிரியர் குழுவின் குறிப்பினை எழுதினோம். நாம்


**கற்சுறா**

சொல்லுவது மட்டுந்தான் சரி என்பதல்ல என்ற கருத்து எங்களுக்கு எப்பொழுதும் இருந்தது.

'எக்கருத்துக்கும் மதிப்பளிக்கும் பக்குவம் எமக்குண்டு' என்ற சிந்தனையின் நிமித்தம் செயற்படவே விரும்பினோம். அதனாலேயே அந்த முதலாவது எக்ஸிலின் ஆசிரியர் குறிப்பில் மிகத் தெளிவாக அதனைக் குறிப்பிட்டோம். அனாலும் எம்முடன் பழக்கத்திலிருந்தவர்கள் நம்மை அறிந்தவர்களே அந்த முதலாவது எக்ஸில் இதழில் எழுதினார்கள். எங்கள் மீதிருந்த நம்பிக்கையின் நிமித்தமே அந்த இதழில் எழுதியவர்களின் பங்கும் இருந்தது. நாம் முழுமையாக நினைத்திருந்ததொரு இதழைக் கொண்டு வந்தோம் என்று மகிழ்ந்திருக்க முடியவில்லை ஆயினும் அந்த முதலாவது இதழை வெளிக் கொண்டு வந்ததில் பெரு மகிழ்ச்சியாக இருந்தது மனதிற்கு.

இதன் தொடர்ச்சியான இதழ்களை எவ்வாறு கொண்டுவரப் போகிறோம் என்ற சிந்தனைதான் அதிகமாக இருந்தது. இலண்டனில் வசிக்கும் கே.கே.ராஜா என்றழைக்கப்படும் ஓவியர் கே.கிருஸ்ணராசா அவர்கள்தான் இந்த சஞ்சிகையை வடிவமைப்பதும் அச்சாக்கத்ததுக் கொடுத்து எடுப்பதுமாகப் பேசப்பட்டது. அவர் செயற்பட்ட அச்சாக்கத்திற்கு இடையூறு செய்யாவிட்டாலும் அவருடைய வடிவமைப்பிற்கு நாங்கள் இடைஞ்சல் ஏற்படுத்தினோம். அந்த இடைஞ்சல் தொடர்ச்சியான இதழ்களில் வெவ்வேறு வடிவங்களில் இருந்தன. திட்டமிட்ட திகதியில் ஆக்கங்களைச் சேகரித்தும் அதனைத் திருத்தம் செய்தும் அனுப்பி வைப்பது மிகவும் இலகுவான காரியமாக இருக்கவில்லை. இருந்தாலும் முதலாவது இதழிற்கு நாங்கள் கொடுத்த முக்கியமான இடைஞ்சல் சேகரித்து அனுப்பிய ஆக்கங்களில் கவிதைகளிற்குத் தலைப்பு இடாது அனுப்பியதுதான்.

ஒரு கவிதைக்குத் தலையங்கமும் அதற்குரிய ஓவியமும் போடாது வடிவமைப்பது பழக்கமற்றதாக



புகலிடத்து வாழ்வில் இருந்து புறப்படுகிறோம்.
எவரும் எங்களுடன் இணைந்து கொள்ளலாம்
எங்கிருந்தேனும் எந்த மொழியிலும்
எம்மிலும் முகம் பார்த்துக்கொள்ளட்டும்.
மீண்டும்
யாதும் ஊரே யாவரும் கேளிர்.
கருத்துக்கள் இலக்கியங்கள் எதுவாயினும்
எம்மிலும் பட்டுத் தெறிக்கட்டும்.
எக் கருத்துக்கும் மதிப்பளிக்கும்
மனப்பக்குவம் எமக்குண்டு.
எதையும் தவிர்த்து உண்ணும் பாங்கு
எம்மிடம் இல்லை.
கிடைப்பதைப் பகிர்ந்து உண்ணும்
காகங்களாய்.

**எக்ஸில்**
**EXIL**

இருந்தது. முதலாவது எக்ஸில் இதழிற்காக அனுப்பப்பட்ட கவிதைகளுக்கு என்ன தலைப்பு? தலைப்பில்லாது கவிதைகள் இருக்கின்றன எனக்கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்தார். தலைப்பில்லாத கவிதைகள் தலைப்பில்லாதவைதான் எனத் தெரியப்படுத்தினோம். அப்படியானால் தலைப்பில்லை எனத் தலைப்புப் போட்டுவிடுகிறேன் எனக் கிண்டல் செய்தார். கவிதையைக் கவிதையாகவே விடுவோம் என்றே சொல்லிக் கொண்டிருந்தேன். ஓவியரால் அதனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. கவிதைகளுக்கு ஓவியம் ஒன்றை அருகில் போடுவதோடு மட்டும் நிற்காது, சில கட்டுரைகளின் இடையேகவிதைகளை ஓவியமாகவும் பயன்படுத்தும் சிந்தனைச் சூழல்தான் அப்பொழுதிருந்தது. அதிலிருந்து மாறுபடவேண்டும் என விரும்பினோம்.

ஆனால் எமது முதலாவது இதழில் அதனை மாற்றமுடியாதுதான் போனது.

இந்த முதலாவது இதழில் கவிஞர் சேரனது கவிதை ஒன்றை வெளிக் கொண்டுவரவேண்டும் என்பது ஸ்ராலின் ஞானத்திற்கு அதிக விருப்பமாயிருந்து.

சேரன் அப்பொழுது கனடாவில் வாழ்ந்து வந்தார். அன்றைய காலத்தில் மிகுந்த சிரமத்திற்குள் சேரனின் தொடர்பு எடுத்து அவரிடம் கவிதை ஒன்றைத் தரும்படி கேட்டிருந்தான் ஞானம். அதற்குள் நாங்களும் பேசவேண்டிய விடயத்தை எழுதத் தொடங்கியிருந்தோம். கவிதை ஒன்றைத் தருவதற்குச் சம்மதித்திருந்த சேரன் அன்றைய

**ஒரு கவிதைக்குத் தலையங்கமும் அதற்குரிய ஓவியமும் போடாது வடிவமைப்பது பழக்கமற்றதாக இருந்தது. முதலாவது எக்ஸில் இதழிற்காக அனுப்பப்பட்ட கவிதைகளுக்கு என்ன தலைப்பு? தலைப்பில்லாது கவிதைகள் இருக்கின்றன எனக்கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்தார். தலைப்பில்லாத கவிதைகள் தலைப்பில்லாதவைதான் எனத் தெரியப்படுத்தினோம். அப்படியானால் தலைப்பில்லை எனத் தலைப்புப் போட்டுவிடுகிறேன் எனக் கிண்டல் செய்தார். கவிதையைக் கவிதையாகவே விடுவோம் என்றே சொல்லிக் கொண்டிருந்தேன். ஓவியரால் அதனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. கவிதைகளுக்கு ஓவியம் ஒன்றை அருகில் போடுவதோடு மட்டும் நிற்காது, சில கட்டுரைகளின் இடையே கவிதைகளை ஓவியமாகவும் பயன்படுத்தும் சிந்தனைச் சூழல்தான் அப்பொழுதிருந்தது. அதிலிருந்து மாறுபடவேண்டும் என விரும்பினோம்.**

**ஒரு விளம்பரத்தைப் போடுவதால் எமக்குப் பணம் வந்துவிடும் என்பதோ அதனை வைத்து நாம் முழு இதழ்களையும் இலகுவாகக் கொண்டு வந்து விடலாம் என்றிருக்கும் இன்றைய நிலைபோன்றதல்ல அந்தக் காலம். எமக்கான ஒரு உளவியல் பாதுகாப்பு மட்டுமேயானதுதான் அது.**

**இப்படியான இதழில் எழுதும் ஒரு கவிஞருக்கும் ஒரு சிறுகதை யாசிரியனுக்கும் இருக்கின்ற ஒரு தனித்துவமான தையிரியம் போன்றதுதான் அந்த விளம்பரத்தை போடுங்கள் எனச் சொல்லி தரும் ஒரு வியாபாரிக்கும் இருந்தது. எங்கள் சஞ்சிகையில் விளம்பரத்தைப் போடுபவருக்கு அதனால் ஒரு நன்மையும் வந்துவிடப் போவதில்லை. எங்கள் இதழினைப் பார்த்து அவரது ரெஸ்ரோரன்ரில் யாரும் உணவருந்தப் போவார்கள் என்பது கூட நடக்காத காரியம். அந்த விளம்பரம் கட்டாயம் தீமையைத்தான் அவருக்கு வியாபார ரீதியாகக் கொடுக்கும். அதற்கும் துணிபவர்களை தனியாக வியாபாரச் சிந்தனையோடு மட்டும் அணுகமுடியாது.**

பொழுதில் இருந்த தொடர்பாடல் வசதியினால் கவிதை தருவதற்குத் தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

சேரனின் கவிதை ஒன்றிற்காக எக்ஸில் சஞ்சிகையின் வருகையினை பிற்போடுவது என்பது கலைச்செல்வனுக்குக் கொஞ்சம் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது. ஒரு கவிதைக்காக நாங்கள் நாட்களைக் கடத்தத் தேவையில்லை. அப்படிக் கவிதை கிடைத்தாலும் அடுத்த இதழில் பிரசுரிக்கலாம் என்பது கலைச்செல்வனது பரிந்துரைப்பாக இருந்தது. ஞானம் தனது முயற்சியைக் கைவிடவில்லை. அப்பொழுது ஈமெயில் வசதிகள் பரவலாக அனைவரும் பயன்படுத்தும் நிலை வந்து சேரவில்லை. சேரன் தன்னுடைய கைப்பட எழுதித் தொலைநகல் மூலம் அனுப்பினார். அதனைக் கையில் எடுப்பதற்கான வசதிகளும் எம் கைவசம் இருந்ததில்லை. எனது மாமா வீட்டிற்கு அதனை அனுப்ப வைத்து அதன் பிரதியை எடுத்தோம். கிட்டத்தட்ட 25 அடி நீளமான பேப்பரில் அது நகல் செய்யப்பட்டு வெளித் தள்ளியது. 'என்னடா ஒரு ஊரின் தெரு நீளத்திற்கு ஏதோ உனக்கு வந்திருக்கிறது எனக் கிண்டல் செய்தபடி அதனை என்னிடம் தந்தார் மாமா. அந்தக் கவிதைதான் 'புலரிக் கலவியும் இரவில் சமருமாய்க் கழித்த ஒரு காலத்தின் பாடல்' என்ற சேரனின் கவிதை.

இதனை விடவும் அந்த முதலாவது எக்ஸில் இதழில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விடயம் என்றால் யாழினி ரெஸ்ரோரன்ற் குணபாலனின் பின் அட்டை விளம்பரம் பற்றியதுதான். ஒரு விளம்பரத்தைப் போடுவதால் எமக்குப் பணம் வந்துவிடும் என்பதோ அதனை வைத்து நாம் முழு இதழ்களையும் இலகுவாகக் கொண்டு வந்து விடலாம் என்றிருக்கும் இன்றைய நிலைபோன்றதல்ல அந்தக் காலம். எமக்கான ஒரு உளவியல் பாதுகாப்பு மட்டுமேயானதுதான் அது.

இப்படியான இதழில் எழுதும் ஒரு கவிஞருக்கும் ஒரு சிறுகதை யாசிரியனுக்கும் இருக்கின்ற ஒரு தனித்துவமான தையிரியம் போன்றதுதான் அந்த விளம்பரத்தை போடுங்கள் எனச் சொல்லி தரும் ஒரு வியாபாரிக்கும் இருந்தது. எங்கள் சஞ்சிகையில் விளம்பரத்தைப் போடுபவருக்கு அதனால் ஒரு நன்மையும் வந்துவிடப் போவதில்லை. எங்கள் இதழினைப் பார்த்து அவரது ரெஸ்ரோரன்ரில் யாரும் உணவருந்தப் போவார்கள் என்பது கூட நடக்காத காரியம். அந்த விளம்பரம் கட்டாயம் தீமையைத்தான் அவருக்கு வியாபார ரீதியாகக் கொடுக்கும். அதற்கும் துணிபவர்களை தனியாக வியாபாரச் சிந்தனையோடு மட்டும் அணுகமுடியாது.

கனடாவில் தாயகம் பத்திரிகைக்கு ஒரு சிவா ரேடிங் கம்பனி என்ற விளம்பரம் பின்பக்கத்தை நிறைத்து நின்றதும் அப்படித்தான் என்று நினைக்கிறேன். அதேபோற்தான் கலைச்செல்வனின் நட்பிற்காக நண்பர் குணபாலன் தன்னுடைய வியாபார அடையாளத்தை ஒரு ஆதரவுக் கரமாகப் பயன்படுத்தக் கொடுத்திருப்பார். 'இப்போதைக்குப் போடுவோம் எப்போதாவது ஒருநாள் அவர் எங்களுக்க உதவி செய்வார் என்றுதான் கலைச் செல்வனும் சொல்லியிருந்தார்.

குணபாலனும் லாச்சப்பலில் இறைச்சிக் கடை வைத்திருக்கிறார். சாப்பாட்டுக் கடை வைத்திருக்கிறார். ஆனால் அதையெல்லாம் தாண்டி அவர் ஒரு கலைஞனாக நம் சமூகத்தில் வாழந்து கொண்டிருக்கிறார். நாடகம்-சினிமா- அரசியல் நையாண்டி காட்சிகள் என்று அவர் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறார். அந்த உறவின் அடிப்படையிலேயே கலைச் செல்வனுக்கூடாக எக்ஸில் இதழில் அந்த விளம்பரம் சஞ்சிகையின் பின் அட்டையை நிரப்பியது.

உண்மையில் இந்த முதலாவது இதழ் வெளிவரும் வரை ஒரு சஞ்சிகையின் தாற்பரியங்களைப் புரிந்து கொள்ளமுடியாமலேயே இருந்தேன். இந்த முதலாவது இதழைக் கையில் எடுத்துப் பார்த்தவுடன் தான் இனிவரப்பொகும் இதழ்களை எவ்வாறு கொண்டு செல்வது என்ற ஒரு புதுப் புரிந்துணர்வு மனதில் தோன்றியது. இந்த சஞ்சிகை கூட இரண்டுவிதமான கலரில் பிறிண்ட் செய்யப்பட்டது. முதற் தடவை பிறிண்ட் செய்யப்பட்டது கொஞ்சம் அதிகமான பச்சை நிறம் கலந்ததாக இருக்கும். அது அட்டைப்படத்தைக் கவனிப்பதற்கு கொஞ்சம் இடையூறு செய்யும் என்பதால் மாற்றி அச்சாக்கம் செய்யப்பட்டது.

முதலாவது இதழ் கையில் வைத்துக் கொண்டதும் புகலிட இலக்கியத்தின் இன்னும் தெரியாத பக்கங்களைத் தெரிந்து கொள்ள முடியுமாய்த்தானிருந்தது.

(தொடரும்)



மல்லாவி 13

# பூராசா அண்ணையும் மல்லாவியும்

நெடுந்தீவிலிருந்து வந்து மல்லாவியில் குடியேறிய ஒரு முக்கியமான குடும்பம் லொறிக் கந்தையர் குடும்பம். இதில் பூராசா அண்ணை மிகவும் முக்கியமான ஒருவர். லொறிக் கந்தையரின் இரண்டாவது மகன் அவர். அவரது அண்ணன் விவசாய அதிகாரியாக வட்டக்கச்சி விவசாயத் திணைக்களத்தில் வேலை செய்தவர். பூராசா அண்ணனுக்குப் பின் பின் குணம் அக்கா, குலமண்ணை (பஸ் ரைவர்) அருமைநாயகம் (சைக்கிள் கடை), புஸ்பா அக்கா, கமலா அக்கா (தாதியர் சேவை), சற்குணம் அண்ணை (சைக்கிள் கடை) ஆகியோர் அவரின் குடும்பத்தவர்கள். இவர்களின் குடும்பத்தில் பூராசா அண்ணையைத் தெரியாத எவரும் மல்லாவியில் இல்லை என்றே கூறலாம். தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் பூராசா அண்ணை அண்மையில் தனது 85ஆவது பிறந்த நாளைக் கடந்து சென்றிருக்கிறார். அந்தச் செய்தியை அறிந்த பின்னரே அவரைப் பற்றிய குறிப்பொன்றைப் பதிவுசெய்ய விரும்பினேன்.

கறுத்த மெல்லிய உருவம். எப்போதும் சிரித்த முகத்துடன் தலையாட்டும் சுபாவம். ஆத்திரப்பட்டுப் பேசுவது கிடையாது. யார் எதைச் சொன்னாலும் "ஓம்... ஓம்..." என்று கேட்கும் அவரது பண்பால் சிலர் அவரை ஓமோம் பூராசா என்றும் அழைப்பார்கள்.

இந்த ஓம் ஓம் என்ற சொல்லின் மூலம் மல்லாவியில் நெடுந்தீவாருக்கும் ஏனைய ஊரவர்களுக்குமிடையில் பொதுவான பல முரண்பாடுகள் பூராசா அண்ணையின் தலையீட்டால் தீர்த்து வைக்கப்பட்டன. அதேவேளை நெடுந்தீவாருக்கு இடையில் கிழக்கூரான், மேற்கூரான்" முரண்பாடுகளையும் பூராசா அண்ணை தலையிட்டு சமரசம் செய்து வைத்திருக்கிறார். இவ்வாறான சம்பவங்களை நான் பல தடவைகள் கண்டிருக்கிறேன். ஒரு வகையில் பூராசா அண்ணை ஒரு நல்ல சமாதானச் செயற்பாட்டாளர் என்றால் அது மிகையில்லை.

மல்லாவியில் நடக்கும் எந்த விடயங்களிலும் பூராசா அண்ணையின் பிரசன்னம் இருக்கும். அதற்கென்று ஒரு நட்பு வட்டமும் இருந்தது. அவர்களில் பூபாலசிங்கம் அண்ணை, நடேசன் அண்ணை, ராஜேஸ்வரன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

நடேசன் அண்ணை நான் சிறுவனாக இருந்தபோது மல்லாவியில் இருந்தவர். அவர் நல்ல சுவாரசியமான பேர் வழி. இவர்களைப் பூராசா அண்ணையின் வீட்டு வாசலில் இருந்த ஆர்த்தி மரத்தின் கீழ் தினமும் காணலாம். அந்த ஆர்த்தி மரம் மழை, வெயில் என எந்தச் சூழலுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடியது. அதன் அடியில் ஒரு முதிரை மரக் குற்றி இருந்தது. அதை யார் அங்கு கொண்டு வந்து போட்டார்கள்? எப்போது கொண்டு வந்தார்கள்? என்று எமக்குத் தெரியாது. ஆனால் பூராசா அண்ணை சம்பந்தப்படாமல் அந்தக் குற்றி அங்கு வந்திருக்க வாய்ப்பில்லை!

**அ.விஜயன்**

பூராசா அண்ணையிடம் ஒரு கறுப்பு நிறப் பழைய ஏபோர்ட்டி கார் இருந்தது. அதை இயக்குவதற்கு கையால் சுற்றும் ஒரு வளைந்த இரும்புக் கம்பி இருந்தது. அதைக் காரின் முன்புறமாக இயந்திரத்துக்குள் சொருகிப் பலமுறை வேகமாகச் சுற்றினால் இயந்திரம் ஓட ஆரம்பிக்கும்.

அந்தக் காலத்தில் தேநீர்க் கடையில் பலர் இருப்பதற்குப் பயன்படுத்தப்படும் வாங்கில் ஒன்றைத் தலைகீழாகக் காரின் மேல்புறத்தில் கட்டி அதன் கால்ப் பகுதியிலுள்ள 'வீ' வடிவ வெட்டுக்குள் ஒலிபெருக்கியைக் கட்டி விளையாட்டுப் போட்டி, அரசியல் கூட்டங்கள் ஆகியவற்றை

ஊர் முழுவதும் அறிவிப்புச் செய்வது வழக்கம். ஒரு தடவை பூராசா அண்ணையின் காரில் சைக்கிளோட்டப் போட்டிக்கு (துணுக்காயிலிருந்து ஆரம்பித்து மாங்குளம் சந்திவரை சென்று மீண்டும் துணுக்காயை வந்தடைவது) அறிவிப்புச் செய்யப்பட்டது. அறிவிப்பாளர் நடேசன் அண்ணை. ஒட்டறுத்தகுளம் தாண்டி வடகாடு, வன்னிவிளாங்குளம் காட்டுப் பகுதியூடாகச் சென்று கொண்டிருந்தபோது நடேசண்ணை ‘குரங்குகளே மரங்களே வீதியிலிருந்து விலகி நில்லுங்கள் எமது சைக்கிளோட்ட வீரர்கள் வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள்’ என்பதைக் கூறிப் பூராசா அண்ணை சிரிப்பதுண்டு.

ஆர்த்தி மர முதிரைக்குற்றி விவகாரம் மட்டுமல்ல அவரிடமிருக்கும் நினைவுகளை மீண்டும் மீட்கவோ மீள அழைக்கவோ அவரது நினைவாற்றல் தற்போது இல்லை என அறிந்தேன். அவரது நினைவுகள் மங்கிக் கொண்டிருப்பதால் மல்லாவியின் மறுபக்கங்கள் பலவற்றின் உண்மைச் சாட்சியம் ஒன்று இல்லாது போய்விட்டது என்றே அர்த்தப்படும்.

பூராசா அண்ணை சைவக்காரன் அல்லது இந்துமதத்தைச் சேர்ந்தவர் என்றாலும் அவர் எதையும் பின்பற்றியதாக நான் கண்டதில்லை. அவரைக் கோவில் விடயங்களில் நான் கண்டதில்லை. ஆனால் அவரது மனைவியான சின்னமலர் அக்கா கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர். அந்தக் காலத்தில் மாங்குளம் தேவாலயத்திலிருந்து ஆங்கிலேயப் பாதிரியார் மல்லாவிக்கு வருவார். அவர் ஒரு பச்சைநிற ஜீப் வைத்திருந்தார். அவரே அதைச் செலுத்தி வருவார். நான் கண்ட முதலாவது கிறிஸ்தவப் பாதிரியாரும் அவர்தான்.

அவர் பல தடவைகள் பூராசா அண்ணையின் வீட்டில் பூசை வைத்து இறுதியில் அப்பத்தை வைனில் தோய்த்து ஒவ்வொருவரது நாக்கிலும் வைப்பார். அவர்கள் முட்டுக்காலில் நின்று அதைப் பயபக்தியுடன் பெற்றுக்கொள்வார்கள். சின்னமலர் அக்கா அந்தப் பூசையின்போது வெள்ளைநிற நுளம்புவலை போன்றதொரு சிறிய துணியைத் தலையில் போட்டிருப்பார். அப்போதுதான் வேறொரு கடவுள் வணக்கமுறையும் உள்ளது என்பதை என்னால் அறிய முடிந்தது. இந்தப் பூசை விவகாரங்களில் பூராசா அண்ணை கலந்து கொள்வதில்லை.


ஒரு தடவை கிறிஸ்மஸ் வாழ்த்து மடல் ஒன்றை வாங்கி வருமாறு சின்னமலர் அக்கா பூராசா அண்ணையிடம் சொல்ல அவர் ஒரு வாழ்த்து மலரை வாங்கிக் கொடுத்திருக்கிறார். சின்னமலர் அக்காவுக்கு அந்த வாழ்த்து மடலில் இருந்த படம் பிடிக்கவில்லை. அதில் ஒரு பெரிய றோசாப்பூ படமும் அதன் கீழ் ஒரு சிறிய றோசாப்பூப் படமும் இருந்தன. அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறு மடல் ஒன்றை வாங்கித் தருமாறு பூராசா அண்ணையிடம் கொடுத்தார்.

அந்த வாழ்த்து மடல் பற்றி பூராசா அண்ணை இப்படி ஒரு விளக்கம் கொடுத்தார் ‘சின்னமலர் இது நல்ல வாழ்த்து மடல் இதன் அர்த்தம் என்னவென்றால் பெரிய பூ பூராசாவையும் சிறிய பூ சின்னமலரையும் குறிக்கிறது’ என்றார்.

பூராசா அண்ணையை இன்னோர் வகையில் கூறுவதானால் அவர் ஒரு கண்காணிப்புக் கோபுரம் எனலாம். மல்லாவியில் எது நடந்தாலும் பூராசா அண்ணைக்குத் தெரிந்திருக்கும். அதைவிடப் பல விடயங்கள் அவரை மையப்படுத்தியே நடப்பதுண்டு. எந்தவொரு விடயத்தையும் அது நடந்து முடிவதற்குள் வெளியில் சொல்லாது இரகசியமாக வைத்திருக்கும் பண்பும் சகல தரப்பு மக்களுடனும் இயல்பாகப் பழகும் தன்மையும் பூராசா அண்ணரிடம் இருந்ததால் மல்லாவியில் அவர் ஒரு நிராகரிக்கப்படமுடியாத ஆளுமையாக இருந்தார்.

1972ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சி நிலவியபோது இலங்கை ‘குடியரசாக’ மாற்றப்பட்டது. (1972 மே 22).





அதுவரை சிலோன் என்றிருந்த இலங்கையின் பெயர் அதன் பின்னர்தான் சிறிலங்கா என மாற்றப்பட்டது. இந்தக் குடியரசு தின அறிவிப்பை ஒதுக்கும் வேலைத்திட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இறங்கியிருந்தது. அதில் ஒரு விடயம் அப்போதிருந்த தொலைத்தொடர்பு இணைப்புகளை முடக்கும் வகையில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. அரச பெயர்ப்பலகைகளில் காணப்பட்ட சிங்கள எழுத்துக்களுக்கு சாணம், கழிவு ஒயில் பூசப்பட்டது. இந்த வேலைத்திட்டம் பூராசா அண்ணை மற்றும் சிலரின் முன்னெடுப்பில் தமிழ் அரசுக் கட்சியால் இடம்பெற்றது. அந்தக் காலத்தில் தற்போதுள்ளது போல தொலைத்தொடர்பு வசதிகள் இருக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரர்கள் ரீ.ஆர்.ஓ மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு மட்டும் தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் இணைப்புகள் தூண்கள் போடப்பட்டு அதில் பொருத்தப்பட்ட மாபிள்களில் செப்புக் கம்பிகள் இணைக்கப் பட்டிருந்தன. துணுக்காயில் டி.ஆர்.ஓ அலுவலகத்துக்கு மட்டும் அப்போது இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பிகளே வெட்டப்பட்டன. துணுக்காய் டி.ஆர்.ஓவாக மார்க்கண்டு இருந்தார்.

இந்த எதிர்ப்புப் போராட்டம் மல்லாவியில் மட்டுமல்லாது வடக்குக் கிழக்கு மாகாணம் முழுதும் ஓர் இரவில் திட்டமிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டதாக பின்னர் அறிய

முடிந்தது. அப்போது மல்லாவியில் பொலிஸ் நிலையம் இருக்கவில்லை. மாங்குளத்திலிருந்துதான் மல்லாவி, துணுக்காய்ப் பகுதிகளுக்குப் பொலிசார் வந்துபோவது வழக்கம்.

மறுநாட் காலையில் மாங்குளத்திலிருந்து இரண்டு பொலிசார் பி.எஸ்.ஏ மோட்டார் சைக்கிளில் மல்லாவிக்கு வந்தார்கள். முதல் நாள் இரவு மல்லாவியில் நடந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குக் காரணமாக இருந்த பலரையும் தேடினார்கள். அதில் பூராசா அண்ணையும் ஒரு முக்கிய நபராகத் தேடப்பட்டார். பொலிசார் பூராசா அண்ணையின் வீட்டுக்குச் சென்றபோது பூராசா அண்ணை கிணற்றில் குளித்துக்கொண்டு நின்றிருக்கிறார். அங்கிருந்து பாய்ந்து ஓடுவதற்கு அவருக்கு அவகாசம் இருக்கவில்லை. அவர் வீட்டின் முன்னிருந்த கடைச் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்த தகரத்துக்குள் அவர் பதுங்கிக் கொண்டார். நனைந்த சாரத்துடன் சுவருக்கும் தகரத்துக்குமிடையில் நின்றதை நானும் கண்டேன். ஆனால், ஏன் அதற்குள் நிற்கிறார் என்றோ பொலிசாருக்கு மறைந்துதான் அதற்குள் பதுங்கிக் கொண்டார் என்றோ அப்போது எனக்குப் புரியவில்லை. சின்னமலர் அக்காவிடம் எதையோ கேட்டுவிட்டுப் பொலிஸ்காரரர் போய்விட்டார்கள். அப்போது அவரது மூத்தமகள் சுமதி சிறு பிள்ளை. அவள் பொலிசாரைக் கண்டதும் சத்தம் போட்டு அழுதாள். சின்னமலர் அக்கா அவளையும் தூக்கி வைத்துக் கொண்டு பொலிசாருக்குத் தண்ணி காட்டி அனுப்பியதை அப்போது பலரும் பெரிதாகப் பேசினார்கள். “சின்னமலர் கெட்டிக்காரிதான்“ என்று எனது அம்மா கூறியதையும் நான் கேட்டிருக்கிறேன்.



இந்தத் தந்திக் கம்பி அறுப்பு கறுப்புக் கொடிப் போராட்டத்துடன் ஜீவகாருண்யம் அண்ணை, நடேசன் அண்ணை, மூன்றாம் யூனிற் சண்முகம் அண்ணை (உடுத்துறை வேலுப்பிள்ளையின் மருமகன்) ஆகிய பலரும் கைதாகி நீண்டகாலம் சிறையில் இருந்ததாக ஞாபகம் இருக்கிறது.

## மல்லாவி மறுமலர்ச்சி மன்றம்

மல்லாவி மறுமலர்ச்சி மன்றம் என்ற பெயரில் ஓர் இளைஞர் அமைப்பு அப்போது இயங்கியது. அதன் முன்னோடிகளில் ஒருவராகப் பூராசா அண்ணை இருந்தார். அவருடன் நடேசன் அண்ணை, சிங்கம் அண்ணை, நாகரத்தினம் அண்ணை, அப்புத்துரையரின் புண்ணியம் அண்ணை, அவரது மச்சான் செல்லையா (பின்னர் மில் வைத்திருந்தவர்) ஆகிய பலர் அங்கம் வகித்தார்கள். இந்த மன்றத்தின் ஊடாக நாடகம் பழகுவது, நாடகம் மேடையேற்றுவதெல்லாம் நடந்தன. நாகரத்தினம் அண்ணர் தான் அவர்களது நாடகங்களில் அதிகமாகப் பெண்பாத்திரம் ஏற்று நடிப்பவர். தற்பொழுது பிரான்சில் வசிக்கிறார்.

இந்த மன்றத்தினர் தந்திக் கம்பி அறுத்தல் கறுப்புக்கொடி கட்டுதல் போன்ற அரச எதிர்ப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டார்கள். இந்த மன்றத்துக்கு அப்பாற்பட்ட சிலரும் ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டதில் பங்கெடுத்திருந்தார்கள்.

1977ஆம் ஆண்டின் பின்னர் மல்லாவி மிருக வைத்தியர் அலுவலகம் பிரதான வீதிக்கு அருகிலிருந்த பெரிய குவாட்டசில் திறக்கப்பட்டது. பூராசா அண்ணையும் அங்கு பணிபுரிந்தார். 1980இல் துணுக்காயில் நிறுவப்பட்ட தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக வீதியின் வலது பக்கக் காடுகள் (மாங்குளத்திலிருந்து துணுக்காய் வரை வலது புறமாக வீதி ஓரமாக 30 மீற்றர் காடு அகற்றப்பட்டது) வெட்டப்பட்டபோது அதுவரை மல்லாவி மக்களுக்கு நிழல்கொடுத்த அவர் வீட்டின் முன் மிகப்பெரிய குடையாக இருந்த ஆர்த்தி மரமும் தறிக்கப்பட்டது.

அதன் பின்னர் மிருக வைத்தியர் கந்தோர் பூராசா அண்ணையின் சந்திப்பு மையமாக மாறியது. ராஜேஸ்வரன் அண்ணை, சிங்கண்ணை ஆகியோரும் அங்கு நகர்ந்தார்கள். அங்கு பால் சேகரிப்பு மையம் திறக்கப்பட்டதால் பால் சேகரித்து அலுமினியச் சாடிகளில் வாகனங்களில் ஏற்றி மாங்குளத்துக்கு அனுப்புவார்கள். சிலவேளை தட்டிவானின் பின் பலகையில் அவற்றை ஏற்றி அனுப்புவதும் உண்டு.

இந்தப் பால் சபையும் மிருக வைத்தியர் அலுவலகமும் திறக்கப்பட்ட பின்னர் இரவு நேரத்தில் அங்கு காட்ஸ் விளையாடுவார்கள். 304 விளையாட்டுக்கு 4பேர் தேவை முதலில் வரும் 3பேருடன் நான்காவது ஆளாக நான் இருப்பேன். அப்போது நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். எங்கள் வீட்டில் மின்சாரம் இல்லை. இரவில் மின்னொளியில் காட்ஸ் விளையாடுவது சந்தோசமாக இருக்கும். அதேவேளை பூராசா அண்ணை, சிங்கம் அண்ணை ஆகியோருடன் அமர்ந்து களமாடுவதில் ஒரு பெருமையும் இருக்கும்.

நானும் பூராசா அண்ணையும் பார்ட்னராகப் பல தடவைகள் விளையாடியிருக்கிறோம். நான்காவது நபர் அங்கு வந்ததும் அவருக்கு எனது இடத்தை விட்டு விட்டு பூராசா அண்ணைக்கு அருகிலிருந்து அவரது கைக்குக் கிடைக்கும் சீட்டுக்களை வைத்து எப்படிக் கேள்வி கேட்கிறார் எந்த இனத்தில் துரும்பு வைக்கிறார் என்பவற்றை அவதானிப்பேன். சிலவேளை அவரது கையில் பலமில்லாத இனத்தில் துரும்பைக் கவிழ்த்து வைத்துவிட்டு அந்த இனம் தனது பாட்னரிடம் பலமாக இருக்கும் என்ற நுணுக்கத்தையும் சொல்லித் தருவார்.

*1980 ஆம் ஆண்டு காலம் என நினைக்கிறேன். நான் சிறப்பாகக் காட்ஸ் விளையாடக் கற்றுக்கொண்டிருந்தேன். ஒரு நாள் பூராசா அண்ணை, சிங்கம் அண்ணை, ராஜேஸ்வரன், டொக்டர் ஒருவர் என 4பேரும் 304 விளையாடிக்கொண்டிருந்தார்கள். சரியான போட்டி. இரவு 11 மணியிருக்கும் ஒரு கட்டத்தில் கவிழ்த்துக் காட்டியது பிழை" எனக் கடுமையான விவாதம் ஏற்பட்டு அது ஒரு சண்டையாக மாறியது. அந்த இரவு குவாட்டார்ஸ் அதிர்ந்தது. அந்தக் கணத்தில் ஒரு விடயத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. கார்ட்ஸ் விளையாட்டை எவ்வளவுதான் கெட்டித்தனமாக விளையாடினாலும் அதில் பிழை ஏற்படத்தான் செய்யும் என்பதே அது.*

அங்கிருந்தவர்களில் மிகவும் வயது குறைந்தவன் நான். அப்போது 10ஆம் வகுப்பில்படித்துக்கொண்டிருந்தேன். ஒரு கார்ட்ஸ் விளையாட்டு இப்படிச் சண்டை பிடிக்கத்தான் வேண்டுமா எனச் சிந்தித்தேன். அன்றிரவு முழு உற்சாகத்தையும் இழந்து வெறும் ஆளாக வீட்டுக்குப் போனேன். அன்றிலிருந்து நான் கார்ட்ஸ் விளையாடப்போவதில்லை என முடிவெடுத்தேன். மறுநாளில் இருந்து மிகத் தீவிரமாகப் படிக்க ஆரம்பித்து க.பொ. த சாதாரணம், உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குச் சென்றேன். பல்கலைக்கழகக் காலம், தொழில் புரிந்த காலம் என எந்தச் சூழலிலும் நான் காரட்ஸ் விளையாடவில்லை.

பூராசா அண்ணைக்கு 1970 களின் நடுப்பகுதியில் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் 10 ஆயிரம் ரூபா கிடைத்தது. அப்பொழுது அந்தத் தொகை மிகப் பெறுமதியானது. ஆனாலும் அந்தப் பணம் அவருக்குப் பயன்பட்டதாக அறிய முடியவில்லை. அந்தக் காலத்தில் லொத்தர் சீட்டு விற்கும் வான் ஒன்றில் பெரிய ஒலிபெருக்கியில் அறிவித்து மல்லாவிப் பகுதியில் ரிக்கற் விற்பார்கள்.

பூராசா அண்ணரின் வீட்டில் 'ட்ரம்' எனப்படும் மரம் ஒன்றிருந்தது. மிகப்பெரிய பானைபோன்ற மளிங்கான காய்களைக் காய்க்கும் மரம் அது. உண்மையில் அதற்கு அதுதான் பெயர் என்று தெரியாது. அது அவர் வைத்த பெயராகக் கூட இருக்கலாம். அது மதுபானம் காய்ச்சும் மரம் எனச் சொல்லுவார். (அந்தக் காயிலும் ட்ரம் என்ற குடிவகை காய்ச்சப்படுகிறதா என்பதிலும் தெளிவில்லை). ஏனெனில் அவர் வீட்டில் இருக்கும் சில பூக்கன்றுகளுக்கு 'றொட்ரோம்'- 'தெரோரம்' என்று ஆங்கில உச்சரிப்பு வரும் மாதிரிப் பெயர் சொல்லுவார். அதனைப் பலரும் நம்புவார்கள். அது றோட்டு ஓரத்திலும் தெருவின் ஓரத்திலும் இருந்து பிடுங்கி வந்த பூக்கன்றுகள் என்பதற்காகச் சொல்லப்படும் கதை என்பதனைப் பின்னர் விளங்கப்படுத்துவார். வெள்ளைக்காரன் வைக்கும் பெயர் போல சொல்லும் போது நம்பி விடுவார்கள் என்ற முட்டாள் தனத்தைக் கிண்டல் செய்யும் தொனி அது. அதேபோல் இந்த ட்ரம் மரத்தினை எங்கிருந்து கொண்டுவந்து



நட்டாரோ தெரியவில்லை. சிங்களக் கிராமத்திலிருந்து கொண்டு வந்ததாகவும் ஒருமுறை சொல்லியிருந்தார். மல்லாவியில் அவரது காணியில் மட்டும்தான் அப்போது அது இருந்தது. பிற்காலத்தில் அதன் தடியை எடுத்து நட்டால் அது முளைக்கும் எனத் தெரிந்து பலர் தங்கள் வீடுகளிலும் தற்பொழுது உண்டாக்கியிருக்கிறார்கள்.

அந்தக் காயின் ஓட்டுப் பகுதியை பௌத்த பிக்குகள் தானம் பெறும் பாத்திரமாகப் பாவிப்பதாகவும் அறிந்திருக்கிறேன். அந்தக் காய் பழுத்தால் விளாம்பழம்போல கறுப்பாக இருக்கும். நல்ல வாசம். அதைச் சாப்பிடலாமா என்ற பயம் காரணமாகச் சாப்பிட்டுப் பார்க்கவில்லை. ஒரு தடவை கூட்டுறவாளர் தினத்துக்குத் துணுக்காயிலிருந்து கிளிநொச்சிக்குச் சென்ற லொறியில் அந்தக் காயைப் பிடுங்கி அழகாக இருப்பதற்காகக் கட்டித் தூக்கியிருந்தார்கள். அந்தக் காய்களைக் கண்ட பலரும் "இது என்ன காய்?" என்று ஆர்வத்துடன் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பூராசா அண்ணை "இதுதான் துணுக்காய்" என்று கூறியிருக்கிறார்.

பூராசா அண்ணை நெடுந்தீவு மக்களுக்கு மட்டுமல்லாது மல்லாவியில் வாழ்ந்த அனைத்து மக்களுக்கும் வேண்டப்பட்ட ஒருவராகவும் எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒருவராகவும் வாழ்ந்தார். மல்லாவியைப் பொறுத்தவரை அவர் ஒரு பூ - ராசா தான்.





# சொல்ல மறந்த கதை:05

**அலெக்ஸ் பரந்தாமன்**

1983ஆம் ஆண்டு ஆடிமாதம் கொழும்புப் பகுதிகளில் இனக்கலவரம் நிகழ்ந்த சில நாள்களின் பின்பு, அவன் தனது தாய், சகோதரிகள் இருவருடனும் கப்பலில் அகதிகளாக வடபகுதிக்கு வருகிறான். கப்பலில் வந்த அநேகமானவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவினர் வீடுகளுக்குச் சென்று விடுகின்றார்கள். அவனுக்கு யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் என்று தெரிந்தவர்கள் எவரும் இருக்கவில்லை. இதன் நிமித்தம் அவனது குடும்பத்தோடு, வேறு சில குடும்பத்தவர்களும் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படுகின்றார்கள். அதன்பின் ஓரிரு மாதங்கள் சென்றபின், அங்கிருந்தவர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து, வேறிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அவனும் மலையகத்தைச் சேர்ந்த வேறுசில குடும்பங்களும் புதுக்குடியிருப்பு எனும் இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

பொழுது இறங்கி இருள்பரவும் நேரம் அவர்களை ஏற்றிவந்த பேருந்து, புதுக்குடியிருப்பு சந்தியில் உள்ள கிராம முன்னேற்றச்சங்கக் கட்டடத்தின் முன்பாக வந்து நிற்கின்றது. அனைவரும் பேருந்திலிருந்து இறக்கப்பட்டு, கட்டடத்தினுள் தங்க வைக்கப்படுகின்றனர். சுமார் மூன்று மாதங்களின் பின்பு, கொழும்பிலிருந்து வந்த சிங்கள அரச அதிகாரிகள், அங்கு தங்கியிருந்தவர்களை மீண்டும் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறும்படியும், ஒரு குறிப்பிட்ட நாளின்பின், இக்கட்டடத்தின் வாயிற்கதவு நிரந்தரமாக இழுத்துப் பூட்டப்படும் என்றும் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுத்ததோடு, அந்தக் குறிப்பிட்ட நாளில் வந்து அங்கிருந்தவர்களை வெளியேற்றி விட்டு, அக்கட்டடத்திற்கான வாயிற்கதவையும் இழுத்து மூடிவிடுகின்றனர்

அவனோ, இச்செயலின் மூலம் தனது தாய் சகோதரிகளுடன் நடுத்தெருவுக்கு வந்து நின்றான். போக்கிடமின்றி அவன் தவித்து நின்ற அவ்வேளையில், அந்தக் கட்டடத்துக்குப் பக்கத்தில் தேநீர்க்கடை வைத்து நடத்திய ஒருபெண், அவனையும், அவனது தாய் சகோதரிகளையும் தனது இன்னொரு காணியில் உள்ள ஒரு சிறிய கிடுகு வீட்டில், தங்கியிருப்பதற்கு அனுமதியளித்தாள்.

காலநகர்வில் அவன் ஊருக்குள் கூலி வேலை செய்து வரும் நாளில் தெருவில் ஒருபெண் அவனைக் கண்டு, பரந்தன் வீதி - புதுக்குடியிருப்பு எல்லையில், தமக்கு காணியொன்று இருப்பதாகவும் அதற்குப் பக்கத்திலிருக்கும் காட்டின் ஒரு பகுதியை அழித்து, அதிலே நீங்கள் இருக்கலாம்... எனக் கூறியபோது, அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. வாழ்வின்மீது ஒரு பற்றுதலும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

ஒருநாள் கோடரியை எடுத்துக் கொண்டு காட்டிற்குள் நுழைந்த அவன், திடுக்கிட்டுப் போனான். ஓரடி, ஒன்றரையடி விட்டமுள்ள பாலை, முதிரை, விண்ணாங்கு, பசறி... எனப் பலவகை மரங்களும் கீழே மண்டுப் பற்றைகளுமாக காட்சியளித்தது அந்தக்காடு. கூடவே மலவெக்கை வேறு துர்மணத்தைப் பரப்பியபடி இருந்தது. அவனுக்கு அக்கணத்தில் மனம் சலித்துப் போனது. இருப்பினும், தனக்கான ஒரு துண்டு நிலத்தை உரிமையாக்கும் மன வைராக்கியத்தோடு, பகுதிபகுதியாக முதலில் மண்டுப் பற்றைகளை வெட்ட ஆரம்பித்தான். இடையிடையே விட்டம் குறைவான மரங்களையும் தறித்து, வெளியாக்கிக் கொண்டு வரும்போது, ஒருநாள் ஒருவர் வந்து அவனிடம், 'யாரைக் கேட்டு மரம் தறிக்கிறாய்...?' எனும்

பலதரப்பட்ட கேள்விகளோடு அவனை அச்சுறுத்திவிட்டுச் சென்றார். அவனுக்குக் குழப்பமாக இருந்தது. தன்னைக் காடு வெட்டிக் குடியிருக்கும்படி கூறிய பெண்ணிடம் சென்றான். அந்தப்பெண்ணிடம் விடயத்தைக் கூறினான். அதற்கு அந்தப் பெண், ‘ உன்னிடம் வந்தவன் ஆர் எவன் எண்டு விசாரித்து, அவனோடை நான் கதைக்கிறன். நீ போய் வெட்டு...‘ எனக் கூறி அவனை அனுப்பி விட்டாள்.

அவனும் ஒரு வாரம் கழித்து மீண்டும் காட்டிற்குள் சென்றான். வெட்டிச் சரித்த மண்டுப் பற்றைக்கு நெருப்பு வைத்தபோது, அது வெயிலில் காய்ந்து இருந்ததனால், சில நிமிடங்களுக்குள் பற்றிப் பரவிப்பிடித்து எரிந்து தணிந்து கொண்டது. இப்போது வெளியான நிலப் பரப்பைப் பார்த்ததும், மகிழ்வாக இருந்தது அவனுக்கு. ஆங்காங்கே எரிந்த விறகுக் கட்டைகளில் தணல் இருந்ததால், அவன் மேற்கொண்டு வேலை செய்யாமல் திரும்பி விட்டான்.

மறுநாள் வந்து எரிந்த அரைகுறைத் தடிகளை எடுத்து, ஒன்றாக்கும் வேளையில், அப்பகுதிக்குரிய கிராமசேவகர் திடீரென அங்கு பிரசன்னமாகி அவனை ஏசியதோடு, கையோடு அவனைத் தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அவரே எழுதி அவனை அதில் கையொப்பமிடச் செய்தபின்பு, அவனை எச்சரித்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்.

அவனுக்கு மிகுந்த கவலையாகி விட்டது. கைக்கெட்டியது வாய்க்கெட்டாத தின்பண்டம் மாதிரி, நிலம் போய்விடுமோ...? என்று அவன் யோசித்தான். முன்பின் தெரியாத மனிதர்கள்... முகமனுக்காய் சிரிக்கும் ஒருசிலர்... காட்டை வெட்டச் சொன்ன பெண்ணின் மகன் மட்டும், அவனைக் கண்டு நிகழ்ந்த விபரத்தைக் கேட்டறிந்து சென்றான். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சுமார் மூன்று மாதங்களின் பின்பு, ஒருநாள் கிராமசேவகரிடம் சென்றான்.

**தலைவர் திரும்ப உயிரோடு வந்தால், முதலில் தனது கண் பாதிப்படைந்ததற்கான செயலுக்கு ஒரு நீதியை நியாயத்தை வழங்கிவிட்டு, படைகளின் முகாம்கள் மீது அவர் தன் படையணியோடு பாயட்டும்... என்றுதான் அவன் இன்றும்கூடக் கூறிக்கொண்டிருக்கிறான்.**

தற்போது குடியிருக்கும் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாலும், வெட்டி வெளியாக்கிய காட்டு நிலத்தில் தன்னைக் குடியிருத்தும்படியும் கேட்டுக் கொண்டான். கிராமசேவகர் சிலகணம் யோசித்துவிட்டு, ‘சரி... மேற்கொண்டு காட்டை வெட்டாமல், வெட்டிய இடத்தில் ஒரு கொட்டிலைப் போட்டுக் கொண்டு இரு... ‘ என்று கூறிக் கொண்டார்.

அவன் மிகுந்த மனமகிழ்வோடு அங்கிருந்து வெளியேறினான். உடனே அன்றைய நாளிலே அக்காட்டுப் பரப்புக்குச் சென்று, வெறுந்தரையாகக் கிடந்த ஓரிடத்தில், தற்காலிக குடிசையொன்றைப் போட்டுக் கொண்டான். அதன்பின்பு அவன் அந்த இடத்திலேயே இருந்து கொண்டு, மெல்லமெல்ல கீழே உள்ள மண்டுப் பற்றைகளை வெட்டி வெயிலில் காயவிட்டுச் சிறுசிறு குவியல்களாக நெருப்பு மூட்டி வெளியாக்கி, தன் நிலப்பரப்பை விரைவு படுத்தினான்.

இவ்வாறாக இவன் காட்டை விரிவுபடுத்தும் நிகழ்வானது, அவன் இருக்கும் நிலப்பரப்பின் எதிர்த்திசையில், ஏற்கனவே காடுவெட்டி வெளியாக்கி, தமதுடைமையாக்கி வைத்திருந்த கணவன் மற்றும் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அந்த இருவரும் அவனோடு வார்த்தைகளால் அடிக்கடி முரண்டு பிடிக்க ஆரம்பித்தார்கள். இறுதியில், கிராமசேவகரின் அனுமதியோடுதான் அவன் அக்காட்டை வெட்டுகிறான் எனத் தெரியவந்த போது, அடங்கிக் கொண்டார்கள். ஆயினும், தாங்கள் வெட்டி வெளியாக்கி சொந்தமாக்க முடியவில்லையே... என்ற மன ஆதங்க, அருக்களிப்பின் நிமித்தம், ஒரு ‘வந்தான் வரத்தான்‘ தங்களது பிரதேசத்தில், அதுவும் தாங்கள் இருக்க வேண்டிய இடத்தில் வந்து குடியிருப்பதோ...? எனும் மனவெக்கையானது, அவர்கள் இருவருக்குள்ளும் அவிய ஆரம்பித்தது.

அப்போது, புலிகள் இயக்கம் சற்று வளர்ச்சி அடைந்த வேளை அது! இயக்கத்திடம் ‘காவல்துறை‘ என்ற அமைப்பும் ஒன்று இருந்தது. ஒருநாள் அந்த, முன்காணிநபரின் மகனொருவன், ‘கெற்றப்போல்‘ மூலம் காட்டுப்புறாக்களுக்கு கல்லெடுத்து அடித்துக் கொண்டிருந்தபோது, அந்தக்கற்கள் அவனது குடிசைக்கும் முன்பாக வந்து விழத்தொடங்கின. உடனே அவன் அந்த நபரின் மனைவியைக் கூப்பிட்டுக் கூறினான். அவளோ இதுதான் தருணமென நினைத்து, அநாவசியமான சொற் பிரயோகங்களைப் பாவித்தாள். இருதரப்பிலும் வார்த்தைகள் தடிப்புக்கொள்ளத் தொடங்கின. அதிலும், அவள் கூறிய ‘வந்தான் வரத்தான்‘ வன்னிக்கு வந்து காடழிச்சு குடியிருக்க விடுகிறதோ...‘என்ற வார்த்தை அவனைக் கடும் சினம் கொள்ள வைத்தது.

இதேவேளை, அவளது கணவன் தனது சகாவுடன் தவறணையில் கள் அருந்திவிட்டு, போதையில் வீட்டுக்கு வந்தான். அங்கு நிகழ்ந்த பிரச்சினையைக் கேட்டுவிட்டு, தனது சகாவுடன் சேர்ந்து, அவனது எல்லை வேலியைப் பிரித்துக்கொண்டு, உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் தனது சகாவுடன் இணைந்து அவனைத் தாக்க ஆரம்பித்தான். அவன் தாக்கப்படுவதைக் கண்ட அவனது சகோதரிகள், விலக்குப் பிடிக்கப்போய் அவர்களும் அடிவாங்கிக் கொண்டார்கள். நிலத்திலே காய்ந்து கிடந்த விறகுக் கட்டையால் அந்த நபர் தாக்கியதில், அவனது இடது கண் சேதாரமடைந்து கொண்டது. சகோதரிகள் இருவருக்கும் தலையில் வெடிப்பு ஏற்பட்டு, இரத்தம் வழிந்தபடி இருந்தது. அவர்களது கூக்குரல்

கேட்டு, ஓடிவந்த அயலவர்கள், வேடிக்கை பார்த்தார்களே ஒழிய, ஒரு 'வந்தான் வரத்தான்' ஊரவன் ஒருவனுக்கு அடிக்கிறதோ...? என்ற மனப்பான்மையே எல்லோர் முகங்களிலும் பிரதிபலித்தது. எவரும் அவனுக்காகப் பரிந்து பேச முன்வரவில்லை. காயப்பட்ட மூவரும் இரத்தம் வழிந்த நிலையில், வைத்தியசாலைக்கு நடந்தே சென்றார்கள். வழியில் தென்பட்டவர்கள்கூட, என்ன... ஏது...? என்றுகூட விசாரிக்கவில்லை. வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தார்கள்.

வைத்தியசாலையில் வைத்தியர் அருவருப்புடன் எல்லோரையும் நோக்கினார். அவனைத் தாக்கிய நபருக்கும் தலையில் சிறிய காயம் ஏற்பட்டிருந்தது. அந்த நபரும் வைத்தியசாலைக்கு வந்திருந்தான். வைத்தியர் சகோதரிகள் இருவருக்கும் தலையில் தையல் போட்டு மருந்து கட்டிவிட்டார். அவனுக்கு கண் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்ததால், அவர் அவனை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்புவதற்கு முடிவு செய்தார். நடந்தது ஓர் அடிபாட்டு நிகழ்வு என்பதால், வைத்தியசாலை நிர்வாகம் காவல்துறைக்கு அறிவித்தது. காவல்துறை உறுப்பினன் ஒருவன் வந்து, எல்லோரிடமும் விளக்க அறிக்கை பெற்றுக்கொண்டு போனான்.

இதற்கிடையில், அவனை அடித்த அந்த நபரின் மனைவி, தன்கணவனில் தான் பிழையென்பதை உணர்ந்து கொண்டு, நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்பதான ஒரு கடிதத்தையும், ஒரு சிறு அற்பதொகைப் பணத்தையும் ஓர் இரண்டாம் நபர் மூலமாகக் கொடுத்தனுப்பியபோது, அவன் இணங்கவில்லை. கடுமையான வார்த்தைகள்மூலம் கடிந்து அவரை அனுப்பி விட்டான். பின்பு அவனுக்கு மிக நெருக்கமான ஒரு கிறிஸ்தவமத போதகர் மூலம் கடிதமும் பணமும் கொடுத்தனுப்பப்பட்டது.

மதபோதகர் வந்தார். 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு...' எனும் வேதாகமத்தில் உள்ள இயேசுவின் சத்தியவசனம் அவனுக்குப் போதிக்கப்பட்டது. அவன் மசியவில்லை. இரண்டு நாள்கள் கழித்து அவன் படகுமூலம் கிளாலிக் கடற்பரப்பினூடாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டான். அங்கு ஒரு மாதமும் பதின்மூன்று நாள்களும் தங்கவேண்டி ஏற்பட்டது அவனுக்கு. பிரபல கண்வைத்திய நிபுணர் குகதாசன் (தற்போது அமரர்) அவர்கள், 'கண்ணில் இரத்தக்கண்டல் இருக்கு. ஒப்பிறேசன் செய்து அதை எடுத்தால்தான் கண்ணில் உள்ள அடியின் வலி குறையும். ஆனால், பார்வையிருக்காது. சம்மதம் எனில், விண்ணப்பத்தில் கையொப்பம் வைத்துக் கொடுங்கள். ஒப்பறேசன் செய்தால்தான் கண்ணின் வலி குறையும்...' என்று, மீண்டும் அழுத்தமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அவனுக்கு அப்போதைய நிலையில், கண்ணில் பார்வை வருவதைவிட வலி இல்லாமல் இருப்பதே உத்தமமாக இருந்தது. விண்ணப்பத்தில் கையொப்பம் வைத்துக் கொடுத்து விட்டான். சத்திரசிகிச்சையை குகதாசன் அவர்களும் நல்லபடியாக நடத்தி முடித்ததில், இப்போது கண்ணில் வலி குறைவாக இருந்தது. உள்காயத்துக்கு தாதிகள் சொட்டுமருந்து விட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவன் போதனா வைத்தியசாலையில் இருக்கும் நாள்களில், புதுக்குடியிருப்பில் இருந்து அவனைப் பார்க்க எவரும் வரவில்லை. வருவதற்கான ஆள் உதவி மற்றும் பணவசதி எதுவும் அவனது குடும்பத்தில் இருக்கவில்லை. ஒரு மாதமும் பதின்மூன்று நாள்களும் வைத்தியசாலையில் வழங்கப்பட்ட உணவையே அவன் உட்கொண்டான். கண்வலி ஓரளவு சுகப்பட்டதும், அவன் மீண்டும் கிளாலிக் கடற்பரப்பினூடாக புதுக்குடியிருப்பை வந்தடைந்தான்.

வீடு இருண்டுபோய்க் கிடப்பதான உணர்வு அவனுக்கு. வெயிலைப் பார்க்க முடியவில்லை. கண்கள் இரண்டும் கூசத்தொடங்கின. வெளியிலே நடமாடக் கூச்சப்பட்டவன், வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கொண்டான். சகோதரிகளுக்கும் தலையினுள் உள்காயம் ஆறவில்லை. அவன் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு வந்ததை அக்கம் பக்கத்திலிருந்தோர் பலரும் அறிந்து கொண்டார்கள். எவரும் என்ன ஏது என்று கேட்க வரவில்லை. அவனைக் காடுவெட்டிக் குடியிருக்கும்படி கூறிய அந்தப்பெண்ணும் தகவலறிந்தும், அவனிடம் வந்து எதுவும் சுகம் விசாரிக்கவில்லை. அது அவனுக்குள் சற்று நெருடலைக் கொடுக்கத் தொடங்கியது. அவன் வைத்தியசாயிலிருந்து வந்த இரண்டாம் நாள், அவனது சகோதரி ஒரு விடயத்தைக் கூறினாள்.

'டேய் தம்பி... நீ யாழ்ப்பாணம் போன பிற்பாடு, காவல்துறைக்காரன் மூண்டு நாலுதரம் வந்து, இன்னமும் உங்கட தம்பி வரேல்லையோ...? எண்டு கேட்டு எங்களுக்குக் கரைச்சல் தந்தான். ஒருநாள் அவனைப் பார்த்து, நீர் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்? அவையள் ஏதேனும் கையுக்கை ஐஞ்சைப் பத்தைத் தந்தவையோ... எண்டு கேட்டம். அதுக்கு அவன் சிரிச்சுக்கொண்டு போனவன்... அதுக்குப் பிறகு வரவேயில்லை. எங்களுக்கு காவல்துறை மேல சந்தேகமாயிருந்தது. இது குறிச்சு தலைவருக்கு ஒரு கடிதம் போட்டு, ஒரு கிழமையால ஒரு இயக்கப்பொடியன் வந்தான். வந்தவன், தான் அரசியல்துறையில வேலை செய்யிறதாகவும், நீங்கள் தலைவருக்குப்போட்ட கடிதம் கிடைச்சிருக்கிறதாகவும், தாங்கள் அதை எடுத்து விசாரிக்க இருக்கிறம் எண்டும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்... '

சகோதரி கூறிய விடயம் அவனுள் ஒரு புத்துணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி விட்டன.

ஆனால், சம்பவம் நடந்து, நாள்கள்தான் நகர்ந்து சென்று கொண்டிருந்தனவே தவிர, நடந்து முடிந்த பிரச்சினை குறித்து,

மேற்கொண்டு அதற்கான தீர்வை, நீதியை, நியாயத்தை வழங்க எவரும் முன்வரவில்லை.

நாள்கள் மாதங்களாகி... மாதங்கள் வருடங்களாகிக் கொண்டிருந்தன. அவன் இப்போது வெளியில் நடமாடத் தொடங்கியிருந்தான். புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள முகாம்கள் வாசலருகே சென்று நடந்த விடயத்தைக் கூறி விளக்கம் கேட்டான். ஒரு சில முகாம்களில் இருந்து , அவனுக்கான வினாக்குரிய பதில் மறுக்கப்பட்டது, வேறு சில இடங்களில் நிராகரிக்கப்பட்டது. இன்னொரு இடங்களில், அவன் மிரட்டப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பி விடப்பட்டான்.

அவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. யாரிடம் கேட்டுத் தெளிவு பெறுவது? என்பதில் அவன் தடுமாறினான். இப்போது அவனுக்கு எல்லோர் மீதும் சந்தேகம் எழுந்தது. தனது கையலாகத்தனத்தை எண்ணி தனக்குள் குமைந்தழுதான். வெயில் காலங்களில் தலையில் சூடு ஏறி தலையிடியோடு, பாதிக்கப்பட்ட கண்ணும் வலிக்கத் தொடங்கும். மன ஆற்றாமை கொண்டு இயக்கத்தை அவ வார்த்தை கொண்டு திட்டத் தொடங்கிவிடுவான். முற்றத்து மண்ணை அள்ளிச் சபித்து எறிந்தான்.

'அட நாசமாப் போவாரே... ஆரடா வந்து இந்தப் பிரச்சினையை எடுத்த ஆக்கள்? என்னை நம்பிக் கெடுத்த மாதிரியே நீங்களும் நம்பிக் கெட்டு நடுத்தெருவில தாண்டா நிப்பியள்.' அடிக்கடி அவனது வாய் அறம் போட்டுச் சபிக்க ஆரம்பித்தது. அவனது சாப வார்த்தைகளைக் கேட்டு, சகோதரி அவனை எச்சரிக்க ஆரம்பித்தாள்.

அவர்கள் தலைவருக்கு (?) அனுப்பிய கடிதம் கிணற்றுக்குள் போட்ட கல்லாயிற்று. வருடங்கள் பல கடந்து விட்டன. அவனது தாய் இறந்தும் போனாள். இந்நிலையில் அவனுக்குப் பத்திரிகைத்துறைக்குள் பணி புரிய அழைப்பு வந்தது. இரவு வேலை. நித்திரை விழிப்பு... அவனது கண்ணுக்கு வேதனையைக் கொடுத்தது. மிகவும் சிரமப்படத் தொடங்கினான். நாளடைவில் அவன் திருமண பந்தத்துக்குள் நுழைந்தும் விட்டான். ஆனால் அவனது கண், வலி கொடுக்கும் போதிலெல்லாம் அவனிடமிருந்து அறம் மிகுந்த சாபவார்த்தைகள் வெளிவருவது மட்டும் நிற்கவேயில்லை.

இதற்கிடையில், அவன் சில தகவல்களை அறிந்து கொண்டான். அத்தகவல்கள் எந்தளவுக்கு நிதர்சனமானவை என்பது குறித்து சந்தேகமாக இருந்தது அவனுக்கு. இருப்பினும், நெருப்பில்லாமல் புகை ஏது...? என்பது மட்டும் விளங்கியது அவனுக்கு.

தாக்குதல் தொடர்பாக விசாரிக்க வந்த காவல்துறை உறுப்பினனும், வைத்தியசாலையில் இருதரப்பையும் சமாதானப்படுத்த வந்த மதபோதகரும் பரிதானம் (கையூட்டு) வாங்கியிருக்கலாம்.. எனும் தகவலே அது. நாளடைவில் காவல்துறை இந்தச் சம்பவத்தை கவனத்தில் கொள்ளாது, கடந்து சென்றதையும், மதபோதகர் அடிக்கடி அவனது வீட்டிற்கு வந்து, பரிசுத்த வேதாகமத்தில் உள்ள சுவிஷேசங்களில் காணப்படும் 'சமாதானம்' எனும் வார்த்தை குறித்துப் போதிப்பததையும் அவன் நினைவினில் கொண்டு வந்தான்.

நடைபெற்றது ஒரு பாரதூரமான நிகழ்வு. மதுபோதை இருந்தது... வேலி பிரித்து உள்நுழைந்தது... பெண்களைத் தாக்கியது... கண் ஒன்றைச் சேதாரப்படுத்தியது... என குற்றங்கள் இருக்கையில், இது குறித்து தலைவருக்கு எழுதிய கடிதமும், அது கிடைத்து விசாரிக்கப்படும்... என்று கூறப்பட்ட வார்த்தையும் எப்படிக் கிடப்பில் போடப்பட்டன? அது போடப்படுவதற்கான காரணி என்ன? தமிழீழத்துக்கென உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் என்னவாயின? 'சுதந்திர சோஷலிச தமிழ் ஈழம்' என்பது என்ன? என்பது குறித்து, அவன் தனக்குள் அடிக்கடி வினாக்களை எழுப்பிக் கொண்டிருந்தான். ஆயினும், பதில்கள் கிடைக்கவில்லை.

வன்னியில் போர் உக்கிரம் பெறத் தொடங்கிய போதில், இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் வலையன்மடத்தில் இருந்த அவனது சகோதரிகள் இருவரும் இறந்து போய் விட்டார்கள். அவன் தன் மனைவியோடு இரணைப்பாலையில் இருந்ததில் தப்பிப் பிழைக்க முடிந்தது. சகோதரிகள் இறந்த தகவலை அறிந்ததும், அவனது வாய் இராணுவத்தைத் திட்டுவதற்குப் பதிலாக, 'தலைவருக்கு நீங்கள் போட்ட கடிதம் கிடைச்சிருக்கு. விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுவம்...' எனக் கூறியவனை நினைத்து சபிக்கத் தொடங்கியது. தலையில் அடி வாங்கிய தழும்புகளோடே சகோதரிகள் இருவரும் நீதி, நியாயம் கிடைக்காமல் அநியாயமாக இறந்து போனதை நினைக்க, அவனுக்கு வன்ம உணர்வு கிளர்ந்தெழத் தொடங்கியது.

'எனக்கும் நாளைக்கு ஏதாவது ஒன்று ஆகிவிடுமாக இருந்தால், பார்வை இழந்த இந்தக் கண்ணுக்கான தலைவரின் பதில்தான் என்ன? ' என்பதே அவனது கேள்வியாக இறுதிவரை இருந்தது.

ஒருவாறாக வன்னிப்போர் முடிவுக்கு வந்து, அதற்கான முற்றுப்புள்ளியைக் காலம் இட்டு, சகலருக்குமான கணக்கை முடித்தபோது, அதில் பலர் முகவரியற்றுப் போயிருந்தார்கள். அதில் தலைவரும் ஒருவர் என்று கூறப்படுகிறதை அவன் அறிகின்றான். சிலர் அவர் இறக்கவில்லை... என்றும் உயிரோடு இருக்கிறார்... என்றும், மீண்டும் படையணி திரட்டி, படைமுகாம்கள்மீது பாயப்போகிறார்... என்றும் கூறிக்கொள்கிறார்கள்.

எது எப்படியிருப்பினும், தலைவர் திரும்ப உயிரோடு வந்தால், முதலில் தனது கண் பாதிப்படைந்ததற்கான செயலுக்கு ஒரு நீதியை நியாயத்தை வழங்கிவிட்டு, படைகளின் முகாம்கள் மீது அவர் தன் படையணியோடு பாயட்டும்... என்றுதான் அவன் இன்றும்கூடக் கூறிக்கொண்டிருக்கிறான்.

தலைவர்(?) வருவாரா...?

# எங்கே போய் முட்ட?



படம் தமிழ் கார்டியன்

உலகம் எங்கோ போய்க் கொண்டிருக்கும். அது பற்றி கவலை இல்லாமல், புலன் பெயர்ந்த கூட்டம் இன்னொரு பக்கம் ஓடிக் கொண்டிருக்கும்.

ஊருலகம் என்ன நினைக்கிறது என்ற கவலை இல்லாமல் தன்னுடைய உலகத்திலேயே சஞ்சரிக்கும்.

தமிழீழ பெண்கள் உதைபந்தாட்ட அணி சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட மாதிரி, வீடியோ ஒன்றைப் போட்டு, புல்லரித்துச் சுய இன்பம் கண்டு கொண்டிருந்தார்கள்.

உலகமே ஒன்று சேர்ந்து தங்களைச் சதி செய்து அழித்ததாகச் சொல்கிற அதே கும்பல் அதே உலகம் தங்களை அங்கீகரித்து விட்டதாகப் பெருமை கொள்கிறது. 99.9 வீதம் வாக்களித்து நட்டுக் கழண்ட ஈழம் அமைத்த பின்பு, இப்போது தமிழீழத் தேசிய உதைபந்தாட்ட அணி.

புலிகள் பயங்கரவாதிகளாக்கப்பட்டு அழிக்கப்பட்ட பின்னாலும், புலிகள் இருப்பதான பிரமையை ஏற்படுத்தியபடி, புலிக் கொடியைச் சுமந்து பெருமை கொள்கிறவர்களுக்கு எந்தப் புத்தியைச் சொல்ல முடியும்?

இதன் மூலம் சுய இன்பம் அடைவதைத் தவிர வேறென்ன பயன்?

பாலஸ்தீனத்தில் கண் முன்னாலேயே இத்தனை அழிவையும் பார்த்துக் கொண்டிருக்கும் சர்வதேசம் தங்களை அங்கீகரிக்கும் என்ற நினைப்பில் இருக்கிறவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார்கள்?

சர்வதேசம் தங்களுக்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று நம்புகிறவர்கள் என்ன நம்பிக்கையோடு இருக்கிறார்கள்? இவர்கள் சர்வதேசத்திற்கு என்ன மாமனா? மச்சானா?

இவர்களுக்கு தினவு எடுக்கும்போது பிடித்து விடவும், அரிக்கும்போது சொறிந்து விடவும் சர்வதேசம் என்ன எடுபிடியா? எதற்காக இந்தக் கூத்துக்கள் எல்லாம்?

சர்வதேசம் பயங்கரவாதிகள் என்று தடை செய்தவர்களை, இல்லை, அவர்கள் புனிதப் போராளிகள் என்று இவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக சர்வதேசம் அங்கீகரித்து ஈழத்தைக் கையில் கொடுத்து விடுமா?

இந்தக் கூத்துக்களின் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், தமிழ் இனத்தின் அழிவை வைத்து இன்றைக்கும் பணம் சுருட்டலாம் என்று நம்புகிற யாரோ ஒரு அயோக்கியக் கும்பலாகத் தான் இருக்கும்.

இல்லை, யாழ்ப்பாணிகள், அதிலும் புலியை வைத்துப் பிழைப்பு நடத்தி போராட்டப் பணத்தை ஏப்பம் விட்ட கும்பல் தங்கள் சொந்தப் பணத்தை எல்லாம் செலவிட்டு ஈழம் எடுக்கப் போகிறார்கள் என்று நம்பினால்...

நீயும் ஒரு யாழ்ப்பாணியே!

முள்ளிவாய்க்காலில் மண்டை பிளந்து கண்ணைத் திறந்தபடி கிடந்த பிரபாகரனின் வீடியோவைக் கண்ட பின்னாலும், ‘தலைவர் உயிரோடு இருக்கிறார்’ என்பதை இந்த யாழ்ப்பாணிகள் நம்பிக் கொண்டு தான் இருந்தார்கள். அவர்களை நம்ப வைத்து ஏமாற்ற ஒரு அயோக்கியர் கூட்டம் இருந்தது.

அந்த நேரம் நிலைமை அப்படி. யுத்த இறுதிக்கட்டம். வந்து கொண்டிருந்த செய்திகள் ‘எல்லாம் முடிந்தது’ என்றபடியிருக்க, அதைப்

பற்றி செய்தி வெளியிட்டால் எந்தப் பக்கம் இருந்து அடிவிழும் என்று ‘தமிழ்த் தேசிய ஊடகங்களுக்குப் பயம். எவருக்குமே எந்தத் துணிச்சலும் இருக்கவில்லை.

இதனால், தலைவர் எரித்திரியாவில் உயிரோடு வைக்கப்பட்டிருந்தார்.

கிட்டத்தட்ட பதினைந்து வருடங்கள். அவரது ஆன்மா சாந்தியடைய அவருக்கு காடாத்த யாரும் இருக்கவில்லை. கடைசியில் அவரது அண்ணனின் குடும்பத்தினர் அவருக்கு விளக்கு ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அதற்கு தலைவரை வைத்துப் பிழைப்பு நடத்துவோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த நிகழ்வுக்கான மண்டபத்தைப் பெறுவதைக் கூடத் தடுத்து நிறுத்தியிருந்தார்கள்.

பெரும் கேலிக்கூத்தான இதையெல்லாம் இவர்கள் சொல்கிற சர்வதேசம் கண்காணித்துக் கொண்டு தானே இருக்கும்?

என்னவோ, தலைவருக்குப் பூ வைத்த மாதிரி, ‘இருந்தால் தலைவன், இறந்தால் இறைவன்’ என்று, யாழ்ப்பாணிகளுக்குக் காதில் வைத்த பூக்களுக்காவது இனி முடிவு வரும் என்று நம்பினால்...

நீ ஒரு யாழ்ப்பாணியே இல்லை!

இந்தப் புலன் பெயர் கூட்டம் தன் பாட்டில் இப்படி ஓடிக் கொண்டிருக்க, தேசத்தின் புதல்வியின் தலைமையில் ஈழம் காண ஒரு கூட்டம் ஓடிக் கொண்டிருக்கிறது.

லண்டனில் உள்ள சேரமான் என்கிறவரும், அவுஸ்திரேலியாவில் இன்பத்தமிழ் வானொலி வைத்திருக்கிறவரும், சுவிஸில் புலி உண்டியல்காரர் அப்துல்லா என்று ஒருவரும் தான் தேசத்தின் புதல்வியின் கோட்பாதர்கள்.

இவர்கள் தான் உயிரோடு இருக்கிறவர்களுக்கு விளக்குக் கொளுத்துவதா என்று, அண்ணை உயிரோடு இருக்கிறார் என்று அடித்துச் சொல்கிறவர்கள். அண்ணை இருக்கிறார் எண்டால் எங்க இருக்கிறார் என்று கேட்டால், கடவுள் மாதிரி ‘அங்க இருக்கிறார், இங்க இருக்கிறார்’ கதை தான்.

லண்டனில் உள்ள சேரமான் என்கிறவரும், அவுஸ்திரேலியாவில் இன்பத்தமிழ் வானொலி வைத்திருக்கிறவரும், சுவிஸில் புலி உண்டியல்காரர் அப்துல்லா என்று ஒருவரும் தான் தேசத்தின் புதல்வியின் கோட்பாதர்கள்.
இவர்கள் தான் உயிரோடு இருக்கிறவர்களுக்கு விளக்குக் கொளுத்துவதா என்று, அண்ணை உயிரோடு இருக்கிறார் என்று அடித்துச் சொல்கிறவர்கள். அண்ணை இருக்கிறார் எண்டால் எங்க இருக்கிறார் என்று கேட்டால், கடவுள் மாதிரி ‘அங்க இருக்கிறார், இங்க இருக்கிறார்’ கதை தான்.

தேசத்தின் புதல்வியின் தலைமையில் அணி திரள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு புலன் பெயர் தமிழர் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்த வணங்காமண் புறப்படக் கூடும். எதற்கும் கராஜிற்குள் எறியாமல் வைத்திருக்கும் வின்ரர் கோட்டுகளை பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். தமிழீழத்தின் விடுதலைப் படையினருக்குப் பயன்படும்.

புலிகளின் புலனாய்வுப் பிரிவின் விநாயகம் காலமாகி விட்டார். அது சேரமானுக்கு மகிழ்ச்சிக்குரிய வெற்றிவிழாவாகி விட்டது. ‘இரண்டகர்’ விநாயகம் கோத்தபாயாவின் கொலையாளி ஆகி விட்டார் என்றும் பரிதி அண்ணையைக் கொலை செய்தவர் என்றும் தேசத்தின் புதல்வியைக் கொல்லச் சதி செய்தவர் என்றும் சேரமான் அடிக்கடி றீல் விட்டுக் கொண்டிருக்கிறார்.


ஆக, தலைவருக்கு மட்டுமில்லை, விநாயகத்திற்கும் விளக்குக் கொளுத்தக் கூடாது. அவ்வளவு தான்.

புலி தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டாலும், கொலைகள் நடந்தாலும் பொலிஸில் முறையிட்டுக் குற்றவாளிகளைக் காட்டிக் கொடுப்பதில்லை.

கூட்டுக் களவாணிகளின் பிழைப்புக்கு பங்கம் அல்லது தாங்களும் மாட்டிக் கொள்ள நேரிடும் என்பதை விட, அதற்கு வேறென்ன காரணமாக இருக்கும்?

இது எல்லாம் ஆங்காங்கே நடக்கும். இந்தச் சமூகத்திற்கு தலைவர் வந்தும் என்னத்தைச் செய்ய முடியும் என்று கேட்கத் தெரியவில்லைத் தானே!?

டேய், நீங்கள் உண்மையாகவே லூஸ் கேஸ்களா? இல்லை, லூஸ் மாதிரி நடிக்கிறீங்களாடா? என்று யாராவது கேட்க மாட்டார்களா?






# பதினைந்து 15

1, குருவானவர்கள், மகான்கள் சொல்வதைக் கேட்பீர்.

2, அவர்கள் நல்லறிவுரைப்படி வாழ வேண்டும், என்பீர்.

3, வாழீர் அதுபடி.

4, அவர்களே வாழார்.

5, பிறமனை விரும்பேல், என்பீர்.

6, விரும்புவீர்.

7, அவர்களில் பலரும் புகுந்தே இருப்பர்.

8, மதன ஆசைகளை மறுதலிப்பதானது வாழ்வை மறுதலிப்பதாம்.

9, வாழ்வை எவரும் மறுதலிக்கார்.

10, '10' கட்டளைகள் என்றதெல்லாம் பேருக்கு.

11, 11 ஆவது கட்டளை 10 உம் பறக்கும், என்பதே.

12, உள்ளுணர்வுகளுக்கு எதிராகத்தான் சீலம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

13, சீலத்தை நிலை நாட்ட உள்ளத்தின் உள்ளே உள்ள உணர்வை கட்டலாம்.

14, 'அது' இல்லை, என்பதுதான் பொய்.

15, பொய்தானே உலகம்.

# "Fifteen 15

1] You listen to Masters and Maestros.

2] You say to live as per to their wise advice.

3] You wouldn't live as they say.

4] Not even THEM.

5] "Don't lust for 'other house mate,'" they say.

6] You lust (anyway).

7] They too would have intruded.

8] Rejecting erotic desires is rejecting life.

9] No one rejects life.

10] 10 Commandments are for bragging.

11] 11-th Commandment: All '10' will vanish .

12] Morality is taught against the internal feelings.

13] To prove the Morality, internal feelings that are within the heart could be tied.

14] Saying that there is no THAT is a lie.

15] World is a lie (after all).

### மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:
### வரலாற்று தேடல்கள் 17



# கிழக்கை இரத்தக்களறியாக்கி மீளக் கைப்பற்றிய வன்னிப்புலிகள்

2004-கிழக்குப் பிளவைத் தொடர்ந்து கருணாம்மானை துரத்துயடித்து மட்டு-அம்பாறை மாவட்டங்களை மீள கைப்பற்றும் நோக்கோடு வாகரையிலும் வெருகலிலும் நடந்த கொடூரமான சகோதர படுகொலை அனைத்து ஊடகங்களாலும் அப்படியே மூடி மறைக்கப்பட்டது. சக போராளிகளான சொந்தச் சகோதரர்களையே கொன்றொழித்து கிழக்கை மீளக் கைப்பற்றும் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர் வன்னிப்புலிகள். அவர்கள் சொல்வது ஒன்றே மந்திரம் என்று தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரும் கைகட்டி வாய்முடி அவற்றை மட்டுமே செய்தியாகப் பிரசுரித்தனர். அத்தகைய செய்திகளையே அனைத்து விதமான தமிழ் மற்றும் சிங்கள ஊடகங்கள் மீள மீள பிரசுரித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை பிராந்திய அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யன் வெருகல் படுகொலையைத் தொடர்ந்து வாகரையில் செய்தியாளர்களிடம் ஏப்ரல் 13 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முதன் முறையாகப் பேசினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் களுக்கு அமைவாக 'துரோகி கருணா' குழுவிடமிருந்து அப்பகுதியை மீட்டெடுத்ததாக தெரிவித்தார்.

'தலைவர் பிரபாகரனின் வழிநடாத்தலில் பிராந்தியத்திற்கான சிறப்புத் தளபதி ரமேஷ் தலைமையில் பிரபா மற்றும் ஜெயார்த்தன் போன்ற தளபதிகளால் அப்பிரதேசங்கள் அக்கறையுடனும் மனிதாபிமான அக்கறையுடனும்

எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்

நிறைவேற்றப்பட்டது' என கௌசல்யனை மேற்கோள் காட்டி தமிழ் நெட் இணையத்தள ஆங்கிலச் சேவை தெரிவித்தது. வெருகல் படுகொலையின் போதான மிலேச்சத்தனங்களை மட்டுமல்ல அதற்கு பொறுப்புச் சொல்லவேண்டிய சொர்ணம்,பானு போன்றவர்களின் பெயர்களை மறைத்து மட்டக்களப்பு தளபதிகளின் பெயரை முன்னிறுத்திய தமிழ் நெட் 'வாகரையில் இடம்பெற்ற மோதலில் வெறுமனே மூன்று போராளிகளே கொல்லப்பட்டனர். எனத்தெரிவித்து கொல்லப்பட்டவர்களென கீழ்வரும் பெயர்களை வெளியிட்டது.

'பொதிகைத் தேவன் என்றழைக்கப்படும் (பதுளை வீதி, கித்துள் குளம், கரடியனாறு) வேலுபாண்டியன்

'சங்கோலியன் என்றழைக்கப்படும்

(கடுக்கா முனை, கொக்கட்டிச்சோலை) கந்தசாமி அருட்செல்வம்

'மலர்குமாரன் என்றழைக்கப்படும் (மாவளையன், கரடியனாறு) தங்கராஜா குகன்

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பெருநிலப்பரப்பில் உள்ள அனைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ முகாம்களும் முழுமையாகச் சோதனையிடப்பட்டு பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக புலிகளின் மட்.சிறப்புப் படைத் தளபதிகள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர் என புலி ஆதரவுத் தளமான தமிழ் நெட்(13 ஏப்ரல்) ஆங்கிலச் சேவை செய்தி வெளியிட்டது. கருணாவால் கைவிடப்பட்ட 'மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட ஆயுதக் களஞ்சியத்தை நாங்கள் முழுமையாக மீட்டுள்ளோம். கனரக மோட்டார் மற்றும் சில துப்பாக்கிகள் தவிர வெடிமருந்து கிடங்குகள் அப்படியே உள்ளன என்றும் கிழக்கில் இருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய தளமான 'மீனகம்' பகுதியில் பல வாகனங்கள் தீயிடப்பட்டு எரிந்து கிடப்பதாகவும் அவர்கள் கூறினர் எனவும் அச்செய்தி மேலும் கூறியது.

மேலும் அச்செய்தியில் 'கருணாவும் அவரது கூட்டாளிகளும் மிக அவசரமாக அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர். ஆழ ஊடுருவிய எங்களது சிறப்புப் படைகளின் தாக்குதல்கள் அவரது படை வலுவை இழக்கச் செய்து அவரை பீதி அடையச் செய்திருக்க வேண்டும். மேலும் பல படையணிகள் அவரது உத்தரவுகளை ஏற்க மறுத்து எங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவர் தனது படையணிகளின் கட்டுப்பாட்டை முழுமையாக இழந்துவிட்டார் என்று வன்னிப்புலிகளின் தளபதிகள் தெரிவிப்பதாக அச்செய்தியில் விபரிக்கப்பட்டது. அதேவேளை கருணாவின் பிடியில் இருந்த விடுதலைப் புலிகளின் மூத்த புலனாய்வுத்துறை பொறுப்பாளரான 'நீலன்' தரவை-குடும்பிமலை (தொப்பிகல) பிரதேசத்திலிருந்த 'மருதம்' முகாமில் கைகளும் கண்களும் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏப்ரல் 14 ஆம் திகதியன்று வன்னிப் புலிகள் அறிவித்தனர்.

### கொழும்பிலே தஞ்சமடைந்த கருணாவும் தளபதிகளும்

கிழக்கிலிருந்து பின்வாங்கி கொழும்பை வந்தடைந்து ஹில்டன் ஹோட்டலில் தங்கியிருந்த கருணாம்மான் தலைமையிலான குழுவினருக்கும் மற்றுமொரு ஹோட்டலில் தங்கிக் கொண்ட குகனேசன் தலைமையிலான குழுவினருக்கும் இடையே தொலைபேசி உரையாடல்கள் மூலமாக மட்டுமே தொடர்புகளைப் பேணுவதென்றும் யாருமே கருணாம்மான் தங்கியுள்ள ஹில்டன் ஹோட்டல் பக்கம் செல்வதோ அப்பகுதிகளில் நடமாடுவதோ கண்டிப்பாக கூடாது என்னும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டன.

உடனடியாகவே பெண் தளபதிகளான நிலாவினி, சாவித்திரி, தீந்தமிழ், பிறேமினி, லாவண்யா போன்றோரை உயிரோடு பாதுகாக்கும் பொருட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நோக்கோடு அவர்களுக்குரிய தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு போன்றவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

> 'கருணாவும் அவரது கூட்டாளிகளும் மிக அவசரமாக அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர். ஆழ ஊடுருவிய எங்களது சிறப்புப் படைகளின் தாக்குதல்கள் அவரது படை வலுவை இழக்கச் செய்து அவரை பீதி அடையச் செய்திருக்க வேண்டும். மேலும் பல படையணிகள் அவரது உத்தரவுகளை ஏற்க மறுத்து எங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அவர் தனது படையணிகளின் கட்டுப்பாட்டை முழுமையாக இழந்துவிட்டார் என்று வன்னிப்புலிகளின் தளபதிகள் தெரிவிப்பதாக அச்செய்தியில் விபரிக்கப்பட்டது.

கிழக்கிலோ கருணாம்மானால் வீடுகளுக்கு அனுப்பப்பட்ட அந்த 6000 போராளிகளையும் மீளிணைத்துக் கொள்வதற்காக வீதி வீதியாக கொலைவெறி பிடித்து அலைந்தனர் வன்னிப்புலிகள். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் அனைத்திலும் ஒலிபெருக்கியூடான அறிவுறுத்தல்களும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப் படுகின்றன. அரசியல்வாதிகள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், முக்கியதளபதிகளின் உறவினர்கள் பொதுமக்கள் என்று பல்வேறு தரப்பினரும் தொடராக வன்னிப்புலிகளால் கடத்தப்படும் சூழல் அதிகரிக்கத் தொடங்கியது. நிலைமைகள் பயங்கரமாகவும் கட்டுக்கடங்க முடியாதனவாயும் மாறின.

இதன் காரணமாக இயக்கத்திலிருந்து வெளியேறிய போராளிகள் தமது சொந்தபந்தங்களோடு இணைந்து வாழும் உரிமையை வன்னிப்புலிகள் அவர்களுக்கு பகிரங்கமாகவே மறுத்தனர். அதன்காரணமாக ஏதாவது வெளிநாடுகளுக்காவது தப்பிச்சென்றுவிடும் நோக்கோடு சுமார் இரண்டாயிரம் வரையான போராளிகள் கொழும்பு நோக்கி படையெடுக்கத் தொடங்கி யிருந்தனர். கருணாம்மானுடன் கொழும்பை வந்தடைந்த பெரும்பாலான தளபதிகள் திருமணமானவர்கள் என்பதால் அவர்களது மனைவிமாரும் வன்னிப்புலிகளின் உயிரச்சுறுத்தல் காரணமாக மட்டக்களப்பில் இருக்கமுடியாத சூழலில் தத்தமது கணவர்களுடன் இணைந்து கொள்ளும் நோக்கில் கொழும்பு நோக்கி வரத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில் பெண் போராளிகளின் நிலை மிகப் பரிதாபகரமாக இருந்தது. காரணம் அவர்கள் ஆண்களைப் போல் தனியாக அங்குமிங்கும் ஓடியொழித்து திரிய முடியாது என்பதனால் வன்னிப்புலிகளின் குறிகளிலிருந்து

தப்ப முடியவில்லை. அதுமட்டுமன்றி பெண் போராளிகளின் கூந்தல்கள் ஒட்ட வெட்டப்பட்டு இருந்தமையினால் அவர்கள் எங்கு சென்றாலும் இலங்கையரசின் பாதுகாப்புப்படைகள் மற்றும் சாதாரண பொதுமக்கள் கூட அவர்களை அடையாளம் கண்டுகொள்வது எளிதாக இருந்தது. இதன் காரணமாக அவர்கள் மாதக்கணக்கில் அக்கம் பக்கத்துக்கு கிராமங்களிலும் படுவான்கரைக்கு நெருக்கமாக இருந்த சிங்களக் கிராமங்களிலும் வாழும் உறவினர்கள், தெரிந்தவர்கள் போன்றவர்களிடம் தஞ்சமடைந்து வீடுகளுக்குள் தலைமறைவாக முடங்கிக் கிடக்க நேரிட்டது.

கிழக்கு மாகாணத்தை விட்டு தப்பிச்சென்ற கருணாம்மானையும் தளபதிகளையும் வன்னிப்புலிகளின் புலனாய்வுத் துறையினரின் விஷேட பிஸ்டல் குழுவினர் இலங்கையெங்கும் சல்லடை போட்டுத் தேடத்தொடங்கினர். அது மட்டுமன்றி புலிகளின் கிழக்கு படையணி முகாம்களிலிருந்து கலைத்து விடப்பட்ட கிழக்குப்போராளிகளின் அத்தகைய புலம்பெயர்வை விரும்பாத வன்னிப்புலிகள் அவர்கள் மீதான கொலைப்படலத்தை நாடெங்கும் விரிவாக்குகின்றனர். தம்மோடு மீள இணைந்து கொள்ளவில்லை யென்றால் கிழக்குப்போராளிகள் எவரும் எங்கு சென்றும் உயிருடன் வாழமுடியாது என்னும் பேரச்சமொன்றை பரப்பும் நோக்கோடு வெளிநாடு செல்லமுனையும் இளைஞர்களையும் குறிவைத்தும் கொல்லத் தொடங்குகின்றனர். இதனுடாக தமது ஆட்புல எல்லைக்குள்ளேயே அவர்களை முடக்கி வலுக்கட்டாயமாக தமது படையணிகளை மீளச் சீர்செய்துகொள்வது என்பது அவர்களின் நோக்கமாக இருந்தது.

இவ்வாறாக கருணாம்மானும் அவரது தளபதிகளும் கிழக்கை விட்டு வெளியேறி தலைமறைவாகி யமைக்குப் பின்னரான நாட்களில் கிழக்கில் வன்னிப்புலிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனங்கள் தொடர் கொலைகளின் பூமியாக கிழக்கு மாகாணத்தை மாற்றியது.

> வெளிநாடுகளுக்குத் தப்பியோடும் நோக்கோடு பாஸ்போட் அலுவலகத்துக்கு வருகின்ற நூ ற்றுக்கணக்கான கிழக்கு மாகாணப் போராளிகளை எச்சரிக்கின்ற ஒரு நடவடிக்கையாக ஒரு நாள் அதிகாலைப்பொழுதில் கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்தினருகே ஒரு மட்டக்களப்பு இளைஞனை கொன்று வீசிவிட்டு சென்றிருந்தனர் வன்னிப்புலிகள். 26.04.2004 அன்று 'மட்டக்களப்பு:கொழும்பு பிரதான வீதியில் உள்ள குருநாகல் சந்தியில் கனகசபை துரைராசசிங்கம் என்ன அடையாளம் காணப்பட்ட மட்டக்களப்பு இளைஞனொருவர் இனம்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டு கிடந்தார்.' என்னும் செய்தி வெளியானது. இதனுடாக கிழக்குக்கு வெளியே தப்பிச் செல்பவர்களிடத்திலும் பெரும் பதட்டமொன்று தோற்றுவிக்கப்பட்டது.

ஒருபுறம் நாளும் பொழுதும் வன்னிப்புலிகளால் கிழக்குப் போராளிகள் ஆங்காங்கே சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களையும் மறுபுறம் இந்த கொலைப்படலம் தென்னிலங்கை நோக்கியும் விரிவடையத் தொடங்கி விட்டதனையும் ஊடகங்கள் அறிவித்துக் கொண்டிருந்தன.

வெளிநாடுகளுக்குத் தப்பியோடும் நோக்கோடு பாஸ்போட் அலுவலகத்துக்கு வருகின்ற நூ ற்றுக்கணக்கான கிழக்கு மாகாணப் போராளிகளை எச்சரிக்கின்ற ஒரு நடவடிக்கையாக ஒரு நாள் அதிகாலைப்பொழுதில் கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்தினருகே ஒரு மட்டக்களப்பு இளைஞனை கொன்று வீசிவிட்டு சென்றிருந்தனர் வன்னிப்புலிகள். 26.04.2004 அன்று 'மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் உள்ள குருநாகல் சந்தியில் கனகசபை துரைராசசிங்கம் என்ன அடையாளம் காணப்பட்ட மட்டக்களப்பு இளைஞனொருவர் இனம்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டு கிடந்தார்.' என்னும் செய்தி வெளியானது. இதனுடாக கிழக்குக்கு வெளியே தப்பிச் செல்பவர்களிடத்திலும் பெரும் பதட்டமொன்று தோற்றுவிக்கப்பட்டது.

அடுத்து வந்த சில நாட்களில் குகனேசன் குழுவினர் தங்கியிருந்த விடுதி இருந்த பிரதேசத்துக்கருகிலும் 'இரண்டு மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்கள் இனம்தெரியாத நபர்களால் கொல்லப்பப்பட்டு கிடந்தார்கள்.' என்னும் செய்தி வருகின்றது. குகனேசன், பிள்ளையான் என அனைவர் முகத்திலும் மரணபயம் வெளிப்படத் தொடங்கிவிட்டது. 'பொட்டன் வாசல்வரை வந்துவிட்டான். கொழும்பு நிலைமைகள் மேலும் அச்சமூட்டின.

'அனைவரும் இருக்கின்ற பணத்தை சரிசமமாக பிரித்து எடுத்துக் கொள்வோம். வெளிநாடு செல்பவர்கள் செல்லலாம். எல்லோரும் அவரவர் முடிவை எடுத்துக் கொள்ளுவோம்.' என்றவாறாக எல்லோருமாக ஒரு பொது உடன்பாட்டுக்கு வருகின்றனர். எல்லோரும் ஒப்புக்கொண்டதைப் போல இருந்த பணத்தொகையை பிரித்தெடுத்துக் கொண்டு ஒவ்வொருவரும் சிறு சிறு குழுக்களாக இணைந்து வெவ்வேறு இடங்களில் தங்கிக்கொள்ளும் வண்ணம் பிரிந்து செல்கின்றனர். வெவ்வேறு இடங்களில் தனித்தனி குழுக்குழுக்களாக தங்கிக்கொள்கின்றனர்.

## வன்னிப்புலிகளிடம் சரணடைந்த 16 கிழக்குத் தளபதிகள்:கொடூர கொலை

மட்டக்களப்பிலிருந்து கீர்த்தி மற்றும் ரமணன் போன்றோர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தளபதிமார் ஒவ்வொருவரையும் குறிவைத்து அவரவர் மனைவியர் களூடாக உரையாடுகின்றனர்.

'கருணாம்மானுடன் இணைந்து கொழும்பு சென்றவர்கள் கூட கருணாம்மானை மறுதலித்துமீண்டும் மட்டக்களப்புக்கு வந்துசேர்ந்து இயக்கத்திடம் சரணடைபவர்களுக்கு மன்னிப்பளிக்க 'தலைவர்' தயாராகவுள்ளார்.' என்கின்ற வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக மூத்த தளபதிகளாகவும் பொறுப்பாளர் களாகவும் இருந்த பலரும் பிரபாகரனிடம் சரணடையும் பொருட்டு மட்டக்களப்பு திரும்பும் முடிவினை எடுக்கின்றனர்.

இதில் கருணா பிளவின் பின்னர் மட்டு-அம்பாறை அரசியல் பிரிவின் துணைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த 'விசு' என்றழைக்கப்பட்ட சின்னத்தம்பி கோபாலன் புதன்கிழமை பிற்பகல் (14 ஏப்ரல்) மட்டக்களப்பை சென்றடைந்து மீண்டும் வன்னிப்புலிகளுடன் இணைந்து கொண்டார்.

அந்தச் சம்பவத்தை வன்னிப்புலிகள் பரபரப்பான செய்தியாக்கியதன் ஊடாக அவரைத் தொடர்ந்து பல தளபதிகளை சரணடையச் செய்யத் தூண்டுவதற்கான முயற்சிகளில் இறங்கினர். அதுமட்டுமன்றி அவருக்கு எவ்வித துன்புறுத்தல்களிலோ பயமுறுத்தல்களோ இல்லை என்று அவரை வைத்தே கொழும்பிலிருந்த பல தளபதிகளுடன் தொலைபேசியூடாக உரையாட வைக்கும் சதியை வன்னிப்புலிகளின் புலனாய்வுத் துறையினர் கச்சிதமாக செய்தனர்.

அம்முயற்சிகள் அவர்களுக்கு வெற்றியைத் தந்தன. ஏப்ரல் 15ஆம் திகதியன்று மட்டு-அம்பாறை இராணுவத் துறைப் பொறுப்பாளர்- ஜிம்கலி தாத்தா கொழும்பிலிருந்து திரும்பி வந்து வன்னிப்புலிகளிடம் சரணடைந்தார். வன்னிப்புலிகளிடம் சரணடைபவர்களுக்கு மன்னிப் பளிக்கப்படுகின்றது என்னும் செய்திகள் இலங்கையெங்கும் ஓடியொழித்து அலைந்து திரிந்த போராளிகளிடத்திலும் தளபதிகள் மட்டத்திலும் கூட பரவலான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தத் தொடங்கியது.

அதன் காரணமாக தொடர்ந்து வந்த நாட்களில் மட்டு-அம்பாறை நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் துரை, மட்டு-அம்பாறை துணை இராணுவத் துறைப் பொறுப்பாளர் றொபேட், மாவடி முன்மாரி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சுதா, பொருண்மியத்துறைப் பொறுப்பாளர் நிஸாம், திருமால், மற்றும் தமிழீழ இசைக்குழு பொறுப்பாளர் எஸ்.பி.ஈஸ்வரநாதன் போன்றோர் அனைவரும் தொடராக வன்னிப்புலிகளிடம் சரணடைந்தனர்.

இதற்கிடையே கருணாம்மானும் அவரது தளபதிகளும் கொழும்பை வந்தடைந்த ஒரு சிலநாட்களில் அதாவது ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி அவரது மனைவியும் குழந்தைகளும் உதவியாளர் 'லத்தீப்' என்னும் போராளியும் இந்தியாவிலிருந்து கொழும்பு வந்து சேர்கின்றனர். அவ்வேளை ஹில்டன் ஹோட்டலில் ஏனையவர்களை தங்கியிருக்க வைத்துவிட்டு கருணாம்மான் வேறு இடத்துக்கு மாறியிருந்தார். இந்தியாவிலிருந்து வந்தவர்கள் அன்றைய தினம் ஹில்டன் ஹோட்டலில் இருந்த ஏனைய போராளிகளுடன் தங்கியிருந்து விட்டு மறுதினம் இராப்பொழுதில் கருணாம்மான் மறைந்திருந்த புதிய இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்நிலையில் கொழும்பில் பிள்ளையான், குகனேசன் போன்றவர்கள் கருணாம்மானுடன் இருந்த பெண் தளபதிகளை பொறுப்பெடுத்து மற்றுமோர் இடத்தில் அவர்களை தங்க வைக்கும் முயற்சியில் இறங்கினர். அவர்களை தங்களுடன் தங்கிக் கொள்ள செய்வதானால் பெண்கள் என்னும் வகையிலான சில சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என கருதியதால் அவர்களை தனியொரு மூன்றாவது இடத்துக்கு மாற்றுகின்றனர். அந்த முடிவானது 'எவ்வளவு பெரிய தவறு' என்றும் அதன் காரணமாகவே அவர்களும் தளபதிகளைப்போலவே பொட்டம்மானின் வலையில் வீழ நேர்ந்தது என்றும் தற்போதும் எண்ணி வருந்துகின்றார் பிள்ளையான்.

அதன் பின்னர் ஒருவார காலம் வரை கருணாம்மான் ஏனைய அணியினருடன் தொடர்புகளைப் பேணிக்கொண்டு வந்தார். எனினும் திடீரென்று அவருடனான தொடர்புகள் அற்றுப்போகின்றன. எனவே குகனேசன் அணியினர் கருணாம்மானுக்கு ஏதோ நடந்து விட்டது என்னும் அச்சத்துக்குள்ளாகின்றனர். அதன் காரணமாக தங்கள் தங்குமிடத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை உணரப்படுகின்றது. அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலை விட்டு உடனடியாக வெளியேறி வேறு ஒரு புதிய இடத்துக்கு சென்று விடவேண்டும் என்னும் முடிவுக்கு வருகின்றனர். கொட்டாவ பகுதியில் 'மாலாதே' என்னுமிடத்தில் உள்ள சிறியதான தனியார் விடுதியொன்றுக்கு போய்ச் சேருகின்றனர்.




மட்டு அம்பாறை மகளிர் படையணி
விசேட தளபதி நிலாவினி

அதேபோல கருணாம்மானாலும் ஏனைய தளபதிகளாலும் தனித்து விடப்பட்ட நிலையில் தனியோரிடத்தில் தங்கியிருந்த பெண் தளபதிகள் அனைவரும் பொட்டம்மானின் நச்சு வாக்குறுதிகளை நம்பவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எதிர்காலம் குறித்து எவ்வித நம்பிக்கைகளையும் தருவதற்கு யாருமற்ற நிலையில் கிட்டதட்ட அநாதரவாக 'தாம் கைவிடப்பட்டதாக' அவர்கள் உணர்ந்திருக்க முடியும். போர் முனைகளில் ஆயிரக்கணக்கில் பெண் போராளிகளை வழிநடாத்திய அந்தத் தளபதிகளுக்கு அந்த இக்கட்டான நேரத்தில் வழிகாட்ட யாரும் இருக்கவில்லை.

அத்தகைய கையறு நிலையை மட்டக்களப்பில் இருந்து தொடர்பு கொண்ட கீர்த்தி போன்ற பொட்டம்மானின் புலனாய்வுத் துறையினர் நான்கே பயன்படுத்திக் கொண்டனர். மட்டக்களப்பிலிருந்து வரும் வன்னிப்புலிகளின் புலனாய்வுத் துறையினரின் தொலைபேசி உரையாடல்கள் மட்டுமே அவர்களுக்கு ஆறுதலளித்தன. அதன்படி மீளவும் வன்னித்தலைமையிடமே சரணடைந்துவிடுவது என்னும் ஒற்றையடிப்பாதை மட்டுமே அவர்களுக்கு முன்னுள்ள தெரிவாக இருந்தது. 'தலைவர் பிரபாகரன்' சரணடைபவர்களுக்கு மன்னிப்பளிக்கத் தயாராக இருக்கின்றார் என்னும் புலனாய்வுத் துறையினரால் வழங்கப்பட்ட பொய்யான வாக்குறுதிகளை நம்பவேண்டிய நிலைக்கு அவர்கள் ஆளானார்கள். அதன்காரணமாக அவர்களும் தங்களைத் தாங்களே வன்னிப்புலிகளிடம் ஒப்படைக்கும் முடிவினை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அதன்படிக்கு மட்டு-அம்பாறை மகளிர் படையணியின் விசேட தளபதியாகவிருந்த நிலாவினி, அன்பரசி படையணித் தளபதி தீந்தமிழ், மட்.மாவடி முன்மாரி கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் பிறேமினி,மற்றும் லாவண்யா போன்ற மிக முக்கிய பெண் பொறுப்பாளர்கள் குகனேசன் குழுவினருக்கு தெரியாமல் இரகசியமாக மட்டக்களப்பு நோக்கி திரும்பிச் சென்று வன்னிப்புலிகளிடம் சரணடைகின்றனர்.

> அந்த நடவடிக்கைக்காகவே தளபதி நகுலன் மட்டக்களப்புக்கு அனுப்பப் படுகின்றார். அதன்படிக்கு முதற்கட்டமாக அந்த எட்டு ஆண் தளபதிகளும் மீனகம் முகாமுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். அங்கே சார்ஸ் அன்டனி படைப்பிரிவின் தளபதி நகுலன் (இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று இன்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றார்) மற்றும் தளபதி ரமேஷ் (இவர் இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்து உயிர் பிச்சை கேட்கும் வீடியோ வெளியானது) போன்றோர் தலைமையில் அந்தக் கொடூரம் இடம்பெறுகின்றது.

இறுதியாக கருணாம்மானை கைவிட்டு என்பதை விட கிழக்கின் சுயநிர்ணயத்தை,கிழக்கின் குரலை, கிழக்கு மக்களின் ஆதங்கத்தை, கிழக்கு மக்கள் வடக்குத் தலைமைகளால் ஒரவஞ்சனைக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள் என்கின்ற உள்ளக் குமுறல்களை, தமிழீழ விடுதலைப்புலிகளின் 32 துறைச் செயலாளர்களில் ஒருவரையேனும் ஏன் கிழக்கில் நியமிக்கவில்லை என்னும் இன்றுவரை யாராலும் பதிலிருக்க முடியாத அந்த மேன்மைகொள் சமநீதிக்கான போராட்டத்தை என்று அனைத்தையும் இரண்டாம் பட்சமாக்கி அவர்கள் வன்னிப்புலிகளிடம் சரணடைந்தனர்.

## தளபதி நகுலன்



இவர்களின் பரப்புரைகளை நம்பி சரணடைந்தவர்களுள் ஆண் தளபதிகள் ஒவ்வொருவரும் சுமார் நாற்பது வயதைக் கடந்தவர்கள். சுமார் இருபது வருட போராட்ட அனுபவம் கொண்டவர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் பெருந்தளபதிகளாக இருந்து வடக்குப் போர் முனைகளில் பல்வேறு படையணிகளை வழிநடாத்தி வெற்றிச் சமர் புரிந்தவர்கள். அவர்களின் அந்த தியாக வரலாறுகளுக்கும் மதிப்புகளோ மாண்புகளோ வழங்கப்பட்டதா?

தமிழ் நெட் தராக்கியும் தினக்குரலும் உலகெல்லாம் பரந்து விரிந்து கால்பரப்பி நின்ற 'தமிழ் தேசிய' ஊடகங்களும் பரப்பிய 'தேசியத்தலைவர்' மன்னிப்பளிக்கத்தயாராக உள்ளார். சரணடைபவர்களுக்கு உயிர் உத்தரவாதம் வழங்கப்படும் என்கின்ற கதையாடல்களுக்கு என்னதான் நடந்தது? அவர்களுக்கு உயிர்வாழும் உரிமையாவது கிடைத்ததா?

அவர்கள் தங்கள் உயிரை மட்டுமே காத்துக்கொள்ளும் நோக்கம் இருந்திருந்தால் இலங்கை இராணுவத்திடம் அவர்கள் சரணடைந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை கொழும்பிலிருந்து மீண்டும் மட்டக்களப்பு வந்து தமது இயக்கத்தையும் அதன் தலைவரையும் நம்பிச் சரணடைந்தனர். அவர்கள் அந்த தலைமையின் வாக்குறுதி மீது வைத்த அந்த விசுவாசத்தை வன்னித்தலைமை கிஞ்சித்தேனும் மதித்ததா?

ஏறக்குறைய அனைவரும் கொழும் பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்து சரணடையும்வரை வாக்குறுதிகளை அள்ளிவீசிய வன்னிப்புலிகள் சரணடைந்தவர்களை சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதித்துள்ளதாக

நாடகமாடி சுமார் 16 தளபதிகள் வரை சரணடைந்தவுடன் அவர்களை மீள அழைத்து கைது செய்தனர்.

இப்போது அவர்களை என்னசெய்வது? பிரபாகரனின் கட்டளைக்காக காத்திருக்கின்றனர் வன்னிப்புலிகளின் பிரதிநிதிகளான மட்டு.அம்பாறை தளபதிகள். ஆம் இறுதியாக அந்தக்கட்டளை கீர்த்தி, ரமணன் போன்ற தளபதி களுக்கு பொட்டம்மானிடமிருந்து வந்து சேருகின்றது. அந்த நடவடிக்கைக்காகவே தளபதி நகுலன் மட்டக்களப்புக்கு அனுப்பப் படுகின்றார். அதன்படிக்கு முதற்கட்டமாக அந்த எட்டு ஆண் தளபதிகளும் மீனகம் முகாமுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். அங்கே சார்ஸ் அன்டனி படைப்பிரிவின் தளபதி நகுலன் (இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று இன்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றார்) மற்றும் தளபதி ரமேஷ் (இவர் இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்து உயிர் பிச்சை கேட்கும் வீடியோ வெளியானது) போன்றோர் தலைமையில் அந்தக் கொடூரம் இடம்பெறுகின்றது.


அந்த எண்மரும் மீனகம் முகாம் மற்றும் ஆலயடிக்குளம் பகுதிகளுக்கிடையில் அமைந்துள்ள பஞ்சுமரத்தடி கிரவல்குளப் பள்ளத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தெருநாய்களை சுடுவதுபோல் சுட்டுப்பொசுக்கி பெட்ரோல் ஊற்றி கொளுத்தி சாம்பலாக்கப் படுகின்றனர். இச்சம்பவமானது 'அவர்கள் அனைவரும் சரணடைந்து சுமார் ஒரு மாதகாலத்துக்குள் இடம்பெற்று விட்டது என்றும் கொழும்பிலிருந்து நாங்கள் கிழக்கு மண்ணுக்குள் ஊடுருவி வன்னிப்புலிகளுக்கு எதிராக கெரில்லாத் தாக்குதல் நடாத்தத் தொடங்கிய நாட்களில் அதாவது மே மாதம் 15ஆம் திகதியளவில் நானும் பிள்ளையான் அண்ணனும் துமிலனும் சென்று அந்த இடத்தை இரகசியமாகப் பார்த்து, நடந்தவற்றை அப்பிரதேச விவசாயிகளிடம் உறுதி செய்து திரும்பினோம்' என்று தன் இருபது வருட பழமைமிக்க ஞாபகங்களைப் பகிர்ந்து கொண்டார் அதனைத் தொடர்ந்து வந்த நாட்களில் கருணா தரப்பினரின் பேச்சாளராக செயற்பட்டு இன்று பொது வாழ்வில் இருந்து ஒதுங்கியிருக்கும் தூயவன் என்னும் உருத்திரா மாஸ்டர் அவர்கள்.

அடுத்ததாக சரணடைந்த நான்கு பெண் தளபதிகளும் பிரபாகரனின் கட்டளைக்கேற்ப வன்னிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள மூங்கிலாறு என்னுமிடத்தில் அவர்கள் சிறைவைக்கப் பட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. நிச்சயமாக அவர்களையும் பிரபாகரன் மிக மோசமான முறையில் கொன்றொழித்திருப்பார் என்பது புலிகளின் வரலாற்றை அறிந்தவர்களுக்கு தெரியும். ஆனால் அந்த தளபதிகளுக்கு அது தெரிந்திருக்கவில்லை என்பதுதான் சோகமான வரலாறு ஆகும்.


## கருணாம்மானின் நாடுகடந்த தலைமறைவு

தன்னை விடுத்து கொழும்பிலிருந்து அனைவரும் ஓடிச்செல்லும் நிலைமைகள் கருணாம்மானை மென்மேலும் நிலைகுலையைச் செய்தது. பொட்டமானின் தந்திரங்களில் ஏமாந்து தனக்கு விசுவாசமாக இருந்த பல மூத்த தளபதிகளும் பலியாகிவருவதை அவரால் தடுக்கமுடியவில்லை. அந்நிலையில் யாரை நம்புவது என்பதே பெரிய சிக்கலைத் தோற்றுவித்திருந்தது. யாருடனாவது தொலைபேசியில் பேசினாலும் கூட தனது உயிருக்கு உத்தரவாதம் இல்லையென்பதை அவர் உணர்கின்றார். தனது நம்பிக்கைக்கு பாத்திரமான பெரும்பாலான மூத்த தளபதிகள் அனைவரும் தன்னை மறுதலித்து தத்தமது உயிர்களைக் காத்துக்கொள்ளும் நோக்கில் பிரபாகரனை நம்பி வன்னிப்புலிகளிடம் சரணடைந்து கொல்லப்பட்ட சம்பவங்கள் கருணாம்மானுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்திருக்க வேண்டும். தன்னால் எதுவுமே செய்யமுடியாத நிலையில் கருணாம்மான் தன் மனைவி குழந்தைகளுடன் 'லத்திப்' என்னும் போராளியை மட்டும் தன்னுடன் அழைத்துக்கொண்டு கொழும்பை விட்டு காலிப் பிரதேசத்துக்கு சென்று விடுகின்றார். அங்கிருந்தும் வாரமொரு தடவையாக பல இடங்களில் மாறி மாறி தென்னிலங்கையெங்கும் அவர்கள் அலைந்து திரிகின்றனர். இறுதியாக 'இனிமேல் ஓடி ஒழித்துக் கொள்வதற்கு இலங்கையில் இடமில்லை என்றாகிப்போன நிலையில் 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாங்கள் இலங்கையை விட்டு வெளியேறினோம். ஆனால் அத்திகதி ஞாபகமில்லை' என்று தன் நினைவுகளை இக்கட்டுரையாசிரியரிடம் பகிர்ந்து கொண்டார் இன்று மட்டக்களப்பில் ஒரு விவசாய தொழில் முயற்சியாளராக வாழ்ந்துவரும் அந்த 'லத்தீப்' எனும் முன்னாள் குழந்தைப் போராளி.


லத்தீப்



# வாக்கு அளிப்பு அரசியல்




ஜோர்ஜ் இ.

மத்திய தர வகுப்பினருக்கு பொருளாதாரம் பிரச்சனையாக இருப்பதில்லை. அதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு மாதாந்தம் குறிப்பிடத்தக்க அளவு வருமானம் நிச்சயமான நிலையில் வந்து கொண்டே இருக்கும். பொருளாதாரம் சுமையாக இல்லாமல், தலையிடியாகத் தான் அவர்களுக்கு இருக்கும்.

அடித்தட்டு மக்களின் நிலைமை அப்படியானதல்ல. வேலைவாய்ப்புகள் எதுவும் இன்றி, வருமானம் இன்றி, அடுத்த நேரச் சாப்பாடு என்பதே கேள்விக்குறியாக இருக்கும்போது, அவர்களின் அரசியல் முடிவுகள் வயிற்றினால் தான் முடிவு செய்யப்படுகின்றன.

It is the economy, stupid!

*1992 இல் பில் கிளின்டன் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது, அவரது தேர்தல் தந்திரோபாயக் குழுவின் அலுவலக கரும்பலகையில், அந்தக் குழுவில் இருந்த James Carville எழுதி வைத்திருந்த வாசகம். இன்றைக்கும் தேர்தல் நேரங்களில் உயிர்ப்பிக்கப்படும் அளவுக்கு பிரபலமாக இருக்கிறது.*

*தேர்தல் நேரத்தில் மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்றால், 'முட்டாளே, பொருளாதாரம் பற்றிப் பேசு' என்பது தான் அதன் கருப்பொருள். அமெரிக்கப் பொருளாதாரம் பெரும் மந்தநிலை அடைந்திருந்த நிலையில் அதைப் பேசுபொருளாக முதன்மைப்படுத்தியதும் பில் கிளின்டன் வெற்றி பெற்றதற்கான காரணங்களில் ஒன்று. (மற்றது மூன்றாம் அணியின் வாக்குப் பிரிப்பு. அதைப் பற்றித் தான் இம்முறை எழுதுவதாக இருந்தபோதும், தற்போதைய இந்தியத் தேர்தல் காரணமாக இதை எழுத வேண்டி இருக்கிறது.)*

*யுத்த காலங்கள் தவிர்ந்த மற்றக் காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் பெரும்பாலும் பொருளாதாரம் தான் வாக்காளர்களின் மனதில் இருக்கக் கூடியது. சாதாரண மனிதர்களின் முடிவுகள் அவர்களின் மூளையை விட, அவர்களின் வயிற்றினால் தான் தீர்மானிக்கப்படுகின்றன. வரிக்குறைப்பை விரும்பும் பணக்காரர்களுக்கும், தங்களின் வசதியான வாழ்வுக்கு அளவாக வருமானம் போதுமானதாக இருந்தால் திருப்தியுறுகிற மத்தியதர வர்க்கத்தினருக்கும் பொருளாதாரம் பெரும் நெருக்கடியைக் கொடுப்பதில்லை. அந்த வசதிகளுக்காகப் பெற்றுக் கொண்ட கடன்களுக்கான வட்டி விகிதமும், அரசாங்கத்தின் வரிகளும் அதிகரித்து, பொருளாதார மந்த நிலையினால் வேலையை இழந்து அந்த வசதியான வாழ்வுக்கு நெருக்கடி ஏற்படும் வரைக்கும் மத்திய தர வகுப்பினருக்கு பொருளாதாரம் பிரச்சனையாக இருப்பதில்லை. அதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு மாதாந்தம் குறிப்பிடத்தக்க அளவு வருமானம் நிச்சயமான நிலையில் வந்து கொண்டே இருக்கும். பொருளாதாரம் சுமையாக இல்லாமல், தலையிடியாகத் தான் அவர்களுக்கு இருக்கும்.*

*அடித்தட்டு மக்களின் நிலைமை அப்படியானதல்ல. வேலைவாய்ப்புகள் எதுவும் இன்றி, வருமானம் இன்றி, அடுத்த நேரச்*

சாப்பாடு என்பதே கேள்விக்குறியாக இருக்கும்போது, அவர்களின் அரசியல் முடிவுகள் வயிற்றினால் தான் முடிவு செய்யப்படுகின்றன.

பொருளாதாரம் என்பது மேற்குலகில், குறிப்பாக வட அமெரிக்காவில், பங்குச்சந்தைச் சுட்டெண்ணினால் (Stock market index) தான் அளவிடப்படுகிறது என்ற பிம்பம் ஒன்று உண்டு. இந்தச் சுட்டெண் பங்குச் சந்தையின் சூதாடிகளால் (Speculators) தான் பெரும்பாலும் ஊதிப் பெருப்பிக்கப்படுகிறது. அதை ஏதோ பொருளாதாரத்தின் அளவுகோலாக ஊடகங்கள் பொதுமக்கள் மத்தியில் பரப்புகின்றன.

பங்குச் சந்தை என்பது பேராசை, பயம் (Greed and fear) இரண்டினால் மட்டுமே தீர்மானிக்கப் படுகின்றன. கடைசியில், உண்மையான பொருளாதாரத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்ற உண்மையை பலரும் உணரத் தொடங்கும்போது, பங்குச் சந்தை சரியத் தொடங்கும்.

உண்மையான பொருளா தாரம் என்பது ஒரு நாட்டின் உற்பத்தியும், சேவைகளும் ஏற்படுத்தும் வேலைவாய்ப்புகளும், அதன் பிரசைகளுக்கு அந்த வேலைவாய்ப்புகள் மூலமாக செலவு செய்வதற்கான மேலதிகப் பணம் கிடைத்தலும், அந்தச் செலவு செய்யும் திறன் மூலமாக உற்பத்திகளையும் சேவைகளையும் பெற்று வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கான ஒரு சுற்றுவட்டம் தான்.

வட அமெரிக்கப் பொருளாதாரம் பணக்காரார்கள் தங்கள் செல்வத்தை எந்த உற்பத்திக்கும், சேவைக்குமான முதலீடுகளைச் செய்யாமல், பங்குச்சந்தையில் முடக்கி லாபம் பார்க்கும் வழியாக இருப்பதால், சாதாரண மக்களுக்கு வேலைவாய்ப்பும் வருமானமும் இல்லாததால், சீன மலிவுப் பொருட்களை வேறுவழியின்றி வாங்க நேரிடுகிறது.

இங்கே வட அமெரிக்கப் பொருளாதாரம் இந்த உற்பத்தி, சேவைகளில் இருந்து, உற்பத்தி முழுவதும் சீனாவுக்கு இடம் பெயர்ந்து வெறும் சேவைப் பொருளாதாரம் ஆகி, தற்போது வெறும் கடனில் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால் தான் வட்டிவிகித அதிகரிப்பு மத்திய தர வர்க்கத்தினரின் முதுகில் எதிர்பாராத சுமைகளை ஏற்றி விட்டிருக்கிறது. மத்திய தர வகுப்பினருக்கு மேலதிக செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட பணம் தற்போது வட்டி கட்டப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பாதிப்புத் தான் கனடாவில் ஆளும் லிபரல் கட்சியினருக்கான எதிர்ப்புக்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்று. தற்போது கனடிய மத்திய வங்கி வட்டி விகிதத்தைக் குறைக்கத் தொடங்கியிருப்பதால் பலரும் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கி இருக்கிறார்கள்.

பொருளாதாரச் சுமை தாங்க முடியாத அளவுக்குச் செல்லும்போது, ஆட்சியிலிருக்கும் அரசு மீதான கோபம் அதிகரிக்கிறது. அது அடுத்த தேர்தலில் அவர்களைத் துரத்தும் அளவுக்கு கோபத்தை வர வைக்கிறது.

மார்க்கிரட் தச்சர், றீகன் காலத்தில் தொடங்கிய பழமைவாத எழுச்சி தொழிலாள வர்க்கத்தை அடக்கி, முதலாளித்துவ எழுச்சியைத் தான் முதன்மைப்படுத்தியது. அது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது, முதலாளிகளை முதலீடு செய்து லாபம் பெற முடியாது வைத்திருக்கும் தொழிலாளர்கள் தான் என்ற எண்ணத்தை முதன்மைப்படுத்தியது தான். பல தொழில்களைத் தொடர்ந்தும் இயங்க வைக்க அரச மானியங்களை தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்க முடியாது என்ற எண்ணத்தைப் பரவலாக மக்கள் மனதில் பதிய வைத்தாலும், அதன் உள்நோக்கம் முதலாளித்துவத்தின் லாபத்தைப் பெருக்குவது தான். அந்தக் காலத்தில் தொடங்கிய உலக மயமாக்கல் தொழில்களை மூன்றாம் உலகில் மலிவு உழைப்புக்காக அனுப்பியதுடன் உற்பத்தி குறைந்து பொருளாதாரம் சேவைகளில் தங்கியிருக்கும் அளவுக்கு (From manufacturing economy to service economy வந்து விட்டது. இன்றைக்கு அது நினைத்த நேரத்தில் வேலை நீக்கம் செய்யக் கூடிய தகவல்தொழில் நுட்பம் முதல் எந்த வித (Benefits) சலுகைகளும் இல்லாத Gig economy எனப்படும் Uber, delivery வேலைகள் வரைக்கும் வந்து நிற்கிறது.

முதலாளித்துவம் லாபம் பார்த்து, பங்குச் சந்தையில் சூதாடும்போது, வேலைவாய்ப்புகளும், அதன் காரணமாக பொதுமக்களின் செலவிடும் திறனும் அருகிக் கொண்டே செல்கின்றன.

எனவே, முட்டாள்களே, உங்களுக்குப் பொருளாதாரம் தான் பிரச்சனை என்று முதலாளித்துவப் பழமைவாதத்திற்கு எதிரான தொழிலாளர் சார்ந்த கட்சிகள் தான் பொதுமக்களை உலுப்பி தூக்கம் கலைக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கட்சிகள் பொதுமக்களின் பகுத்தறிவைக் குறிவைத்து புத்தி புகட்டி, உண்மைநிலையை விளங்கப்படுத்த முயல்கின்றன.

தொடர்ச்சியாக லாபம் பார்க்கும் முதலாளித்துவப் பழமைவாதம் பொருளாதாரத்தைப் பிரச்சனையாகக் காட்ட முடியாது. பொருளாதாரம் வளர்கிறது என்று, பங்குச் சந்தைமயைக் காட்டி ஊதிப் பெருப்பித்துக் கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது.

இதனால் தேர்தல் வரும் போது, உணர்வு அரசியலைத் தான் பழமைவாதம் மேற்கொள்கிறது. நான் முன்னைய அபத்தம் இதழ்களில் குறிப்பிட்டது போல, சிறுபான்மையினர், வந்தேறிகள், வெள்ளையரல்லாதவர்கள், அரச உதவி பெறுவோர், தொழிலாளர்கள் என்று ஏதோ ஒரு குழுவினரைக் குறி வைத்து, பொதுமக்கள் மனதில் அவர்கள் மீதான வெறுப்பையும் வன்மத்தையும் வளர்த்து, தங்கள் ஆதரவைப் பெருப்பித்து ஆட்சியைப் பிடிக்க முயல்கிறது. பல தடவைகளில் வெற்றியும் பெறுகிறது.

கிராமத்து முட்டாள்கள் எங்களுக்கு ஜனாதிபதி களாகவும் வந்திருக்கிறார்கள்.

தேர்தல் நேரங்களில் பொருளாதாரம் பேசுபொருளாக இல்லாத தருணங்கள் உண்டு. யுத்த

காலங்களில் முழு நாடுமே ஒன்று திரண்டு எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரவலாக இருக்கும்போது, பொருளாதாரம் என்பது அனாவசியமான பிரச்சனையாக இருக்கும். இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கான ஆதரவாக அந்த வகையிலானது.

அடக்குமுறை நாடுகளில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் ஆர்வம் ஏற்படும்போது, இதைவிட மோசமாகப் போகப் போவதில்லை (It can't get any worse than this) என்ற எண்ணம் வரும்போது, தற்போது இருப்பவரை விட வேறு எவர் என்றாலும் பரவாயில்லை (Anybody but the incumbent) என்ற நினைப்பில் ஆட்சியில் இருப்பவரை விரட்டுகின்ற நிலை உண்டு.

எங்கள் கனடிய அரசியலில் இன்னொரு சுவாரஷ்யம் உண்டு. மூன்று தடவைகள் ஆட்சிக்கு வந்த ஆட்சிகள் மீது சலிப்புற்று, அறுபது நாள் ஆசையும் முப்பது நாள் மோகமும் முடிவுக்கு வந்து திருமண முறிவை நாடுகின்ற இயல்பு எங்களுடையது. கிட்டத்தட்ட நான் இங்கு வந்த காலத்தில் இருந்து நடந்த தேர்தல்கள் எல்லாம் கிட்டத்தட்ட அப்படித் தான்.

இவை தவிர்ந்து பெரும்பாலான தேர்தல்கள் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவை. அப்படித்தான் இருக்கவும் வேண்டும்.

எங்கள் பக்கத்தில் நிலைமை வேறு.

எழுபதுகளில் சிறிமா ஆட்சிக்கு வரக் காரணமாக இருந்தது, 'இரண்டு கொத்து இலவச அரிசி'. அதற்கு வாக்குப் போட்டு ஆட்சியில் அமர்த்தி, பஞ்சம் தோன்றி, பாணுக்குக் கியூவில் நின்ற போது, சொன்ன ஜே. ஆரை ஆட்சியில் அமர்த்தியது 'எட்டு இறாத்தல் தானியம் தருவோம்' என்ற கோசம் மட்டுமே. அந்த தானியம் இலவசமா, பணத்திற்கா என்பது சொன்னவருக்கும் தெரியாது. கேட்டவர்களுக்கும் தெரியாது.

சிங்களவர்கள் தங்கள் வயிற்றினால் வாக்களித்தார்கள். நம்ம யாழ்ப்பாணிகள்?

> **'இரண்டு கொத்து இலவச அரிசி', 'எட்டு இறாத்தல் தானியம்' 'குடும்பத்தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய்' என்று எங்களுக்குப் புரியும்படி சொன்னால் தான் எங்களுக்குப் புரியும்.**

கொழுப்பினால் வாக்களித்தார்கள். எந்த வித நடைமுறைச் சாத்தியமும் இல்லாத, 'மூன்று மாதத்தில் தமிழீழம்' என்ற தமிழர் கூட்டணியின் கோரிக்கைக்கு 'ஆணை வழங்கினார்கள்'. பகுத்தறிவை விட, 'ஊரோடு ஒத்தோடுவதை' சமூகக் கடமையாகக் கருதிய, இன, மான உணர்ச்சித் தமிழர்கள்! தொடக்கமும் முடிவும் கண் முன்னாலேயே நடந்து முடிந்ததால் புதிதாகச் சொல்ல எதுவும் இல்லை.

உண்மையில் பொருளாதாரம் தான் யாழ்ப்பாணிகளுக்கு முக்கியமானதாக இருந்திருந்தால், அவர்கள் வாக்களிக்க வேண்டியது சிறிமாவுக்கே.

வெளிநாட்டு இறக்குமதியை நிறுத்தியதால், உள்ளூர் உற்பத்தி பெருகி, யாழ்ப்பாண விவசாயிகள் பயன் பெற்றது அந்த ஆட்சியில் தான். யாழ்ப்பாணிகளுக்குக் கனடாக் கனவு வர முன்னால், அவர்கள் புலன் பெயர்ந்தது கனகராயன் குளத்திற்கும் விசுவமடுவிற்கும் தான். மிளகாய் 32 ரூபாய் விற்கிறது என்று காடு வெட்டி களனியாக்கி மிளகாய்த் தோட்டம் வைத்தவர்கள் அவர்கள். அப்படிப் புலன் பெயராதவர்களையும் 'எதற்கும் ஒரு தடவை புலன் பெயர்ந்து பாருங்களேன்' என்று நம்ம தேசிக்காய் தலையர் 95 இல் கட்டாய இடப் பெயர்வுக்குள்ளாக்கி, வன்னிக்குக் காடேக வைத்தார்.

யுத்த காலத்தில் மக்களை பொது எதிரிக்கு எதிராக மக்களை ஒன்று திரட்ட முடிந்தாலும், யுத்தம் முடிந்த பின்னால், பொருளாதாரம் வயிற்றைக் கடிக்க அந்தத் தலைவர்கள் எல்லாம் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். சேர்ச்சில் முதல் மகிந்த ஈறாக இப்படித் தான் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.

சரி, இந்தியத் தேர்தல் முடிவுகள் எதைச் சொல்ல வருகின்றன. 'அரசியல் பண்டிதர்களும்' (political pundits), 'நடுநிலை ஊடகங்களும்' எதிர்வு கூறிய கருத்துக் கணிப்புகளும், வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியேயான கணக்கெடுப்புகளும், 'கொடுத்த பணத்திற்கு அதிகமான கூவல்கள் தான்' என்பதை முடிவாக்கி இருக்கின்றன.

பொருளாதாரத்தின் சீரழிவிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்ப இரண்டு வழிகள். மேற்கு நாடுகளில் பங்குச்சந்தை எப்படி பொருளாதாரத்திற்கான அளவுகோலாக படம் காட்டப் படுகிறதோ அதைப் போலத் தான் அதானி, அம்பானியின் பங்குச்சந்தை வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியாகக் காட்டப்பட்டது. இந்த வளர்ச்சி அவர்களின் நிறுவனங்களுக்கான அரசியல் பின்னணியும், அவர்களின் நிறுவனங்களின் லட்சக்கணக்கான கோடிக் கடன்களை பொதுமக்களின் தலையில் கட்டியதும் தான்.

சாதாரண மக்களின் வாழ்வில் அந்தப் பொருளாதார 'வளர்ச்சி' எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியதில்லை. இன்றைய அரசியல் ஸ்டார் சந்திரபாபு நாயுடு அப்போதைய டிஜிட்டல் ஆந்திராவிற்கு தலைமை தாங்கியவர். அவர் படம் காட்டிய வளர்ச்சி பட்டி தொட்டிகளுக்கும் பரவாமல், பட்டணத்தோடு நின்றது தான் அன்றைய தோல்விக்கான காரணமாக இருந்தது. அதைப் போலத் தான் மோடியின் டிஜிட்டல் இந்தியாவும்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி என்பது தவிர்க்க முடியாத உலகளாவிய பொருளாதாரத் தொடர்புகளால், உலக மயமாக்கல் காரணமாக வந்த ஒன்று தான். அது மன்மோகன் சிங்கின் ஆட்சி போன்று அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் வந்தது அல்ல. வெங்காய விலை அதிகரிப்புக்கு, 'நான் வெங்காயம் சாப்பிடுவதில்லை' என்று சொன்ன நிதியமைச்சரிடம் எந்தப் பொருளாதாரக் கொள்கையை எதிர்பார்ப்பது?

உலகளாவிய ரீதியில் தற்போது ஏற்பட்டுள்ள சீன எதிர்ப்புணர்வைச் சாதகமாக்கி,

சர்வதேச முதலீடுகளை உள்வாங்கும் பொருளாதாரக் கொள்கைகள் எதுவும் மோடி அரசினால் முன்னெடுக்கப் படவில்லை. வெளிநாட்டு முதலீடுகள் அதானிக்கும் அம்பானிக்கும் ஏற்படுத்தக் கூடிய பயன்களையும் ஆபத்துக்களையும் கருத்தில் கொண்டு தான் அமுலாக்கப்பட்டன என்றே கருத வேண்டி இருக்கிறது.

பாஜகவின் வளர்ச்சி உணர்ச்சி அரசியலாகத் தான் உருவாக்கப்பட்டது. வளர்ச்சியடைந்தது. ஊடகங்கள், கருத்துருவாக்கிகளை விலைக்கு வாங்கி பொது மனவெளியில் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட பிம்பங்களை உருவாக்குவதன் மூலமாகத் தான் அது வளர்ந்தது. ஆனால் அது தொடரப்பட முடியாதது. Non-sustainable.

அரசுக் கொள்கைகள் சாமான்யர்களின் வயிற்றை நிறைக்காமல், அவர்களின் வயிற்றில் அடிக்க நேர்ந்தால், அவர்களுக்கு அவர்களின் வாக்குகள் அவர்களால் முடிந்த ஆயுதம்.

மசூதி உடைப்பு, ராமர் கோயிலை மட்டுமே வைத்து நீண்ட நாளைக்குத் தாக்குப் பிடிக்க முடியாது. அயோத்தி தொகுதியிலேயே அந்தக் கோயில் அமைக்கப்பட்ட விதம் ஏற்படுத்திய வெறுப்புத் தான் இந்துத்துவத்தின் கர்ப்பக் கிருகத்திலேயே பாஜக அடைந்த தோல்வி.

ஏன் பொருளாதாரத்தை முக்கிய பேசுபொருளாக்கிய காங்கிரஸ் கூட்டமைப்பினால் வெற்றி பெற முடியாமல் போனது?

மேற்கு நாடுகளில் பொருளாதாரம் பற்றிப் பேசுவதும் எங்கள் நாடுகளில் அதை முன்னிலைப்படுத்துவதும் ஒரே மாதிரியான பாதிப்புகளை ஏற்படுத்தப் போவதில்லை.

மேற்கு நாடுகளில் பொதுப்படையாக வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு பற்றி பொதுவாக பிரசாரம் செய்தாலேயே பொதுவெளியில் புரிந்து கொள்கிறார்கள். ஊடகங்களும் கருத்துருவாக்கிகளும் அவற்றை மக்களுக்குப் புரியக் கூடிய விதத்தில் சுப்பர்மார்க்கட்டிற்குப் போய் பேட்டி கண்டோ, இந்த வரிக்குறைப்பால் வரக் கூடிய பணத்தின் பெறுமதியையோ கணக்கிட்டு விளங்கப் படுத்துவார்கள். பழமைவாதக் கட்சிகளின் தலைவர்கள் ஒருபடி மேல் போய் 'we are putting money in taxpayers' pockets' என்பார்கள்.

ஆனால், எங்களுக்கு எங்களுக்குப் புரியக் கூடிய விதத்தில் பிடித்த விடயங்களைப் பேச வேண்டும்.

'இரண்டு கொத்து இலவச அரிசி', 'எட்டு இறாத்தல் தானியம்' 'குடும்பத்தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய்' என்று எங்களுக்குப் புரியும்படி சொன்னால் தான் எங்களுக்குப் புரியும். இங்கே எந்த அரசியல்வாதியும் இப்படிச் சொல்ல முடியாது. சொன்னால் சிரிப்பார்கள். ஊடகங்கள் வாங்கு வாங்கி விடும். இங்கே எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக் கூடாது என்பதற்கான எல்லைகள் உள்ளன.

காங்கிரஸ் செய்த தவறு அதுவாகத் தான் இருக்கும். வெறும் பொருளாதாரக் கொள்கை பற்றிப் பேசும்போது, அது அறிவைக் குறி வைத்ததாகத் தான் இருந்தது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அது எல்லாம் எடுபடாது.

அதற்கு நீங்கள் சாதாரண மக்கள் புரியும்படி ஒரு எண் ஒன்றை வழங்கியாக வேண்டும். மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்டது என்று மொட்டையாகச் சொல்வதை விட, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சமையல் வாயு, எரிபொருள், மின்கட்டணம், உணவுப் பொருட்களின் விலையை இத்தனை ரூபாய்க்குக் குறைப்போம்' என்று சொன்னால் தான் அது சாமான்யர்களுக்குப் புரியும். (பாமரர்கள் என்பது not politically correct. இலக்கிய மொழியில் சொல்வதால், சாமான்யர்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.)

மக்களை அறிவூட்டி வாக்குகளைப் பெறுவதை விட, வெறும் வாக்குறுதிகளால் வாக்குகளை வெல்வது தான் எங்கள் நாடுகளில் சாத்தியம்.

காங்கிரஸ் விட்ட தவறு, இந்தப் பொருளாதாரப் பிரச்சனையை மக்களுக்குப் புரியக் கூடிய விதத்தில் அதற்கு ஒரு கணக்கிடக் கூடிய எண்ணைக் கொடுக்காதது தான். (Quantify).

அரசியல் என்பது அயோக்கியர்களின் புகலிடம், தேர்தல் என்பது lesser evil ஐ தான் தெரிவு செய்வது என்றான பின்னால், நேர்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது சாத்தியமில்லை என்பதுடன், அது பச்சைப் பொய் சொல்லும் அயோக்கியர்கள் ஆட்சியைக் கைப்பற்ற வழிவகுத்தும் விடுகிறது.

அரசியல் வாக்குறுதிகள் என்பது வெறும் வாக்குறுதிகள் மட்டும் தான். அரசியலில் அதையெல்லாம் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்ற பிரமாணப்பத்திரங்கள் இல்லை. தேர்தல் முடிந்ததும் வாக்குறுதி அளித்தவர்கள் மறந்து விடுவது போலவே, வாக்காளர்களும் மறந்து விடுகிறார்கள். அதை விட புதிய பிரச்சனைகளும் சவால்களும் தோன்றி கவனத்தை வேறு எங்கோ கொண்டு போயும் விடுகின்றன.

நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை அளிக்க வேண்டும் என்பதை விட, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டியது முக்கியம்.

ஆயிரம் பொய்யைச் சொல்லி, ஒரு திருமணத்தை நடத்துவதை ஏதோ ஒரு தர்மம் சரியென்று தானே சொல்லி வைத்திருக்கிறது. ஒரு பொய்யைச் சொல்லி ஆட்சியைக் கைப்பற்றுவதில் என்ன தவறு? 'முட்டாள்களே! பொருளாதாரம் தான் முக்கியமானது' என்று முட்டாள்களுக்குச் சொல்வதால் மட்டும் மாற்றம் ஏற்படாது. அதை முட்டாள்களுக்குப் புரிகிற மாதிரிச் சொல்லவும் தெரிய வேண்டும்.

'ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் பதினைந்து லட்சம் பணம் வைப்பில் இடக்கூடிய பணம் சுவிஸ் வங்கிகளில் இருக்கிறது' என்பது போல!

பிறகு அமித் ஷா சொன்னது போல, அது ஒரு 'மரபுச் சொற்றொடர்' என்று விட்டுப் போகலாம்!

அது எந்த 'மனு'நீதிக்கும் முரணானதில்லை. அ

# ‘கஞ்சிச்சிரட்டைகளின் கண்காட்சி’

நேற்றோடு
யாவும் முடிந்து விட்டன.

‘வருட நிகழ்வு‘ முடிந்து
அவர்கள்
வந்தவழியேகியபின்பு
வீசி விடப்பட்ட நிலையில்
பல  வெற்றுச்சிரட்டைகள்.

அதனுள் பல
‘கட்டெறும்புகள்‘ ‘சிற்றெறும்புகள்‘
ஏதாவது மிச்சம்மீதிக்காய்
இன்னமும் தேடியபடி...

•••

நீண்ட நாள்களின்பின்பு
கஞ்சி குடித்ததில்
அந்த
விதவைப் பெண்ணின் வயிறு
நிரம்பியிருந்தது
போர்க்களத்துள்
பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு
காணாமலாக்கப்பட்ட
தனது மகனின் நினைவுகளோடு...

•••

காத்திருப்புகள் கனதியானவை.
நீண்ட பயணயம்வரை
சுமக்க முடியாதவை.

முனிவன் விசுவாமித்திரனின்
மோனநிலையைவிட
மிக மோசமாக இருக்கிறது
அவர்களது காத்திருப்பு.

இன்னமும்
265 நாள்கள்...

ஆயினும்,
அவர்கள் காத்திருக்கிறார்கள்
முள்ளிவாய்க்காலில்
இன்னொரு
‘சிரட்டைகஞ்சி‘ நிகழ்விற்கு.

•••

கஞ்சி குடிப்பதற்காய்
‘காபெற்‘ வீதிவழியாக நகருகின்றன
பல
கறுப்புக் கண்ணாடி வாகனங்கள்.

போரினுள்
இருகால்களை இழந்த
இளைஞனொருவனின் வீட்டினுள்
ஒளி தெறித்து விழுகிறது
ஒழுக்குக்கூரை ஊடாக...!


•••

‘வெண்வஸ்திரங்களால்‘
நிறைந்திருந்தது...
போரினுள்
வெளியேற முடியாதவர்களின்
குருதியைக் குடித்த
‘முள்ளிமண்‘

•••

அவர்கள்
கஞ்சியைக் குடித்து
ஏப்பம் விட முன்பே...
எட்டத்தில் நின்று
அழுதுகொண்டிருந்தது
ஒரு
முன்னாள் போராளியின்
அவல ஆத்மா.

**அலெக்ஸ் பரந்தாமன்**
**புதுக்குடியிருப்பு 19.05.2025**




# சிவசேகரம் கவிதைகள்

## சிவசேகரம் அவர்களையும் இடம் மாற்றித் தடம் மாற்றிய காலம்

**கற்சுறா**

கவிதைகள் குறித்துப் பேசுதல் என்பது இன்றைய சூழலில் மிகவும் பரிதாபகரமான ஒரு செயற்பாடு என்றே நினைக்கின்றேன். ஏனெனில் கவிதைகளை பார்த்து எழுதிய காலங்களோடு இன்று கவிதைகள் குறித்து எழுதியதையும் பார்த்து எழுதிவிடும் - பேசிவிடும் காலங்களில் நாம் வாழ்ந்து கொள்ள நேர்ந்திருக்கிறது.

இந்த நிலையில் மிக நீண்ட காலமாகக் கவிதைச் சூழலில் தொடர்ந்து இயங்கியவரை- அந்தக் கவிதைக் காலத்தை தனது கருத்தியலாலும் எதிர்க்கருத்தியலாலும் அடையாளப் படுத்தியே நகர்ந்தவரை இன்று உரையாடலுக்குள்ளால் அண்மித்துக் கொள்கிறோம்.

நான் வியந்து அண்ணாந்து பார்த்த இந்தக் கவிஞரின் கவிதைகள் குறித்து இத்தனை நாள் கடந்து நான் ஒரு உரையாடலில் கலந்து கொள்வேன் என நான் ஒருபொழுதும் எண்ணியதில்லை. இந்தச் சந்தர்ப்பத்திற்காக உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றிகள்.

ஆம்; நான் அண்ணாந்தே பார்த்தேன்.

ஆச்சரியத்துடன் கண்களை அகல விரித்து அப்போது அவரை அண்ணாந்து நோக்கினேன்.

அது யுத்த காலம்.

1992 ம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் அவரை நான் முதன் முதலில் கண்டேன். அங்கே அப்பொழுது ‘பெரு‘ நாட்டில் கைதாகப்பட்ட அபிமேல் குஸ்மானின் விடுதலை குறித்து ஐ.நாவிலிருந்து மனித உரிமைகள் சார்பாக உரையாற்ற வந்த பெண்மணி அவர்கள் தனது உரையை ஆற்றிக் கொண்டிருந்தார். அவரது பேச்சின் முடிவில் அவரை நோக்கி ‘இன்று இலங்கையில் பிரபாகரனை இந்திய இராணுவம் கைது செய்திருந்தால் இதேபோல் அவரையும் விடுதலை செய்ய வேண்டும் என நாம் பின்னால் போக முடியுமா? இத்தனை மக்களின் படுகொலைக்குக் காரணமானவர்களை விடுதலை செய் என நாம் எவ்வகைப் புரிதலுடன் கேட்பது‘ எனக் கேட்டார்.

அப்போது எனக்கு 20களின் ஆரம்பம். இவர்தான் கவிஞர் சிவசேகரம் என அப்போது எனக்குத் தெரியாது. அவர் ஒரு முக்கியமான கவிஞர் என்றும் எனக்குத் தெரியாது. அன்றைய இலக்கியச் சந்திப்பின் அடுத்தடுத்த நிகழ்வுகளில் அருந்ததியின் ‘இரண்டாவது பிறப்பு‘ என்ற கவிதைத் தொகுதி குறித்து அவர் தனது விமர்சன உரையை ஆற்றும் போது, ‘இலக்கியப் பிழை இலக்கணப்பிழை எழுத்துப் பிழை. காற்தரிப்பு முற்றுப்புள்ளி முக்காற் தரிப்புப் பிழை என ஒவ்வொரு கவிதையிலும் இருக்கும் தரிப்புக் குறிப்புக்களின் தவறுகள் பற்றிச் சுட்டிக்காட்டி தயவு செய்து குறிகள் ஒன்றும் போடாது விடுங்கள். அல்லது போடத்தான் போகிறீர்கள் என்றால் சரியாகப் போடப் பழகுங்கள்‘ என்றார்.

இலக்கியச் சந்திப்பினைக் கண்காணிக்க அங்கு வந்திருந்த புலி உறுப்பினர்கள் மதிய உணவு இடைவேளையின் போது,அவரைச் சூழ்ந்து கொண்டனர். .

‘நீங்கள் பிரபாகரன் குறித்து எப்படி அவ்வாறு கூறலாம்? அவ்வாறு பேசியிருக்கக் கூடாது என்றும் . நீங்கள் கூறிய வார்த்தைகளுக்காக நீங்கள் மன்னிப்புக் கோரவேண்டும்‘ எனவும் அவரை வற்புறுத்திக் கேட்டனர்.

‘நான் அவ்வாறு சொன்னதில் என்ன தவறு இருக்கிறது. அதுதான் என்கருத்து. எனது கருத்தில் மாற்றமில்லை‘ என்று கோபத்துடன் சொல்லி அதற்கான விளக்கங்களையும் கொடுத்து மறுத்தபடியே இருந்தார்.

இவ்வாறுதான் கவிஞர் சிவசேகரம் அவர்களை முதலில் நான் நேரிடையாக அறிந்து கொண்டேன். கவிஞர் சிவசேகரம் அவர்களின் விம்பத்தை நான் அறிந்து கொள்ள இவை போதுமானவையாக

இருந்தாலும், கவிஞர் பிரமிள் அவர்கள் தனது சிறப்பிதழில் வழங்கியிருந்த பேட்டி ஒன்றில் அவருடைய இளவயது அனுபவம் பற்றிப் பேசியபொழுதில், 'பாடசாலைக் காலத்தில் அவ்வப்பொழுது வகுப்பாசிரியர் கவிதை எழுதச் சொல்லுவார். ஒருமுறை மைதானம் பற்றிக் கவிதை எழுதச் சொல்லும் பொழுது நான் ஒரு கவிதையை எழுதிவிட்டு எழுதமுடியாதிருந்த மற்றய நண்பர்களுக்கும் எழுதிக் கொடுத்தேன். ஆனால் சிவசேகரம் என்ற மாணவன் மட்டும் தானே தனது கவிதையை எழுதினான்' எனப் பிரமிள் சொல்லியிருந்தார். அந்த சிவசேகரம் அவர்கள் இவர்தான் என ஊகித்துக் கொண்டேன். இவைதான் கவிஞர் சிவசேகரம் அவர்களை நான் அறிந்து கொள்ள உதவிய ஆரம்பகாலக் கதைகள்.

அவரது கவிதைத் தொகுதிகளில் நதிக்கரை மூங்கில் செப்பனிட்ட படிமங்கள்- மற்றும் தேவி எழுந்தாள் போன்றவற்றை நான் இலக்கியச் சந்திப்பின் புத்தக விற்பனைத் தளத்திலேயே வாங்கிய அனுபவம் உள்ளது. அவரது அந்த மூன்று கவிதைத் தொகுப்புக்களையும் வாசித்திருந்த எனக்கு இந்தத் தொகுப்பு மிகப்பெரும் ஆச்சரியத்தை உள்ளார உருவாக்கி விட்டிகிறது.

சமூக நீதிசார்ந்து தனது கோபத்தையும் தனது ஆதங்கத்தையும் வாழ்காலம் பூராவும் எழுத்துக்களால் நிறைத்து இயங்கிவரும் ஒருவரது எழுத்துக்களை ஒட்டுமொத்தமாகத் தொகுத்து விடும் நிலையில் - நாம் வரலாற்றில் கடந்து வந்த சுவடுகளைப் படம் பிடித்து முன்காட்டி விடுகிறோம்.

அந்த வகையில் கவிஞர் சிவசேகரம் அவர்களது ஒட்டு மொத்தமான இந்தக் கவிதைத் தொகுப்பு மிக முக்கியமானது. கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதுமாகும்.

ஈழவிடுதலைக் காலத்தினை இன்னொரு தளத்தில் பதிவு செய்யும் இந்தத் தொகுப்பும் ஒரு வரலாற்று ஆவணம் என்பதனைக் கவனம் கொள்ளவும். இதனைத் தொகுத்து வெளியிட்டவர்களுக்குப்

துரோகி எனத் தீர்த்து
அன்றொரு நாள் சுட்ட வெடி
சுட்டவனைச் சுட்டது.
சுடக்கண்டவனைச் சுட்டது.
சுற்றி நின்றவனைச் சுட்டது.
இப்படி அனைவரையும் சுட்ட வெடி
இறுதியில் சும்மா இருந்தவனையும்
சுட்டது.
என்ற கவிதை வரிகளை
ஈழவிடுதலைப் போராட்டம்
என்ற பெயரில் நடைபெற்ற
யுத்த காலங்களில் எல்லாம்
நாம் திரும்பத்திரும்ப
எழுதிக்கடந்திருக்கிறோம்.

பாராட்டுக்கள்.

நமது வாழ்காலங்களில் பாதிக்கு மேற்பட்ட காலங்களை போராட்டம் என்ற பெயரில் நடைபெற்ற யுத்தங்களுக்கூடாகத்தான் நாம் கடந்து வந்திருக்கிறோம். ஒரு பகுதியினருக்கு அவை விடுதலைப் போராட்டம். இன்னொரு பகுதியினருக்கு அவை வெறும் யுத்தங்கள். இந்த யுத்தங்களைப் போலவேதான் நமக்கு சமாதானமும் இரு வேறு அர்த்தங்களை கொண்டிருந்தன. சமாதான காலங்களைக் கூட யுத்தத்தின் இன்னொரு வடிவமாகவே நாம் பலதடவைகள் கடந்து போயிருக்கிறோம்.. ஆக இந்த யுத்தவாழ்காலத்தில் சிவசேகரம் அவர்களது கவிதைகள் என்னதாக்கத்தைச் செயற்படுத்தி நகர்ந்திருக்கிறது என்பதனை நாம் கவனிப்பதே முக்கியமானது.

துரோகி எனத் தீர்த்து

அன்றொரு நாள் சுட்ட வெடி

சுட்டவனைச் சுட்டது.

சுடக்கண்டவனைச் சுட்டது.

சுற்றி நின்றவனைச் சுட்டது.

இப்படி அனைவரையும் சுட்ட வெடி

இறுதியில் சும்மா இருந்தவனையும்

சுட்டது.

என்ற கவிதை வரிகளை ஈழவிடுதலைப் போராட்டம் என்ற பெயரில் நடைபெற்ற யுத்த காலங்களில் எல்லாம் நாம் திரும்பத்திரும்ப எழுதிக்கடந்திருக்கிறோம்.

ஒவ்வொருவராய்ச் சுட்டுசுட்டுச் சுடுகாடாய் மாறிய காலங்களிலெல்லாம் இந்தக் கவிதை வரிகளைத்தான் நாம் தொடர்ந்தும் பேசிக்கடந்தோம்.

நம்வாழ்காலத்தில் நாம்பேசிய கவிதை வரிகளில் அதிகம் பேசப்பட்ட கவிதை வரிகள் என்று அடையாளமிடக் கூடிய கவிதை வரிகள் இவை எனத்தான் நினைக்கிறேன்.

'இராமனே இராவணனாய்

தனது அரசிருக்கையில் முதுகுப்புறமாய்

முகமூடிகளை மாற்றிக் கொண்டதை

பார்க்க நேர்ந்த கண்கள்;

இதயம் ஒருமுறை

அதிர்ந்து நின்றது.

சிறைப்பிடித்தது இராவணனல்ல.

இராமனேதான்.'

என்ற செல்வியின் கவிதை வரிகளைப் போல்

'முடியுமானவரை என் தடயங்களை அழித்து விட்டேன். நண்பர்களே உங்களிடம் எஞ்சியிருக்கும் எனது தடயங்களையும் அழித்து விடுங்கள்'

என்ற சிவரமணியின்

'தோழர்களேவிலங்குகளுக்கெல்லாம்

விலங்கொன்றைச் செய்தபின்

நாங்கள் பெறுவோம்

விடுதலை ஒன்றை.'

என்றெழுதிய வரிகளை நாம் கொண்டுதிரிவது போல்

'மரணத்தைக் கண்டு நாம் அஞ்சுபவர்கள் அல்ல ஆனால் புதிய எஜமானர்களிற்காய் தெருக்களில் மரணிப்பதை நாம் வெறுக்கிறோம்'

என்ற செழியனின் வரிகளை

நாம் காவித்திரிந்ததைப் போல் சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் நாம் நினைவுபடுத்தத் தவறாத கவிதை வரிகள் கவிஞர் சிவசேகரத்தின் இந்த வரிகள்.

பிட்டுக்கு மண்சுமந்த பிரானுக்கு விழுந்த அடியை நினைவிற் கொண்டு எழுதிப் பின் துரோகி எனத் தீர்த்து அன்றொரு நாள் சுட்ட வெடி ஈழமக்களின் அத்தனை துயரங்களுக்கும் அல்லல்களுக்கும் இறுதி அழிவுகளுக்கும் காரணமாய் ஆகி சும்மா இருந்தவர்களையும் துரத்தி அழித்த கதையை இந்த ஒரு கவிதையில் அன்றே அழகாக் குறிகாட்டிச் சொல்ல முடிந்தவர் யாரோ அவரே கவிஞர்.

சுட்டவனைச் சுட்டு சுடக்கண்டவனைச் சுட்டு. இறுதியில் சும்மா இருந்தவனையும் சுட்டது. என்று முடிகிற இந்தக் கவிதையின் முழுவடிவத்தை நீங்கள் நூலில் வாசித்துக் கொள்ளுங்கள்.

இந்த வகைக் கவிதை வரிகளைக் கொண்டு நமது சமூகத்தை அதன் வாழ்வியலை நாம் விளங்கிக் கொண்டு விடமுடியும். இவையெல்லாம் வெறுமனே வெறும் கவிதை வரிகளல்ல.

ஒரு இனத்தின் படுகொலையின் மொழி.

சமூக நீதியின் அத்தனை வாசற்கதவுகளையும் அடைத்து வைத்து விட்டு ஈழவிடுதலை என்ற பெயரில் அள்ளுப்பட்டுப் போன நமது சமூகத்தில் எதிர் விழைந்த வார்த்தைகள் இவை. இவற்றைத் தொடர்ந்து பேச - தொடர்ந்தும் பேச ஒரு மனவுறுதி வேண்டும். ஆனால் அந்த மனவுறுதி கொண்டவர்களையும் பொய்யுறுதியாக்கிப் புலம்பவைத்த கதையை 2000 இன் ஆரம்ப காலங்களில் இருந்து நாம் காண நேர்ந்ததுதானே.

ஆம், 2000 இன் காலங்கள் - - என்றிருந்த ஈழவிடுதலையை ஒன்றுமேயில்லாததாக்கியது.

அந்தக் காலம் -அதுவரை சமூகநீதியின் பக்கம் நின்ற மகான்கள் அனைவரையும் தடுமாற வைத்து.- தடம் புரள வைத்தது. இதற்குள் கவிஞர் சிவசேகரத்தின் கவிதைகள் எந்த இயல்பு நிலையைக் கொண்டு இயங்கியது எனப் பார்த்தலே சிறப்பு. அதுவே என் கடமை.

இந்தத் தொகுப்பில் அடையாளம் இடப்படும் அவரது ஆரம்பகாலக் கவிதைகளின் போக்கிலிருந்து நோக்கத் தொடங்குவோம்.

‘ஒவ்வொரு திருப்பமும்

பாதையதன் பொதுத் திசையைத்

தனியே எடுத்துரையா

அவற்றின் ஒரு முழுமை

அப் போக்கின் வழி கூறும்

வரலாறும் அது அது போன்றே‘

மலையகம் குறித்து எழுதிய ‘மலைப்பாதை’ என்ற கவிதை இது. இந்தத் தொகுப்பின் முதற்கவிதை. சமூகத்தின் பாதையின் முழுமையில் அதன் வரலாறு தெரிந்துவிடும் என *1973* காலப்பகுதியிலேயே அவரால் சொல்லமுடிகிறது.

மக்களுக்கு அருகிலிலா அறிவும் அறிஞர்களும் தொலைவில் ஒளிர்கின்ற தாரகைகள் போன்றனவே என்று *1974*இல் தூ ரத்தில் ஒளிர்கின்றவை அத்தனையும் ஒன்று சேர்ந்து ஒளிகொடுத்தாலும் புவிக்குப் பிரியோசனமில்லை என மக்களைச் சாராத புத்திஜீவிகள் என்று சொல்லி குறியிட்டு விடுகிறார்.

அடுத்து ஒரு கவிதையைப் பாருங்கள்

கொம்பியூட்டருக்கு ஒரு கணக்கு‘

என்ற கவிதை

கொம்பியூட்டர் மூலம் காரியங்கள் செய்கின்ற இந்த யுகத்தினிலா நீயும் இருக்கின்றாய்?‘

எனப் பேசிப் பின்

‘கொம்பியூட்டர் வழிகாட்ட

விண்கலங்கள் சஞ்சரிக்கும் விண்வெளியின் கீழே தான்

மானுடத்தின் பாதியினர் சுட்டெரிக்கும் வெய்யிலிலே

செருப்பின்றி நடக்கின்றார்

கொம்பியூட்டர் மொழிபெயர்த்து

அச்சடித்துத் தருகின்ற

இந்த யுகத்தில் தான்

பேரெழுதத் தெரியாமல் மானுடத்தின் பாதியினர்

கைநாட்டுப் போடுகிறார்

கொழுப்புக் கரைவதற்கும்

கொம்பியூட்டர் துணைபோகும் கோளமிதன் மேலே தான்

மானுடத்தின் பாதியினர்

நிறையாத வயிற்றுடனே நித்திரைக்குப் போகின்றார்

காலிற் செருப்பற்ற கைநாட்டுப் போடுகிற

அரைவயிற்றுக் கூட்டத்தார்

அனல்கக்கிக் குண்டெறிய வழிகாட்டும் கொம்பியூட்டர் கொண்டு தமை ஆள்பவரை மோத முனைவதெலாம் மடமையெனில்

வெல்லுகிறார் எவ்வாறு? விளக்கிடுமா கொம்பியூட்டர்?‘

என்று முடிகிறது.

இந்த வகைக் கவிதைகள் கதைகளாகவும் விபரிப்புக்களாகவும் இருக்கின்றன என்கிறார்கள். இந்த உரைமொழிக் கவிதைகைள் போல் பலர் எழுதிவருவதாகவும் சொல்கிறார்கள். பலரால் எழுத முடிவதாகவும் எண்ணி எழுதுகிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல.

அவர்களிலிருந்து சிவசேகரம் அவர்கள் பேசும் அரசியல் அவற்றை உடைத்து வெளிக் கொள்ளும் உள்ளகப் பார்வை என்பவையே

அவர்களிலிருந்து சிவசேகரம் அவர்கள் பேசும் அரசியல் அவற்றை உடைத்து வெளிக் கொள்ளும் உள்ளகப் பார்வை என்பவையே இந்தப் போலிக் கவிஞர்களிலிருந்து அவரை நிச்சயம் வேறுபடுத்தும். ஒரு கவிஞராகத் தனித்து அடையாளம் இடும் புள்ளியும் அதுவே.

இந்தப் போலிக் கவிஞர்களிலிருந்து அவரை நிச்சயம் வேறுபடுத்தும். ஒரு கவிஞராகத் தனித்து அடையாளம் இடும் புள்ளியும் அதுவே.

மேலுள்ள இந்தக் கவிதையை நீங்கள் முழுவதுமாக வாசிக்கும் வேளையில் இந்த மொழிமுறையைப் போல் இன்றும் எழுதிவரும் பலரை நீங்கள் நினைவு கொள்ள நேரிடும். இந்த வகை முறைமையை சிலர் ஆற்றுகைத் தன்மை என்கிறார்கள். வாய்மொழித் தன்மை என்கிறார்கள். அது ஒவ்வொரு கவிதையிலும் கவிஞர் சிவசேகரம் அவர்கள் பேசும் அரசியலைப் பேசாது கடந்து விடும் தந்திரம்.

இன்னொரு வகையினர் 'அதிகமாக அவரது கவிதைகளில் காணப்படும் அரசியற் கருத்துக்களை மட்டும் பலர் பேசுகிறார்கள். அவரது கவிதையின் அழகியலும் பேசவேண்டியதுதான்' என்கிறார்கள்.

அரசியலைப் பேசுவதே அழகியல்தான் என்கிறேன் நான்.

இன்று கவிதை எழுதுபவர்கள் பலர் தமது கவிதைகளை வேறு மொழியில் மொழி பெயர்ப்பதற்கு இலகுவாக மொழி பெயர்ப்பாளர்களின் மொழி அறிவிற்கும் கவிதை அறிவிற்கும் ஏற்றாற்போலான எழுத்துக்களைக் கவிதைகள் என எழுதப்பட்டுவரும் சூழலில் 'மானுடத்தின் பாதியினர் நிறையாத வயிற்றுடனே நித்திரைக்குப் போகின்றார்' என மக்களின் பாடு பற்றிய அக்கறையில் கறாரான அரசியலைப் பேசிவிடும் மொழி அவருள் சிந்தனையாய் இருக்கிறது. .

இன்று கவிதை எழுதுபவர்கள் பலர் தமது கவிதைகளை வேறு மொழியில் மொழி பெயர்ப்பதற்கு இலகுவாக மொழி பெயர்ப்பாளர்களின் மொழி அறிவிற்கும் கவிதை அறிவிற்கும் ஏற்றாற்போலான எழுத்துக்களைக் கவிதைகள் என எழுதப்பட்டுவரும் சூழலில் 'மானுடத்தின் பாதியினர் நிறையாத வயிற்றுடனே நித்திரைக்குப் போகின்றார்' என மக்களின் பாடு பற்றிய அக்கறையில் கறாரான அரசியலைப் பேசிவிடும் மொழி அவருள் சிந்தனையாய் இருக்கிறது. .

அப்படிப் பேசிவிடும் கறாரான அரசியற்பதிவுக் கவிதைகள் சிலவற்றை நான் கீழே கோடிடுகிறேன்.

மாவலியின் மார்கழியில் என்ற கவிதையில் யாழ் நகரில் அரச வாகனங்களின் ஓடுகையை மாவலி நீர் ஓடுகையுடன் ஒப்பிடும் கவிஞரது அரசியற்பார்வை மிக முக்கியமானது.

1983 காலத்தில் எழுதிய இந்தக் கவிதை

'அரசாங்க வாகனங்கள் ராப்பகலாய் ஓடும் யாழ்ப்பாண வீதிகளில்

வீதிக் கரையோரம் நேற்றிரவு நின்றவனோ

இன்று மதகடியில்.

இல்லையெனில்

வாய்க்காலில் பிணமாக

ஒன்றாயோ துண்டாயோ.

ஊர் தேயும் ஆனாலும் வாகனங்கள் வீதிவழி விரைந்தோடும்' என்கிறார்.

'என் மண் என் மண்'ணென்று எப்போதும் நீ சொல்வாய்

கோடேறி வழக்குரைப்பாய்

மண்ணுக்கும் நீருக்கும் வேலி மதிற்சுவர் எழுப்பி வாராமல் நீ மறிப்பாய் இப்போதோ

'இது நம் மண்' என்கின்றாய்

'எழுக' என ஆர்ப்பரிக்கின்றாய்.

நன்று ஒரு சிறு கேள்வி.

நீ கூறும் 'நம் மண்'

இது ஆண்டோய்ந்த பரம்பரையார் மீண்டொருகால் ஆளவர வேண்டி

நமை வேள்வியிலே ஆடாகப் பலியிடவும்

அந்நியருக்கெல்லாமே அடமானம் வைத்திருந்து

அவர் தயவில் ஆளுதற்கு ஆசையுறும் மண்ணாமோ?

என்று கேட்கும் வரிகளின் இறுதியில்

அடியடியாய் முடியாண்டோர்

நீண்டநெடு வரலாற்றின்

குடுமிபிடிச் சண்டைகளிற் குருதியினாற் சேறான

செம்மண்ணோ எம் மண்ணோ

நீ கூறும் மண் அதனை உழுபவனின் மண்ணெனன்றால்

அவனுக்கே சேரட்டும்

முன்னாலே நிற்கின்ற ஆண்டைகளின் பங்கென்ன?' என்று முடிகிறது.

ஆம் 'முன்னாலே நிற்கின்ற ஆண்டைகளின் பங்கென்ன?'

இது நாம் இந்தக் கவிதைக்கும் அப்பால் தொடர்ந்தும் தொடர்ந்தும் கேட்கவேண்டிய வினாவாக இருக்கின்றது. ஆண்ட பரம்பரைக் கனவினைத் தகர்த்து விட ஊடறுத்து நிற்கும் ஒரு அரசியற் பதிவு இந்தக் கவிதை.

*11.11*

கார்த்திகை வசந்தத்தின்

காகிதச் செம்மலரின்

விதைக்ககூடில்லாப் பிளாஸ்ற்றிக் கருவட்டம்

மகரந்தஞ் சிந்தாது

பசுமையாய் நீளும் வாடாத உயிரற்ற காம்பு

பொத்தான் குழிகளுட் புதையக்

காசுதின்னி உண்டியல் ஏப்பம் ஒலிக்கும்

பயண அலுப்பில் வரிசையாய் வரிசையாய்க்

கற்றூண் மேற்சாயும் பொப்பி வளையங்கள்

உலகெல்லாம் ஆண்ட பரம்பரையின்

வாரிசுகள் தலைதாழ்த்தும் நிமிஷம் மௌனமாய் நகரும்

என நகர்ந்து

ஆண்ட பரம்பரைக்காய் ஆயுதங்கள் ஏந்தி

மாண்ட படையினரை மனதில் நினைவோமா

ஆயுதமே ஏந்தாமல் மாள இருக்கின்ற மானுடரை நினைவோமா என முடிகிறது.

நினைவேந்தலின் பின்னால் இருக்கின்ற அரசியலை வெளிப்படையாகவே விமர்சிக்கின்ற கவிதை இது.

ஆண்ட பரம்பரைக்காய் ஆயுதங்கள் ஏந்தி மாண்ட படையினரை மனதில் நினைவோமா ஆயுதமே ஏந்தாமல் மாள இருக்கின்ற மானுடரை நினைவோமா என 1989இலேயே கேள்விக்குட் படுத்தியவர் என்பதில் நாம் பெருமைப்பட்டேயாகவேண்டும்.

ஆனால் நமக்கு காலத்தில் வாய்த்த கவிஞர்களது வாய்ச் சொற்களோ கடந்த நாற்பது வருடங்களாக தமிழ்த்தேசிய சேடமிழுத்த வார்த்தைகளையே அதிகமாகக் கொண்டிருந்தன. சில இடத்தில் தவறி விழும் வார்த்தைகளில் அவர்கள் தங்களையே தொலைக்க வேண்டியிருந்தது. சில இடத்தில் நாங்கள் எதற்குள்ளும் இல்லையென்று அதனை மறுத்து தலையாட்ட முடியாமல் அந்தக் காலத்தில் எல்லாம் வேறு எதையெதையோ எழுதித் தொலைக்க வேண்டியிருந்ருந்தது அவர்களுக்கு.

ஆனால் தன்னுடைய கருத்தியலை மற்றும் சமூகம் மீதான விமர்சனத்தைக் காலம் பூராவும் தனது கவிதைக்கூடாகத் தொடர்ந்து அச்சமேயற்று வெளிப்படுத்தி வந்தவர் கவிஞர் சிவசேகரம் அவர்கள்.

அப்படியிருக்க இவரது கவிதைகளைத் தொகுத்த நண்பர்கள் தொகுப்பு வெளிக் கொண்டு வந்த காரணம் குறித்துப் பேசும்பொழு சிவசேகரம் அவர்களை இந்த சமூகம் மறந்து விட்டது என்கிறார்கள். நினைவு கொள்ளத் தவறுகிறது என்கிறார்கள்.

அது ஏன் என்றும் நாம் கணக்குக் கொள்ள வேண்டும். கடந்த காலம் முழுவதும் அழுகிய தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கலைஞர்களும்

நமக்கு காலத்தில் வாய்த்த கவிஞர்களது வாய்ச் சொற்களோ கடந்த நாற்பது வருடங்களாக தமிழ்த்தேசிய சேடமிழுத்த வார்த்தைகளையே அதிகமாகக் கொண்டிருந்தன. சில இடத்தில் தவறி விழும் வார்த்தைகளில் அவர்கள் தங்களையே தொலைக்க வேண்டியிருந்தது. சில இடத்தில் நாங்கள் எதற்குள்ளும் இல்லையென்று அதனை மறுத்து தலையாட்ட முடியாமல் அந்தக் காலத்தில் எல்லாம் வேறு எதையெதையோ எழுதித் தொலைக்க வேண்டியிருந்ருந்தது அவர்களுக்கு.
ஆனால் தன்னுடைய கருத்தியலை மற்றும் சமூகம் மீதான விமர்சனத்தைக் காலம் பூராவும் தனது கவிதைக்கூடாகத் தொடர்ந்து அச்சமேயற்று வெளிப்படுத்தி வந்தவர் கவிஞர் சிவசேகரம் அவர்கள்.

கவிஞர்களும் அவர்களோடு ஒட்டியிருந்த சிறு சஞ்சிகைகளும் சமூகச் செயற்பாடுடைய மாற்றுக் கருத்துடையவர்களும் கூட அள்ளுப்பட்டுப் போய் நின்றால் எப்படித்தான் அதன் எதிர்த் திசையில் இயங்கும் சிவசேகரம் அவர்களது எழுத்துக்களை நியாயப்படுத்திப் பேசுவது? கண்டு கொண்டு உரையாடுவது?

அவரை மறத்தல் என்பதல்ல பேசாது தவிர்த்தல் என்பதே நடைபெற்றது. அண்மையில் அவரது கவிதைத் தொகுப்புக்குறித்த உரையாடலில் அவர் பேசியதையே நீங்கள் நினைவு கொள்ள வேண்டும் எனக் கேட்கிறேன்.

'புலம் பெயர்ந்த இலக்கியவாதிகள் பலர் தமிழீழத் தேசியக் கனவிலிருந்து விடுபட்டால் நல்ல வழிக்கு வருவார்கள்' என்றவாறாகப் பேசியிருந்ததையும் நீங்கள் கவனத்திற் கொள்ளவேண்டும் எனக் கேட்கின்றேன்.

யாரும் அவரை மறக்கவில்லை. குறிக்கப்பட்ட கடந்த கால வரலாறுக்குள் உங்களால் அவரைக் கொண்டு காவமுடியாது இருந்தது என்பதே இங்கு முக்கியமானது. இப்பொழுது அந்தச் சந்தர்ப்பம் மீண்டு வந்தது மகிழ்ச்சியானது. கொண்டாடப்படவேண்டியது.

தன் வாழ்காலத்தில் அவர் ஒவ்வொரு காலப்பகுதியிலும் இடம்பெற்ற சம்பவங்களிற்கும் நினைவுகளுக்காகவும் என தனது விமர்சனப் பார்வையை கவிதை வாழ்வாகச் செலவழித்த கவிஞர், வடக்கில் இந்திய அமைதிப்படையின் இருப்புப் பற்றி- வடக்கில் அன்னையர் முன்னணியினரின் ஆர்ப்பாட்டம் பற்றி- உலகப் போரில் மரித்த படையினர் பற்றி- சாதிய எதிர்ப்பபுப் போராட்ட நினைவு பற்றி- தென்னாபிரிக்க மக்கள் எழுச்சி பற்றி- - சுற்றாடல் பற்றி- பிரேமதாசாவின் படுகொலை பற்றி- - 1989 இல் அரச படைகள் கொன்ற இளைஞர்களின் பிணங்கள் களனி ஆற்றில் மிதந்தது பற்றி- வடக்கில் நடைபெற்ற அரசியற் கொலைகள் பற்றி- கே.ஏ. சுப்ரமணியம் நினைவு பற்றி- ராஜினி திராணகமவின் கொலையை வெறுத்தது பற்றி- நெல்சன் மன்டெலாவின் விடுதலை பற்றி- சிலேயில் பினோஷெயின் அடக்குமுறை பற்றி- 1966 இல் உருவான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைப் பற்றி- துருக்கிய குர்திஸ்தான் கவிஞர் றபீக் ஸபியின் கவிதையின் ஆங்கில வழித் தமிழாக்கம் பற்றி- பம்பாயில் இனக் கலவரம் வலுக்கையில் முகூர்த்தம் சரியில்லை என்று பிரதமர் நரசிம்மராவ் அங்கு போவதைத் தவிர்த்தது பற்றி- விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை வடக்கிலிருந்து விரட்டியது பற்றி- 9.11 நியூ யோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதல் பற்றி-இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் 2002 இற் செய்த புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றி-2004 டிசெம்பர் சுனாமி பற்றி- ரவிராஜின் தயார் அழுகை பற்றி- என அத்தனை பற்றிகளையும் எழுதிவந்த கவிஞர் சிவசேகரம் அவர்களை தமிழ்த் தேசியப் பித்தேறி நின்ற காலங்களில் நீங்கள் எவ்வாறுதான்

நினைவுக்குள் இழுத்துச் சென்று விட முடியும்.?

எல்லாமே சூனியமான இக்காலத்திலாவது நாம் அவரை உள்வாங்க முடிந்திருப்பது மிகப்பெரிய மகிழ்ச்சியான விடயம்.

ஆனாலும் எனக்கிருக்கிற குறை என்னவென்றால் 2000இன் காலங்கள் வரை அத்தனை பற்றியும் அடையாளமிட்டு எழுதிய கவிஞர் அவர்கள்2000இன் பின் காலங்களில் மட்டும் காலத்தின் விபரம் பற்றி எழுதாமல் கடந்து விடுகிறார். இந்தக் காலத்தில் கவிஞர் சிவசேகரம் அவர்கள் எழுதாது விட்ட கவிதைகளை நான் தொடர்ந்தும் தேடுகிறேன்.

அரசியல் பிரக்ஞை உள்ள எல்லாக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் ஏன் மாற்றுக் கருத்தாளர்களும் கூட அதிகமாகச் சறுக்கிய காலங்கள் அவையாகத்தான் இருக்கின்றன.

பலி என்ற கவிதை இராணுவ ஆட்சேர்ப்புப் பற்றியது. இது 1998 இல் கவிஞர் சிவசேகரம் அவர்கள் எழுதியது.

'ஆடும் பலி தந்தோம்

காசு பணம் தந்தோம் கட்டிடவும் துணி தந்தோம்

உரக்க உடுக்கடித்துப் பூசாரி கூவுகிறான்

'தின்பண்டங் கொண்டு வா திரவவகை கொண்டு வா'

லட்சக்கணக்கான மானிடரின் உடலங்கள் வெட்டி வழிந்த வெங்குருதி குடக்கணக்காய் கொட்டிக் கறுத்த தரை மீது நின்றபடி

பறை ஒலி போல் வேட்டதிர அழுகை ஒலி சங்கூத

வெறியோடிச் சிவப்பான விழிகள் கனல் கக்க

உடுக்கடித்துப் பூசாரி உரு ஆடிக் கூவுகிறான்

'கோழிகளும் ஆடுகளும் கொண்டு பசி தீருவதோ

சாராயம் கள்ளருந்தித் தாகம் தணிகுவதோ

பத்தாயிரம் உயிர்கள் பலி கேட்கும் தெய்வமிது

ரத்தத்தைக் கொண்டுவா நரபலியைக் கொண்டு வா

கிழடுபட்ட தசை வேண்டாம் .

இளைய தலைமுறையின் இனிய தசை கொண்டு வா

பட்டம் பதவி பல அதிகாரம் பணமுடையோர்

பெற்றெடுத்த பிள்ளைகளின் ஊளைத் தசை வேண்டாம்

சிங்களத்தின் ஏழைகளின் சிறுவர்களைக்கொண்டு வா

பச்சை கறுப்போடு பழுப்பாடை அணிவித்து

ஒட்ட முடி நறுக்கித் தொப்பி தலைக்கேற்றி

சப்பாத்துக் கால்களுடன் போர்ச் சாமி சந்நிதியில்

வெட்டிச் சரிக்கப் பத்தாயிரம் புதல்வர்

கட்டி இறுகக் கயிற்றால் பிணைத்தெனினும்

கட்டாயமாய் எனது களத்தினுக்குக் கொண்டு வா.'

என்று சொல்கிறது இந்தக் கவிதை.

ஆனால் 'இந்தமண் எங்களின் சொந்தமண்' என்பதை அவர் மாற்றியது போல் மேலுள்ள அவரது கவிதைகளை மாற்றி எழுதிக் கேட்கிறேன் நான்.

'ஏழைத் தமிழர்களின் பாலகரைக் கொண்டு வா.

பஞ்சம் பசியோடு

வன்னியிலே பள்ளிக்குச் செல்ல வரும் பாலகரை இடையில் மறி.

ஊன் குருடு செவிடு என்று கைநழுவ விட்டுடாதே.

கேட்பதற்கே நாதியற்ற நாய்கள் அவை.

கயிற்றால் பிணைத்தெனினும்

கட்டாயமாய் களத்திற்குக் கொண்டுவா.

இரவிரவாய் சூடடடித்த சுணைமொய்க்க

பகல்தூக்கத்தில் அப்பன் படுத்திருப்பான்

அவனை எழுப்பாதே.

அடிவளவில் உழுந்தறுக்கும் அவன் மகளை அப்படியே ஏற்றிவிடு. பிடியிலிருந்து தப்பிக்க

கலியாணம் கட்டி வைப்பார் கலங்காதே.

.மணமுடிப்பின் இறுதிவரை காத்திருந்து இழுத்து வா.

ஒன்றுக்கு இரண்டாகும்.

ஓர் நொடியில் நஞ்சருந்த யோசிப்பார்.

நஞ்சருந்தி வருஞ்சாவில் நாடு வருமா என்று கேள்.

சாவுதான் சாவு. அங்க வந்து சாவன் எனச் சொல்.'

என்று அவருக்கு அருகிலிருந்த தமிழ்ப்பகுதியில் பிள்ளை பிடிப்புப் பற்றி தெரிந்தும் எழுதிவிட முடியாது போனது என்பது அவரின் மிகப் பெரிய சிந்தனை வீழ்ச்சி..

ஆனாலும் அவர் தனது கவிதையில் சொல்வது போல்

'ஒன்றைப் பற்றி நான் சொன்னால் அது இன்னொன்றைப் பற்றியதாய் இருக்கிறது'. என நினைத்து அதனைச் சொல்லும் போது இதனையும் சொன்னார் என நினைத்து விட்டுக் கடந்து போகலாம்.

ஆனால் முடியாது.

பின் 2006 இல் எழுதப்பட்ட போராளித் தோழருக்கு என்ற கவிதையைப் பாருங்கள்.

அந்த யுத்த காலத்தில் அதனை மக்களுடைய போராட்டமாக மாற்றும் படிபுலிகளிடம் மன்றாடுகிறது இந்தக் கவிதை.

'போராளித் தோழரே கொஞ்சம் பொறும் உமது பயணத்தை மக்களுடன் பகிரும் உமது

பாதையை மக்களுடையதாக்கும் நீர் சுமக்கும் பணியின் கனம் இலகுவாகட்டும் எதிரி மேலும் மேலும் தனிமைப்பட நேருகிற போது வெற்றி உம்முடையதாய் மட்டுமன்றி எம்முடையதாய் மட்டுமன்றி எல்லா மக்களுடையதாயும் அமையும்' எனக் கெஞ்சுகிறார்.

அதன் பின் 2007 இல் எழுதப்பட்ட இந்தக் கவிதையினைப் பாருங்கள்

பயங்கரவாதியாக இருத்தல் பற்றி ஒரு சிந்தனை

பயங்கரவாதம் பற்றி ஊடகவியலாளர் பொலிஸ் மேலதிகாரியிடம் உரையாடலாக இருக்கும் கவிதை இது.

'பொலிஸ் படையின் முன்னோ ராணுவத்தின் முன்னோ எதிர்ப்படுகிற எவரும் பால் வயது வேறுபாடின்றிப் பயங்கரவாதியாகக் கருதப்படலாமெனின் பயங்கர வாதியாகக் கருதக்கூடிய எவரும் பால் வயது வேறுபாடின்றிப் பயங்கரவாதியாகவே இருப்பது சற்றுப் பாதுகாப்பானது' எனச் சொல்கிறது.

இதற்குள் தான் வன்னியில் அந்தக் காலத்தின் பிள்ளைபிடிப்பின் கதையை நீங்கள் பொருத்திப் பார்க்க வேண்டும்.

2000ம் ஆண்டிலிருந்து 2009 காலம் வரை பால்வயது வேறுபாடின்றி யுத்தத்திற்காக வன்னியில் களவாடப்பட்ட குழந்தைகளின் மீதான வன்முறையை மழுங்கடித்து அதன் கதையை இந்தக் கவிதை புனிதமாக்கிறது என்று சொல்கிறேன்.

இன்றுவரை அவர் பேசி வந்த அரசியலுக்கு இது மிகவும் முரணானது. அவரது மானிட விழுமியச் சிந்தனை மழுங்கிய இடமும் இதுதான்.

2008இல் எழுதிய சிலந்தி பற்றி ஒரு சிந்தனை என்ற கவிதை.

மாயவித்தைக்குள்ளால் தனது இதே சிந்தனையைபொதுமைப்படுத்த முனைகிறதனை நீங்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

'எந்தவொரு பூச்சிக்கும்

**நம் வாழ்காலத்தில் கிடைத்த கவிஞர்களில் சமரசமற்ற கவிஞர் என்ற அடையாளத்தை அவருக்குத்தான் கொடுக்கமுடியும். என்றாலும் இந்த ஒரு கவிஞனுக்குள் இந்தத் தடம் புரள்வு நிகழ்ந்திருக்கவே கூடாது.**

ஏதோ ஒரு சிலந்தியால் ஆபத்துக் காத்திருக்கிறது

சிலந்தியைப் பிடித்துத் தின்னுகிற பறவையுடன் ஃஅல்லது பல்லியுடன் சினேகிதம் பிடித்தால்

ஒருவேளை சிலந்திகளை இல்லாதொழிக்கலாம்

ஆனாற் பறவையோ பல்லியோ

சிலந்தி கிடையாத போது பூச்சிகளைப்

பிடித்துத் தின்னாதென்று உத்தரவாதம் இல்லை

எனவே பூச்சி பூச்சியாகவும் சிலந்தி சிலந்தியாகவும் உள்ளவரை

பூச்சி சிலந்தியிடஞ் சிக்காமலிருப்பதற்கு உரிய உபாயங்களைத் தேடி அறிவது போதுமானது

சிலந்தி பற்றிய மற்றைய ஆய்வுகளைச் சிலந்தியால் ஆபத்தில்லாதவர்கள் செய்து கொள்ளட்டும்.' என எழுதியிருக்கிறார்.

அன்றைய யுத்த காலத்தை உன்னிப்பாகக் கவனித்து உள்வாங்கியிருப்பவர்களால் இந்தக் கவிதையின் அழகியல் தந்திரத்தை உற்று நோக்கிவிட முடியும். அக்காலத்தில் நடந்த எல்லாவகை அயோக்கியத் தனங்களுக்கும் அறிவு முலாம் பூசுகிறது இந்த வரிகள்.

அதன் தொடர்ச்சியாய் எல்லாமே முடிந்து போன காலத்தில் 2010 இல் எழுதப்பட்ட ஒரு கவிதையோடு இந்த உரையை முடிக்கிறேன்.

'எப்போது புறப்பட்டிருந்தாலும் இப்போதுள்ள இடத்திற்கே வந்துசேர்ந்திருப்பார்கள் அப்போதே புறப்பட அனுமதித்திருந்தால் பலர் இப்போதும் உயிரோடு இருந்திருப்பார்கள்.' எனச் சொல்லும் கவிஞர் இடையில் சிலகாலம் தடுமாறிய இடத்தைதான் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அது வரையான அனைத்து அட்டூழியத்தினையும் கண்கொண்டு பார்த்திருந்த கவிஞர், 2010இல் இந்த வார்த்தைகளைச் சொல்வதற்கு காத்திருக்க வேண்டியிருந்தது.

இந்த வார்த்தைகளுக்காக நாம் ஏன் இவ்வளவு காலமும் கவிஞர் சிவசேகரம் அவர்களைக் காவித் திரிவான் எனவும் கேட்டுக் கொள்ள வேண்டியிக்கிறது.

நம் வாழ்காலத்தில் கிடைத்த கவிஞர்களில் சமரசமற்ற கவிஞர் என்ற அடையாளத்தை அவருக்குத்தான் கொடுக்கமுடியும். என்றாலும் இந்த ஒரு கவிஞனுக்குள் இந்தத் தடம் புரள்வு நிகழ்ந்திருக்கவே கூடாது.

எனினும் முன்னெப்போதையும் விட 2000ம் ஆண்டின் காலத்தில் அனைவருக்கும் ஈழவிடுதலை என்பதே திசைமாறி தடம்மாறிய காலமாகியது. அந்தக் காலத்தில் சிவசேகரம் அவர்கள் எழுதிய கவிதைகளை நாம் தனித்து எடுத்து நோக்க வேண்டும்.

அவ்வாறு நோக்குவோமாயின் அதுவே ஈழ அரசியலில் இலக்கியத்தில் கலை உலகில் அனைத்தையும்- அனைவரையும் தடம்மாற்றி இடம் மாற வைத்த இடம் போல் சிவசேகரம் அவர்களையும் தடுமாற வைத்ததை நாம் கணக்கிட முடியும்.

இந்த இடத்தை மிகத் துல்லியமாக அளவிடாது கடப்பது என்பதும் இன்னொரு போர்க்குற்றம் எனச் சொல்லி; இதனை நிறைவு செய்கிறேன்.

ரொரண்டோவில் 'தேடகம்' அமைப்பினரால் 2022 ஏப்ரல் 09இல் ஒழுங்கு செய்யப்பட்ட 'சிவசேகரம் கவிதைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

# ‘முற்போக்கு முக்காடு போட்ட மதவாதம்’






எங்களுடைய famous for nothing இலக்கியவாதிகளும் தாங்களும் ‘பேசப்பட வேண்டும்’ என்று இப்படி எதையாவது திருவாய் மலர்ந்து பரபரப்பிற்கு வழி கோலுவார்கள். ஏதோ இவர்கள் பற்றிய பரபரப்பு ஊடகங்களில் இவர்களைப் பற்றிப் பேச வைத்து, இவர்களின் புத்தக விற்பனை எகிறிக் கொண்டு போக வைக்கும் என்று நீங்கள் நினைக்கக் கூடும்.

பேராறுஞர்
கல்லாநிதி
கியூறியஸ் ஜி

இதெல்லாம் முதலே சொன்னதுதான்.

ஹொலிவூட் திரையுலகப் பிரபலங்கள், மற்றும் இசையுலக பிரபலங்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் ஆயின், தங்களைப் பற்றி அடிக்கடி செய்தி வர வேண்டும் என்பதற்காக, பொதுத்தொடர்பு நிறுவனங்களை (Public relations) பெரும் சம்பளத்திற்கு கூலிக்கு அமர்த்தியிருப்பார்கள். இவர்களுக்கும் கொஞ்சம் மார்க்கட் சரிகிறது, ‘தாங்கள் பேசப்படவில்லை’, அடிக்கடி ஊடகங்களின் கிசுகிசுப் பகுதிகளில் தங்கள் பெயர் அடிபடவில்லை என்ற சுயமோகப் பிரச்சனை என்றால், இந்த நிறுவனங்கள் ஏதோ வழிகளில் அவர்களின் பேட்டிகள், செய்திகளை வரப் பண்ணுவார்கள். அவர்களின் புதுப் படம், அல்பம் வருகிறது என்றால், அவற்றைத் தயாரித்த ஸ்ரூடியோவோ, இசைத்தட்டு நிறுவனமோ இந்தப் பரபரப்பை உண்டுபண்ணி விடும்.

அதிலும் famous for nothing பிரபலங்களான அந்தக் காலத்து பாரிஸ் ஹில்டன் முதல் பின்னைய கார்டாஷியன் குடும்பம் வரைக்கும், எந்தத் திறமைகளும் இல்லாமல், இந்தப் பரபரப்புகளாலேயே உயிர் வாழ்கிறவர்கள். கோடிக்கணக்கில் பணம் பண்ணுகிறவர்கள். இவர்கள் இதற்காகவே தங்கள் செக்ஸ் டேப்புகளை கசிய விடுவார்கள்.

முன்பு பாடகிகளான மடோனா முதல் ஜெனிபர் லோப்பேஸ் வரைக்கும், தங்களது தொலைக்காட்சித் தொடர் பிரபலம் காரணமாகப் பாடகிகள் ஆக்கப்பட்ட Britney Spears, Selena Gomez, Miley Cyrus போன்றவர்களும், இப்படி பெரும் பரபரப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். இது அவர்களின் புதிய அல்பங்கள் வரும்போது நடைபெறும்.

ஜெனிபர் லோப்பேஸ் அந்தத் தருணமாகப் பார்த்து புதிய காதலனைத் தேடிக் கொண்டிருப்பார். மடோனாவாக இருந்தால் ஆபிரிக்க நாடான மலாவியில் போய் ஒரு அனாதைப் பிள்ளையை தத்தெடுத்திருப்பார்.

அல்லது மொக்கைத்தனமான, சர்ச்சைக்குரிய எதையாவது சொல்வார்கள், தங்களுக்கு ஒரு பாலீர்ப்பு உண்டு என்பது மாதிரி!

பிறகென்ன? அது ஊடகங்களிலும் அலுவலக தண்ணீர் குடி இடங்களிலும், இப்போது சமூக வலைத்தளங்களிலும், பேசுபொருளாகி விடும். இதுவே அவர்களின் வியாபாரத்திற்கு பெருவழியாக அமைந்து விடும். இதில் பெரும்பாலும் சுயமோகத்தை விட, அந்தப் பரபரப்பை வைத்துப் பணம் சம்பாதிப்பது தான் அடிப்படை நோக்கம்.

எங்களுடைய famous for nothing இலக்கியவாதிகளும் தாங்களும் ‘பேசப்பட வேண்டும்’ என்று இப்படி எதையாவது திருவாய் மலர்ந்து பரபரப்பிற்கு வழி கோலுவார்கள். ஏதோ இவர்கள் பற்றிய பரபரப்பு ஊடகங்களில் இவர்களைப் பற்றிப் பேச வைத்து, இவர்களின் புத்தக விற்பனை எகிறிக் கொண்டு போக வைக்கும் என்று நீங்கள் நினைக்கக் கூடும்.

ஆயிரம் பிரதிகள் விற்க ஐந்து வருடங்கள் முக்குகிற இவர்களுடைய விற்பனை எகிறுவதாக இருந்தால்,

இவர்களும் செக்ஸ் டேப்புகளை கசிய விட்டு பரபரப்பை உண்டுபண்ணி புத்தக விற்பனையை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கக் கூடாதா? என்று நீங்கள் கேட்கக் கூடும். சாரு மாதிரி 'வாலிபத்தில் மன்மதன், லீலைகளில் மன்னவன், குத்துவதில் சூரன் நான்' என்று எழுத்தில் பீலா விடலாம். வாலிபம் போய் எக்கச்சக்கமான காலமான இந்த வயதில் வீடியோ எடுத்தால், 'ரெண்டும் கெட்ட வேளையிலேயே கண்டேனே உன்னையடி!' என்ற உண்மை வெளியாகி நாறிப் போய் விடுமே?
(இருந்தாலும், யாராவது 'செக்ஸ்டேப் செயமோகன்' என்று அழைத்துக் கொள்ள விரும்பினால் பயன்படுத்துவதற்கு வசதியாக, அந்தச் சொற்றொடருக்கான காப்புரிமையை public domain இல் விட்டிருக்கிறேன்.)

உடபெட்டிக்குள் pdf please மூலமாகத் தான் இருக்கும்.

இவர்களும் செக்ஸ் டேப்புகளை கசிய விட்டு பரபரப்பை உண்டுபண்ணி புத்தக விற்பனையை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கக் கூடாதா? என்று நீங்கள் கேட்கக் கூடும். சாரு மாதிரி 'வாலிபத்தில் மன்மதன், லீலைகளில் மன்னவன், குத்துவதில் சூரன் நான்' என்று எழுத்தில் பீலா விடலாம். வாலிபம் போய் எக்கச்சக்கமான காலமான இந்த வயதில் வீடியோ எடுத்தால், 'ரெண்டும் கெட்ட வேளையிலேயே கண்டேனே உன்னையடி!' என்ற உண்மை வெளியாகி நாறிப் போய் விடுமே?

(இருந்தாலும், யாராவது 'செக்ஸ்டேப் செயமோகன்' என்று அழைத்துக் கொள்ள விரும்பினால் பயன்படுத்துவதற்கு வசதியாக, அந்தச் சொற்றொடருக்கான காப்புரிமையை public domain இல் விட்டிருக்கிறேன்.)

தங்களைத் தாங்களே நண்பர் வண்கள் என்று எந்தக் கூச்சமும் வெட்கமும் இல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறவர்களுக்கு, தாங்கள் எப்போதும் 'பேசப்பட வேண்டும்' என்ற உளக்கோளாறு இருக்கத் தானே செய்யும். யாருமே தங்களைப் பற்றிப் பேசாவிட்டால் உலகமே மறந்து விடும் என்று ஒரு தன்னம்பிக்கை தான்.

ஒரு கவிதை எழுதிய இலக்கியவாதிகளுக்கே 'அங்கீகாரம்', 'பேசப்பட வேண்டும்' என்பதே சிந்தனையாக இருக்கும்போது, நம்பர் வண்கள் என்றால் சும்மாவா?

யாருமே மறந்து போய் விடக் கூாது என்று, மனுஷ்யபுத்திரன் போல பன்றி குட்டி போட்ட கணக்காக, பதினைந்து நிமிடத்திற்கு ஒரு கவிதை எழுதி நேர முத்திரை குத்திக் கொண்டு இருக்கலாம். அல்லது சர்ச்சைக்குரிய ஒன்றை, அது பெரும்பாலும் உண்மைக்குச் சம்பந்தம் இல்லாததாகத் தான் இருக்கும், சொல்லி விட வேண்டியது.

அதிலும் நம் ஈழத்தமிழ் மறவர்கள் பற்றிச் சொன்னால் போதும். அவர்களும் துரோகிகளுக்குத் தட்டுப்பாடு வந்து காய்ந்து போய்க் கிடக்கிறார்கள்.

பிறகென்ன? ஃபேஸ்புக் தற்கொடைப் போராளிகளுக்கு போர், போர், போர்! வெற்றி அல்லது வீர மரணம் தான்.

கொஞ்ச நாளைக்கு முன்னால் சாரு தனக்கு அமெரிக்காவில் விருது தரப்பட்டது என்றும் தன்னுடைய கதையில் வயது குறைந்தோருடனான பாலுறவு பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததால் தனக்கு பரிசு மறுக்கப்பட்டதாகவும் பெரும் பிரளயம் ஒன்றைக் கிளப்பியிருந்தார். சுதந்திரதேவியின் அமெரிக்கா வரையும் போய் நீதிக்காகப் போராடப் போகிறேன் என்று ஏதோ எழுதிய ஞாபகம்.

இப்போது அதைப் பற்றி ஏதாவது?

மூச்!

பிறகு இலங்கைக்கு கூழ் குடிக்கப் போகிறேன் பேர்வழி என்று போனார். போகும்போதே, 'வானத்தில் போன சனியனை ஏணி வைத்து இறக்குகிறீர்கள். ஏற்கனவே பிரான்ஸ்க்குக் கூப்பிட்டவர்களே அவர் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை' என்று அபத்தத்தில் warning shots வேறு கொடுத்திருந்தேன்.

நம்பியாரின் துகிலுரிப்புக்கு அபயக்குரல் எழுப்பும் தமிழ்ப்படக் கதாநாயகி மாதிரி 'காப்பாத்துங்க, காப்பாத்துங்க, என்னைக் கொல்லப் போகிறார்கள்' என்று அவல ஓலம் எழுப்பி, அதைப் பற்றி கதையும் எழுதியதாக ஞாபகம்.

இலங்கையில் றோகன விஜயவீரவும், பிரபாகரனும் கூட தங்களின் உயிருக்கு ஆபத்து என்று இப்படி ஒப்பாரி வைத்திருக்க மாட்டார்கள்.

யாழ்ப்பாணிகளின் டிசைன் அப்படி. அவர்களுக்கு சாரு யார் என்றே தெரிந்திருக்காது. ஆனால், கொலை வெறியில் அலைந்திருப்பார்கள்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. தராக்கி சிவராம் யார் என்பது, பிரபாகரன் அவருக்கு மாமனிதர் பட்டம் கொடுத்த பின்னால்தான் யாழ்ப்பாணிகளுக்குத் தெரியும். யாழ்.பல்கலைக்கழக உபவேந்தருக்கு எட்டாம் வகுப்புத் தாண்டாத பிரபாகரன் மாமனிதர் பட்டம் கொடுத்த பின்னால் தான், அந்த உபவேந்தர் என்ன சாதனைகள் நிகழ்த்தினார் என்பது யாழ்ப்பாணிகளுக்குத் தெரியும். அவரை உபவேந்தர் ஆக்கிய சிங்களவர்களுக்குத் தெரிந்தது கூட யாழ்ப்பாணி களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்களுக்கு இப்படி வேறு யாராவது சொல்லியிருப்பார்கள். பெரும்பாலும் அவர்களின் வாய்களில் சொற்களைத் திணிக்கிற யாராவது ஊடகவியலாளர்

ஊரோடு ஒத்தோடியே ஆக வேண்டும். உடனே, தர்ம அடி தான்.

யார் எவர் என்பதெல்லாம் பிறகு கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். 'அரிய சந்தர்ப்பத்தை எல்லாம் நழுவ விட முடியாது!'.

Shoot now! Think later! யாழ்ப்பாணக் 'கூய்' பற்றி இப்போது

சாருவிடம் கேட்டுப் பாருங்கள். அவர் ‘சாமி தர்மம் போடுங்க, சாமீ’ யில் மும்முரம்.

உலக சினிமா பற்றி சொல்லிக் கொடுக்கிறாராம். அவரிடம் சினிமா கற்றுக் கொண்டால், குறைந்த செலவில் நிறைந்த பயன்... சே... படம் எடுக்கலாமாம். சிலி நாட்டில் யாராச்சும் ஒலக சினிமா இயக்குனர் இருக்கக் கூடும். அவர் பற்றி இவர் வாசித்திருக்கக் கூடும். தமிழ்நாட்டு இலக்கியர் ஒருவர் சொன்ன மாதிரி, முதலில் இப்படிப் பெயர்களைச் சொல்லுவார். பின்னர் அவர்களைப் பற்றித் தேடிப் படிப்பார்.

Well, Shoot now! Think later! You will be a serial killer in no time.

ஒலக சினிமா யமுனா ராஜேந்திரன் கட்டுப்பாட்டில் உள்ள பேட்டை ஆச்சே!?

அவர் கோவிச்சுக்க மாட்டாரா? அதிலும் லண்டனில் யாழ்ப்பாணிகளின் பலசரக்குக் கடைகளில் உள்ள வீடியோக் கடையில் வாங்கிய கமெராக் கொப்பியைப் பார்த்து, ‘மணிரத்தினம் படங்களில் சிறீராமின் ஒளியியலின் அழகியல்’ பற்றி புத்தகம் எழுதியிருந்திருப்பார். அதை வாசித்தாலேயே செலவே இல்லாமல், செல்போனிலேயே படம் எடுக்கலாம். லைட் போடும் செலவு கூட இருக்காது.

‘சூப்பு ஸ்டார்’ சாரு பெருமையுடன் வழங்கும் ‘இருட்டில் புரட்டு!.

விளக்குப் பிடித்துப் படம் எடுத்தால் நன்றாக இருக்காது.

“பிறழ்வு சினிமாவின் ‘உச்சம்!’ பேஸ்புக்கில் பிரபல ஒலக சினிமா விமர்சகர் யமுனா ராஜேந்திரன்’ என்று ஹொலிவூட் போஸ்டர்கள் மாதிரி, போஸ்டரிலேயே ‘அடிச்சு’ விடலாம்.

தமிழ்க் கடை வீடியோக் கடைகளில் வாங்கிய கொப்பிகளில், நான் பார்த்த பழங்கால எம்.ஜி. ஆர் படங்களுக்கும், தமிழ்நாட்டுத் தியேட்டர்களின் இருட்டில் பல(சிறி)ராம்கள் தான் ஒளிப்பதிவு செய்திருந்தார்கள்.

மூணாம் நம்பர் வண் எஸ்.ரா பாவம். வெள்ளத்தில் நனைந்த புத்தகங்களால் பெரும் நட்டப்பட்டுப் போயிருப்பார். அவரும் இப்படி சர்ச்சைகளை உருவாக்கியாவது அந்தப் புத்தகங்களை விற்கலாமே என்ற எண்ணம் வந்தது. ஆனாலும், அவரும் நம்பர் வண்களில் ஒருவர், Best seller புத்தகங்களை எழுதுகிறவராக இருந்தால், குடோனுக்குள் இவ்வளவு புத்தகங்கள் இருக்க வாய்ப்பில்லையே!? ஐயாயிரம் காப்பி போட்டேன், இலங்கையில் ஐந்து பிரதிகள் கூட விற்கவில்லை என்று புலம்பும் ஆசானோடு, வெள்ளத்தில் Same boat போலும்.

எனவே, பிரதிகளுக்கு முந்துங்கள். சொற்ப பிரதிகளே கையிருப்பில் உள்ளன. (மீதி மழையில் நனைந்து விட்டன.)

சரி, பிழைச்சுட்டுப் போகட்டும்!

நம்ம நான்காவது நம்பர் வண் ஆசானுக்கும் இப்படி அடிக்கடி அரிப்பு எடுக்கும். தன்னை மட்டும் புத்திசாலியாகவும், உலகத்தில் உள்ள மற்ற எல்லாரையும் முட்டாள்களாக நினைக்கும் அவருக்கு, உலகில் உள்ள எல்லாம் பற்றிய அவரது தீர்ப்பே அறுதியானதும் உறுதியானதும்.

கொஞ்ச நாளாக தன்னைப் பற்றிய பரபரப்புகள் இல்லாதது அவருக்கும் அரிப்பை ஏற்படுத்தியிருக்கக் கூடும். அந்தக் கொஞ்ச நாள் என்பதும் அதிகமாக இருக்காது. ஒரு இரண்டு, மூன்று நாட்கள் தான்.

நம்ம இலக்கியக் கும்பல்களில் உள்ள சிலருக்கு உள்ள வியாதி போல, அவர் எங்கேயும் போய், பேஸ்புக் பின்னூட்டங்களில் சம்பந்தமில்லாத தன்னுடைய கட்டுரையைத் திணிக்க வேண்டிய அவசியம் இல்லை.

காலை வடக்குப் பக்கம் பார்த்தபடி மலம் கழிக்கும்போது, நித்திய கடமையாக அவரது பக்கத்திற்கு புனித யாத்திரை செல்லும் நம் ‘கோவிந்தா கோவிந்தா’ இலக்கியக் கூட்டம் போய், ‘வானத்தில் தன் பாட்டில் போய்க் கொண்டிருந்த சனியனை ஏணி வைத்து இறக்கிக் கொண்டு வரும்’.

இப்படி, எங்கள் ஊரிலும் இருந்தார்கள்.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் ‘வைரமாளிகை’, கோட்டை முனியப்பர் கோயிலடியில் ஒரு இரசாயனப் பேராசிரியர். அவர்களால் பேசாமல் இருக்க முடிவதில்லை. பேசிக் கொண்டே இருப்பார்கள். வைரமாளிகையாவது சுவீப் டிக்கட் விற்றுக் கொண்டிருந்தார். மற்றவர் அந்தப் பூவரச மரத்திற்குக் கீழ் இருந்து வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். முனியப்பரிடம் செவ்வாய்க் கிழமைகளில் ஆஜராகி கும்பிடுகிறவர்கள் கூட அவரைக் கணக்கெடுப்பதில்லை.

நீங்கள் கேட்கிறீர்களோ இல்லையோ என்பதெல்லாம் அவர்களுக்குப் பிரச்சனையாக இருப்பதில்லை.

அவர்கள் எல்லாம் எங்களுக்கு வேடிக்கையாகத் தான் இருந்தார்கள். அவர்களோடு தர்க்க நியாய விவாதங்களுக்கு ஆனானப்பட்ட யாழ்ப்பாணிகள் கூடப் போனதில்லை. இரசாயனம் அல்லது வேதியியலிற்கு

இப்படி, எங்கள் ஊரிலும் இருந்தார்கள்.
யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் ‘வைரமாளிகை’, கோட்டை முனியப்பர் கோயிலடியில் ஒரு இரசாயனப் பேராசிரியர். அவர்களால் பேசாமல் இருக்க முடிவதில்லை. பேசிக் கொண்டே இருப்பார்கள். வைரமாளிகையாவது சுவீப் டிக்கட் விற்றுக் கொண்டிருந்தார். மற்றவர் அந்தப் பூவரச மரத்திற்குக் கீழ் இருந்து வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். முனியப்பரிடம் செவ்வாய்க் கிழமைகளில் ஆஜராகி கும்பிடுகிறவர்கள் கூட அவரைக் கணக்கெடுப்பதில்லை.
நீங்கள் கேட்கிறீர்களோ இல்லையோ என்பதெல்லாம் அவர்களுக்குப் பிரச்சனையாக இருப்பதில்லை.

யாழ்ப்பாணத்தில் பெயர் போன சாம் மாஸ்டரின் அபிமான மாணவனான நான் கூட அந்த பேராசிரியரை ஆசான் என்று அழைத்ததுமில்லை. காசு கொடுக்காமல் டியூசன் கற்றுக் கொள்ள நினைத்ததுமில்லை.

தன்னை விடப் புத்திசாலி என்று தெரிந்த மனிதனையே, ‘அவன் கிடக்கிறான் வியரன்’ என்று கடந்து போகிறவன் யாழ்ப்பாணி. உண்மை சொல்கிறவனைப் பைத்தியக்காரன் என்கிற யாழ்ப்பாணி, பைத்தியக்காரன் உண்மையைச் சொன்னால் மட்டும் ஏற்றுக் கொண்டு விடுவானா?

ஆசானைப் போலவே, யாழ்ப்பாணியும் தன்னை மட்டும் புத்திசாலியாகவும் மற்றவர்களை எல்லாம் முட்டாள்கள் என்றும் நினைக்கிற ரகம்.

நம் இலக்கியக் கூட்டத்திற்கு என்னவோ, ஆசானின் பொன்மொழிகள் தன்மானப் பிரச்சனை ஆகி விடும். ‘பொலம்பிட்டுக் கெடக்கிறான் பைத்தியக்காரன்’ என்று அவர்களால் கடந்து போக முடிவதில்லை.

போர், போர்! வெற்றி அல்லது வீரமரணம். ஆசானை மின்கம்பத்தில் கட்டி மண்டையில் போடும் வரை, இறுதித் துளி இரத்தம் இருக்கும்வரை ஓய மாட்டார்கள் போல இருக்கும்.

அப்புறம், ‘இந்தா பிடி, வாறன்’ என்று, றோட்டில் போன காரைத் துரத்திக் கொண்டு போய் குலைத்த நாய் மாதிரி, பேசாமல் மூலையில் படுத்திருப்பார்கள். அடுத்த கார் வரும் வரைக்கும்!

அது தானே ஆசானுக்கும் வேண்டும். ஆசான் வைத்த பொறிக்குள் தாங்களாகவே போய் வசமாக மாட்டுவார்கள். ஆசானுக்கு இதெல்லாம் செக்ஸ் டேப்புகள் தான். திட்டமிட்டே கசிய விடுகிறவை. அதைத் திரும்பத் திரும்பப் பார்ப்பதில் இந்த பிறழ் இலக்கியப் porn addicts க்கு அத்தனை சுய இன்பம்.

இம்முறை சாரு மாதிரி, ‘ஈழத்து இலக்கியவாதிகள்’ பற்றிய உதிர்வு ஒன்று.

அதிலும், சும்மா தூங்கிக் கிடந்த சிங்கத்தை, ஒரு பேக் ஐடி தட்டி எழுப்பும். சிங்கமே

எந்த இறைச்சியும் இல்லாத வெறும் எலும்புத்துண்டை நாய் வைத்துக் கொண்டு கடித்துக் கொண்டிருப்பதைப் போல, எல்லார் மாதிரியும் வெறும் பேஸ்புக் மேற்கோள் நறுக்கு ஒன்றை வைத்துக் கொண்டு நான் கருத்துச் சொல்வதில்லை. பேஸ்புக்கில் வரும் பொன்மொழிகளையே அவை உண்மையாகவே அவர்களால் சொல்லப்பட்டதா என்று ஆராய்ச்சி பண்ணும் பேர்வழி நான். எந்த மேற்கோள் என்றாலும், அது சொல்லப்பட்ட தாற்பரியம் (Context) எனக்கு முக்கியம்.

எனவே, முழுமையாக கட்டுரையை வாசிக்க நானும் ‘கோவிந்தா, கோவிந்தா!’.

அந்தப் பேக் ஐடியைக் கனவில் கண்டும் கண் விழித்திருக்கலாம்.

தஞ்சை பிரகாஷ் மாதிரி, கோவை பிரகாஷ்.

யோவ், இத்தனையும் எழுதித் தள்ளின உனக்கு, கற்பனைக்கு இத்தனை பஞ்சமாய்யா?

எந்த இறைச்சியும் இல்லாத வெறும் எலும்புத்துண்டை நாய் வைத்துக் கொண்டு கடித்துக் கொண்டிருப்பதைப் போல, எல்லார் மாதிரியும் வெறும் பேஸ்புக் மேற்கோள் நறுக்கு ஒன்றை வைத்துக் கொண்டு நான் கருத்துச் சொல்வதில்லை. பேஸ்புக்கில் வரும் பொன்மொழிகளையே அவை உண்மையாகவே அவர்களால் சொல்லப்பட்டதா என்று ஆராய்ச்சி பண்ணும் பேர்வழி நான். எந்த மேற்கோள் என்றாலும், அது சொல்லப்பட்ட தாற்பரியம் (Context) எனக்கு முக்கியம்.

எனவே, முழுமையாக கட்டுரையை வாசிக்க நானும் ‘கோவிந்தா, கோவிந்தா!’.

அதே, பரபரப்பை ஏற்படுத்த விரும்பும் சுயமோக, முட்டாள் கதை என்பதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தோன்றவில்லை. இது ஒரு சமூக வலைத்தளப் பதிவாக இருந்தால் கட்டுரையை முழுவதுமாகப் போட்டிருக்க முடியும். இங்கே அதன் தொனியையும் அதில் சில நறுக்குகளையும் மட்டுமே போட வேண்டிய கட்டாயம். இல்லையேல், இதுவே விஷ்ணுபுரம் அளவுக்கு நீண்டு விடும். நான் ஏற்கனவே விஷ்ணுபுரம் ரேஞ்சில் எழுதித் தொலைக்கிற பேர்வழி.

எனவே, ஆர்வலர் அவரது தளத்தில் போய் வாசிக்கலாம். யாம் பெற்ற துன்பம் பெறுக!

ஒருவர் கூகிளில் இலங்கைப் படத்தைப் பார்க்கிறார். அங்குள்ள பெயர்கள் தமிழாக இருப்பது அந்தக் கோவைத் தமிழருக்கு அதிசயமாக இருக்கிறதாம். யாழ்ப்பாணம் பற்றித் தெரியாமலேயே ஈழம் பிடிக்கப் போகிற சீமானும் திருமுருகன் காந்தியும் இருக்கும் தமிழ்நாட்டில் இருந்து வந்தவர் தானே? இலங்கை அவருக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கும். உடனே, அவருக்கு வேறு எந்தச் சிந்தனையும் தோன்றாமல், ஆசான் இலங்கைக்குச் செல்லவில்லையே என்ற எண்ணம் வருகிறது.

சதா நின்னையே நினைந்துருகும் ஆசான் உபாசகர் போல. அட, சாரு போய் வந்த போது கூட அவருக்கு அந்த எண்ணம் வரவில்லை என்பதை விட, சாரு போல ‘உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி அலையட்டும்’ என்ற நல்ல எண்ணமாக இருக்குமோ? ஆசானின் எழுத்தில் இலங்கையைக் காண ஆசையாம். அட, பக்கத்தில் காலையில் போய் மாலையில் திரும்புகிற தூரத்தில் இருக்கிற இலங்கையைக் காண அவருக்கு ஒரு இதயம் பேசுகிற பனியன் தேவைப்படுகிறது.

உடனே, சிங்கன் தூக்கம் கலைந்து விட்டான்.

‘தமிழில் ஈழ இலக்கியம் பற்றி விரிவாகவும் முழுமையாகவும் எழுதிய இலக்கிய விமர்சகன் நான் ஒருவனே!’. ஓய், எப்போதையா படைப்பு என்பதிலிருந்து விமர்சனத்திற்கு தாவினீர்? படைப்பாளி விமர்சகராக இருப்பதில் உள்ள நல முரண்பாடுகள் பற்றி தெரியாதா? என்று எல்லாம்

நீங்கள் கேட்க முடியாது. அவருக்கு எப்போதுமே lines மட்டுமல்ல, எல்லாமே blurred தான்.

ஈழ இலக்கியம் பற்றி எங்களுக்கு வகுப்பு எடுப்பவர்களில் ஆசான் முதலாமரும் இல்லை, முடிவானவரும் இல்லை. யானையின் எதையோ தடவிப் பார்த்து விட்டு, பைகளுக்குள் குண்டுகள் என்று கண்டுபிடித்த விஞ்ஞானி அவர். இப்படி பேஸ்புக்கில் கண்ட வெறும் மேற்கோள்களை மட்டும் படித்து விட்டுக் கருத்துச் சொல்கிற எத்தனை முற்றும் தெரிந்த முனிவர்களைக் கண்டிருப்போம். இவர் புத்தகமே எழுதியிருக்கிறார். இந்தச் சர்ச்சையோடு அந்தப் புத்தகம் bestseller ஆகிறதோ இல்லையோ, நான் வாசிக்க வேண்டும்.

எனவே, உள் பெட்டிக்கு pdf please!

இதற்குள் தமிழ்விக்கிக்கு ஒரு shameless promotion வேறு. இந்த அறிவாளிக்கு ஈழ இலக்கியம் பற்றி முழுமையாகத் தெரிந்தது போதாமல், அது வேறு. தமிழ்விக்கி 'விரிவான ஒரு வரலாற்றுப் பரப்பாகவே மாறிக் கொண்டிருக்கின்றன. அத்தகைய ஒரு பெரிய சித்திரமும் இன்று வேறெங்கும் இல்லை'.

ஹ்ம். சரி அதற்குள்ளும் நுழைந்தால் போச்சு.

கோவிந்தா! கோவிந்தா!

தமிழ் விக்கி முழுக்க முழுக்க ஆசானின் opinions தவிர்த்து வேறெதுவும் இல்லை என்று ஏற்கனவே எழுதியிருக்கிறேன்.

சரி, நமக்குத் தெரிந்த நாலு பேரைப் பற்றித் தேடிப் பார்ப்போம் என்று போனேன்.

காலம் செல்வம் 'கனடாவை மையமாக்கி ஒரு இலக்கிய இயக்கம் உருவாக அடிப்படை அமைத்தவர் செல்வம்'.

ஓகோ, அப்படியா? இதை கனடாவில் உள்ள இலக்கிய கூட்டத்திடம் செல்வம் முடிந்தால் சொல்லிப் பார்க்கட்டும். செல்வத்தின் அடையாளமே, முத்துலிங்கத்தின் கோட் வாலில் தொங்கிய பின்னால் தான் வந்தது. முத்துலிங்கத்தின் அடையாளம் இயல்விருது கொடுக்கத் தொடங்கிய பின்னால் வந்தது. அப்போ, இலக்கியத் தோட்டத்திற்கு அந்தப் பெருமை இல்லையா?

தமிழ் விக்கி முழுக்க முழுக்க ஆசானின் opinions தவிர்த்து வேறெதுவும் இல்லை என்று ஏற்கனவே எழுதியிருக்கிறேன்.
சரி, நமக்குத் தெரிந்த நாலு பேரைப் பற்றித் தேடிப் பார்ப்போம் என்று போனேன்.
காலம் செல்வம் 'கனடாவை மையமாக்கி ஒரு இலக்கிய இயக்கம் உருவாக அடிப்படை அமைத்தவர் செல்வம்'.
ஓகோ, அப்படியா? இதை கனடாவில் உள்ள இலக்கிய கூட்டத்திடம் செல்வம் முடிந்தால் சொல்லிப் பார்க்கட்டும். செல்வத்தின் அடையாளமே, முத்துலிங்கத்தின் கோட் வாலில் தொங்கிய பின்னால் தான் வந்தது. முத்துலிங்கத்தின் அடையாளம் இயல்விருது கொடுக்கத் தொடங்கிய பின்னால் வந்தது.

மாணவனாக இருந்த காலத்திலேயே எழுதத் தொடங்கி, கனடா வந்த பின்னால் கையெழுத்துச் சஞ்சிகை முதல் இணையத்தில் பதிவுகள் தளம் வரைக்கும் தொடர்ச்சியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வ.ந.கிரிதரன் பற்றி எதுவும் இல்லை. பதிவுகள் தளத்தில் ஆசான் எழுதியுமிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன் ஆசானின் சிங்கள மொழிபெயர்ப்பு பற்றிய கட்டுரையின் இணைப்பைக் கேட்டு கிரிதரனுடன் தொடர்பு கொண்ட போது, ஆசான் தன் பதிவுகள் தளத்தைப் பார்ப்பார் என்று தான் கிரிதரன் கூறினார். ஆக, இணையத்தின் தொடக்க காலத்தில் தான் எழுதிய தளம் ஒன்றின் ஆசிரியர் குறித்துக் கூட தமிழ் விக்கியில் எதுவும் இல்லை.

புலன் பெயர் இலக்கிய உலகில் பரவலாக அறியப்பட்ட கவிஞரான ஆனந்த் பிரசாத் பற்றி எதுவும் இல்லை. கலாமோகன் பற்றி மட்டும் விபரமான குறிப்புகள் உண்டு.

இவர்கள் நால்வரும் நான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட தாயகம் வார இதழில் எழுதியவர்கள். செல்வம் தாயகம் இதழில் தான் எழுதியதை எங்கேயும் சொல்லி விடக் கூடாது, சொல்லி விட்டால் தாயகம் என்ற இதழ் வெளிவந்தது தெரிந்து விடும் என்பதில் கவனமாக இருப்பவர். எனவே, தாயகம் பற்றி எதுவும் தமிழ் விக்கியில் இல்லை. அது பற்றி எனக்கு கவலையோ, கோபமோ இல்லை.

கலாமோகனின் ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள் பற்றி எஸ்.பொ சொன்ன குறிப்புகள் இருக்கும்போது, அந்தக் குட்டிக்கதைகள் வெளிவந்த தாயகம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

ஏன் சேரன், அவரது தந்தை மஹாகவி, தமிழ்த்தேசிய எழுத்தாளராகவும் தமிழ்நாட்டிலும் அறியப்பட்டவரான தமிழ்நதி பற்றி எதுவுமே இல்லை.

இவை நான் தேடியவை மட்டுமே. ஈழத்தமிழ், புலன் பெயர் இலக்கியங்கள் பற்றி முற்றும் தெரிந்த இந்த மகானின் அறிவின் இலட்சணம் இது தான். அவரது அபிப்பிராயங்களைத் தாங்கி வரும் 'விரிவான ஒரு வரலாற்றுப் பரப்பாகவே மாறிக் கொண்டிருக்கும்' தமிழ் விக்கியின் நிலைமையும் அதே. அதை ஒரு work in progress என்று சப்பைக்கட்டு கட்டுவாராயின், அதை முழுமையானதாகக் கதை விடக் கூடாது. அவருக்கு அந்த அறம் பற்றியெல்லாம் கவலை கிடையாது.

'தமிழில் ஈழ இலக்கியம் பற்றி விரிவாகவும் முழுமையாகவும் எழுதிய இலக்கிய விமர்சகன் நான் ஒருவனே!' என்று பீற்றிக் கொள்கிற பிரகிருதியிடம், 'எழுதியது' இருக்கட்டும், 'அறிந்திருக்கிறாயா?' என்று யாராவது கேட்டால் பதில் உண்டா? '

இதையெல்லாம் வாசிப்பதில்லை' என்று பெருமையடித்துக் கொள்கிற கேள்விச்செவியனிடம் எதை எதிர்பார்க்க முடியும்? ஈழ இலக்கியம் பற்றி நீ கற்றதும் பெற்றதும் வெறும் சிட்டிகை அளவு தான் என்பதை யாராவது இந்த மேதாவிக்கு

சொல்லி வைக்க வேண்டும்.

வெளிநாட்டு நிதி உதவியுடன், தன்னுடைய அபிப்பிராயங்களே தமிழ் இலக்கியத்தின் உண்மைகளாக வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதற்கான முயற்சி தான் இந்த விக்கி என்பதைப் பற்றி ஒரு விஷ்ணுபுர சைஸ் புராணமே அபத்தத்தில் எழுதியிருக்கிறேன்.

செல்வத்தை ஆசான் தன் நண்பர் என்று சொல்கிறவர். செல்வன் ஆசானை தன் நண்பர் என்பதில் பெருமைப்படுகிறவர். செல்வம் எனக்கு முப்பது வருட காலமாகத் தெரிந்தவர். செல்வம் பற்றியும் நான் எழுதிய ஒரு விஷ்ணுபுர சைஸ் புராணம் வேறு அபத்தத்தில் உண்டு. அயோக்கியர்கள் அயோக்கியர்களுக்கு நண்பர்களாக இருப்பதில் எனக்கு ஒருபோதும் ஆச்சரியம் இருப்பதில்லை. அவர்களின் கூட்டணிக்கு, மற்றவரைப் பயன்படுத்த முடியும் என்ற சுயநலன் தவிர வேறெந்த நோக்கமும் கிடையாது.

தனக்கு இலங்கைக்கு இலக்கியப் பயணம் செய்வதற்கு அங்கு வாசகர்களே இல்லை என்று திட்டவட்டமாக அடித்துக் கூறுகிறார். அங்கிருந்து வாசகர் கடிதங்களே வருவதில்லை என்கிறார். எவ்வளவு அப்பட்டமான பொய்? இது எந்த வித மனநோய்?

சமீபத்தில் எதையோ தேடப் போக, இலங்கையின் தற்போதைய அரசியல் ஆய்வாளர் புருஷோத்தமன் தங்கமயில் எழுதிய வாசகர் கடிதம் ஒன்று கண்ணில் பட்டது. தற்போது இலக்கிய உலகில் தலைமறைவாகி கரந்துறையும் ஏகலைவன் கிரிஷாந்தின் துரோணர் ஆசான் தானே? அனோஜனின் கடிதம் ஒன்றை எப்போதோ வாசித்த நினைவு. அப்போ இவ்வளவு நாளாக இலங்கையில் இருந்து வந்த கடிதங்கள் எல்லாம் ஃபேக் ஐடிக்களா?

சொல்லுங்க, கோபால்!

'அரசியல் சார்ந்த வசைகளைப் பெய்யும் பெருங்கூட்டம் உள்ளது என அறிகிறேன். அங்கே செல்லும் எல்லாரையும் ஜெயமோகன் ஆதரவாளர்கள் என அடிக்க வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்'. எல்லாமே ஆசானுக்குக் கேள்வி ஞானம் தான். ஆதரவாளர்கள் என்றாலேயே அடிக்க வருகிறார்கள் என்றால், இங்கே ஆசானை நண்பர்கள் என்பதில் பெருமை கொள்கிற அ.முத்துலிங்கமும் செல்வமும் எப்படி அடிக்க அலைவோர்களின் கண்ணில் படாமல் போனார்கள் என்று நீங்கள் கேட்கக் கூடாது.

'அரசியல் சார்ந்த வசைகளைப் பெய்யும் பெருங்கூட்டம் உள்ளது என அறிகிறேன். அங்கே செல்லும் எல்லாரையும் ஜெயமோகன் ஆதரவாளர்கள் என அடிக்க வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்'. எல்லாமே ஆசானுக்குக் கேள்வி ஞானம் தான். ஆதரவாளர்கள் என்றாலேயே அடிக்க வருகிறார்கள் என்றால், இங்கே ஆசானை நண்பர்கள் என்பதில் பெருமை கொள்கிற அ.முத்துலிங்கமும் செல்வமும் எப்படி அடிக்க அலைவோர்களின் கண்ணில் படாமல் போனார்கள் என்று நீங்கள் கேட்கக் கூடாது.

'எதிர்ப்பவர்களில் நான் பொருட்படுத்தத் தக்க எவரும் இதுவரை கண்ணுக்குப் படவில்லை'.

கேள்விச் செவியனுக்கு எல்லாமே காதில் தானே விழும், எப்படிக் கண்ணில் படும்?

'இலக்கியத்தில் வாழ்க்கை நுட்பங்கள், மெய்யியல் எனப் பல உண்டு என்ற செய்தியே அங்கே அனேகமாக எவருக்கும் தெரியாது'.

பேஸ்புக்கில் இந்த எலும்பைத் தான் வைத்து பலரும் 'கடித்துக்' கொண்டிருந்தார்கள். அந்த எலும்பை நான் எதற்கு?

'இந்திய அமைதிப்படை இலங்கை சென்றதை எதிர்த்து நான் எழுதிய கட்டுரைகளால்...'.

News to me. Citation needed.

வாசகர் சும்மா எழுதுகிற கடிதங்களுக்கே கட்டுரை எழுதுகிற ஆசானின் கட்டுரைகளுக்கு கடிதம் வராமல் இருக்குமா?

ஃபேக் ஐடியில் கூட வரப் பயந்த பெயரில்லா வாசகர் கடிதம், ஆசானை ஆமோதிப்பதை விட ஒருபடி மேல் போய் அங்கே இலக்கிய வாசிப்பு இல்லை என்பது மட்டுமன்றி, பாலுறவுச் சுற்றுலா இடம் என்பது போலக் குறிப்பிட்டிருந்தது. (பாலியல் சுற்றுலா வருவோருக்கு பாதிப்பு இல்லை என்றால், சாருவுக்கு எப்படி இத்தனை துன்பம் எல்லாம் நிகழ்ந்ததோ?) எழுதியவர் 'சர்க்கார்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருந்தார். இலங்கையில் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியவர்களை நான் கண்டதேயில்லை.

அம்பி, ரெமோ!

சயந்தன் கூட வாசகர் கடிதம் எழுதியிருந்தார். 'தமிழக வாசகச் சூழல் பொறாமை கொள்ள வைக்கிறது. ஒரு வாசகர் எந்த 'இயக்கமாகவும்' நின்று வாசிக்க மாட்டார் என்ற உணர்தல் பெரிய ஆசுவாசம்'

News to me, சயந்தன். Jokes never need citations.

எழுதுவதே தமிழ்த் தேசியத்தைக் குஷிப்படுத்துவதற்குத் தான் என்றால், தமிழ்நாட்டு வாசகர் எல்லாருக்கும் புலி 'இயக்கம்' ஏகபிரதிநிதிகள் தானே? இத்தனை முக்கு முக்கி யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியத்தை குஷிப்படுத்த முயன்றாலும், புலிவால் கூட்டத்திற்கு புதுவையை விட மேலான இலக்கியம் இல்லை என்ற உண்மை கூட உங்களுக்கு இன்றைக்கும் தெரியவில்லைத் தானே, சயந்தன்? சிங்களத்தில் மொழிபெயர்க்கப்படும் உங்கள் பதிப்புகளை எத்தனை புலிவால் யாழ்ப்பாணிகள் வாங்கியிருக்கிறார்கள்? மாவீரர் தினத்தில் கடை விரிக்கிற கொத்துரொட்டிக் கடைக்காரனுக்கு இருக்கும் மவுசு கூட உங்கள் 'புனிதப் போராட்ட' இலக்கியங்களுக்கு இல்லைத் தானே?

நீங்கள் எழுதுவது கூட தமிழ்நாட்டுச் சந்தைக்குத் தான் என்பதுகூடத் தெரியாதவரா நீங்கள்?

ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள், சயந்தன்.

உங்கள் தமிழ்நாட்டுப்

பிழைப்பில் மண் விழாது. விருதுகள் எல்லாம் கொடுத்து அலையத் தேவையில்லை அதை சுவிஸ் பிராங்க்குகளும், காவிச் செல்லும் சுவிஸ் நாட்டு மதுப் போத்தல்களும் பார்த்துக் கொள்ளும்.

முகுந்தன் என்ற பெயரில் இன்னொரு இலங்கை வாசகர் கடிதம். 'நீங்கள் சொல்வது போல, சமூக வலைத்தளங்கள் மாதிரி கள நிலைமை இல்லை, நானும் உங்க ஃபேன் தான்' என்று.

'உங்கள் எண்ணம் ஈடேறி பனி முகடுகள் ஒளிர்வதைப் பார்த்தபடி நீங்கள் எழுதப் போகும் படைப்புகளையும் வாசிக்கக் காத்திருக்கிறேன்.'

மட்டர்ஹோரான் சிகரெட் பெட்டிகளிலும், கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளிலும் மட்டுமே பனிப் பொழிவைக் கண்டு, ஜேர்மன் வந்து தான் பனிப் பொழிவைத் தொட்டுப் பார்க்க முடிந்த எனக்கு, news to me.

Citations ம் மண்ணாங் கட்டியும்.

யோவ், ஃபேக் ஐடியில் பொய்யை எழுதுவதாக இருந்தாலும், பொருத்தமாக எழுது. இலங்கையில் அதி உயரமான, பேதுருதாலகால மலையில் பனிமூட்டம் இருக்கும், பனிமுகடு இருக்காது. 3000 மீட்டர் உயரத்தில் தான் பனி உறையத் தொடங்கும்போது, 2500 மீட்டரில் இவருக்கு பனி முகடும் தெரிகிறதாம்.

இப்படி எல்லாம் தெரிந்த மாதிரி, ஃபேக் ஐடியில் அடிச்சு விட வேண்டியது. எல்லாரையும் முட்டாள்கள் என்று நினைத்தபடி.

பின்னர் வாசு முருகவேல் என்று ஒருவர் கடிதம். அவரும் 'நின் தாழ் பணிந்தேன்' தான். 'ஈழத்தின் இலக்கியச் சூழல் குறித்து தாங்கள் எழுதியிருப்பது முற்றிலும் சரியானது.'.

அவருக்கான பதிலில், 'தமிழ் நவீன இலக்கியத்தில் இந்த இணையத்தளமே முதன்மையானது'. 'இதில் வெளிவரும் செய்தி இலக்கியச் சூழலில் உடனே கவனிக்கப்படும்.'

அப்படி ஒரு இளிச்சவாய் கூட்டம் கோவிந்தா போடுவதனால் தானே ஆசான் தைரியமாகப் பொறி வைக்கிறார்.

'சாரு நிவேதிதாவுக்கு

'சாரு நிவேதிதாவுக்கு
நிகழ்ந்தவற்றை நான் இப்போது
தான் வாசித்தேன்.'.
Mon Dieu!
பங்கருக்குள்ளேயே
வாழ்வைக் கழிக்கும் இன்னொரு
தேசிக்காய் தலையர். ஊருலகத்தில்
என்ன நடக்கிறது என்று
தெரியவில்லை. சக நம்பர் வண்
ஒருவர் உயிரைக் கையில் பிடித்துக்
கொண்டு, இந்தியானா ஜோன்ஸ்
மாதிரி தப்பி வந்திருக்கிறார். இந்தக்
கேள்விச் செவியனின் காதில் அவரது
நண்பர்கள் கூட இந்த விடயத்தைப்
போட்டு வைக்கவில்லை.
பக்கா அயோக்கியர்கள் தான்
போலிருக்கிறது.
இப்படி, தன்னைச் சுற்றி
என்ன நடக்கிறது என்று கூடத்
தெரியாமல், சதா இலக்கிய உபாசகம்
தான்.

நிகழ்ந்தவற்றை நான் இப்போது தான் வாசித்தேன்.'.

Mon Dieu!

பங்கருக்குள்ளேயே வாழ்வைக் கழிக்கும் இன்னொரு தேசிக்காய் தலையர். ஊருலகத்தில் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. சக நம்பர் வண் ஒருவர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, இந்தியானா ஜோன்ஸ் மாதிரி தப்பி வந்திருக்கிறார். இந்தக் கேள்விச் செவியனின் காதில் அவரது நண்பர்கள் கூட இந்த விடயத்தைப் போட்டு வைக்கவில்லை.

பக்கா அயோக்கியர்கள் தான் போலிருக்கிறது.

இப்படி, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கூடத் தெரியாமல், சதா இலக்கிய உபாசகம் தான்.

சரி, இந்த சீன் ஓடி முடிந்து நாய்களும் மூலையில் போய் மூச்சிரைத்து நாக்கைத் தொங்கப் போட்டபடி தாழ்வாரத்திற்குள் படுத்து விட்டன.

கொஞ்ச நாட்கள், அது தான் இரண்டு நாட்களுக்குள், திரும்பவும் அரிப்பு எடுத்து, எதையோ சொல்ல, இறைச்சி இல்லாத எலும்புத் துண்டு ஒன்றை பேஸ்புக்கில் எல்லோரும் இன்னொரு தடவை கடிக்கத் தொடங்கினார்கள்.

தமிழில் சிங்களப் படைப்புகள் மொழி பெயர்க்கப்படவில்லை என்பது பற்றி. வெறும் நறுக்குத் துணுக்கோடு கருத்துச் சொல்ல முடியுமா?

கோவிந்தா, கோவிந்தாவில் எதுவுமே அகப்படவில்லை. நண்பர் கிரிதரன் அதுபற்றி ஆதாரங்களுடன் எழுதியிருந்ததால் அவரிடம் தொடர்பு கொண்டு இணைப்பைக் கேட்டிருந்தேன். சில நிமிடங்களில் வந்து சேர்ந்தது.

வழமை போல, ஃபேக் ஐடி இல்லை என நம்ப வைக்க படம் ஒன்றுடன் வந்த கடிதம். படம் கடிதம் எழுதியவருடையதா? ஆசான் குறிப்பிடுகிறவருடையதா? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் கேள்விச் செவியன் இல்லாவிட்டாலும், எனக்கு அது அனாவசியமான ஆராய்ச்சி.

கேட்ட கேள்வி எதுவோ பற்றியது. பதில் ஈழ இலக்கியம் பற்றித் தான் தொடங்குகிறது. போகும்போது ஒரு தடவை 'தனகிப் பார்ப்பதற்காக'.

உலக அளவில் கவனிக்கப்படும் சிங்கள இலக்கியங்களை ஈழ இலக்கியர்கள் அறிமுகம் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு.

அதற்கான பதிலை கிரிதரன் உட்பட்ட சிலர் ஆதாரங்களுடன் பதிவிட்டிருந்தார்கள். கோணிப்பைக்குள் குண்டுகளைக் கண்டு யானை பார்த்த இந்த கண்ணில் தென்படாத கேள்விச்செவியனிடம் இதை எல்லாம் எதிர்பார்க்க முடியுமா?

'இலக்கியம் அல்லது சிந்தனையே என் வாழ்க்கை. என் வாழ்வும் சாவும் அதற்காகவே, அதன் பொருட்டு எதையும் இழப்பேன்..... என் அளவுகோல்கள் என் ரசனை மற்றும் அறிவு சார்ந்தவை மட்டுமே... இலக்கியவாதியாக, சிந்தனையாளராக மட்டுமே தன் அடையாளத்தைக் கொண்டு இலக்கியத்தின், சிந்தனையின் பொருட்டு முழு வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளும் ஒருவரால்... அது ஒரு தியாகம், தன்னை

களப்பலியாக ஆக்கும் துணிவு' என்றெல்லாம் ஆசான் உருட்டுவது தன்னைப்பற்றியதாகத் தானே இருக்க வேண்டும். அப்படி வேறு யாரையோ சொல்லும் அளவுக்கு ஆசான் என்ன பரந்த மனப்பான்மையுடையவரா?

'இந்திய, தமிழ்ச் சூழலில் மிகப் பெரும்பாலானவர்கள் தங்கள் வாழ்க்கையின் ஒரு சிறுபகுதியாக ஒரு தனிப்பட்ட பொழுதுபோக்கு போல இலக்கியம் மற்றும் சிந்தனையை வைத்திருக்கிறார்கள்'. ஆசான் மாதிரி, உன்னத இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டே, பொன்னியின் செல்வனுக்கு பஞ்ச் டயலாக் எழுதும் வாய்ப்பும் இருந்தால், அடுத்த நேரச் சோறு பற்றிய கவலையில்லாமல், உலகம் சுற்றியபடியே இலக்கிய உபாசகம் செய்யலாம் தான். இலக்கியத்தை முழுநேர வேலையாக செய்ய ஆசானுக்கும் முடிகிறது. யமுனா ராஜேந்திரனுக்கும் முடிகிறது. அந்த வரமும் பாக்கியமும் எல்லாருக்கும் கிட்டுவதில்லையே?

உலகத்தை மாற்றியமைக்க, தாலியை அடைவு வைத்து கவிதைத் தொகுப்பு வெளியிட்ட கவிஞர்கள் ஊருக்குள் ஏராளம். இவர்கள் இருவருக்கும் கிடைத்த அரிய சந்தர்ப்பங்கள் இந்தக் கவிஞர்களுக்கும் கிடைத்தால் நழுவ விடுவார்களா? அவர்களும் சதா அறச்சீற்றமாகத் தான் இருந்திருக்கும். ஏற்கனவே பூமி சூடாகி, இயற்கையின் சீற்றங்களுக்குள் மாட்டிக் கொண்டு எஸ்.ராவே துன்பப்படுகிறார். அதற்குள் அறச் சீற்றம் வேறு. எவ்வளவு துன்பங்களை நாங்கள் எதிர்கொள்ள வேண்டி இருந்திருக்கும்.

இங்கே சில விடயங்களை கூற வேண்டும்.

முதலாவது, ஈழத் தமிழ் இலக்கியச்சூழலில் சிங்கள இலக்கியங்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை என்று எழுந்தமானமாகச் சொல்கிறார். ஈழ இலக்கியர்கள் என்றதும் இவருக்குப் பிடித்தமான, 'பொருட்படுத்தத்தக்க' ஒரு பட்டியலே இருக்கும். அவர்களை அவ்வப்போது ஆங்காங்கே பெயர் குறிப்பிட்டிருக்கிறார்.

அ.முத்துலிங்கம், அனோஜன், கருணாகரன் என்று போய் ஷோபா சக்தி என்று முடியும் அந்தப் பட்டியலில் உள்ள, அவரால் 'பொருட்படுத்தப்படும்' எவரும் எதையும் செய்ததாக நான் கண்டதில்லை. (மரபுப்படி அ.முத்துலிங்கத்தில் தொடங்கி ஷோபா சக்தியில் பட்டியலை முடித்திருக்கிறேன். பட்டியலில் விடுபடுதல் என்றாலேயே பட்டியல் இலக்கியர்கள் கொந்தளிக்கும் ஈழச் சூழலில் தங்களது பெயர் விடுபட்டது பற்றி கோபம் கொள்வோர் தங்கள் பெயரையும் ஆசானின் நண்பர்களின் பெயர்ப்பட்டியலில் சேர்க்க விரும்பினால் உட்பெட்டியில் தொடர்பு கொள்ளலாம். 'அடுத்த பதிப்பில் திருத்தங்களுடன்' சேர்த்துக் கொள்ளுவேன்.)

அவர்கள் மட்டும் தான் ஈழத்தின் இலக்கியர்கள் என்பது தான் இவருடைய முடிவாகவும் இருக்கும். இதே கேள்வியை இவர் அவர்களிடம் தானே கேட்டிருக்க வேண்டும்? உங்களுடைய நண்பனான எனக்கு நீங்கள் எந்தச் சிங்கள இலக்கியத்தை அறிமுகப்படுத்தினீர்கள் என்று கேட்டிருக்க வேண்டுமே? முப்பது வருடத்தில் அறுபது இதழ்கள் விட்டு சாதனை புரிந்த காலம் காலாண்டிதழில் எத்தனை கட்டுரைகள் சிங்கள இலக்கியம் பற்றி வெளிவந்தன என்பதை தனது நண்பர் செல்வத்திடம் இந்த கேள்விச்செவியன் கேட்டறிந்து இருக்க முடியாதா?

துரோகிப் பட்டம் கிடைக்காமலேயே, 'தமிழ்த் தேசிய' படைப்பாளிகளின் தமிழ்ப் படைப்புகள் சிங்களத்திலேயே மொழிபெயர்க்கப்படும் அளவிற்கு ஈழத்து இலக்கியச் சூழல் எங்கோ போய் விட்ட நிலையில் இந்த பங்கர் பெருமகனுக்கு இது news to me யாக இருக்கிறது. வாசகர் கடிதம் எழுதிய சயந்தனின் பதிப்பகமே அதைச் செய்கிறது கூட ஆசானுக்குத் தெரியவில்லை.

இரண்டாவது, ஆசான் இப்படியெல்லாம் சப்பாத்தை தன் வாய்க்குள் வைக்கும்போது எல்லாம் ஆசானின் நண்பர்கள் எனப்படுவோர், என்போர் என அதில் பெருமை கொள்வோர் எவருமே உதவிக்கு ஓடி வருவதில்லை. அயோக்கியர்கள் ஒன்று சேர்வது சுயநலத்திற்கு மட்டுமே என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும், பகிரங்கமாக நண்பர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்களே?

ஒன்றில் ஆசான் சொன்னதை நியாயப்படுத்த வேண்டும். 'நீங்கள் சொன்னது சரியே, ஈழப் பக்கம் தலை வைத்துப் படுக்காதீர்கள், மின்கம்பத்தில் கட்டி மண்டையிலோ, ஐஸிஸ் பாணியில் கழுத்து அறுத்தோ கொலை செய்வார்கள்' என்றோ ஆசானுக்கு கடிதம் எழுதி 'நின் தாழ் பணிந்த'வர்கள் யாருமே ஆசானால் நண்பர்கள் எனப்பட்டவர்கள் இல்லை. இலக்கிய wannabe க்கள் எல்லாம் இலக்கியவாதிகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ளப் பயன்படுத்தும் அந்த மலினமான மரபுத்தொடரான 'ஸோ கோல்ட்' நண்பர்கள் யாருமே ஆபத்பாந்தவர்களாக ஓடி வந்ததில்லை.

அல்லது ஆசான் எங்கள் ஈழ இலக்கியம் பற்றி சொன்னது தவறு என்று அடித்துச் சொல்லி அறிவு புகட்டியிருக்க வேண்டும். அதையும் அவர்கள் செய்வதில்லை.

அ.முத்துலிங்கம், அனோஜன், கருணாகரன் என்று போய் ஷோபா சக்தி என்று முடியும் அந்தப் பட்டியலில் உள்ள, அவரால் 'பொருட்படுத்தப்படும்' எவரும் எதையும் செய்ததாக நான் கண்டதில்லை. (மரபுப்படி அ.முத்துலிங்கத்தில் தொடங்கி ஷோபா சக்தியில் பட்டியலை முடித்திருக்கிறேன். பட்டியலில் விடுபடுதல் என்றாலேயே பட்டியல் இலக்கியர்கள் கொந்தளிக்கும் ஈழச் சூழலில் தங்களது பெயர் விடுபட்டது பற்றி கோபம் கொள்வோர் தங்கள் பெயரையும் ஆசானின் நண்பர்களின் பெயர்ப்பட்டியலில் சேர்க்க விரும்பினால் உட்பெட்டியில்

தொடர்பு கொள்ளலாம். ‘அடுத்த பதிப்பில் திருத்தங்களுடன்’ சேர்த்துக் கொள்ளுவேன்.)

ஈழத்தில் தனது வாசகர்கள் யாருமில்லை என்று சொன்னதில் தங்களையும் சேர்த்ததால் கோபம் கொண்டார்களோ என்னவோ?

அவர்கள் வாயே திறக்க மாட்டார்கள். அவர்களுக்கு ஈழ இலக்கியத்தின் தன்மானத்தை விட, தங்களுக்கு கிடைக்க வேண்டிய அங்கீகாரம் முக்கியம். ஆசான் போன்ற ஒருவரைப் பகைத்துக் கொண்டால், ‘அ.முத்துலிங்கம், ஷோபா சக்தி எல்லாம் அப்படியென்ன உலகப் புகழ் பெற்ற இலக்கியவாதிகளா?’ என்று அதே நாறவாயால் திட்டி, என்னுடைய நூல்களை வாசித்த ஆங்கிலேயர் என்று ஒரு ஃபேக் ஐடி கடிதம் போடக் கூடியவர் தான் இந்த ஆசான் என்பது இவர்களுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்?

தமிழ் நாட்டில் தங்களது பிழைப்பில் மண் போட அவர்கள் விரும்பமாட்டார்கள். அவர்களுக்கும் வயிறு இருக்கிறது. பசிக்கும்ல!

புத்தக விற்பனை பற்றியது அல்ல, அங்கீகாரம் பற்றிய பசி!

மூன்றாவது, ஈழத்தில் இலக்கியமே இல்லை என்பது போல அறுதியிட்டுச் சொல்லும் ஆசான், எந்த மூஞ்சியோடு இயல் விருது கிடைக்காத போது ‘ஒரு விருதின் மரணம்’ என்றும், கிடைத்தபோது விமானம் ஏறி வந்து பல்லிளித்தபடி வாங்கிப் போனார்? இவருக்கு விருது வழங்கியோர் ‘கனடாவை மையமாக்கி ஒரு இலக்கிய இயக்கம் உருவாக அடிப்படை அமைத்த’ புலன் பெயர்ந்தோர் என்றால், அவர்கள் என்ன வானத்திலிருந்து புலன் பெயர்ந்தவர்களா? ஈழத்திலிருந்து புலன் பெயர்ந்தவர்கள் தானே!? இலக்கியம் பற்றி எந்த பிரக்ஞையும் இல்லாத ஒரு மண்ணிலிருந்து வந்தவர்கள் கொடுத்த விருதை மட்டும் வாங்க முடிகிறது தானே? இலக்கிய ரசனையும் உணர்வும் பிரக்ஞையும் சிந்தனையும் தியாகமும் துணிவும் இல்லாத, முழுநேரமாக இலக்கியம் செய்ய வக்கில்லாமல் பகுதிநேரப் பொழுதுபோக்கு இலக்கியம் செய்வோரிடம் விருது வாங்குவது எந்த வகை அறமாம்? எனக்கெல்லாம் விருது தர உனக்கெல்லாம் என்ன தகுதி இருக்கிறது என்று மூஞ்சியிலே வீசியிருக்க வேண்டுமே!?

ஈழத்தில் இலக்கியமே இல்லை என்பது போல அறுதியிட்டுச் சொல்லும் ஆசான், எந்த மூஞ்சியோடு இயல் விருது கிடைக்காத போது ‘ஒரு விருதின் மரணம்’ என்றும், கிடைத்தபோது விமானம் ஏறி வந்து பல்லிளித்தபடி வாங்கிப் போனார்? இவருக்கு விருது வழங்கியோர் ‘கனடாவை மையமாக்கி ஒரு இலக்கிய இயக்கம் உருவாக அடிப்படை அமைத்த’ புலன் பெயர்ந்தோர் என்றால், அவர்கள் என்ன வானத்திலிருந்து புலன் பெயர்ந்தவர்களா? ஈழத்திலிருந்து புலன் பெயர்ந்தவர்கள் தானே!? இலக்கியம் பற்றி எந்த பிரக்ஞையும் இல்லாத ஒரு மண்ணிலிருந்து வந்தவர்கள் கொடுத்த விருதை மட்டும் வாங்க முடிகிறது தானே?

இலக்கிய ரசனையும் உணர்வும் பிரக்ஞையும் சிந்தனையும் தியாகமும் துணிவும் இல்லாத, முழுநேரமாக இலக்கியம் செய்ய வக்கில்லாமல் பகுதிநேரப் பொழுதுபோக்கு இலக்கியம் செய்வோரிடம் விருது வாங்குவது எந்த வகை அறமாம்? எனக்கெல்லாம் விருது தர உனக்கெல்லாம் என்ன தகுதி இருக்கிறது என்று மூஞ்சியிலே வீசியிருக்க வேண்டுமே!?

இங்கே வந்து ‘அற்பர்கள்’ குழப்பம் செய்யக் கூடும் என்று பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கட்டண உரை நிகழ்த்தியபோது வந்தவர்கள் என்ன வேற்றுலக வாசிகளா? அவர்களும் அசல் யாழ்ப்பாணிகள் தானே!?

‘இலக்கியத்தில் வாழ்க்கை நுட்பங்கள், மெய்யியல் எனப் பல உண்டு என்ற செய்தியே தெரியாத’ உங்களுக்கு எல்லாம் இலக்கியம் பற்றி என்ன பிரக்ஞை இருக்கிறது என்று காறி உமிழ்ந்திருக்க வேண்டாமா?

கனடா விருதும், டொலரும், ஓசி விமான டிக்கட்டும், நயாகரா உல்லாசப் பயணமும் என்றால், பஞ்ச் டயலாக் தானா?

நான்காவது, முக்கியமானது.

யாழ்ப்பாணிகளின் தமிழ்த் தேசியம் shoot now, think later கொலைவெறியோடு அலைவது. அதற்கு எந்தப் பகுத்தறிவும் கிடையாது. அந்தச் சிந்தனை அந்த புலிவால் கேள்விச்செவிக் கூட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. தங்களை இலக்கியவாதிகளாக நினைத்துக் கொள்கிறவர்களுக்கும் அந்தச் சிந்தனை நிறையவே உண்டு.

தங்களைத் ‘தமிழ்த்தேசிய உணர்வாளர்கள்’ என்று அடையாளம் காட்டாத இலக்கியம் சார்ந்தோர் என்போர் பகிரங்கமாக புலிகளை எதிர்ப்பவர்கள் மட்டுமே. மற்றவர்கள் எல்லாம் அசல் யாழ்ப்பாண பிராண்ட் புலிவால்பிடி தமிழ்த்தேசியர்கள் முதல், புலிக்கும் நோகாமல், யாழ்ப்பாணிக்கும் நோகாமல் ‘சிங்களத் தீவிரவாதத்தை’ விமர்சிப்போர் வரையில் உள்ளோர்.

ஆசான் மீதும் அந்த புலிவால் தேசியக் கேள்விச் செவியர்களுக்கும் ஏதும் இடறுப்பாடு இருக்கக் கூடும். ஆசான் இந்திய இராணுவ வருகையை ஆதரித்தார் என்று அவரை பகிஷ்கரித்து, இப்போது அவரது அங்கீகாரத்திற்காக ஒட்டிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழ்த்தேசிய உணர்வு இலக்கியர்களின் பட்டியலைப் போட முடியும்.

ஆசான் மீது புலிவால் தமிழ்த் தேசியர்களுக்கு ஒரு ‘கறள்’ இருக்கிறது என்றால் அது நியாயமானது.

ஆனால்...

இஸ்லாமிய தீவிரவாதம் என்பது மதத்தோடு மட்டும் நின்றிருக்கிறது. அது இலக்கியத்திற்குள் பெரிதாக நுழைந்ததில்லை. அது இலக்கிய

உலகில் உள்ள பெண்கள் மீது மதம் சார்ந்த வெறியோடு பாய்ந்தது எல்லாருக்கும் தெரியும். அந்த அடிப்படைவாதம் புலிவால் தமிழ்த்தேசியம் மாதிரி கேள்விச் செவிக் கூட்டத்தைக் கொண்டதுமல்ல. அது தான் அட்சரம் பிசகாமல் படித்த இஸ்லாமிய அடிப்படை வியாக்கியானங்களுக்கு விசுவாசமானது, அதற்கு அந்த வியாக்கியானங்களுக்கு எதிரான வெளி அடையாளங்கள் தான் பிரச்சனையானது.

அது குர் ஆன் தவிர, இலக்கியம் போன்ற வேறு எல்லாவற்றையும், ஹராம் என்று வாசிக்காமல் இருக்கவும் கூடும். செல்போனை மதப் பொலிஸ் வேலைக்கும் பிரசாரத்திற்கும் மட்டுமே பயன்படுத்தும் கூட்டம் அது.

அவர்களுக்கு மற்ற மதங்கள் தலிபான்கள் மாதிரி சிலை உடைக்கிற அளவுக்கு பெரும் பிரச்சனையும் இல்லை. இன்றைக்கு வடக்கில் கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களுக்கு எதிரான உணர்வைத் தூண்டி வரும் சிவசேனையின் அளவுக்குக் கூட அவர்கள் மதவெறி கொண்டவர்களாக இல்லை. ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னணியில் யார் இருந்தது என்பது தெரிந்ததே.

பெண்கள் படிப்பதும், முக்காடு போடாததும், பேஸ்புக்கில் படம் போடுவதும், அந்நிய ஆடவர்களோடு தனியாக ஆட்டோவில் போவதும், ஸ்கூட்டர் ஓட்டுவதும் தான் அதற்குப் பிரச்சனை. ஸ்கூட்டர் ஓட்டுவதை ஏன் விரும்புவதில்லை என்பதற்கான 'மத' விஞ்ஞான விளக்கத்தை பேஸ்புக்கில் கண்டு உச்சம் பெறலாம்.

பேஸ்புக்கில் தீவிர மதவாதம் பேசுகிறவர்களை விட, இஸ்லாமியப் பின்னணியைக் கொண்ட பல இலக்கியவாதிகள் இன்று பொதுவெளியில் இருக்கிறார்கள். அவர்களில் பலர் மதநம்பிக்கைகளோடு இருந்த போதிலும், அவர்களுக்குள் மத அடிப்படைவாதிகளும் இருக்கிறார்கள் தான், இலக்கியத்திற்குள் தங்கள் மதத்தைத் திணிப்பதில்லை. அதைத் திணித்தால் அது உடனடியாகவே தமிழ் வெளியில் நிராகரிப்புக்கு உள்ளாகி விடும். அவர்கள் தமிழ்த்தேசியத்திற்கு எதிராக அவர்கள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதும் இல்லை.

மத நம்பிக்கையைக் கொண்டிருந்தும், மததீவிரவாதத்தை தீவிரமாக எதிர்க்கும் இலக்கியம் சார்ந்தோர் உள்ளனர்.

தமிழ்ச் சூழலில் கொண்டாடப்படுகிற இஸ்லாமிய இலக்கியவாதிகள் உள்ளனர். அவர்கள் இலக்கியம் என்றதுமே தமிழைத் தான் கருதுகிறவர்களாகவே அன்றி, மதத்தை நினைக்கிறவர்கள் இல்லை. இல்லை, அரபு மொழியில் தான் எழுதுவோம் என்று அடம் பிடிக்கிற இலக்கியவாதிகளைக் கண்டதாக நினைவில்லை. மொழியும் பேரீச்ச மரமும் அரசியல்வாதிகளுக்கு உரியது.

மதம் அவர்களுக்கு உயிர் மூச்சாக இருக்கலாம். ஆனால் அதை மற்றவர்கள் மேல் விடுவதில்லை.

தமிழ் என்ற பொது இழை ஒன்று எல்லாரையும் பின்னி வைத்திருக்கிறது.

**தனக்கு 2005 க்குப் பின் வாசகர்களே இல்லை என்று அடித்துச் சொல்கிற ஆசான், இஸ்லாமிய இலக்கியர்கள் நடத்தும் (நடத்திய?) இணையத் தளத்திற்கு தொலைபேசிப் பேட்டி ஒன்றை கொஞ்ச நாளைக்கு முன், இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அல்ல, வழங்கியதை வசதியாக மறந்து விட்டுக் கதை சொல்கிறார்.**

தனக்கு *2005* க்குப் பின் வாசகர்களே இல்லை என்று அடித்துச் சொல்கிற ஆசான், இஸ்லாமிய இலக்கியர்கள் நடத்தும் (நடத்திய?) இணையத் தளத்திற்கு தொலைபேசிப் பேட்டி ஒன்றை கொஞ்ச நாளைக்கு முன், இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அல்ல, வழங்கியதை வசதியாக மறந்து விட்டுக் கதை சொல்கிறார்.

சாருவைக் கூட்டி வந்தது இஸ்லாமியப் பின்னணி கொண்டவர்கள் என்பதைத் தவிர, சாரு விவகாரத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் எதுவும் இல்லை. சாருவின் இழிந்த புத்தியால் வந்திருக்கக் கூடிய எதிர்ப்புணர்வுக்கு, ஏதோ பத்வா விதிக்கப்பட்ட மாதிரி, மதவாத முலாம் பூசுவது தான் அச்சத்தைத் தருகிறது. சாரு கூட தன் உயிர் ஆபத்திற்கு மதத்தைக் குறை சொன்னதாக நினைவில்லை.

'முற்போக்கு முக்காடு போட்ட மதவாதம்' என்ற வார்த்தைப் பதமே, coined by ஆசான். முகமூடி என்ற வழமையான சொல்லைப் பயன்படுத்தாமல் முக்காடு என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. இது இந்துத்துவப் பின்னணி கொண்ட ஆசான் திணிக்க முயலும் புதிய சொற்பிரயோகம். அப்பட்டமான இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வு. இந்தப் பிரயோகத்தை ஆசான் இனிமேல் அடிக்கடி பயன்படுத்திக் கொண்டே இருப்பார். (அவருக்கு 'கடிதம் எழுதுகிற' ஃபேக்ஐடிக்களும் தான்.) இதற்கான உள்நோக்கம் குறித்து எல்லாரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

தன் மீது யாழ்ப்பாணிகள் வைத்திருக்கும் வெறுப்புணர்வுக்கு மதத்தை இழுக்கும் நச்சுப்புத்தி குறித்து கவனமாக இருந்து கொள்ளுங்கள்.

ஆசான் பற்றி ஏற்கனவே மூன்று தடவைகள் எழுதி விட்டேன்.

இனிமேல் எழுதுவதில்லை என்ற முடிவோடு தான் இருந்தேன்.

பேஸ்புக் பரபரப்புகள் வெறும் எலும்புத் துண்டுகளோடு மல்லுக் கட்டும் வேலை. அது முழுத் தாற்பரியத்தையும் மறந்து, வெறும் நறுக்குத் துணுக்குகளை மட்டும் வைத்துக் கொண்டு, அந்த நேரப் பொழுதுபோக்காக முடிந்து விடும். அது அந்த வாரத்தோடு மறந்தும் போய் விடும்.

பேஸ்புக்கில் ஒரு பதிவைப் போட்டு நாற்பது விருப்புக் குறிகளுக்காக, அந்தந்த நேர அரிப்பைத் தீர்த்துக் கொள்வதில் தற்போது எந்த நாட்டமும் நேரமும் இல்லை.

ஆசான் தான் முன்பு சொன்னதற்கு எதிராகவே மறுத்துக் கருத்துச் சொல்லும் சுயமோகப் பொய்யன்

என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்க, அதைத் தர்க்கரீதியாக எதிர்கொள்ள வேண்டுமா என்ற கேள்வி எனக்குள் எப்போதும் உண்டு.

ஆசான் என்னைப் ‘பொருட்படுத்த வேண்டும்’ என்று நான் எதையும் எழுதுவதில்லை. நான் எழுதுவது ஆசானுக்கு ஆனதல்ல, ஆசானை வாசிப்பவர்களுக்கானது. ஆசானின் அங்கீகாரத்துக்கு அலைவோருடன் போட்டி போட்டு அவர்களின் பிழைப்பில் மண் போடும் தேவை எனக்கில்லை. நான் அயோக்கியர்கள் என்று சொல்கிறவர்களிடம் அங்கீகாரம் வேண்டும் அளவிலும் நான் இல்லை.

என்னை முட்டாள் என்று நினைத்து யாரும் கதை சொன்னால், என்னையறியாமலேயே கோபம் வரும்.
புலிகள் ‘வெற்றிகரமான பின்வாங்கல்’ கதைகள் சொன்ன காலத்திலிருந்து!

எத்தனை உண்மைகளையும், தர்க்க நியாயங்களையும், ஆதாரங்களையும் காட்டினாலும், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதெல்லாம் ஆசானுக்கு ஒரு பொருட்டே இல்லை.

‘எப்படி அடிச்சாலும் தாங்கிறாண்டா’ என்ற கேஸ் தான்.

தன்னை மட்டும் புத்திசாலியாகவும், எங்களை எல்லாம் முட்டாள்கள் என்றும் நினைத்து, ஆசான் தன்னுடைய கருத்துக்களை முன்னுக்குப் பின் முரணாக, அறுதியும் இறுதியுமான உண்மை என்னும் போது தானே பிரச்சனையே ஆரம்பிக்கிறது.

அறிவைத் தேடுகிறவர்கள் ‘எனக்குத் தெரிந்த வரை’ என்று தன்னடக்கத்தோடு சொல்லும்போது, தெரிந்தவர்கள் வழியைக் காட்டுவார்கள். எனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று திமிர்த்தனத்தோடு சொல்லும்போது அதற்குப் பதிலான மொழி எதுவாக இருக்க முடியும்? அதனால், என் வழமையான இயல்பையும் மீறி சில வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியிருக்கிறேன். சில நேரங்களில் அவரவர் மொழியில் பேசுவதனால் தானே அவர்களுக்கும் புரிய வைக்க முடியும்.

நம்பர் வண் ஆசான் தன்னைப் பற்றிய விமர்சனங்களை வசைகள் என்பது எல்லாம் எனக்குப் புதியதில்லை. அவதூறுகளுக்கு நான் பதில் சொல்வதில்லை என்கிற லோக்கல் பீலாக்களை எல்லாம் கண்டு தான் வந்திருக்கிறோம்.
தானே அவதூறுகளையும், வசைகளையும், உருவக் கேலிகளையும் செய்கிற ஆசான், தன்னைப் பற்றிய விமர்சனங்களை வசை என்று கடந்து போக முயற்சிப்பது நகைப்புக்குரியது.

அந்த வார்த்தைப் பிரயோகங்கள் என்னை நன்கு தெரிந்தவர்களுக்கு அசௌகரியமாகவும் இருக்கலாம். அது நானும் அறச்சீற்றம் அடைந்ததாகவே இருக்கட்டும்.

நம்பர் வண் ஆசான் தன்னைப் பற்றிய விமர்சனங்களை வசைகள் என்பது எல்லாம் எனக்குப் புதியதில்லை. அவதூறுகளுக்கு நான் பதில் சொல்வதில்லை என்கிற லோக்கல் பீலாக்களை எல்லாம் கண்டு தான் வந்திருக்கிறோம்.

தானே அவதூறுகளையும், வசைகளையும், உருவக் கேலிகளையும் செய்கிற ஆசான், தன்னைப் பற்றிய விமர்சனங்களை வசை என்று கடந்து போக முயற்சிப்பது நகைப்புக்குரியது.

வெறும் நறுக்குத் துணுக்குகளை மட்டும் வாசித்து விட்டு முற்றும் தெரிந்த புலமையைக் காட்டுகிறவர்களை விட ஆசான் ஒன்றும் மேலானவர் இல்லை. அவர் தனக்குத் தெரிந்ததைப் பேசுகிறார். அதை எல்லாம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்கிறார். அது பல தடவைகளில் முனியப்பர் கோயிலடி இரசாயனப் பேராசிரியர் போல இருக்கிறது.

அதை ஒரு சுயமோக மனநோயாளியின் மனக் கட்டுப்பாட்டை மீறிய புலம்பல் என்று, பொருட்படுத்தாமல் அதைக் கடந்து போகாமல், வானத்திலிருந்து போன சனியனை ஏணி வைத்து இறக்கி பொதுவெளிக்கு கொண்டு வருகிற எங்கள் இலக்கிய கோவிந்தாக்களால் தான் இத்தனை பிரச்சனையும்.

ஆசானின் கருத்துக்கள் அவரது cult க்கு உரியவை. பொதுவெளிக்கானவை அல்ல. நித்தியானந்தாவையும், சீமானையும் போல, வேடிக்கையாகப் பார்த்துச் சிரித்து விட்டுப் போகாமல் அறச்சீற்றம் கொள்வதால் தான் இது பொதுவெளிக்குள் பேசு பொருளாகிறது. இல்லாவிட்டால், அவரது அடிப்பொடிகளை ‘இருட்டு அறையில் உருட்டு’ உச்சமடையச் செய்வதுடன் அது முடிந்து விடும்.

என்னால் கடந்து போக முடியாமல் இருந்ததற்கான முக்கிய காரணங்கள், இந்தச் சர்ச்சைகளுக்குள் மதவாதத்தை நுழைக்கும் உள்நோக்கம் பற்றி யாரும் பேசவில்லை என்பதால், அதைச் சுட்டிக் காட்ட வேண்டும் என்பதும், ஈழ, புலன் பெயர் இலக்கியம் பற்றி எங்களுக்குப் பாடம் எடுக்க முயல்வதும், அதை விட மேலாக எங்களை ஞாபக மறதி முட்டாள்கள் என்று நினைத்துக் கதை சொல்வதும் தான்.

ஆசானை எல்லாம் வாசித்து நேர விரயம் செய்ய வேண்டிய கட்டாயம் மற்றும்படி எனக்கு எதுவும் இல்லை.

‘ஆசானை வாசித்தால் அறிவு வளரும் என்றோ, சாருவை வாசித்தால் சிந்தனை செழிக்கும் என்றோ நான் நினைத்ததில்லை’ என்பதை அகழ் மின்னிதழ் பேட்டியில் கூட சொல்லியிருக்கிறேன்.

ஒரு பொய்யனிடம் கற்றுக் கொள்ள என்ன இருக்கிறது?


எப்படி பொய் சொல்லக் கூடாது என்பதைத் தவிர!


மற்றும்படி இதெல்லாம் நித்திய அறச்சீற்றப் பேஸ்புக் போராளி யமுனா ராஜேந்திரன் போன்றோருக்கு ஆனது.


என்ன செய்ய?

மரம் ஓய்வைத் தான் விரும்புகிறது.

அதற்கு, அடிக்கிற காற்று மட்டும் இல்லை, அனாவசியமாகக் குலைக்கிற நாய்களும் விடுவதில்லை.




# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!